T.
T
6632

உ

கடவுள் து

அகஸ்திய முனிவர

பஞ்சகாவியத்திற் கு

ஆயுறுவேதமாகிய

# சௌமியசாகரம் - 1200.



T. துரைசாமி முதலியாரவர்களால்

சென்னை-சூளை,

"பெரியநாயகியம்மன்" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

[ரிஜிஸ்டர் காபிரைட்] 1935 [விலை ரூபா 1.

29 காமன் கணையாலே—கந்தையா
கருத்தழிந்து நாள்தோறும்
நாமம் தனைமறந்து—கந்தையா
நான் பாவியாகி விட்டேன்

30 பாவம் தனை நீக்கி—கந்தையா
பக்தி வழி காட்டி
ஏம நணுகாமல்—கந்தையா
எனக்கு வரம் தந்தருள்வாய்

31 குமர குரு வேலா—கந்தையா
கோலவள்ளி தன் கணவா
அமரர் சிறை தவிழ்த்த—கந்தையா
ஆறுமுக் வேலோனே

32 சரிகை கிரிகை முதல்—கந்தையா
தனி யோக ஞானமெல்லாம்
அரிய அருள் கொடுப்பாய்—கந்தையா
ஐங்கரர்க்கிளை யோனே

33 ஆதிசிவன் புத்திரனே—கந்தையா
அசுரகுலச் சத்துருவே
நீதியுடன் உன்பாதம்—கந்தையா
நினைக்கவர மேயருள்வாய்

34 அன்றசுரன் கோரமெல்லாம்—கந்தையா
அடக்கி செயம் பொருந்தி
குன்றுருவ வேல் விடுத்த—கந்தையா
குழந்தை வடிவேலோனே

35 பக்தி நிலை காட்டி—கந்தையா
பாலமுர்தம் நீயூட்டி
முத்திவழி யறிய—கந்தையா
முருகாகருணைசெய்வாய்

36 மண்ணாசை பெண்ணாசை—கந்தையா
மானிலத்தின் ஆசை எல்லாம்
எண்ணாது யானிருக்க—கந்தையா
எனக்கு வரம் ஈவதெப்போ

உ

சிவமயம்.

குரு வாழ்க.

வித்துவ கணித சோதிடர் C. S. ஜோதிவேல் நாயனுர்

அவர்களால் இயற்றிய

கதிர்காம

# வழிநடை பஜனுமிர்தம்.

—:o:—

வேலு மயிலும் துணை.

விருத்தம்.

நித்தியம் கதிர்காம பக்தி பஜனுமிர்தம்
நினைத்த பொருள் பாடுதற்கே
உத்தமி பாலனே வெத்தி மயில் வேலனே
உன்னடியை யான் துதித்தே
வித்துவம் இரத்தினகிரி உத்தம ரென் குரு
பக்தரை தினம் பணிந்தே
முத்தமிழ் ஜோதிவேல் பக்தனுக் கருள்தர
மூஷிகா முன் வருக வே.

ஆடித்திருவிழாவாம் என்ற மெட்டு.

1 ஆடியில் கொடியேற்றம் அப்பன் கதிரேசனுக்கு
கூடி நாமள் செல்வோம் வாரும் என்குமரன் குஞ்சரியே—நாம்
கோரும் வரம் தந்திடுவார் என் வேலன் சுந்தரியே

2 நடப்போம் கதிர்காம நாதன்வழி காக்ஷிகளே
திடத்தில் பஜனைகளே என் கந்தன் சுந்தரியே—நாம்
நடத்திடுவோம் கந்தன்மீது என் குமரன் குஞ்சரியே

3 சத்தியுமை பெற்றமகன் சந்ததியே தந்திடுவார்
பக்தியுடன் போவோம்வாரும் பௌரனை தேடி—கந்தன்
பக்தர்கள் கூடிசெல்வோம் பஜனைகள் பாடி

4 அப்புத்தளை நகரம் ஆரணங்கே பார்[redacted]
அற்புத காக்ஷிகளை என் கந்தன் [redacted]—நான்
இப்போ எடுத்துரைப்பேன் என் வேலன் குஞ்சரியே

5 அப்புத்தளை நகரின் அதிசயத்தை இன்னதென
செப்பிடுவீரெந்தனுக்கு என் ஐயா ஷண்முகரே—இப்போ
அப்பன் மகிமைதன்னை என்னையா வேலவரே

6 உருத்திராக்ஷதாவடமும் ஊதுபத்தி குங்குமப்பூ
பக்தர்களும் வாங்கிசெல்ல என் பாவைதெள்ளமுதே-இங்கே
வைத்துவிலை கூறுகிறார் என் வனக்குற மகளே

7 சிங்களவர் இஸ்லாமான் செட்டி முதல் வர்த்தகர்கள்
இங்கே வாங்கள் சுவாமியென்று என்கந்தா ஷண்முகரே-வெகு
சங்கையாய் அழைக்கிறாரே என் ஐயா வேலவரே

8 சூழ்ந்து வருவார்கள் கூடம் விலையாகுமென்று
பாந்தமுடனழைப்பார் என் வேலன் சுந்தரியே—இந்த
பாங்கான கடைத்தெருவில் என் குமரன் குஞ்சரியே

9 ஆறுமுகன் கோயிலெது அடியாள் குறைத்திடுவீர்
காருமன வணங்கி என் கந்தா ஷண்முகரே—நாம்
கற்பூரமேற்றிடுவோம் என் ஐயா வேலவரே

10 கண்டு வணங்கிடுவோம் கதிரேசன் சந்நிதியை
கொண்டு தேங்காயுடைப்போம் என் குமரன் குஞ்சரியே-கந்தன்
கூடத்துணைவருவார் என் வேலன் சுந்தரியே

11 வேண்டிய காரு பஸ்சு வித விதமாய் நிற்குதையா
ஆண்டிபதிபோகவே என் ஐயா ஷண்முகரே—நாம்
வேண்டிடும் காரெது வென் குமரன் வேலவரே

12 புத்தல் திசைமாறு போகுமிந்த காருபஸ்சு
பக்தர்கள் சேர்ந்தவுடன் என் கந்தா சுந்தரியே-போலீஸ்
பார்த்து அனுப்பிடுவார் என் வேலன் குஞ்சரியே

13 காக்கி உடுப்பணிந்து கேப்பு தலையில் வைத்து
நோக்கி துப்பாக்கியுடன் என் கந்தா கந்தவேலு-டவும்
பார்க்கிறாரே வீதிசுத்தி என் ஐயா வேலவரே

14 தோட்டாவும் ஈட்டிகளும் துப்பாக்கி தோளில் வைத்து
வாட்டமுடன் திரிவார் என் கந்தன் சுந்தரியே—வரும்
போட்டிகளை பார்த்தடக்க என் வேலன் குஞ்சரியே

உ

சிவமயம்.

பதினெண்சித்தர்களில் மஹா மகத்துவம்பொருந்திய

அகத்தியமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

பஞ்சகாவியத்திற்குருநூலென்னும்

ஆயுறுவேதமாகிய

# சௌமியசாகரம்

## ௲உ௱.

இஃது

மதுரை - புதுவை - சென்னை - இச்சங்கங்களில்

தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய

களத்தூர் வேதகிரி முதலியார் குமாரர்

**கந்தசாமி முதலியாரால்**

பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சிசெய்து

மதுரை புதுமண்டபம் புஸ்தகவியாபாரம்

**இராமசாமிக்கோன் அவர்கள் விருப்பத்தின்படி,**

சென்னை:

**த. துரைசாமி முதலியாரால்**

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1935. [விலை ரூ. 1-8-0

உ

கடவுள் துணை.

# இந்நூல் திருத்தி அச்சிட்டவர்கருத்து.

மாட்சிமை பொருந்திய சிநேகிதரே!

இவ்வுலகின்கண் வசித்திருந்த சித்தர் மகாபுருஷர் வரலாறேதெனில், மகாமகுத்துவம்பொருந்திய நாற்பத்தெண்பெயர் முனிவர்களும், பதினெண்சித்தர்களும், நவகோடி ரிஷிகளும் தங்கள் தங்கள் ஜீவ காருண்ணியத்தினால் திருவாய்மலர்ந்தருளிய மூன்றுலட்சங் கிரந்தங்களில் தற்காலம் கிடைத்த சில கிரந்தங்களில் கோர்வைகிடையாமல் வகுப்பன்றிசுமார் 52-வயித்தியங்களை அச்சிட்டேன் அன்றியும் புராதன சங்கதியாவன முன்னோர்சொன்ன மூன்றுலட்சங்கிரந்தங்களில், வயித்தியகிரந்தம் 2-லட்சமென்றும் வாதக்கிரந்தம் 1-லட்சமென்றும் பெரியோர் ரிஷிகள்சொல்லியிருக்கிறார்களல்லவா அப்படியிருந்தும் இன்னம் அடியேனுக்கு கிடைத்தமாத்திரம் தன்வந்திரியர்-அகஸ்தியர்-சட்டமுனி-மச்சமுனி-கோரக்கர்-வரரிஷி-புலிப்பாணி- யூகிமுனி-சிவவாக்கியர்-கருவூரார்-தேரையர் - இன்னஞ் சிலசித்தர்களின் சாஸ்திரக்கோர்வை சுமார் எமதிடம் (160) கோர்வைகள் பெருநூலும் சிறுநூலும் கிடைத்திருந்தும் தற்காலத் திரவிய சகாயமட்டாயிருப்பதினால் அப்போதைக்கப்போது ஒவ்வொரு கிரந்தங்களாய் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும். மேலும் பஞ்சகாவியமாகிய வயித்தியகாவியம்-வாதகாவியம்-இலட்சணகாவியம்-பூரணகாவியம் - மாந்திரியகாவியம்-என்னும் இப்பஞ்சகாவியத்திற்கு குருநூலாகிய-சௌமியசாகரமென்னும் ஆயுறவேதமாகிய இச்சாத்திரக்கோர்வையை பண்டிதர்களுக் குபயோகமாக இக்குருநூலை அச்சிடத்துணிந்தேன். அன்றியும் இச்சௌமியசாகரக்கோர்வைகளில் இந்நூலே முதநூலென்றும் இதைச்சார்ந்த கோர்வைகளில் 1500-என்றும், 500-என்றும், 300-என்றும் கூறப்படும் அச்சாத்திரங்களையும் பின்னால் ஒவ்வொரு தொகுப்பாய் அச்சிடப்படும்.

இந்நூல் அச்சிட்டவர் கருத்து

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

## சௌமியசாகரத்தின்

# பொருளடக்க அகராதி.


| பொருள் | பக்கம். |
|---|---|
| அண்டவுற்பத்தி | 6 |
| அண்டக்கல்லு | 7 |
| அண்டசுத்தி அண்டமெழுகு | 10 |
| அண்டம்பனிநீரு | 11 |
| அதிகாலம்பெற்ற | 14 |
| அமுர்தசஞ்சீவி | 24 |
| அமுர்தசஞ்சீவியுப்பு | ,, |
| அமுர்தமிருப்பிடம் | 27 |
| அயச்செம்பில் | 31 |
| அபத்தங்கம் | 32 |
| அமுர்தவிந்துமூலம் | ,, |
| அமுர்தமசிகற்பம் | 35 |
| அடையாளம் | 38 |
| அகத்தியர்சொல் | 41 |
| அட்டமாரணக்கரு | 52 |
| அண்டசவர்க்காரவுப்பு | 61 |
| அகத்தினுப்பு | 68 |
| அயச்செம்பு | 72 |
| அயச்சுத்தில்அயவெட்டு | 79 |
| அசுவனிதேவர் | 84 |
| அமுர்தம் | 102 |
| அகோரகாலாக்கினி | 108 |
| அண்டகாயாதிகற்பம் | 111 |
| அண்டசவ்வுஅண்டகோவை | ,, |
| அசுவனிதேவருண்டமெழு | 119 |
| அடிவாரசித்தர் | 122 |
| அண்டசவர்க்காரமெட்டுதிங் | 121 |
| அண்டமாக்கரு | 125 |
| அண்டப்பிசின் அண்டசவர்க் | 126 |
| அழுகண்ணர் | 154 |
| அழுகண்ணர்கௌரிபாஷா | 178 |
| அஷ்டகர்மச்சிலே | 205 |
| அஷ்டமாத்தயில | 206 |
| ஆத்தாளைப்பூசிக்க | 30 |
| ஆருதாரக்குறி | 39 |
| ஆறுப்பின்பெயர் | 68 |
| ஆண்பனிநீர் | 93 |
| ஆருதாரபூசை | 128 |
| இரண்டாமுப்பு | 12 |
| இந்தச்செயநீருக்குப்பூசை | 22 |
| இருபத்தைந்தெழுத்து | 25 |
| இச்சுண்ணத்தில் | 31 |
| இந்நூல்சௌமியசாகர | 32 |
| இதற்குவுயிர்நாதம் | ,, |
| இந்நதிகள்தீவி | 33 |
| இன்னூல்குறிப்பறிய | ,, |
| இன்னூல்போலொருநூலில்லை | 40 |
| இந்நூல்கோடிவித்தை | 50 |
| இரசபாகம் | 81 |
| இரசமணிபதினூறு | ,, |
| இரசமெழுகு | 83 |
| இரவிமுப்பு | 87 |
| இரவிமெழுகு | 89 |
| இரவிசெயநீர். | 89 |
| இரவியில்வைக்க | 95 |
| இந்துவைப்பு | 146 |
| இந்தசவ்வீரத்தின் பெயரறி | 163 |
| இடைக்காடாவெள்ளைபாஷா | 76 |
| இந்நூலிற்பாடியபொருளது | 86 |
| இந்நூல்சுருக்க-300-பார்க்க | 206 |
| இடைக்காடா | 154 |
| உருகுகல் | 10 |
| உப்பின்பெயர் | 11 |
| உப்புகளறிய | 23 |
| உப்பசெயநீர் | ,, |
| உப்புசெயநீர் | 26 |
| உடர்கருவிந்து | 38 |
| உப்புபீங்கானெட்டு | 142 |

| பொருள் | பக்கம். |
|---|---|
| உரோமசெயநீர் | 70 |
| உத்திராடமதிங்கள் | 93 |
| ஊசிசெயநீர் | 74 |
| ஊசிசெயநீர்மெழுகு | ,, |
| எழுத்துரேகை | 25 |
| எண்ணைகழட்ட | 67 |
| எண்ணைகழட்ட | 83 |
| எட்டாந்திங்கள் | 125 |
| எமனாட்டுச்சித்தர் | 155 |
| எமனாட்டுச்சித்தாந்தரசவை | 182 |
| எழுநூல்கோர்வை | 7 |
| ஐங்காயமறிய | 26 |
| ஐங்காயத்திலுப்பு | 42 |
| ஐந்துருத்தபிலம் | 54 |
| ஐந்துமாதக்கடுஞ்சூலாணிக் | 121 |
| ஐங்கோலநீர் | 143 |
| ஐங்கோலத்தைலம் | 148 |
| ஐங்கோலமாவு | ,, |
| ஐங்கோலமெழுகு | ,, |
| கலுவமாகும் | 19 |
| கட்டுத்தெளிவு | 23 |
| கற்பலேகியம் | 35 |
| கல்லுப்புத்திராவகம் | 50 |
| ஷை திராவகம் | ,, |
| கல்லுப்புகம்பியுப்பு | 67 |
| கங்குநதிதேசம் | 84 |
| கண்டிகதிர்காமதேசம் | 85 |
| கல்லுப்புநாலுதிசைசித்த | ,, |
| கடுகாய்த்தூள் | 93 |
| கடுகாய்த்தூள் | 86 |
| கற்பலேகியம் | 109 |
| கற்பூசையமுர்தபூசைமவுன | 112 |
| கவிவிருக்க | 130 |
| கலசம்தானியம் | 133 |
| கருநாய்கை | 135 |
| கருவூரார் | 153 |
| கருவூரார்கெந்திரசவைப்பு | 174 |
| கன்னிபிண்டமாக்கருவு | 193 |
| கோரசொக்குப்பொடி | 185 |



| பொருள் | பக்கம். |
|---|---|
| காந்தக்கிண்ணத்தில்சஞ்சீவி | 34 |
| காரீயத்தங்கவேதை | 71 |
| காந்தசுத்தி | 80 |
| காந்தமெழுகு | ,, |
| காந்தமசுருக்குத்தாக்குதல் | 81 |
| காயாதியமுர்தம் | 111 |
| கசிவிருக்க | 130 |
| காரவைப்பு | 139 |
| காந்தாசக்குளிகை | 183 |
| காலசிவயோகம் | 189 |
| காயகண்டநல்லமூலிசுண்ண | 199 |
| காவியமைந்திற்கும் | 40 |
| குருவுடன்சீஷன்தர்க்கம் | ,, |
| குழித்தபிலம் | 54 |
| குருசெயநீர் | 61 |
| குகைச்சார்பு | 86 |
| கும்பகசித்தி | 100 |
| குருசெயநீர்மெழுகு | 101 |
| குகைகையைரவியில்வைக்கவும் | 102 |
| குன்றிமணிப்பிரமாணம்கோ | 113 |
| குருசெயநீர்ஊசிசெயநீர் | 115 |
| குருவின்மகிமை | 134 |
| குருகும்பமுனி | 155 |
| கெந்தமெழுகு | 76 |
| கெந்திரசக்கட்டு | 175 |
| கெற்பங்கழட்ட | 124 |
| கைபாகம்செய்பாகம் | 19 |
| கைலாசசித்தி | 104 |
| கைலாசசட்டைமுனி | 150 |
| கொங்கணர் | 152 |
| கொங்கணர்வாலைரசவைப்பு | 170 |
| கொட்டைப்பாக்குவெற்றி | 190 |
| கோரக்கர் சித்தர்களுக்கு முதன்மையானவர் | 155 |
| கோலானதுசௌமியசாகரம் | 9 |
| கோழிமுட்டைமனிதர் | 141 |
| சத்திநாதவீடு | 6 |
| சகலநூலில் மறைத்தசூட்சம் | 8 |
| சத்திமாரணம் | 28 |

| பொருள் | பக்கம். | பொருள் | பக்கம். |
|---|---|---|---|
| சஞ்சீவிகற்பம் | 34 | சிவமுப்பு | 98 |
| சலாநதியின்பை | 57 | சிவமுப்புச்சாபநிவர்த்தி | 99 |
| சவர்க்காரநீறு | 58 | சிவமுப்புத்திராவகம் | ,, |
| சவர்க்காரமெழுகு | 59 | சிவமுப்புத்திராவகத்துக்கு | 97 |
| சவர்க்காரவுப்பு | ,, | சிவமுப்புச்சுண்ணம் | 101 |
| சத்திதசதீட்சை | 64 | சிவமுப்புசெந்தூரம் | 104 |
| சவ்வீரமெழுகு | 74 | சிவமுப்புசெந்தூரவுண்டை | 105 |
| சாபநிவர்த்தி | 85 | சிவசத்திமுப்புசெந்தூரம் | 106 |
| சலகங்கையமுர்தம் | 94 | சிவகேந்திரபூபதிசுண்ணம் | 07 |
| சத்திப்பூநீர் | 95 | சிவகேந்திரபூபதிகற்பம் | 108 |
| சத்திப்பூநீர்சலம் | 97 | சிவயோகவாசி | 109 |
| சத்திமுப்புச்சாபநிவர் | 100 | சவனகொல்லஉமைகேட்க | 112 |
| சத்திமுப்புத்திராவகம் | ,, | சிவன்கொண்டகற்பம் | 114 |
| சவர்க்காரம்பசுமைநிறப்பூமி | 121 | சிவசத்திகொண்டகற்பம் | 115 |
| சல்லியவேதை | 124 | சிவயோகம்பூசித்தடிபணிக் | 118 |
| சவர்க்காரவுண்டை | 129 | சிவயோகபூசை | 120 |
| சலவித்து | 130 | சீலபாகம் | 20 |
| சரக்குவைப்புமுறை | 131 | சுத்தசலம் | 13 |
| சதுர்முகசித்து | 142 | சுழிநாட்டம் | 26 |
| சட்டமுனிதருசுவைப்பு | 157 | சுழிமுனையின்கனவு | 27 |
| சத்திசிவம்சித்திக்க | 195 | சுத்தசலத்தெளிவு | 43 |
| சாதிலிங்கமெழுகு | 70 | சுண்ணநிறமறிய | 45 |
| சாபநிவர்த்தி | 94 | சுண்ணத்தில்வாலைகற்பம் | ,, |
| சாபநிவர்த்தி | 95 | சுண்ணவங்கத்தில்தங்கவே | 51 |
| சாபநிவர்த்தி | 96 | சுனைமுனையில்வாசியொட்டி | 75 |
| சாபநிவர்த்தி | 85 | சுந்தரானந்தர்வெள்ளை | 158 |
| சாபநிவர்த்தி | 102 | சுசபானந்தர்கெந்திபாஷாண | 160 |
| சாபநிவர்த்தி | 85 | சுவாசதம்பனநாழிகை | 190 |
| சாயுச்சியபதவி | 116 | சுத்தசமதியானம் | 192 |
| சாதிலிங்கமெழுகுகற்பம் | 117 | சுண்ணத்தால்தாம்பரஎமம் | 201 |
| சாதிக்காய்த்தூள் | 120 | சுண்ணநிறம் | 113 |
| சாரவைப்பு | 140 | செயநீர்பூசை | 26 |
| சிவவிந்துவீடு | 6 | செயநீருக்குசெபவெழுத்து | 192 |
| சிவமாரணம் | 28 | செந்தூரவர்ணம் | 105 |
| சிவயோகபூசைஐம்பூத | 41 | சோருபானந்தரிஷி | 151 |
| சிவயோகபூசை | 84 | சோதிரிஷி | ,, |
| சிவசத்திகங்கை | 93 | சோதிரிஷிகவ்வீரவைப்பு | 162 |
| சிவசத்திப்பூநீறு | 95 | சௌமியசாகரத்திற்கருக்கா | 80 |
| சிவமுப்பு | 95 | சௌமியசாகரம்சிவனுமை | 90 |

| பொருள் | பக்கம். | பொருள் | பக்கம். |
|---|---|---|---|
| ஞானகாவிபத்திலுள்ள | 31 | நவகோடிசித்தர் | 83 |
| தலைச்சனுடவிவேக | 44 | நவகோடிசித்தி | 92 |
| தலைப்பிள்ளைநாமம் | 92 | நமனுக்குநமனுவாய் | 113 |
| தலைச்சன்பெண்பனிக் குடம் | 94 | நந்தீசர்கொண்டகற்பம் | 116 |
| தன்வந்திரியுண்டகற்பம் | 117 | நந்தீசர்கற்பம் | ,, |
| தாழிசை | 69 | நவகோடிசித்து | 137 |
| தாம்பரத்தங்கம் | 65 | நந்திகலைக்ஞானம் | 149 |
| தாளகமெழுகு | 69 | நாதவிந்து | 5 |
| தாம்பரசுத்தி | ,, | நாதமெழுகு | 1 |
| தாம்பரத்தில்தங்கவேதை | ,, | நாதாக்கள்தவம் | 38 |
| தியானம் | 63 | நால்வகைச்சாதி | 41 |
| திராவகத்துக்குசாபநிவர்த்தி | 98 | நாதசத்திநீர் | 95 |
| திரிஞ்சலெரு | 105 | நாதசத்தியுப்பு | 97 |
| திருமூவர் | 152 | நாதசத்தியுப்பின்சாபநிவர்த் | 97 |
| திருமூலர்சாதிலிங்கவைப்பு | 167 | நாதசத்தியுப்புத்திராவகம் | 98 |
| துருகமெழுகு | 72 | நாதசத்திமுப்பு | 99 |
| துருசுகட்டு | 173 | நாதசத்திமுப்புச்சுண்ணம் | 103 |
| துருசின்பெயர் | 158 | நாட்டுசலசுத்தி | 125 |
| துன்மார்க்கருக்குநூலியாதே | 91 | நிலவுப்பு | 66 |
| தெரிசனம் | 25 | நிலத்தும்பைப்பூண | 87 |
| தெளிவுஅறிவுபருவம் | 92 | பத்துநாளிவ்விதமாய் | 11 |
| தெய்வலோகத்தயிலம் | 191 | பஞ்சபூதவிபரம் | 21 |
| தெய்வலோகச்சொக்குபோ | 196 | பஞ்சஅமிர்தமென்பது | 26 |
| தேவிமாரணமூலம் | 28 | பஞ்சபூததெரிசனம் | ,, |
| தோாதபேர்களுக்கு | 51 | பஞ்சபூதநிலை | 36 |
| தேசிசெயநீர் | 72 | பத்தியமறிய | 46 |
| தொண்ணூற்றாறுதத்துவம் | 36 | பதினெட்டுலட்சங்காப்பு | 82 |
| தொழுகண்ணர் | 155 | பதினைந்துநாள் பனியில்லை | 84 |
| கொழுகண்ணர்தொட்டிபா | 180 | பதினைந்துநாள்பனியுண்டு | 85 |
| நவநீதசஞ்சீவி | 24 | பனிநீர்வெள்ளைக்கல் | 86 |
| நவநீதவெங்காயமெழுகு | 29 | பஞ்சகாவியச்சூ | 90 |
| நவநீதசுண்ணம் | 30 | பஞ்சநாதாக்கள் | 114 |
| நல்வினைதீவினை | 33 | பரிமளவாடை | 125 |
| நவநீதம் | 40 | பத்மினிசாதியில்நாதம்வாங் | 128 |
| நவநீதலேகியம் | 45 | படிகாரவைப்பு | 144 |
| நரைதிரை | 46 | பராசரிஷிதொட்டிபாஷாண | 149 |
| நவநீததிராவகம் | 47 | பாகங்கள்கிளிஞ்சிசெயநீர் | 76 |
| நஞ்சுக்கொடிசுண்ணம் | 58 | பாஷாணமெழுகு | 77 |
| நவநீதமெழுகு | 62 | பிண்டயெழுத்து | 42 |

| பொருள் | பக்கம். |
|---|---|
| பிராணயமூலம் | 96 |
| பிராணயபூசை | 122 |
| பிண்டசவர்க்காரம் | ,, |
| பிண்டக்கருசவர்க்காரவுண் | 123 |
| பிண்டசவர்ககாரம் | 126 |
| பிண்ணாக்கீசர் | 153 |
| பிரமரிஷிகெந்திபாஷாணம் | 159 |
| பிண்டசுத்தி | 198 |
| பிரமதியானம் | 200 |
| பிடிநாக்கீசர்லிங்கரசவைப் | 171 |
| புடபாகம் | 20 |
| புடம் | 44 |
| புத்திதேறுதல் | 47 |
| புணர்ச்சி | 9[illegible] |
| புட பாகம் | 103 |
| புடபாகம் | 102 |
| புடநிறம் | 106 |
| புறுவெச்சம் | 107 |
| புவனைமும்மூலத்தியானம் | 128 |
| பூசைகள்செய்புமுறை | 24 |
| பூமிக்குழி | 59 |
| பூரணசந்திரோதயம் | 62 |
| பூரணசெந்தூரம் | 77 |
| பூரணதிசுற்பம் | 78 |
| பூவுக்குச்சிவயோகபூசை | 86 |
| பூரகம்கும்பம் | 92 |
| பூநீரெடுக்கும்பூமி | 94 |
| பூநீறெண்ணைகழட்ட | 96 |
| பூநீர்திராவகம் | 96 |
| பூரணசித்தி | 105 |
| பூநீராஆறுமாதப்பிண்டம் | 122 |
| பூநீறுநாதம் | 127 |
| பூரவைப்பு | 133 |
| பூரவைப்பின்பெருமை | 134 |
| பெரியோர்களிடஞ்சென்று | 138 |
| பொதியைபாகம் | 75 |
| பொதிகைகிரிச்சரால் | 137 |
| பொட்டுப்புவைப்பு | 144 |
| பொடிக்குத்தியானவைழுத் | 197 |

| பொருள் | பக்கம். |
|---|---|
| பேரண்டம்ஏரண்டம் | 37 |
| போகரிஷி | 151 |
| போகரிஷிநாகவைப்பு | 169 |
| மதியுப்புச்செயநீர் | 16 |
| ஷை மெழுகு | 16 |
| மதிமெழுகு | 88 |
| மனோன்மணிவாலை | 29 |
| மதியாமுர்தம் | 73 |
| மதியுப்பு | 87 |
| மதிசெயநீர் | 88 |
| மதிடனிநீர் | 94 |
| மதுசலம் | 98 |
| மதனப்பால் | 109 |
| மகேசுரதெரிசனம் | 109 |
| மவுனபூசை | 110 |
| மண்டலமுண்ண | 118 |
| மண்டலமிருபோதுண்ண | 114 |
| மலைபாடிதருகம் | 126 |
| மஞ்சணிறப்பூமி | 126 |
| மறைப்புமை | 136 |
| மச்சமுனி | 153 |
| மச்சமுனிதருக | 172 |
| மவுனகேசரக்குளிகை | 177 |
| மாக்கரு | 12 |
| மாரணபீடம் | 27 |
| மாரணமெட்டுமெட்டு | 30 |
| மானிடருக்குப்புத்தி | 47 |
| மாந்திரிகமட்டசித்து | 52 |
| மாந்தோலில்மாம்சமூலம் | 54 |
| மாளவபிரமகுலநாதம் | 133 |
| மாவிற்கு | 133 |
| மிறுதார்சிங்கிக்கு | 165 |
| முப்புமுறை | 4 |
| முதலுப்பு | 11 |
| முப்பூவுக்கு | 18 |
| முப்பூவுக்குச்சிவயோகபூசை | 98 |
| முப்புசுண்ணம் | 18 |
| முப்புசுண்ணத்துக்குப்பூசை | 21 |
| முப்புசெந்தூரம் | 21 |

| பொருள் | பக்கம். | பொருள் | பக்கம். |
|---|---|---|---|
| முப்புசெந்தூரம்செயநீர் | 22 | வாலைலேகியம் | 46 |
| முப்புசுண்ணசெயநீர் | 22 | வாதகாவியத்திற்குத்திறவு | 49 |
| முன்சொன்னவுப் | 44 | வாதசத்துனிடை | 54 |
| முச்செயநீர் | 83 | வாலைமூலவுப்பு | 66 |
| மும்மூலரேசகம் | 98 | வாலைதியானபாகம் | 87 |
| முப்புத்திராகவசாபநிவர்த்தி | 101 | வாலைதியானம் | 103 |
| முப்பூவின்மார்க்கம் | 140 | வாலைரசம் | 115 |
| முன்சொன்னத்துக்குறியா | 199 | வாலைபூசைமிதுனராசி | 131 |
| முன்சொன்ன வாலைசுண்ண செந்தூரபக | 201 | வாசிசித்தி | 136 |
| மூடுகுவிருத்தம் | 81 | வாலைபூசை | 138 |
| மூன்றுமுப்பு | 16 | வாதகாவியம்ஞானகாவியம் | 150 |
| மூலமதாரம் | 25 | வாகதேவர் | 156 |
| மூலதியானம் | 123 | வாலைசுண்ணம் | 201 |
| மூன்றுதிங்கள் | 127 | வாசிப்பார்க்கும்வகை | 190 |
| மெய்ஞ்ஞானப்பதி | 79 | வாசியெழுத்து | ” |
| மெய்ஞ்ஞானக்கரு | ” | வாசிக்குமூலமந்திரம் | 191 |
| மெய்ஞ்ஞானப்பரகெதி | 139 | விந்துநாதம் | 9 |
| மெழுகுவகை | 106 | வியாதிவிவரம் | 90 |
| மேல்கருவிமுறைபாகன | 141 | வீணருக்குகருவறிய | 156 |
| மை | 105 | வெடியுப்புத்திராவகம் | 49 |
| ரவியுப்பு | 15 | வெடியுப்புவைப்பு | 143 |
| ரவிமெழுகு | ” | வெள்ளிசெந்தூரம் | 63 |
| ரவிமனமரேசகம் | 91 | வெள்ளிசெந்தூரவேதை | 65 |
| ரேசகம் | 104 | வெள்ளிவித்தை | 74 |
| லிங்கக்கட்டு | 172 | வெள்ளிபொன்வட்டு | 77 |
| லிங்கசாரணை | 172 | வெண்காரவைப்பு | 138 |
| லெபியுள்ளோர் | 30 | வண்காரப்பலகை | ” |
| வறுமைவருங்காலத்தில் | 32 | வெண்காரவைப்பு | 138 |
| வடகலைஇடகலை | 33 | வேதையுப்பு | 29 |
| வழலை | 39 | வேதைகாண | 30 |
| வட்டு | 63 | வேகாத்தலைசாகாத்தலை | 41 |
| வண்டுதெளிவு | 102 | வேதரிஷி | 151 |
| வளைஇலுப்பு | 147 | வேதரிஷிமிருதார்சிங்கு | 164 |
| வாதமுறை | 12 | வைப்புமுறை | 57 |
| வாலையப்பணிதல் | 20 | வைகாதி | 92 |
| வாலைமுக்கோணம் | 28 | வைசியகுலம் | 126 |
| வாலைபூசை | 45 | வைசியகுலபத்மினி பனிக்குடம் | 192 |


பொருளடக்கவகராதி-முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

அகஸ்தியமுனிவரருளிச்செய்த

பஞ்சகாவியத்திற் குருநூலென்னும்

ஆயுறுவேதமாகிய

# சௌமியசாகரம் - ௲உ௱.

ஆதியெனும் பூரணமாய் வெளியாய்நின்ற
யகண்டசதா சிவத்தினுட வருளேபோற்றி
காதியெனுஞ் சுழிமுனையாய் பிறவையான
ஞானசௌமிய சாகரத்தி னருளேபோற்றி
வேதியெனும் பரவெளியாய் விளங்குஞ்ஞான
வேதாந்தப் பரப்பிர்ம்மசர ஜோதிபோற்றி
வாதியெனும் வுற்பனித்த னாதவிந்தின்
வகண்டகனை பதியிநிட பீடங்காப்பே. (1)

காப்பான வேதாந்த பரமெய்ஞ்ஞான
கருவிகர ணாதியுட குருவேகாப்பு
மூப்பான தர்ப்பரத்தின் சுரூபமான
மூதண்டப் பதிபாசயுப நிடமேகாப்பு
யாப்பான மெய்ப்பொருளாய் ரூபமான
யந்தமென்ற கருக்குருவி னருளேகாப்பு
தாப்பில்லா சௌமியசா கரங்களான
சராசரங்கள் சூழ்ந்தகுண் டலிகாப்பாமே. (2)

குண்டலியெ சுழிமுனையிலே கூர்ந்துவொட்டிக்
குருவான பராபரத்தைப் பணிந்துநாமும்
யண்டமெல்லாம் பிண்டமதாய் மேவுஞ்சத்தி
யருள்பெருக்கும் சின்மயத்தை யடிபணிந்து
மண்டலங்கள் மூன்றுரவி மதியால்கண்டு
மாயிதிரோ தாயினையநாம் பூசித்தப்பால்
பிண்டமென்ற கருக்குருவை யறிவாற்கண்டு
பேரொளியே தெய்வமென்று பேசினோமே. (3)

பேசினோஞ்சௌமிய சாகரந்தானின்னால் பேரண்டமான தொரு பிறபல்லியத்தால், தூசினோர்தொண்ணூர்த்தாற் கருவியான துதிபெறவேசடலமென்ற கருவைக்கண்டோம், மாசினோமண்டரண் டங் கண்டோம்பாரு மதுக்கப்பாலாயிரத்தெட் டண்டங்கண்டோம், பாசினோம்பரப்பிர்ம சுரூபங்கண்டோம் பரிவானபசுபதி பாசங்கண் டோமே. (4)

கண்டோமேபசுபதியை மனக்கண்ணாலே காட்சியெல்லாமதி னாலே கண்டோம்விண்டோம், யண்டோமேயதுக்கப்பால் சராசரங் கள் அச்சராசரங்களிலே யனேகங்காலம், பூண்டோமேபூரணத்தி னுடையங்கண்டோம் பூறுவத்தில்சௌமியசா கரங்கள்கண்டோம், மாண்டோமேமௌனசிவ யோகங்கண்டோம் மதிபிறையைக்கண்டு மன மகிழ்ந்தோம்பாரே. (5)

மகிழ்ந்தோமேயாதாரம் மேலாதாரம் மகிசுழியுடனிரண்டிலுட பீடங்கண்டோம், யகழ்ந்தோமேயதுநிலையை மனத்தாற்கண்டோ மாராறுபனிரெண்டு வறையேகண்டோம், துகழ்ந்தோமேதுரியந்துரி யாதீதங்கள் துருவவரைமேல்வரைகள் கீழரையுங்கண்டோம், சகழ்ந் தோமேசௌமியசா கரங்கள்தன்னில் சச்சிதானந்தவெளி சலங்கண் டோமே. (6)

கண்டதொருபருவமென்ற சுருபங்கண்டோங் கணக்கில்லாதீப வொளி பிறவைக்கண்டோம், தொண்டரென்றநிலைகண்டோம்மண்ட லங்கள்கண்டோம் துரியாதீதத்தலத்தில் சோதிகண்டோம், விண்ட தொருகாவியந்தானஞ்சும்பாடி விரித்தபொருளனந்தமெல்லாம் விள ங்கினோம்பார், வண்டபிரான்தொண்டுமையாள் கொண்டேயென்னை வறைதோறுங்கறைதேரி வரைக்கண்டோமே. (7)

வறையானமேலாறுவறையுங்கண்டோம் மகத்தான துறைகீழாறு துறையுங்கண்டோம், பறையானப்பறைகண்டோம் பரமெய்ஞ்ஞா னம் பாடினோமாயிரந்தான் ஞானஞ்சொன்னோம், துறையானமாந்தி ரிகமாயிரந்தான்சொன்னோம் துருவானவயித்தியமாயிரந்தான்சொன் னோம், எறையானலெட்சணத்தி லாயிரந்தான்சொன்னோம் யெடுத் தோமேவாத காவியந்தான்பாரே. (8)

பாரப்பாபுலத்தியனேயஞ்சுனூறு பாடினதோர்காவியந்தா னைந் தும்பார்த்து, ஆரப்பாசௌமிய சாகரந்தானின்னூ லாயிரந்தான்திற வுகோலைந்துக்குத்தான், காரப்பாகடலதிக சாத்திரமென்றும்பேர்

கருவான நூலிதுதா னுர்தான்சொன்னர், வேரப்பாயிந் நூலு சகலத்திற்கும் விதித்தவிதியுள்ளவர்க்கு யிந்நூலாமே. (9)

ஆமென்றயிந்நூலி லாடும்வித்தை யருளுகிறோம்புலத்தியனே யருளுறோம்நாம், சோமென்றசுந்தரமே யகத்தினுனுஞ் சொல்லுகிறேன்தொகுப்பினுட சூட்சங்கேளு, வாமென்றவாதவித்தை யனேகஞ்சொல்வோம் வழலைமுறைமுப்புனுட வளங்கள்செல்வோம், மாமென்றசுண்ணங்கள் செயநீர்சொல்வோம் மகத்தானதிராவகங்கள் வளஞ்சொல்வோமே. (10)

சொல்வோமேசெந்தூரங்கோடாகோடி சுண்ணத்தில்வெகுகோடிசெயநீரில்கோடி, வெல்வோமேவேதையிலே யனேகங்கோடி விளங்கினதோர்கட்டுகளி லனேகங்கோடி, செல்வோமேதிராவகத்தி லனேகங்கோடி செயலானபற்பங்களனேகங்கோடி, பல்வோமேயமுர்தபனிநீர்கள்கோடி பாடலெல்லாஞ்சுருக்கியிந்நூற் பாடினேமே (11)

பாடினேஞ்சுந்தரமேவைப்புகோடி பரிவானவைப்புகளில்கட்டுகோடி, சாடினேஞ்சரக்குகளில் அனந்தங்கோடி, சமர்த்தானகட்டுசுண்ணஞ் செந்தூரங்கோடி, தேடினேம்கட்டில்செய நீர்கள்கோடி தெளிவானதிராவகத்தி லனந்தங்கோடி, மூடினேம்போடாமலத் துலக்கமாக முப்பூவிலுப்புவகை கோடிதானே. (12)

தானென்றசாத்திரங்களனந்தங்கோடி தருவானசக்கரங்கள்பூஜைகோடி, யானென்றயஷ்டசித்தி லனந்தங்கோடி யறுபத்துநாலுசித்துமனந்தங்கோடி, மானென்றமயேந்திரத்திலனந்தங்கோடி, மளவில்லாயிந்திரசால மனந்தங்கோடி, தேனென்றசெககரணம் கோகரணங்கோடி செப்பினேஞ்செப்படி வித்தைதானே. (13)

தானனசொக்குபொடி மோடிகோடி தருவானமைதிலர்தம் வாடைகோடி, தேனனதைலமதிர்கோடாகோடி தெளிவானதிருவுருவின் கருவில்கோடி, மானனயோகவித்தையனேகங்கோடி மாய்கையிலேசதாகோடிஞானங்கோடி, யேனனவித்தையெல்லா மிந்நூலித்தானியம்பினேம்புலத்தியனே யியம்பினேமே. (14)

இயம்பினதோரென்னவென்றால் புலத்தியனேகேளு யீசராந்தானுமையவளுக் கெடுத்துரைத்தார், வியம்பினதோருமையவளும் நந்திக்குச்சொன்னள் யுருகியுடன்நந்திதர்மந் திரிக்குச்சொன்னர், இயம்பினதோர்தர்மந்திரி யசுவினிக்குசொன்னர், அருளினருபதேசமருளக்கேளு, மயம்பினதோரகத்தியனன் யெந்தனுக்கு மருளினரசுவனியு மருளினரே. (15)

மருளினர்சௌமிய சாகரந்தானிந்நூல் மகத்தானபொருள்க ளெல்லா முபதேசித்தார், வருளினூர்வாமகனே யறிவுள்ளோனே வா வழைத்துவலதுபக்க மாசனமேயிட்டு, குருளினர்குணங்குறிகள் நன்றாய்க்கேட்டு குருகுலத்தில்மிகுதிகுலங்குண வானென்றும், யருளி னுருபதேசம்யெந்தனுக்கு யப்போதுபுலத்தியனேயருள்கண்டேனே

அருளானசின்மயத்தின் குறிப்பகேட்டேன் அக்குறியினிதான மெல்லா மடவாய்ச்சொன்னார், மருளானமவர்பதத்தில் பணிந்தே னப்பா மகத்தானவுபதேச மளிந்தாரப்பா, வருளானவுபதேசம் சொன்னாரப்பா, மகத்தானமண்டாண்ட சராசரங்களெல்லாம்,தெரு ளானதெளிவதனல் திசைதிகள்கண்டோம் தேவியுமைவாலையைனும் தெரிசித்தோமே. (17)

தெரிசித்தோமவள்பதத்தில் பூசித்தோம்நாம் தெளிவாகயெந்த னுக்குத் தேவியாளும், வருஷித்தாள்சகலகலைக் கியானமெல்லாம் வாமகனேயென்றுசொல்லி வசனித்தாளப்பா, பரிட்சித்தாள்சகல சித்துக் குருவேசொன்னுள் பணிந்தோம்நாமவள்பதத்தில் முடிதான் தட்ட யுரிஷித்தாளுபதேச மெனக்கேசொன்னு ளுலகமெல்லாமொ ருநொடிக்கு ளாண்டோம்பாரே. (18)

பாரப்பாபுலத்தியனே யையாவையா பாரேழுமவளுடைய கிரு பையாலே, யூரப்பாசுந்தரமே யுபதேசித்தோம் யுடன்சொந்தகருக் குருவானுபாதிபெற்றேம், வாரப்பாவாதமென்றக்கடலில்மூழ்கி மகத் தானகடைனேட்டம் சௌமியத்தில், காரப்பாகடைசொள்வா ரிந் நூல்தன்னில் காசினியில்கோடியிலே யொருவர்தானே. (19)

தானென்றசௌமிசா கரத்திலிந்நூல் சதாகோடிநூல்கள் சொ ன்னே மிதுபோலுண்டோ, யேனென்றயிந்தநூலா யிரந்தான்மைந் தா யிம்பினேமசுவனியி னுபதேசத்தால், யானென்றயின்னூலி லனேகங்கோடி யறிவறிந்துசித்தர்கள்தான்தேறினர்கள், வானென்ற வாக்கதினல் சொல்லப்போமோ வையகத்திலின்னூல் கண்டோர் பதனம்பண்ணே. (20)

## முப்பு முறை.

பண்ணுவதோர்காவியந்தா னஞ்சுமைந்தா பரிவானசௌமிய சாகரத்தோடாறும். பெண்ணுவதோரெண்ணூறு மிதுக்கெல்லாந்தா னியம்பினேரிகண்டோடே யேழுமைந்தா, மண்ணுவதோரிதுக்கெல் லாமதீதக்கோர்வை மைந்தனேசூத்திரங்கள் வலுவாய்நீயும், பண்ணு வதோரித்தனையும் பதனம்பண்ணி பாயிதிரோதாயியைத்தான் பணி ந்துபோற்றே. (21)

பணிந்துநீயவள்பதமே போற்றிசெய்து பழுதில்லாசௌமிய சாகரத்தைமைந்தா, யணிந்துநீபூசைசெய்து வித்தையெல்லா மாடு வாய்புலத்தியனே யாடக்கேளு, வணிந்துநீவாதமென்ற குருவைக் காண வசனிப்போமின்னூல் வரிசையாகக், கணிந்துநீகருக்குருவை யறிவால்காணு கற்பூரதீபமதில் கருத்துவையே. (22)

கருத்தில்வைத்துவொருமனதால்கருகுருவைக்காணு கருத்தில் லாவித்தையெல்லாங் காடாய்ப்போகும், யுருத்தமதாய்ச் சொல்லு கிறேம்புலத்தியாகேள், வொருமனதாய்நின்றையென்றால் வாதஞ் சித்தி மருத்துவதுசௌமியசாகரந்தானின்னூல், மானிலத்திற்காண்ப தரி தின்னூல்மைந்தா வருத்தமில்லாச்சொல்லுகிறே முப்புவித்தை வாழ்வோர்கள்சிவயோகம் மவுனத்தோர்க்கே. (23)

மவுனமென்றமவுனமப்பா யார்க்குந்தோன்று மகத்தானமவுன மடா யார்தான்காண்பார், கெவுனமென்றகெவனமப்பா யெவர்தான் காண்பார் கிருபையென்றகெவுனமதைக்கண்டீரானல், சவுனமப்பா வெகுசவுனமதீதவித்தை சற்குருவின்கடாட்சமதால் தானேதோற் றும், கவுனமென்றகவுனமதை சொல்லக்கேளு காட்டுகிறேம்பாகம தாய் மாட்டுறேமே. (24)

மாட்டுகிறேமாதியடா யனந்தமைந்தா மவுனமந்தமாதியொளி தனிலேகாணும், யாட்டுகிறேமவ்வெளியில்சோதிமின்னல் பார்பரிக் குச்சாலையடா பலேயோமோதும், வாட்டுகிறேமவ்வலேயைத் தாண் டிப்போனல் வடதெற்குமேற்கிழக்கு வதிதங்காணும், நாட்டுகிறேம் நால்திசையும் திக்கெட்டுந்தான் நலமானக்கேணம்பதினாறுங்காணே.

காணப்பாயிக்கோணம் கண்டாயானல் கண்மணியேயிருளமாய் கைகூப்புங்கப்பும், மானப்பாமவுனமதி னறத்தால்வெட்டி மாய்கை யதைக்கடந்தப்பால் சோதிகாணும், யாணப்பாயருபமென்ற சுரூபங் காணும் மச்சரூபங்கண்டையென்றால் மாய்கைபோச்சு, நாணப்பா நாம்சொன்னேமிக் குரியைக்காணு நானிலத்திலார்சொல்வார் நாம் சொன்னேமே. (26)

## நாதவிந்து.

சொன்னமென்றுமலேயாதே புலத்தியாகேள் சுரூபமென்றயருப மடா விந்துவிந்து, நண்ணேமேமாய்கையது நாதம்நாதம் நலமாகவிந் ததுவே ஞதத்திட்டால், யென்னேமேபிளக்கிபது விந்துநாவும், என் மகனேசெத்ததென்றால் வாணிவாலே, யன்னேமெய்வாலேயடா யானை யானை யண்டமெல்லாங்கொல்லுமடா யறந்தாநாமே. (27)

அறமானவாளெடுத்து வசியஞ்செய்தால் அருளினேமெமன்னம
ந்தன் விலகிப்போவான், யுறமானயிவ்வாளைச் சுண்ணமாக்கி யுள்
ளுக்குகொண்டுவிட்டால் நீயோகர்த்தன், சரமானசாவேது மறுபிறவி
யாச்சு தானந்தசிவபோக வாழ்வுமாச்சு, புறமானபரமனுக்கு வீடுண்
டோபார் பரவொளியாய்நின்றபிர்ம நீயோவாயே. (28)

ஆவாயேசித்தியுண்டோற் கிதுவேபோதும் அளவற்றசாத்திரங்
கள் பாரார்மைந்தா, யேவாயேயிதுவறிந்தோனீசனீசன் யேமமென்ற
பரியேமமிதனிலாச்சு, சாவாயேயிதுக்குத்தான்சதாகோடினூலு சாத்
திரந்தோர்சேதியெல்லாமிதுதான்பாரு, தாவாயேயிதனுடையகொடுக்
கந்தன்னை தாம்விரித்துயொவ்வொன்றாய் நவிலுவோமே. (29)

## சிவம் விந்துவீடு.

நவிலுவோம்விந்துதித்தவிடே ளு நகாரபிறநிட்டையுடபீடங்
கேளு, யவிலுவோம்அகாரமடா வித்தின்பேரு மவ்விந்துக்குபிரது
தான் யெழுத்தேயாகும், யொவிலுவோம்நாதமடி சத்திநாதம் வோ
கோகோநாதவீ டுபிரேகேளு, வவிலுவோம்உகாரமென்ற யெழுத்த
தாகும் வாலையடாயதனு?ல விந்துவாச்சே. (30)

## சத்திநாத வீடு.

ஆச்சடாநாதசத்தி சிவமேவிந்து யப்பனேயிருவர்குடி வீடே
கேளு, யோச்சடாஓங்காரமானவீடு யுலகமெல்லாமதுக்குள்ளேசமை
ந்தவீடு, வாச்சடைவாட்டமென்ற கோட்டைக்குள்ளே மகத்தான
சருநதுதான்மே லப்பையாகும், மாச்சடாமதுவிந்தை விந்துகற்கம்
மக்களேநாதவிந்தை நாதங்கார்க்கும். (31)

நாதமென்றசத்தியடா விந்துகார்க்கும் நாதாந்தநாதமதை சிவ
மேகார்க்கும், வேதமென்றபிர்மமடா சருகுமேலே விளங்கியதோர்
கிரிவளர்ந்து வடமேராகும், யாதமில்லைபாதமில்லை யுருவையாகியண்ட
மென்றும் போதமென்றும்பளவதாகி, சேதமொன்றும்வாறாது சிவ
முஞ்சத்தி சிவப்பிர்ம்மமூன்றுபேர்ச் செயலதாமே. (32)

## அண்டவுற்பத்தி.

செயலானயண்டமென்று மதற்குப்பேருசெனித்துதடிசெனித்த
விடமெங்கேயென்றால், யபலானயண்டமதாய் வெள்ளைக்கல்லாய் யா
ருக்குந்தோன்றாத பூருவக்கல்லு, யெபலானபிர்மக்கல் லதற்குப்பேரு
யெல்லாரும் [illegible] தாருங்கல்லு, வெபலானவெள்ளைக்கல் லுற்ப
வித்த விதமெல்லாஞ்சொல்லுகிறேம் விதமாய்க்கேளே. (33)

## எழுநூல்கோர்வை இந்நூல் நுணுக்கங்காணுதல்.

கேளப்பாபுலத்தியனே யிந்நூல்மைந்தா கிடைக்கிறதுயரிதப்பா கிட்டாதப்பா, யேளப்பாயிந்நூல் யென்னூலப்பா யெவர்சொன்னார் சௌமியசாகரம்போலப்பா, ஆளப்பாயென்கோர்வை பதினாறுலட்சம் யதையெல்லாம்சுருக்கிஏழுணூலட்சமாக, வாளப்பாபாடிவைத்தோமதுக்கெல்லாந்தான் வசனித்தோம்காவியந்தான் வாதநூலே. (34)

நூலானநூலப்பா யிந்நூல்காவியம் நுணுக்கங்கள்கண்டெரிந்தலவனேயோகி, யாலானயரிதப்பா கோர்வைநூலும் யப்பனேபார்க்கும்படி சொன்னேன்பாரு, மாலானமறைத்தபொரு ளேதென்றாக்கால் மகத்தானகாவியத்தில் முடிந்துதையா, கோலானகோலப்பா யத்தடியேகொண்டு கோர்வைனூலென்னவென்றால் யேழுனூலே. (35)

நூலென்றயேழுநூல் கோர்வைபார்த்து நுணுக்கங்கள்கண்டறிவாய் ஞுண்மையாகும், பாலென்றபசும்பாலு யிந்நூல்மைந்தா பாடினேம்சௌமிய சாகரந்தானின்னூல், மூவென்றமுன்னூலு காவியத்துக்காக மூதண்டக்கடசினூல் முறையைச்சொன்னேனும், காலென்ற காலப்பா தலையும்வாலுங் கருக்குருவுமிரண்டாச்சுக் கண்டுபாரே. ()

## அண்டக்கல்லு.

கண்டுபார்முன்சொன்ன யண்டக்கல்லு காணரிதுபிர்மமடாயரிதானக்கல்லு, தெண்டுபார்க்கல்லுநித்த நேர்மைகாணும் சொல்லுகிறேம்புலத்தியனே ஐயாஐயா, யண்டுபாரண்டத்தில் மேகந்தானும் யாகாரவானமது வருஷிக்கும்பார், பெண்டுபார்பிரபவத்தோ டறவத்துக்குள் பேரானதிக்குகளில் சொல்லக்கேளே. (37)

சொல்லக்கேள்சௌமிய சாகரத்தில்மைந்தா சொல்லுகிறேம் மறைத்துவைத்த சூட்சந்தன்னை, அல்லக்கேள்கல்மழைதான் தேஙகாய்ப்போலே அண்டத்திலிருந்தல்லோ வருஷிக்கும்பார், வெல்லக்கேளக்கல்லும் மனிதர்பேரில் விழுந்துதென்றால்தலையுடைந்து சேதமாவார், மல்லக்கேள்கருங்கல்லுப் போலேமைந்தா மண்டையிடியிடித்துமே பொழியுந்தானே. (38)

தானென்றநாடெல்லாஞ் சேதமாகி தவறுதலைவருகுமப்பா தனதாய்ச்சொன்னேம், ஆனென்றசித்திரைனு ரூத்திரந்தில் யாகாரபூர்வபட்ச பருவந்தன்னில், வேனென்றசுக்கிரனால் கூடும்கூடும் விதமானகல்மழைதான் அண்ணருள்தன்னில், மானென்றயம்மழைதான் சொறிந்துமாறி வருட்சித்துவிடும்போது மார்க்கங்கேளே. (39)

கேளப்பாயம்மழைதான் விடுத்தாலாகும் கிருபையென்றவேலை தன்னில் யூரில்மேவும், வேளப்பாவீடுகளி லடங்கிருந்து விதமானக் கோழியது வந்துமேயும், தேளப்பாதேங்காய்ப்போ லிருந்தக்கல்கள் சிறுநெல்லின்மணிபோலே காசிறுக்கும்பாரு, வேளப்பானமனுக்கு வயதுபோல்மைந்தா விந்துபோலிருக்கின்ற கல்லிதாமே. (40)

### சகல நூலின் மறைத்தசூட்சம் சௌமிய சாகரத்திற் சொல்லுதல் சிறுமணிக்கல்லுண்டாகுதல் விபரம் காவிய மைந்திற்குத் திறவு.

கல்லானகல்லதனை யிக்கோழிதான் கண்டவுடனெடுத்து அதை விழுங்கும்பாரு, அல்லான அக்கல்லை விழுங்கினக்கா லதுகெற்பமுண்டாகு மப்பாற்கேளு, மல்லப்பாவாரமதுக் குள்ளேயழுந்தா மகத்தானகருவுமாற்றி யுருளையாகி, வல்லானமறுவார மதனுக்குள்ளே மகத்தானவுருளையதா யண்டமெல்லே. (41)

எல்லானமன்னுமப்பா சுக்கிரவார மென்மகனேயவையத்தி லடங்கும்பாரு, பல்லானநால்நான்கு பதினாறுதான் பரிவானவண்டமதை யீன்றினக்கால், அல்லானஅவையத்தில் வைத்துப்பாரு அப்பனேபொரித்ததுவு மடக்கினக்கால், வல்லானபரிட்சையது தான் பாரு வசனித்தோம்நால்சாதி வண்மைபாரே. (42)

வண்மையென்றபொரித்தவிடை பார்த்தாயானால் வதித்தமென்றுல்சாதிவதி யிதுகாணாகும், முண்மையென்றமுன்னான்கு மத்தினிசாதித்தான் மூதண்டபின்னான்குஞ் சங்கினியேயாகும், செண்மைவறுநான்குஞ் சித்தினிதானாகுஞ் செயமானவதற்குப்பின் பத்மினிதானாகும், உண்மையதாய்நாம்சொன்னோம் நாலுசாதி யுறுதியென்ற சாதியைத்தான் ஓகோகோகேளே. (43)

கேளடாபுலத்தியனே யிந்நூல்மைந்தா கிருபையென்ற சௌமிய சாகரந்தானாகும், காளடாகாவியந்தா னைந்துக்கும்பார் கடலதிகமானதோர் திறவுகோல்தான், மாளடாமகேசக்கல் முருவமான மகத்தானகல்லினிட மார்க்கமெல்லாம், வாளடாவசனிப்போம் பழுதில்லாமல் மச்சக்கல்லுற்பவித்து வளங்காண்பாயே. (44)

வளமான அத்தியின் றுடையேகேளு வசனிப்போமாதமைந்து வளர்ந்துதானால், அளமான ஆண்கூண்டு வைத்தமாதம் அவர்கூடியான பின்பு அறையக்கேளு, வெளமானசுரோணிதத்தில் விந்துவீழ்ந்து விசிதமுடன் கருப்பற்றி பிண்டமாகி, மளமான அண்டமுட்டை கோழியின்று மச்சக்கல்முருவத்தின் மகிமைபாரே. (45)

பாரப்பாபுலத்தியனே யிருபத்கைந்து பரிவானஅண்டமதை யெடுத்துக்கொண்டு, போரப்பாஅத்தினியின் விடைசாதியில் புருஷ னுடன்சேருகிற பக்குவத்தில், ஆர்ப்பாஅவதரித்த மச்சவிந்து அதி னுடையகிருபையினால் பூருவுக்கல்லு, ஏரப்பாஅக்கல்லு வுயர்ந்திருக் கும் என்னசொல்வோமணிபூர பீடந்தானே. (46)

## கோலானது சௌமியசாகரமென் றறியவும் விந்து பிடாகேசரியின்வர்னம்.

தானென்றபீடமடா விந்துபீடந் தருவானவிந்திருக்கும் வீட் டில்மைந்தா, பானென்றபுலத்தியனே பூர்வைப்பைத்தான் பண்மை யென்றனைபதனிலே வுடல்சல்லுத்தான், ஆனென்றவைந்துகல்லு வுயர்ந்திருக்கும் அக்கல்லுமுழுப்பச்சை யாகும்பாரு, மானென்ற அக்கல்லுவிபரங்கேளு மச்சயிம்மஜைக்கல்லின் விந்தாலாச்சே. (47)

ஆச்சப்பா அவ்விதந்தாலானகல்லு ஆரறிவார்பிர்மக்கல் வெள் ளைக்கல்லு, பாச்சப்பா பலவிதமாய்த் தோன்றுங்கல்லு பஞ்சவர்ணக் கல்லென்று மதற்குப்பேரு, மாச்சப்பா மச்சக்கல்லாலத்தினிசாதிக்கு வளர்ந்துதப்பா மூக்குமேல் சடைதானாகும், ஏச்சப்பாமச்சவிந்தால் விரல்பத்தாகும் என்சொல்வேனத்தினிவெண்ணிறந்தான் பாரே. (48)

நிறமான தேகமெல்லாம் வெண்ணிறந்தான் ரோமம் நிகழ்த்தி னேஞ் சடலமெல்லாம் பச்சையாகும், பறமான கல்லதனை யெடுத் துக்கொண்டு பாங்கானவண்டமதை யுடைத்து நீயும், வெறமான விந்துநாதம் வெவ்வேறேவாங்கி வேதாந்தரசப்பிங்கான்மதனிலிட்டு, நறமானநாதமதையோட்டிலிட்டுநலமானவிந்துவைப்பிங்கானில்வாரே

## விந்துநாதம் வெவ்வேறே வாங்குதல்.

வாரப்பா விந்திருந்தமோடெடுத்து மைந்தனே சௌபோக்கி சீலைதன்னில், ஆரப்பாசீலைதன்னிலோடேவைத்து அப்பனேகிளியாக அளவாய்க்கட்டி, வேரப்பாவிந்ததிலே யோர்நாழிவைத்து விளங்கவே நாமதிலோர் நாழிவைத்து, ஏரப்பாயெடுத்ததனை ரவியில்சாமம் என்ன சொல்வோம் வைத்ததனையெடுத்துப்பாரே. (50)

எடுத்துப்பார் கிளியதனையவிழ்த்துநீயும் என்மகனேகல்வத்தி லிட்டுக்கொண்டு, வெடுத்துநிற்பார் விந்தைவிட்டு ஆட்டுவாய்நீ விபர மென்ற நாதமதாலரைச்சாமசட்டு, மெடுத்துப்பார்சுண்டையிலே மெழுகாயோடும் மேலானமெழுகுதனில்பாலேகொண்டு, கொடுத்துப் பாரண்டமெழுகதனைலப்பா குணைசெய்து வுடற்கல்லுவதற்குட் போடே. (51)

## அண்டசுத்தி அண்டமெழுகு கவசம் முன்சொன்ன கல்மணி.

போடப்பா அண்டமெழுகதனல்மைந்தா புகழான கவசமைந்து சிலையேழு, சேடப்பாசெய்து முடிப்பித்துக்கொண்டு சித்திரைநாள் ரவிதனிலேயெட்டுசாமம், வாடப்பாவத்தனைமுன்மெழுகிற்பாதி மகத்தானமெழுகெடுத்து வில்லைசெய்து, பாடப்பாபதினாறு விந்தால்சிலை பரிவானகுகையருகேசெய்துவையே. (52)

வையப்பாவில்லையதைபகலில்தாக்கு மகத்தானமேற்கல்லு வலுவாய்மூடு, ஐயப்பாமண்சிலையேழுஞ்செய்து அடவானரவிதனிலே காயப்போடு, மெய்யப்பாகாய்ந்தகுகையெடுத்துநீயும் மேலானயெக்கரிதானுலைலுந்தான், கையப்பாரிதுக்குள்ளே குகையைவைத்து கருவானவில்லையதையதற்குள்வையே. (53)

## உருகுபுகல் சுண்ணம் பூர்க்கும் அஞ்சு

உய்யப்பாயிரண்டையுந் தான்வலுவாய்ச்செய்து உத்தமனே துருத்திகொண்டூதுவாநீ, கொய்யப்பாகுகைக்குள்ளேயிருந்தகல்லு குருவானமச்சக்கல் கூறக்கேளு, உய்யப்பாஉருகியது வைந்துகல்லு மொன்றானவொளிமணியாய்க்கட்டும்பாரு, அய்யப்பா அகலில் வைத்த அண்டசுண்ணம் அப்பனேபூர்க்குமப்பாமடவைக்காணே. ()

காணடாபுலத்தியனே சொல்லக்கேளு கருவான குகையெடுத்துப்பார்த்தாயானால், ஆண்டாஅக்குகையிலிருந்தகல்லு அதிசயந்தான் மெத்தவுண்டு ஆர்தான்காண்பார், மேண்டாவுருகினதோர் மணியெடுத்து மேலான அண்டகண்ணம்விராகன்பெண்டு, வேண்டாவிந்தனல்குழைத்துநீயும் மேலானமணியதற்குக் கவசஞ்செய்யே. (55)

செய்துஅந்த அடல்மணியைரவியில்வைத்து திரும்பியதையெடுத்துவிந்தாலேழுசிலை, வயதுயந்தமணியதனையிரண்டுநாழி வரகாரரவிதனிலேகாய்ந்துதென்றால், மூய்துஅந்த முன்னகலில்வைத்துயிந்த மூதண்டமேற்கல்லுமூடுமூடு, மைதுஅந்தமண்சிலை, யேழுஞ்செய்து மகத்தானரவிதனிலேவைத்திடாயே. (56)

வைத்துப்பாரிரு நாழிகாய்ந்துதானால் வளமானமுன்கரிக்குள் வைத்துநீயும், துத்துப்பார்துருத்திகொண்டு அரைச்சாமமூது துதிபெறவேவூதினதால் பூர்க்குஞ்சுண்ணம், கைத்துப்பாருடற்கல்லு சுண்ணமாச்சு, கண்மணியேயகலெடுத்து சிலைவாங்கிஅத்துப்பார்மணியிடைகவசம்வாங்கி அக்கல்லுசுண்ணமதை சீசாவில்வையே. (57)

அண்டம் பனிநீரு சுத்தசலம் நாதநீரு வாதமுறை
அண்டத்தைச்சுத்தி மாக்கருவுபூர்க்கிற சுத்தசலம்
அதிகாலம் ரவியில் வைக்கவும்.

வையடாயென்மகனே புலத்தியனேயோகி மகத்தான கணபதி தன்பூசைசெய்து, ஐயடா அண்டசுண்ணஞ் சீராதன்னில் அப்பனே பூசைசெய்து வடக்கம்பண்ணு, மெய்யடாசொல்லிவிட்டோ மிந்நூல் தன்னில்வேதாந்தஞ்சௌமிய சாகரந்தான்மைந்தா, ஐயடாகாவியந் தான்வாதநூலு அதற்கிதுநூல்திறவுகோலறிந்துபாரே. (58)

அறிந்துபாரத்தினியினண்டமைந்தா மப்பனேயைந்து வண்ட மெடுத்துக்கொண்டு, பொறிந்துபார்பீங்கானிலுடைத்து விந்தைப் பேருமலிவ்விந்திலுடற்கற்சுண்ணம், வெறிந்துபார் விராகனிலை சுண்ணம்போடு விளங்கவேஅண்டசுண்ணம் விராகன்போடு, மறிந்து பாரெடுத்துப்பீங்கான் மதியில்வைத்தால் மகத்தானபனிநீர்தானுகும் பாரே. (59)

பாரப்பாபனிநீரைகணேசற்குப்பூசை பரிவாகசெய்துநீ சீசா வில்வைத்து, பாரப்பாபதனமதாய் வைத்துநீயு மாயிதிரோதாயியைத் தான்பணிந்து நீயும், ஆரப்பாவறிவார்கள் பனிநீர்வேகம் ஆத்தாளை வரங்கேட்டுவடக்கம்பண்ணி, வாரப்பாபனிநீரை நாமேசொன்னோம் மகத்தானசுத்தசலமருளக்கேளே. (60)

பத்துநாளிவ்விதமாய்ச்சேர்த்தால் விஷம்போச்சுது.

மருளுகிறேஞ் சுத்தசலமண்டமைந்து மகத்தானனத்தினியி னண்டங்கொண்டு, உருளுகிறேமுடைத்துவிந்தை பீங்கானிலிட்டு ஒகோகோநாதவிந்தை வெவ்வேறேவாங்கி அருளுகிறேமுடல்சுண்ண மண்டச்சுண்ணமாகராவிராகனெடை ரெண்டுகொண்டு, வெருளு கிறேம் விந்ததிலேயிச்சுண்ணம்போட்டு வேதாந்த பன்னீரில் விரா கன்வாரே. (61)

வார்த்திதனைபனிதனிலேவைத்துநீயும் வளமாகயெடுத்திதனைப் பார்த்தாயானால், கோர்த்திதனைச் சுத்தசலம்நீராய்நிற்கும் குருவான அச்சலத்தை சீசாதன்னில், பார்த்திதனைப்பதனமதாய் முடிப்பித்துத் தான் பரிவான கணேசன்பூசைபண்பாய்செய்து, ஆர்த்திதனையாயிதி ரோதாயியைத்தானடிபணிந்து சுத்தசலமடக்கம்பண்ணே. (62)

முதலுப்பு அகாரவிந்து சூரியன் ரவி.

பண்ணப்பாபுலத்தியனே ராசானந்தம் பண்மையென்றயோக சிவமவுனிகேளாய், சொன்னப்பாசுத்தசலநாமேசொன்னேஞ் சொற்

றவருசௌமியராய்சாகரந்தானின்னூல், கண்ணப்பாமுன்சொன்ன இரண்டுநாதம் நலமான நாதமதையொன்றாய்ச்சேர்த்து, உண்ணப்பா வுடற்கண்ணமண்டச்சுண்ண மோகோகோவிதமப்பாவிராகன்காணே

## இரண்டாமுப்பு உகார நாதமதி சந்திரன்.

காணுநீஇரண்டு சுண்ணமதிலேபோட்டுக் கருவானஇரண்டுநீர் விராகனிட்டு, நாணுநீயேதிகாலம் ரவிமுன்பாகநன்றாகயிரண்டுநாழிகை தானப்பா பாணுநீபார்த்தையானால் நாதநீறு பானுவிநுக்கொவ்வாத ரவிகோடித்தான் ஆணுநீயின்னிரே சிசாதன்னிலதனிலிட்டுகணேசன் பூசையருளுவாயே. (64)

அருளானரவிசூரியன் மதித்தான்சந்திரன் அப்பனே யிரண்டுடனக்கிலுமூன்றாச்சு, முருளானமூன்றையுந்தான் பதனம்பண்ணு முன்னேவலன் வணங்கியருள்பதத்தைப்போற்றி, கருளானநாம் சொன்னோமின்னூல்தன்னில் நாதாந்தயசுவனிதன்னருள் தன்னாலே, குருவானக்குருவருளால் முன்னீறாச்சுக் கூறினோம்சௌமியந்தான் கிடையாதென்றே. (65)

## வாதமுறையண்டத்தைலச்சுத்தி

கிடையாதபொருளப்பாயாற்குக்கிட்டும் கிருபையென்றயோகிகளுக்கிட்டுங்கிட்டும், யடையாதஞானியடாமவுனியண்டம் மாறுக்குத் தோணுதயதிதவித்தை, மடையாதமானிலத்தில் மனிதர்கட்கு மதியில்லாபத்தியினால் மயங்கினார்கள், கிடையாதசிவயோகச்சித்தியானால் செயல்தருங்காண் வாதசித்திக்ஷணத்திலாமே. (66)

வாதமென்ற பூட்டதனைசொல்லக்கேளு மகத்தான திறவுகோல் பின்னூல்தன்னில், யாதமென்ற யஸ்தினியினண்டமைந்தா யருளுகிறேறுமிருவத்தஞ்செடுத்துக்கொண்டு, பேதமென்ற காவியத்தில் சொன்னோம்சத்திய பெலமானயைந்தருவின்தைலங்கொண்டு, நாதமென்ற யண்டமதையிருனூழித்தான் நலமானதைலமதிலூறப் போடே. (67)

## மாக்கரு

போடப்பாபுலத்தியனே யண்டந்தானும் புனிதமுடன்வூறினின் றால் புகலக்கேளு, யேடப்பாயண்டமதை யெடுத்துநீதான் யென்ன சொல்வோம் நாதநீறூறப்போடு, வாடப்பாயிரண்டு நாழிகைசென்றாக்கால் மைந்தனேயெடுத்தனேவளமாய்நீயும்,யாடப்பாகல்லூறலிலண்டம்போட்டு யருளுகிறேறுமிருப்புலக்கையதனால்தானே. (68)

தாவென்ற நாதநீர்தன்னிலிட்டு கருவாகவோர்சாமஞ்சாடுசாடு, நான்சென்றநாதம்விட்டுசாடிணுக்கால் சலமாகவெள்ளமாவு போலே காணும், யானென்றயம்மாவைக்கண்டேயானால் அம்மாவில்நாதநீர் யைம்பலந்தான்வாரு, சாவென்றபன்னீரைவிட்டுநீயும் சாடுவாய் புலத்தியனேசாடுவாயே. (69)

சாடக்கேள்மெழுகுபோல் கட்டும்பாரு சாமமட்டுஞ்சாடிநீமறு படியுங்கேளு, நாடக்கேள்நாதமதையைம்பலந்தான் விட்டுநலமாக சாமமதுநாட்டுநாட்டு, யாடக்கேளதின்பிறகுசொல்லக்கேளு யண்ட மெழுபொன்னிறமாயதீதமாளும், யேடக்கேளெடுத்ததனைப்பாண்டத் திட்டுயென்மகனே பனிநீரு யெடுத்துவாரே. (70)

வாரப்பா புலத்தியனேயின்னீர்விட்டு மைந்தனே கலக்கியனத் தெளியவைந்து, தேறக்கேள்தெளிவதனை மறுபாண்டத்திற் செயலா கத்தெளிவதனையெடுத்துக்கொண்டு, யாறக்கேள்வடுப்பேற்றித் தீயை மூட்டிவசனிப்போமப்பாண்டமடுப்பிலேத்தி,யேறக்கேள்யெவ்விறகா னாலுந்தானென்மகனே எரித்திடுவாய்சாமந்தானே. (71)

தானாகயெரிக்கையிலே குழம்புபோலாம் தருவாளப்பதந் தனிலேயிறக்கிக்கொண்டு,தேனாகத்தெளியவைத்துதெளிவே மைந்தா செயலானரசப்பிங்கா னதனில்வார்த்து, மானாகமுன்தெளித்துதான் மைந்தா மகத்தானரவிதனிலே வைத்திடாய்நீ, சோனானச்சுத்தசெல மறுபடியுங்கேளு சொல்லுகிறேன்தெளிவிருத்த பாண்டத்தில்வாரே.

சுத்தசெலம்

வார்த்திந்தச்சுத்தசெலங் கலக்கிமைந்தா மகத்தானமதிதனிலே சாமம்வைத்தால், தோத்திந்ததெளிவிறங்குந்தேவியாலே தெளிவான தெளிவதனையிருத்திநீயும், யார்த்திந்தப்பாண்டமதை யடுப்பிலேற்றி யக்கியானத்திமூட்டுசாமந்தானும், யோர்த்திந்ததீகொளுத்தி பதந்தான் பார்த்துபயென்னசொல்வேனிறக்கியதை தெளியவையே. (73)

வையடா யென்மகனே தெளிவைக்கொண்டு மண்டரசபிங்கா னில் வளமாய்வார்த்து, நையடாரவிதனிலே சத்தநீர்கொண்டு நனின மதாயெடுத்துவைப்பாய் நலமாய்நீயும், பொய்யடாசொல்லவில்லை புலத்தியனேகேளு புகழானயடியில்நின்ற புளியேகொண்டு, மெய் யடாநாதநீர்தன்னில்விட்டு விளங்கவேயரைத்துநீ யடுப்பிலேத்தே.

எத்திப்பநீமூட்டி புலத்தியனேயப்பயா யென்னசொல்வேன் கொதித்துபதமாகும்போது. கோத்துமேகுழம்பதுபோல் வருதல்

கண்டு கூ.ழிஞெடுத்திறக்கித் தெளியவைத்து, யாத்திரயண்ட ரசப்பீங்கானில்வார்த்து யருள்பெருகுஞ் சின்மயத்தைப்பணிந்து போற்றிநாத்தியே ரவிதனிலே மூன்றுமைந்தா நலம்பெறவே பத்து முறைநவிலக்கேளே. (75)

## அதிகாலம்பற்ற ரவியில் வைக்க

கேளடாயதிகாலமறவில்வைத்து கேள்மகனேயிருவத்தஞ்சுநாழி கைதான்மைந்தா, யேளடாயிருந்ததென்றால் யெடுத்ததனைநன்றாய் யென்மகனேக்கசுவதனையிருத்திடாய்நீ, யாளடாரத்தம்போலிறங்கும் பாரு யண்டயெண்ணைகக்குமப்பா யரைநொடியிலேதான் கோளடா வாறாது மிறுத்துப்போடு கூறுகிறோம்பத்துமுறை யிவ்விதமாய்ச் செய்யே. (76)

செய்யப்பா பத்துநாளிவ்விதமாய்ச்செய்தால் சிவன் சொன்னார் விஷம்போச்சு செயந்தானுச்சு, பையப்பாமுன்பீங்கான் பணிநீருப்பு படருமப்பா வெள்ளுப்புபாறையுப்பு, ஐயப்பாகல்லுப்பு யடியுப்பா கும் யாகாரமுடியுப்பு வெடியுப்பாகும், மெய்யப்பா சாரையுப்பிண்ட வுப்பு மேலானபலவிதம்பேரிதுக்குமெய்யே. (77)

மெய்யப்பா சுத்தசெலமிரண்டாமுப்பு யென்னசொல்வோமதி யுப்புசுத்தவுப்பே, யையப்பா யண்டவுப்பு யகண்டஞ்சூழ மரன் சொன்னார்வழலையுப்பு சவுக்காரவுப்பு, மெய்யப்பாசொல்லிவிட்டோம் சூட்சாசூட்சம் வெகுபேர்க ளிந்நூல்பார்த்து வேதஞ்சொன்னார், சையப்பாசௌமியசாகரந்தான் கண்டால் சதாகோடிவித்தையெல் லாம் க்ஷணத்திலாமே. (78)

## உப்பின் பெயர்

ஆமென்றமூன்றுவதுப்புகேளு யருளுகிறோமக்கினியென்றபிர வியுப்பு, காமென்றகழிப்புகாரவுப்பு கண்மணியேபடிக்காரவெடிக் காரவுப்பு கேனென்றநாதவுப்புவேதாந்தவுப்பு செயலானநவப்பிண்ட பிறவுப்புமாமேநாதவுப்பு, ஏமென்றயிதற்குப்பேர்யென்னால்மைந்தா யெடுத்துரைத்தோஞ்சகலத்துக்கும் பேர்சொன்னேமே. (79)

போரானமுதலுப்பு அகாரவிந்து பேசினேஞ்சூரியன்தன் ரவி யேயாகும், யூரானயிரண்டாவதுப்பேர்கேளு ஓகோகோ உகாரத்தின் நாதம்நாதம், மாரானமதிசந்திரதுவேயாகும் மகத்தானயண்டசரா சரங்களாகும், மூரானமூன்றுமுப்பு ஓங்காரமாகும் மூதண்டக்கரு வப்பா பிண்டமாமே. (80)

ஆமென்றமூன்றுப்பு முடித்தேயாச்சு அப்பனேவழலையென்ற குருவேயாச்சு, ஓமென்றவுப்பெடுத்துச் சீசாதன்னி லோகோகோ கெணேசபூசைபாலைபூசை, பாமென்றபாபூசை சிவசத்திபூசை பரி வானபூசையெல்லாம் செய்துமைந்தா, வாமென்றவுப்பதனை பதனம் பண்ணுவளமானபூரணத்தை மனதிலெண்ணே. (81)

எண்ணவொண்ணுயிவ்வுப்பு எவர்தான்சொன்னூர் என்மகனே யகத்தியனுனியல்பாய்ச்சொன்னேம், நண்ணவொண்ணுசௌமிய சாகரந்தானின்னூல் நாடதிலேயரிதப்பாயின்னூல்தானும் வண்ண வொண்ணுநூலிதுதானூற்கிக்கிட்டும் மகத்தானசிவயோகிசித்தர்க்கிட் டும், யண்ணவொண்ணுயனுபோகியவர்க்கேனுமு மருளினேம் புலத் தியனேயருளினேமே. (82)

## ரவியுப்பு வழலை செயநீர்

அருளினேம்வழலையென்ற வுப்பேசொன்னேம் யாகார வழலை செயநீரைக்கேளு. யருளினேம்முதலுப்பு விந்துப்புத்தான் ஓகோ கோரவிசெயநீர்விபரங்கேளு, மருளினேம்முப்பெடுத்துப்பீங்கானி லிட்டு மகத்தானபனிநீரிலம்பலந்தானிட்டு, வருளினேமச்சகல்சுண் ணம்போட்டு வளமானயண்டமெழுசீலையேழே. (83)

ஏழானசீலையதுயேழுஞ்செய்து யென்மகனேயடிதட்டில் துவா ரம்போக்கிக், காழானரசக்கலசம்பூமிமேல்வைத்துக் கருவானபீங் கானையதின்மேல்வைத்து, கேழானசித்திரைநாள்முன்னேழுநாள்செய லானநாள்தனிலேயெடுத்துவைவீ, ஆழானவோர்சாமம்வைத்தாயானு லதிலிறங்கும்ரவிசெயநீ ரடவைக்காணே. (84)

## ரவிமெழுகு

காணப்பா புலத்தியனேசெயநீர்வேகங் கருவானசெயநீரைத் தான்யார்தான்சொன்னூர், யாணப்பாயிதைதயெடுத்துக்கலசத்தில்யிட வாகப்பார்த்தையென்றுசிந்திரகோபம், பூணப்பாவொவ்வாதுகடுகு பட்டால்லோகோகோ கல்மலைகள்நீறுப்போகும், சேணைப்பாசீசா வில் பதனம்பண்ணி சிவயோகபூசைசெய்து சிறந்திடாயே. (85)

சிறந்திடாய்ரசப்பீங்கான் சீலைவாங்கி சிவசிவாபார்த்தையென் றுல்மெழுகின்சோதி, அறந்திடாய்ரவிமெழுதுகாயடியில்நிற்கு மால காலமெழுகெடுத்துபரணியில்வைத்து, புரந்திடாய்கணேசன்பூசைவாலை புனிதமுடன்செய்துநீபதனம்பண்ணு, நரந்திடாய்ரவிமெழுகைப் பத னம்பண்ணிகளிமதாய்மதியுப்பை நன்றாய்க்கேளே. (86)

## மதியுப்பு செயநீர்

கேளடாபுலத்தியனேமதியுப்புத்தான் கிருபையுடன்பலமெட்டு நிறுத்திக்கொண்டு, ஆளடாரசபிங்கான்மதனிலிட்டு அப்பனேமேல் ரசபிங்கானளவாய்க்கொண்டு, மாளடாமச்சக்கல் சுண்ணமிட்டு மகத்தானசுத்திசெலமன்பலந்தான்விட்டு, கோளடாவராதுமேல்பிங்கான் மூடிக் குருவருளால் மெழுகேமுசீலைசெய்யே. (87)

செய்யப்பா சீலைசெய்துபடியில்கேளு செயமானசில்லுபோக்கி செயலாநீ, வையப்பாபூமிமேற் கலசம்வைத்து யதின்மேலே பிங்கானையெடுத்துவைத்து, சையப்பாசித்திரைநாள்கடூரமான சைதன்னியநாள்தனிலேசமத்தாய்நீயும், மையப்பாசொல்லிவிட்டோம் சாமமைந்தா விளங்கவேவைத்ததனை விரும்பிடாயே (88)

விரும்பிடாய் மதிசெயநீரிறங்கும்பாரு மேலானசெயநீருயென்றுற்சொல்ல, நரும்பிடாய்நாவுமுண்டோ புலத்தியனேமையா நலமானக்கலசமதையெடுத்துக்கொண்டு, பரும்பிடாய்பார்த்ததையென்றால் சந்திரனேகோடி பகல்போலேசோதியதாய்ப் பரிவாய்க்காணும், மருமபிடாய்மதிசெயநீர் சீசாகொண்டு மருளினேம்பதனமதாயடக்கம்பண்ணே. (89)

## மதிமெழுகு

பண்ணப்பா மதிசெயநீர்நன்னேசன்பூசை பரிவானசிவயோகப் பூசைசெய்து, மண்ணப்பாமதிசெயநீர்பதனம்பண்ணி, மகத்தான குருபதத்தில் வணங்கிநீயும், அண்ணப்பாரசப்பிங்கான்சீலைவாங்கி யருள்பெருகுமதிமெழுகைப்பார்த்தாயானால், கண்ணப்பாமதிகோடி கோடாகோடி களங்கமற்ற மெழுகதனைப்பரணில்வையே. (90)

வையடாபுலத்தியேவாலைபூசை மகத்தானபூசைசெய்து பதனம் பண்ணு மையமடாமதிசெயநீர் மெழுகேசொன்னேம் மானுக்கால் தானறிவார்மனிதர்காணார், சையப்பாசௌமிய சாகரத்தில்நாமுஞ் சைதன்னியமாகவல்லோ சமர்த்தாய்ச்சொன்னேம், வையடாயார் சொன்னாரசத்திபர்வாக்குயருளினே மூன்றுவது செயநீரைக்கேளே,

## மூன்றுமுப்புநாதசெயநீர்

கேளுநீநாதசெயநீரைக்கேளு கிருபையதாய் நாம்செல்வோங் கேளுமைந்தா, மூளுநீமூன்றுவதுப்பைக்கேளுமுறையாகவெண்பலந் தான் யுப்பைவாங்கி, நாளுநீரசப்பிங்கானதனிலிட்டு நனிமதாநாத நீரெண்பலந்தான்வாங்கி, வாளுநீவார்த்ததிலே மச்சக்கற்சுண்ணம் மகத்தானசுண்ணமதில் விராகன்போடே. (92)

போடப்பாமேல்மூடி பீங்கானிலிட்டுப் புகழானவிந்ததனல் யேழுசீலே, சேடப்பாசெய்துமுடிப்பித்துக்கொண்டு செயமானகவச மதைச்செயலாச்செய்து, ஆடப்பார்சக்கலசம் பூமிமேல்வைத்து யழ காகயதின்மேலே பீங்கான்வைத்து, நடப்பாசித்திரைநாள் கடூரமான ரவிதனிலேவைத்திடாய் நலமாய்த்தானே. (93)

## நாதமெழுகு

தானென்ற ரவிதனிலே சாமம்வைத்தால் தப்பாதுயிரவியென்ற செயநீர்மைந்தா, யானென்றநாதசெயநீருதானும் யருளுகிறேன் தானிறங்குமப்பாகேளு, மானென்றயக்கினிபோல் பொன்னிறமாய்த் தானும் வசனித்தோமிறங்குமப்பா வளமாய்க்கேளு, ஏனென்றக்கலச மதையெடுத்துப்பாரு என்னசொல்வோமிதுனெளிவுமியம்பக்கேளே.

இயம்பக்கேளிச்செயநீர்க் கின்போல்மைந்தா யிருக்குமப்பாநாம் சொன்னோமெடுத்துக்கொண்டு, செயம்பக்கேள்சீசாவில் பதனம் பண்ணிசெயமானக்கணேசனிட பூசைசெய்து, வயம்பக்கேள் பர பூசைகுருபூசைத்தான் வசனித்தோம் வாலைபடாபூசைசெய்து, கொ யம்பக்கேள் குருபூசை யடிபணிந்து கூறினதோர்செயநீரைப்பதனம் பண்ணே. (95)

பண்டாரசப்பீங்கான் சீலைவாங்கி பரிவானமெழுகதனைப்பார்த் தாயானல், அண்ணடாயருணநிறமதுபோற்காணு மப்பனேயதை யெடுத்து பரணில்வைத்து, மெண்ணடாமேல்பரணி பிரடைபோட்டு மெய்ஞ்ஞானபூரணத்தின் பூசைசெய்து, கண்ணடாசகலசித்துமாடு தற்கு சமர்த்தானமெழுகதனைப்போற்றிடாயே. (96)

போற்றிடாய் பூரணியேவாமகன்னி பூரணமாம்வாலையுடபுகழி னாலே, ஆற்றிடாயாயிமாயிவள்தன்னாலே யாச்சுதப்பாமச்சக்கல் சுண் ணஞ்சொன்னோம், பாற்றிடாய்பரம்பொருளாமஸ்தினியுப்புப் பாடி னேஞ்செயநீர்கள்மெழுகுசொன்னோம், நாற்றிடாரவியுப்புரவிசெய நீர்சொன்னோம் நளினமதாய்ரவிமெழுகை நாட்டினோமே. (97)

நாட்டினோமதியுப்புமதிசெயநீர்சொன்னோம் மகத்தானமதிமெ ழுகேநாட்டினோம்பார், வாட்டினோம்நாதவுப்புமிரவியுப்பு நாதாந்த நாதசெயநீர்சொன்னோம்பார், மாட்டினோம்நாதமெழுகருவேசொன் னோம்மைந்தனேயிவ்வளவுமாறினோம்நாம், ஆட்டினோம்அதினுடைய வுப்புனாலே அனேகம்வித்தைசொல்வோமப்பா யினிமேல்தானே. ()

தானென்றயஸ்தினியினுப்பைச்சொன்னோந் தருவானசுண்ண மதைச்சாற்றக்கேளு, சானென்றசௌமியசாகரந்தானின்னூல் சகல

கலைச்சேதியெல்லாம்சாற்றக்கேளு, வேனென்றவாதகாவியத்துக்குத் தான் விளங்கிறோமின்னாலுவிளங்கிறோம்நாம், யானென்றயன்னாலு மிந்நாலுந்தான் அரகராபுலத்தியனேயருள்காண்பாயே. (99)

அருளானபொருள்களெல்லா மின்னூல்தன்னில் அருளுகிறேன் சின்மயத்தினருள்தன்னாலே, பொருளானபொருளப்பா வாதங்கண் டால்போகியென்றபேர்போச்சுபோகியாச்சு, தெருளானயோகிகட்கு தெரியும்பாரு செயலானபொருள்களெல்லாமவர்க்கேவிள்ளும் மரு ளானமருத்துவங்கள்மவற்கேதோன்றும் மகத்தானசின்னமதைமாட் டக்கேளே. (100)

மாட்டுகிறேன்புலத்தியனே மூன்றுப்புத்தான் மகத்தானரசபீங் கானதனிலிட்டு, மூட்டுகிறேன்ரவிநீருமதிநீருந்தான் மூர்க்கமென்ற நாதநீர்மூன்றுங்கொண்டு, காட்டுகிறேன்மூன்றுநீ றொன்றாய்க்கூட்டி களிமதாய் நாற்பலந்தான்யெடுத்துக்கொண்டு, ஆட்டுகிறேன்யுப் பதிலேவிட்டுநீயு மரகராசிவயோகக்குகையில்செல்லே. (101)

செல்லடாபுலத்தியனேயோகவானே செயமான வுப்பெடுத்து மேடைமீதில், அல்லடாஅவத்ததிலேபிசைந்துநீயு மப்பனேயோக சிவமண்டலமேசெய்வாய், நல்லடாகலந்தனிலேமூன்றுநீறுங் கண் மணியேவிட்டதிலேகாத்தால் மைந்தா, வல்லடாவாரமட்டுமிவ்வித மாய்நீயும்வசனித்தோம் மண்டலந்தான்காருகாரே. (102)

## முப்பூவுக்குப் பூசைசெய்ய யறியவும்.

காரப்பாமண்டலந்தான்யோகபூசைகருத்துவைத்துமவுனமதில் செபித்தாயானால், தேரப்பாதெய்வபலமதனால் மைந்தாதெளிவாக பூர்க்குமடாமுப்புகேளு, பூரப்பாபூர்க்குகின்றமுப்புவாசம் பூலோக மென்றபரிமளங்கள்வீசும், ஆரப்பாயரிவார்கள்முப்பூதானும் மதிக வர்ணசந்திரன்போல் விலாசந்தானே. (103)

தானென்றமுப்பூவும்பீங்கான்மேலே சருவாகப்பூத்ததுவும்பூப் போல்மைந்தா, மூனென்றமுப்பூவுக்குயிர்தான்மைந்தா மூதண்டவாயு வதுமூன்றைந்தாகும், ஆனென்றஅப்போதசாரைபோலே யப்பனே சீறுமடா யறிந்துபாரு, மானென்றபதுபாகம்கண்டாயானால் மைந் தனேபீங்கானையெடுத்துக்கொள்ளே. (104)

## முப்பூச்சுண்ணம் கிளியெழும்புகிறது.

கொள்ளடாமுப்பூவையெடுத்துமைந்தா குருசெயலால்சீசாவில் பதனம்பண்ணு, அள்ளடாயகோரமென்றசெபத்தால்மைந்தா யப்

பனேலெட்சமுருத்தியானஞ் செய்து மெள்ளடாயெடுத்துமேதான் சுண்ணந்தன்னை மெதுவாகரவிசெம்பிலிட்டாயானால், அள்ளடா வெகுகோடிவேதையாகும் அப்பனேபூசைவிதிசெய்யனன்றே (105)

செய்யப்பாகாற்பத்தில்முக்கோணமேரு செயமானசிதம்பரசக்கரத்தைவைத்து, பையப்பாபரபூசையலங்கிருதமாக பண்மையதாய் முப்பூசைபரிவாய்செய்து, புய்யப்பாமுப்பூவையடிபணிந்துயருளான யகத்திலுடதியானஞ்செய்து கொய்யப்பாபூர்த்தமலரெடுத்துக்கொண்டு, குருவானசுண்ணஞ்செய்யக்கூறக்கேளே. (106)

கூறக்கேள்புலத்தியனே வழலைமுப்பூ குருவானமுப்பூவைக் கொண்டுசென்று, யாரக்கேளண்டோடு பலம்பத்தப்பா யருளான சிப்பியோடு பலம்பத்தப்பா, வாரக்கேள்பேரண்டம் பலம்பத்தப்பா மகத்தான சண்டோடு பலம்பத்தப்பா தேறக்கேள்நத்தையோடு பலம் பத்தப்பா தேகியென்றஞ்சோடுமஞ்சம் கொள்ளே. (107)

கொள்ளடா ஞானியென்றயண்டோடஞ்சுங் கூறக்கேள் சலமது வில்சுத்திசெய்து, தெள்ளடாசீலையிலே கிளியாய்கட்டி தெளிவானப் பங்நீரிலிரண்டுநாழி, யள்ளடாயூரினபின்னெடுத்துமைந்தா யப்பனே பூநீருபலமஞ்சாகப், பள்ளடாபாண்டத்தில் தேசிநீர்கேள் படியொன்று விதமதாய்ப்பாகங்கேளே. (108)

## கலுவபாகம் செய்பாகம்.

பாகங்கேள் கரைத்ததனைதெளியவைத்து பரிவானத்தெளிவதனைப்பாண்டத்திட்டு, யாகங்கேளடுப்பேற்றிக் கருங்காலிக்கொம்பாலப்பனே வக்கினியையடவாய்மூட்டி, நாகங்கேள்பாண்டத்தை யடுப்பிலேற்றி நளினமதால்நாழிகையஞ்சடவாய்செய்து, மோகங்கேள்கிளியனைதெளிவிற்போட்டு முக்கியமாயெரித்திடுவாய் யெரிக்கக்கேளே. (109)

## கைபாகம் செய்பாகம்.

எரித்தவுடன்கொதிக்குமப்பா கொதிக்கச்சேதான் யெழும்புமப்பாகிளியதுவு மென்னசொல்வேன், நரித்தகிளிவெளுத்துவரும் பாகங்கண்டு யழகானபாண்டத்தையெறக்கிநீயும், கரித்தகிளியவுத்துயுண்டவோடெல்லாந்தான் கணிதமாய்ச்சுத்தசலமதனிற்போட்டு, நரித்தயண்டவோடுமிகநன்றாயூரி நளினமதாயிருக்குமது பாகங்காணே. (110)

காணடாபுலத்தியனேராசயோகிக் களிப்பானயூறினதோ ரண்டங்கொண்டு,ஆணடாகலுவத்திலண்டோடிட்டுயப்பனேசுத்தசெலம்

பன்னீர்விட்டு, சாணடாசாமமதுயாட்டினுக்கால் சமர்த்தானமெழு கதுபோலாகுமாகும், காணடமெழுகதுவைவழித்துக்கொண்டு நல மானதேங்காய்ப்போல்குகைதான்செய்யே. (111)

## சீலைபாகம் ரவிபாகம்.

செய்யப்பா குகையதுவைசெய்துமுடிப்பித்து செயலானரவி தனிலேகுகையைவைத்து, அய்யப்பாகாய்ந்தகுகை யெடுத்துநீயும், அம்பாள்செகமாயியைத்தான் றரிசித்துப்பார், பொய்யப்பாசொல்ல யில்லை சௌமியத்தில் புவனையைத்தான்பூசைசெய்து குகையைக் கொண்டு, மெய்யப்பாமுப்பூவையதனிற்போட்டுமேலானவிந்ததனால் சீலைசெய்யே. (112)

செய்யடாசீலையதுபேழுஞ்செய்து செய்மானமெழுகதனால் கவ சஞ்செய்து, அய்யடாரவிதனிலே முச்சாமம்வைத்து யருள்தருக வேணுமென்றுகுகையேகொண்டு, மெய்யடாகாட்டுமுட்டையிரண்டு கூடை விளங்கேவிப்பூமிதனிலுமியைக்கொட்டி, நய்யடாயுமியின்மே லடுக்கிமுட்டை னினமென்றமுட்டைக்குள் குகையைவையே. ()

## புடபாகமறிவது.

வைத்துநீயக்கினியைவலுவாய்மூட்டி வளம்பெறவே கெசபுட மாகச்செய்து, அத்துநீகாற்மேகத்தீயைமூட்டி யருளானயிருசாமஞ் சென்றுதானல், போத்துநீபுலத்தியனே முப்பூச்சுண்ணம் பூற்குமடா குகைக்குள்ளேபுனிதமாகப், பார்த்துமேயிராதேநீதேவிவாலை பரி வானமாதரைப்பணிந்திடாயே. (114)

பணிந்திடுவாயவள்பதத்திலடிபணிந்து பரிவானகுகைசீலைக்கவ சந்தட்டி, அணிந்திடுவாயக்குகையைப்பார்த்தாயானல் அதற்குள்ளே கோடாகோடிகலையோகாணும், நணிந்திடுவாயக்கலையைக் கண்டா யானல் நாமென்னசொல்வமப்பாசித்தர்கோடி, வணிந்திடுவாய்திரு நடனம்புரிவாரையா வாலைகாற்பத்துமுக்கோணமென்றே. (115)

## வாலையைப்பணிதல்.

என்றானமுப்புசுண்ணஞ் சீசாதன்னில் யென்மகனேபதன மதாய்வைத்துப்போற்றி, அன்றானசிதம்பரத்தின் வாலைபூசை யண்ட கணபதிபூசை கந்தன்பூசை, நன்றானவீரபத்திரன் வைரவன்பூசை நவசித்தாளாராதாரமூலபூசை, சென்றான் பூசையெல்லாஞ்செய்து முடிப்பித்து தெளிவானசுண்ணமதைப் பதனஞ்செய்யே. (116)

## முப்புசுண்ணத்திற்கு பூசைமார்க்கம்.

பதனமதாய் முப்புசுண்ணந்தொழுதுபோற்றி பராபரத்தையுன் மனதிற்பதிவாய்வைத்து, அதனம்தாய்வழலைசுண்ணமுடிந்துமாச்சு அறுபத்துநாலுசித்துமடலாச்சு, விதனமதாயிரார்கள்தான் மகத்தாஞ் சுண்ணம்விளங்கினேம் சௌமியசாகரமிந்நூல், குதனமென் றுஙினை யாதே குறுமுறைதானையா குருவானமுப்புசெந்தூரங்கேளே, (117)

## முப்புசெந்தூரம் செய்பாகம் புடபாகம் நிறமறியவும்.

கேளப்பாமுப்புசெந் தூரஞ்சொல்வோம் கெடியானவிம்முறை தாலுண்டோபாரு, வாளப்பாமுன்சொன்ன குகைகயைக்கொண்டு வசனிப்போமக்குகையில் முப்புவிட்டு, ஆளப்பாவிஷக்கல்லுசுண்ண மிட்டு, அண்டசுண்ணம் பிண்டசுண்ணமாரைப்பணந்தானிட்டு, காளப்பாசுத்தசலம் பனிநீர்விட்டு கனிவமென்றபழச்சாறு கண் பாய்வாரே. (118)

வாரடாபுலத்தியனே செய்பாகமாக வசனித்தோம் வரிசை யதாய் கவசஞ்செய்து, வேரடாவிந்ததனுலேழுசீலை விபரமதாய்ச் செய்துமுடிப்பித்துக்கொண்டு, காரடாரவிதனிலே புலரவைப்பாய் கவிலுவோம்சாமமதா காய்ந்துதானல், ஆரடாயிப்பாகமறியப்போ ரார் அக்குகையை நீயெடுத்து ஆடக்கேளே. (119)

ஆடக்கேள்புலத்தியனே அய்பாவையா அப்பனேமுன்போலே புடந்தான்போடு, காடக்கேளப்புடத்திலிக்குகையைவைத்து நன்மை தரவேணுமென்று வாலைபூசை, ஏடக்கேள்சிதம்பரத்தின் பூசை செய்து இடம்வலமாய்ச்சுத்திவந்து அடிபணிந்து, பாடக்கேளக் கினியைவலுவாய்மூட்டி பராபரியைத்தொழுது கெசபுடந்தான் போடே. (120)

போடப்பாகெசபுடந்தான் போட்டாயானல் பூர்க்குமப்பா குகையினுள்ளேமுப்புசெந்தூரம், ஆடப்பாயக்குகையை யெடுத்து நீயு மதனுடையசீலையெல்லாமவிழ்த்துப்போட்டு, மேவடப்பார்கவச மதைக்கழற்றெறிந்து விளங்கவேயக்குகையைப் பார்த்தாயானல், நாடப்பா கோளாதசெந்தூரசுண்ணம் கவிலுவோமிந்திரகோபமிதற் கொவ்வாதே. (121)

## பஞ்சபூத விபரம்.

ஒவ்வாதபூரணந்தான் பிரிதிவியுமப்பு [illegible] வாய்வு, அவ்வாதயாகபாசஞ் சத்தத்தோடஞ்சு அருளினேயிந்தவஞ்

சினடவேகேளு, நவ்வாதபஞ்சபூதஞ்செந்தூரமாகும் நாம்சொன்னே மாதாரமதுவேயாகும், கவ்வாதகருவிசாரணைதியெல்லாங் கருக்குரு வாஞ்செந்தூரங்காணுங்காணே. (122)

## முப்புசுண்ணச்செயநீர் நாழிகையறியவும்.

காணுகின்றமுப்பு செந்தூரஞ்சொன்னேம் கருவியென்றமுப்பு சுண்ணச்செயநீர்கேளு, ஆணுகின்றவண்டத்தின் பீங்கான்கொண்டு அதனுள்ளேயாகாசவுப்பேபோட்டு, நாணுகின்றபலம்பத்துபீங்கானி லிட்டு நலமானபனிநீருசுத்தசலமைந்து, பாணுகின்றவிரண்டுமே சரி பாகச்சேர்த்து பதிவானவிப்பதனில்பண்மைகாணே. (123

## இந்தசெயநீருக்குப் பூசைசெய்ய தேவர்கள் பெயர்.

காணடாயுடல்சுண்ணம் விராகனிட்டுக் கருவானமுப்புசுண் ணம்விராகனிட்டு, சேணடாசெந்தூரசுண்ணம்விராகனிட்டு செயமான யண்டசுண்ணம்விராகனிட்டு, ஆணடாயருளானகாயாதி சுண்ணம் அஞ்சுசுண்ணம் பீங்கானிலடவாயிட்டு, பேணடாபிசைந்ததனை யுண்டையாக்கிப் பேணியே * ரவிதனிலேவைத்திடாயே. (124)

வைத்திடாய்புலத்தியனேயிருநாழிசென்றால் மகத்தானமுப்பு சுண்ணச்செயநீரையா, எத்திடாயிந்திரகோபமதுபோல் மைந்தா இறங்குமப்பா செயநீருயென்னசொல்வேன், நெத்திடாய்ரத்தம்போ லிருக்கும்பாரு நிராமயமாய்நின்றஜெயநீரைக்கொண்டு, அத்திடாய் சீசாவில்பதனம்பண்ணி யருளானசின்மயத்தைப்பணிந்துபோற்றே.

போற்றியேசிவயோகபூசைசெய்து புவனதிரிபுரையினுடபூசை செய்து, நாற்றிசையும் வெண்ணுவரந்தாருமம்மா நாதாந்தசரூப சிரோன்மணியேயென்று, வெற்றிபெறயிந்தசெயநீரேதானும் விவேக முள்ளசீசாவில் பதனம்பண்ணி, லாற்றியந்தான்பதினெண்வாத்தி யத்தோடையா வாலைசுப்ரமண்யருடபூசைசெய்யே. (126)

## முப்புசெந்தூர செயநீர்

செய்யடாமுப்புசுண்ணச்செயநீர்சொன்னேம் செயலானசெந் தூரசுண்ணஞ் செயநீர்தன்னை, வையடாசௌமியசாகரந்தானின் னூல் மகத்தானபொருளப்பாயார்க்குங்கிட்டா, ஙப்படாயிம்முறை யையொருவருக்குச்சொன்னால் பாணுசதாகோடியிடிலெயிக்கும்பாரு, நையடாபுலத்தியனே விவேகவானே நாம் சொல்வோஞ் செந்தூரச் செயநீர்கேளே. (127)

---

* ரவியென்பது சூரியன்.

## உப்புகளறிய.

கேளப்பாமுன்சொன்னமுப்புபலம்பத்து கெடியானவுப்புபலம் பதினைந்தாகும், நாளப்பாகல்லுப்புபலந்தானைந்து நளினமென்ற பாறையுப்புபலந்தானைந்து வேளப்பாகம்பியப்புபலந்தானைந்து வெடியுப்புப்பலமைந்து அடியுப்பைந்து, கோளப்பாவாராதமுடியுப்பைந்து குருவானபடிகாரம் பொட்டிலுப்பஞ்சே (128)

அஞ்சானசீனம் வெங்காரமைந்து அருளானவாகாசவகத்தினுப்பு, சஞ்சானசாரவுப்புபலமைந்தாகும் சமர்த்தானகாரவுப்புபலமைந்தாகும், வஞ்சானவகையெல்லாம் பீங்கானிலிட்டு வளமானமுப்புசுண்ணம்செந்தூரசுண்ணம், மஞ்சானவண்டசுண்ணங்காயாதிசுண்ண மகத்தானயுடல்சுண்ணம் விராகனஞ்சே. (129)

அஞ்சென்றவகையெல்லாம் பீங்கானிலிட்டு அப்பனேசுத்தசலம்பனிநீர்விட்டு, பெஞ்சென்றபிசைந்ததனை யுண்டையாக்கிப் பேசென்றரவிதனிலே யிரண்டுநாழி, நஞ்சென்றதுபோலவைத்தாயானால் நவநீதமிறங்குமப்பா செந்தூரச்செயநீர், மஞ்சென்றசூரியன்றனொளியோகாந்தி மதிகோடிரவிகோடி வர்ணந்தானே. (130)

தானென்றசெயநீரை யெடுத்துக்கொண்டு தகுமானசீசாவில் பதனம்பண்ணி, வாவென்றயோகிசிவபூசைசெய்து, வாலைமனோன்மணியிடைபூசைசெய்து, ஆனென்றவாதாரபூசைசெய்து ஆயிதிரோதாயியைத்தான் தெரிசித்தப்பால், நானென்றபுலத்தியனே செந்தூரச் செயநீர் நவின்றிட்டோமுப்புசெயநீரைக்கேளே. (131)

## உப்புசெயநீர்.

கேளப்பா புலத்தியனேயுப்புசெயநீர் கெடியானமுறையப்பா யார்தான்காண்பார், வாளப்பாமுப்பூவையெடுத்துநீயும்வசனித்தோம் பலம்பதினைந்துகொண்டு, நாளப்பாரசக்கலசமதினிலிட்டு நாதாந்த சுத்தசலம் பனிநீரைப்படிதான், வேளப்பாவிட்டதிலே கரைத்திட்டேநீ வெண்மைபெறத்தெளியவைத்துத் தெளிவைக்காணே.(132)

## கட்டுத்தெளிவு.

காணப்பாயத்தெளிவை ரவியில்வைத்தால் கலங்காமலிறுகியது கட்டிப்போகும், ஆணப்பாமெழுகதுபோலாகுமாகும் அம்மெழுகை நீயெடுத்துப்பீங்கான்றன்னில், வாணப்பாவைத்திதனைச்சுத்தசலம் பனிநீர் வகையாகவரைப்படிதான் வளமாய்விட்டு, சேணப்பாசிவந்த சுண்ணச்செயநீர்பலமைந்து சிதறாமல்விட்டுநீயு மதியில்வையே. ()

## அமுர்த சஞ்சீவி.

வையடாபுலத்தியனே யிருநாழிவைத்தால் வளமாகக்குழம்பது போலிருக்கும்பாரு, ஐயடாயக்குழம்பையெடுத்துநீயு மதீதமென்ற ரவிதனிலேயெடுத்துவைத்து, சையடாசாமமதுதைத்தாயானல்சமர்த் தானவமுர்தமதுயிறங்குமப்பா, மெய்டாயவ்வமுர்தஞ்சீசாதன்னில் விவேகமதாய்வைத்திதனைப்பணிந்திடாயே. (134)

## பூசைகள்செய்யும்படி மதுரசஞ்சீவி.

பணிந்திடாய்புலத்தியனே சிவயோகத்தில் பரபூசை குருபூசை வாலைபூசை, செணிந்திடாய்சிதம்பரத்தின் மவுனபூசை தெளிவான பூசையெல்லாஞ்செய்துமுடிப்பித்து, அணிந்திடாயாதாரபூசைசெய்து அடிபணிந்து தெரிசிப்பாயமுர்தந்தன்னை, கடந்திடாய்பீங்கானிலடியில்நின்ற நாதாந்தவுப்புந் தெளிவதனைப்பாரே. (135)

பாரப்பாபீங்கானுக்கடியில்நின்றபரஞ்சோதிமகிமையைத்தான் பகரொண்ணாது, சூரப்பாமுன்சொன்ன சுண்ணச்செயநீர் சூதண்ட செந்தூரசுண்ணச்செயநீர் வேரப்பாபீங்கானிலரைப்படிதான்விட்டு விளங்கவேகாமதுவால்கரைத்துநீயும், ஆரப்பாதெளியவைத்து மறு பீங்கான்றன்னில் அப்பனேயிறுத்ததனைத்தெளிவைக்கேளே. (136)

கேளடாபுலத்தியனேயித்தெளிவைக்கொண்டு கெணிதமதாய் ரவிதனிலேபத்துநாளு, ஏளடாயிந்தவிதம் ரவியில்வைத்தால் இறங்கு மப்பாமதுரசஞ்சீவியாகும், ஆளடாயவ்வமுர்தம் சீசாவிற்றன் அர கராபதனமதாயடக்கஞ்செய்து, நாளடாசிவயோக சிதம்பரத்தின் பூசை நாதாந்தவாலையுடபூசைசெய்யே. (137)

## நவநீதசஞ்சீவி.

செய்தந்தப்பீங்கானைப்பத்துநாளுஞ் செயமாகயிவ்விதமாய்ரவி யில் வைத்தால், ஐதுவதில் நவநீதம்பத்துநாளு மருளினேமிறங்கு மப்பாநவநீதத்தை, எய்தந்தச்சீசாவில் பதனம்பண்ணு இருதயகமல மதின்மவுனபூசை, வெய்தந்தசிதம்பரத்தின்வாலைபூசை விவேகமதா ய்ச்செய்துமுடிப்பித்துக்கொள்ளே. (138)

## அமுர்தசஞ்சீவியுப்பு.

கொள்ளவேயமுர்தசஞ்சீவியெல்லாம் குணமாகயிறங்கி பின்னடி யிற்பீங்கான், பள்ளடாவமுர்தசஞ்சீவியுப்புப்படருமப்பாவெள்ளைக் கல்பரமவுப்பு, அள்ளடாயப்புக்கோடி அதன்வர்ணம்நாதனலருளப் போமோ மெள்ளடாயிந்தவுப்புயெடுத்துக்கொண்டு மேலானவாலை யுடபூசைசெய்யே. (139)

செய்யப்பா நாற்பத்துமுக்கோணமேரு செய்துஅடிவட்டகலைய நல்கும்பித்தேகி, ஐயப்பாரேசகபூரகும்பகமுஞ்செய்து அரகராவீட ருகிருத்தியுகாரவாசல், எய்யப்பாயடிபனிரண்டினிலேறி யெட்டில முட்டிபொட்டியிலிருத்திக்கும்பி, மெய்யப்பாமூலவெளிக்கப்பால் நின்று மேவுமெய்ஞ்ஞானவீ டிருபத்தஞ்சே. (140)

## இருபத்தைந்தெழுத்து.

அஞ்சானவீடதிலே மூலங்கேளு ஐயைந்துவிருபத்தைந்தெழுத் தைக்கேளு, மெஞ்ஞானதேசிகன் வாழ்மூலவாக்கியம் விரும்பிடாய் நயவசிமயேவிப்பாரு, மஞ்ஞானமூலவெளிக் கப்பால்நின்ற வசிமநய பிறிதிவியோடப்பதாகும், எஞ்ஞானமாயிரந்தான்சகலமூலம்யவசிமந வென்றவீ டப்பாகேளே. (141)

கேளடாபுலத்தியனேவசிமநயவென்று கேள்மகனேயங்குநின்று ஓங்காரவாசல், நாளடாதேயுவிலேவாயுவேகும்பி சணத்திலேயங்கு நின்று மபவசிநவே, ஏளடாயாகாசம சத்ததிலேநிற்கும் யநமசிவ யென்றுநீயேறுயேறு,கோளடாவாராதுகுருநமசிவாயாகுருபரனென் சற்குருவே ஓம ஆம் ஊம்மென்னே. (142)

## எழுத்துரேகை சிவமூலம் சத்திமூலம்.

என்னவேயிருபத்தைந்தெழுத்துக்குள்தான் ரேகையதுயிருபத் தைந்தெழுத்தைக்கேளு, நன்னவேயொவ்வுமென்றுரேகையெல்லாம் நாட்டடாபுலத்தியனே சிவத்தின்மூலம் சென்னவேசிவமூலஞ்சொன் னேனையாசிவசத்திமூலமதைச்செப்பக்கேளு, அன்னவே ஓம் ஐயும் கிலியும் சவ்வும் அறியும் ஒவ்வும் இறியும் நவ்வும்கிறியுமவ்வென்னே.

## மூலாதாரம்.

என்னடாயித்தியானமறைதோறிட்டுயிருந்ததடா ஓம் ஸ்ரீம் உரி மென்றுக, அன்னடாயம்மூல மிம்மூலங்கொண்டு அனைதோறுமாறி யடையடவாய்நீயும், ஒன்னடாமூலாதாரம்சுழினையொட்டி யோங் கென்றுதம்பித்துயருட்டிப்பார்த்தால், நன்னடாமூலகணபதியிருக் கும் நளினமென்ற சுழினையிலேநாட்டம்பாரே. (144)

## தெரிசனம்.

பாரடாயங்குநின்று தம்பித்தாக்கால் பரசவையுந்தோன்றுமடா பரிவாய்க்கேளு, ஆரடாநயவசிம்யஞ்செழுத்தைக்கொண்டு அர்ச்சிப் பாயம்மூலமதற்கப்பாலே, வாரடாவாலையவள் குடியிருக்குமகத்தான பீடமதுதெரியும்பாரு, சாரடாயங்குநின்றுதம்பித்தாக்கால் சமர்த் தானயமுர்தசஞ்சீவிகாணே. (145)

## சுழிநாட்டம்.

காணப்பாமும்மூல வெளியும்தோற்றுங் கருவிகாணுதியென்ற சிவமும்தோற்றும், ஆணப்பாயங்குநின்று பார்த்தாயானால் அமுர்த மதுசொலிக்குமடாயவ்வமுர்தந்தானே, வாணப்பாவின்னுவாவண் ணுக்கொட்டி வாங்கடாகரகமது வால்வாங்கினுக்கால், சேணப்பா வாலைசஞ்சீவிதானும் சென்னத்திலேயிறங்குமப்பாசெயமாய்த்தானே.

## பஞ்சபூததெரிசனம் அமுர்தமிறங்குகிறது

தானென்றவமுர்தத்தைப் பீங்கான்தன்னில் தருவாகவாங்கி யதைமுன்சொன்னவுப்பு, நானென்றவாக்கதனால் சுத்தசலம்பனி னீர் நலமானநவநீதமதனில்விட்டு, ஏனென்றவாலையைத்தான் தியா னஞ்செய்து யென்மகனேயதைதசைந்துமுப்புச்சுண்ணம், வேனெ ன்றசெந்தூரசுண்ணமுடற்சுண்ணம் விவேகமுள்ள யண்டசுண்ணங் காயாதியாமே. (147)

## உப்புசெயநீர்.

ஆமேதான்கடுகுவீதமைந்துங்கொண்டு அருளாகமுன்பிசைந்த வுப்பில்தாக்கி, வேமேதான்ரவிதனிலேயிரண்டுநாழி விவேகமதாய் வைத்திதனைவிளங்கநீயும், நாமேதானிப்பாகம் பிசகாமற்றான் ரவி யிருந்தவமுர்துத்தைப்பார்த்தாயானால், ஏமேதானிறங்குமப்பாயுப்பு செயநீர் யெண்ணவொண்ணுச்செயநீரை யெடுத்துக்கொள்ளே. ()

## செயநீர்பூசை.

கொள்ளப்பாசெயநீரைச்சீசாதன்னில்குருபூசைசெய்துவதைப் பதனம்பண்ணி, அள்ளப்பாயாத்தாளைப்பூசித்துநீ யனுதினமுமறவா மல்சிவயோகத்தில், நள்ளப்பாவைத்திதனை ஓம் கிரியும்கிறியுமென்று நாட்டடா நூற்றெட்டுச்செபத்தைச்செய்து, வெள்ளப்பாசெய நீரைப் பதனம்பண்ணி வேதாந்திநீயானால் விளங்கச்செய்யே. (149)

## ஐங்காயமரியவும் பாடல் ஆயிரத்திருநூறு.

செய்யப்பா புலத்தியனே யுப்புசெயநீர் திறமாகச்சொன்னே மப்பாசெயலுள்ளானே, ஐயப்பாசௌமியசாகரந்தானின்னால் அரு ளினேம் உப்புசெயநீரைங்காயங்களே, மெய்யப்பாசொல்லுகிறே மொளியாமற்றான்விவேகமுள்ளவாயிரத்திருநூறையா, வையப்பாயிந் நூலைச்சித்தர்கண்டால் வசனித்தோம்விடாரையா வாழ்வோர்களே.

## பஞ்ச அமுர்தமென்பது யிரண்டுநீர்.

கேளடாபிறிதிவுதானப்புத்தேய்வு கெணிதமென்றவாய்வுவாகா சத்தோடைந்து, ஆளடாமூலவெளியகாரவுகார மருளினேம்பஞ்ச

முர்தம்சிரசிற்காணும், நாளடாயவ்வமுர்தங்கழற்றியேயுந் தருவான்பீங் கானில்மெதுவாய்வாங்கி, நாளடாநவநீதவமிர்தசஞ்சீவிகருவானசுத்த சலம்பனிநீரஞ்சே. (151)

## அமுர்தமிருப்பிடம்.

அஞ்ஞானவமுர்தமிருப்பிடமேகேளு ஆத்மாவில் பஞ்சகர்த் தாள்குடியிருக்கும், நஞ்சானவீடதுதான்மூலவீடு நவநீதமிரங்கின தோராதாரவீடு, மஞ்சானவவர்வீட்டில் பஞ்சகர்த்தாள் வாழுமெஞ் ஞானவவ்வீடு மமுர்தந்தானு, மிஞ்சாமல் நீயெடுத்துவிவேகங்காண விளங்குகிறோம் பீங்கானில்வீதமஞ்சே. (152)

அஞ்சென்ற பஞ்சமுர்தமொவ்வொன்றுக்கு அறைகிறோம்பல மொன்று அடவாய்க்கொண்டு, நஞ்சென்றமுன்சொன்னவுப்பில் பலம்பத்து நலமானஐந்துசுண்ணம் விராகனென்று, பெஞ்சென்ற பீங்கானிலிதுவெல்லாந்தான் போகப்பிசந்திதனை ரவியில்வைத் தால், எஞ்சென்றவைங்காயமிரங்கும்பாரு வென்னசொல்வேன தன் பெருமையிறவாய்ப்பாரே. (153)

## மாரணபீடம் மையம்.

பாரடாயென்மகனே யிந்திரகோபம் வானுரவிசூரியன்போல் பிரகாசிக்கும், ஆரடாயிதன்பெருமை யறியப்போறார் அகத்தியனு ரரிந்தப்பாலைவங்காயத்தை, மாரடாமாரணத்துக்காதிபீடமகத்தான கருக்குருதான் வசனித்தோம்பார், வேரடாசகலத்திற்குமுயிர்தா னிந்த வேதாந்தியானவர்க்கேபலிதந்தானே. (154)

தானுன்வைங்காயம் பீங்கான்றன்னில் தருவானபஞ்சமுர்த மதிலேசேரு, ஏனுனயெடுத்திருத்துவமுர்தந்தன்னை யென்னசொல் வேனதனுடைய ஆட்டமைந்தா, நானுனஞானியடா பண்டபிண்டம் நவநீதஞ்சகலருக்கு முடியிற்காணும், வேனுனவமுர்தமடாயார்க்குங் கிட்டா வேதாந்தபஞ்சமுர்த வேகங்காணே. (155)

## சுழிமுனைகனவு.

காணுகின்றவேகத்தை யாராய்ந்துபார்த்தேன கனவேகமென்ன சொல்வேன் கருத்துட்கொண்டே, நாணுகின்ற சுழிமுனைதான்சுக்கு மேலே நாராசமென்றபஞ்ச வாசலொன்றும், வேணுநீயிவ்வாசல் பஞ்சவாசல் வேதாந்தத்தொனிமுழங்கும்விந்தவாசல், ஏணுநீ அகார மிது உகாரவாசல் இருபுரமும்வடகலை தென்கலையைப்பாரே. (156)

பார்ப்போர்கள் சிவஞானத்தவத்தோரையா படிப்படியாயேற வழியவர்க்கேசொல்வோம், தீர்ப்போர்களின்னூல்தான் சௌமிய சாகரந்தேசிகட்குங்கிடையா துயரிதப்பாகேள் சௌமியசாகரத்தைக் கொண்டு சதாசிவத்தின்கொடிமுடியில் மனதையுண்ணி, கார்ப்போர் களதிகதவ செல்வத்தோர்கள் கருவிலைவந்துவைங்காயங்கூட்டே. ()

## தேவிமாரணமூலம்.

கூட்டடாவைங்காயம் கஸ்தூரிமஞ்சள் கொச்சிமஞ்சள்புழு குடனேகதம்பந்தானும், மாட்டடாவாசமெல்லாம்பொடித்துதூளாய் வடிகட்டித்தூளெடுத்து வைங்காயமையில், நாட்டடாயிவ்வாசல்மத னிற்கப்பா ஞானியென்ற சஞ்சீவிக்கு நளினமாக, வாட்டடா ஓம் ஸ்ரீயும்கிறியும் மையும், மாரடா இறியும்சவ்வும் ஆம் உளம்வென்னே.

என்னவேயாயிமாயி ஓம்மாரணுதேவி யநமசிவ கிலியும் மவ்வும் நவ்வுமென்றோது, அன்னவே ஓங்காரவேதாளதேவி யம்பிகாசத்திவா ஓம்வாலைதேவிவாவா, நன்னவேறுவா வசிய யம்பாளாயி நாதாந்த வாழ்மயிலேநாயகியேவாவா, உன்னவேயாவாமிசிவகாமிவாவா உகார விந்துநாதமடா யொன்றுலாச்சே. (159)

## வாலைமுக்கோணம்.

ஒன்றானவாலையடாமுக்கோணபீடம் ஓங்காரவிந்துவடாகழியே பற்றி, அன்றானவப்பீடவமுர்தபீடம் ஆருமறியார்களொரு வமுர்த வாசல், நின்றானபிரமலயிருந்தாலெய்தும் ஞானிகளேயொன்று மறிந்தவரேயுண்மை, அன்றானமூலமடாயார்க்குத்தோணு யண்ட பிண்டமாயிருந்த வறிவின்வாறே. (160)

## சிவமாரணம்.

அறிவான வைங்காயமென்னசொல்வேன் அரகராவாலைமார ணத்தைக்கொண்டு, உருவானபஞ்சபூதத்தியானத்தாலே யுருவாகச் செபத்தியானம் நூற்றியெட்டு, நருவானமாரணந்தான்கொண்டு நடு வணையைப்பிடித்து மார்நூற்றியெட்டு, மருவானவைங்காயமதன் மேற்பூசி மாட்டடாயெதிரிபேதனத்தைத்தானே. (161)

## சத்திமாரணம்.

தானென்ற பஞ்சகர்த்தாள்குருவிருக்குந் தலைச்சேர்வையாகு மடாசபித்தாயானல், ஏனென்றபிதிர்க்களெல்லாமங்கேபோச்சு யிறு த்துமப்பா வாய்வுபத்துமிறப்பதில்லை, நானென்றமாயாசத்தியோடிப் போனால் நவிலுவோங்கிரியாசத்தி நாட்டம்போச்சு, ஏனென்றயோக சத்திஞானசத்தி யோகோகோமவுனசத்தியுறுதியாச்சே. (162)

ஆச்சடாபுலத்தியனே மாரணத்தினாலே யறுபத்துநால்வரை யுமடிக்கலாம்பார், பேச்சடாசொல்லவில்லையகத்தின் வாக்கியம் பேசி னேம் சௌமியசாகரந்தானின்னால், வாச்சடாவுந்தனுக்கு மாரணத் தின்மைதான் மவுனசிவயோகிகளே மாய்கைமைதான், நேச்சடா சகலபிதிர்க்களேயெல்லாந்தான்நிமிஷத்தில்மாரணந்தானுக்கும்பாரே.

## வேதையுப்பு.

பாரடாவைங்காயக் கருவேசொன்னேம் பாடுகிறேன்வேதை யுப்புபரிவாய்க்கேளு, ஆரடாமுன்சொன்னவமுலையுப்பு அருளான வுப்புபலமஞ்சதாகும், நாரடாயவ்வுப்பைப்பீங்கானிலிட்டு நடுவுப்பு கம்பியுப்புப்பாறையுப்பு காரடாகல்லுப்பு அண்டவுப்புகருவானவுப் பெல்லாம்பலமஞ்சாமே. (164)

## நவநீதவைங்காயமெழுகு.

ஆமேதானிவையெல்லாம் பீங்கானிலிட்டு அருளானசுத்தசலம் பனிநீர்படியொன்று, நாமேதானின்னீரைப்பீங்கானில்வார்த்துகளின மதாய்க்கரமதுவால் கரைத்திறுத்து, ஏமேதானிறுத்துபனிநீரைக் கொண்டுயென்மகனேரவியஞ்சுநாள்தான்வார்த்து,வாமேதாநாளேந்து மருவியப்பாயு மருவினதோர்வஸ்துவைத்தான் வசனிப்போமே.

வசனிப்போம் புலத்தியனே சொல்லக்கேளு வளமானவஸ்து வடாசகலத்திற்கும்,நசனிப்போமைந்துநாள்விடாதேபாயம்நாதாந்த நவநீதந்தொண்ணூற்றும். மசனிப்போர்தத்துவந்தானிறுகிக்கட்டு மைங்காய நவநீதமிதுபோலுண்டோ, பசனிப்போம் பீங்கானில்நவ நீதத்தைப் பலமைந்துசுண்ண முந்தானதனிற்போடே. (166)

போடப்பா போட்டவுடனிளகிமைபோல் புனிதமாய்வரும் போது புழுகஸ்தூரி, நாடப்பாபுனுகு கொச்சிமஞ்சள்கூட்டி களின மென்ற கதம்பமருக்கொழுந்துங்கூட்டி, ஆடப்பாகல்வத்திற்பொடித் துத்தூளாய் ஐங்காயநவநீதமதனிற்போடு, பாடப்பாபோட்டவுட னிறுகிப்போகும் பசுமையுள்ளவைங்காயமெழுகிதாமே. (167)

## மனேன்மணிவாலைதியானம் பூசை செய்யவும்.

ஆமென்றயிம்மெழுகைச்சுரைப்பரண்டி லடக்கமதாய்வைத்து சிவயோகபூசை, நாமென்றவாலையைத்தியானஞ்சொல்வோம் நய வசிம் ஒம் இறியும்சிறியும்ஐயும், வாமென்ற வறிமகிலியும் சவ்வும் ஓமென்று மாட்டடா வாலையுடதியானத்தைத்தான், தேமென்றயித் தியானமுருநூற்றியெட்டு செபஞ்செய்வாயைங்காய மெழுகுக்காமே.

### மாரணம் எட்டெட்டுமோடும்.

ஆமென்றநாற்றெட்டுவுருவேசெய்து அட்டமாசித்துவறுபத்து நான்கும், நாமென்றகோடி சித்துமாடும் நவநீதமைமங்காயமெழுகி தப்பா, ஏமென்றபூசைசெய்து மாரணஞ்செய்தாக்கால் எட்டெட்டு மாடுமடாயிறைவாநீகேள், வாமென்றமுன்கைக்துநாணயுப்பு மகத் தானபூபதிபோலார் செய்வாரே. (169)

### லெபியுள்ளோர்கள் அறிபவர்விந்துப்பு.

செய்பவனென்றுச்சா லபியுள்ளோர்கள் சிவசிவாயமுர்தவுப்பு யார்தான்காண்பார், அய்பவரேபரப்பிரமம்நீயேயாவாய் ஆதிபஞ்ச கலசத்தினமுர்தமூளை, எய்பவரேதலையநுதானெடுத்துக்கொள்ளு என்மேலேயாணைப்படிதலைச்சன்பிள்ளை, உய்பவரேயதித்தவுப்புமது தன்னாலே யுடன்சேர்ந்த விந்துப்புவிதுவாமென்றே. (170)

என்றீரேயென்குருவேபஞ்சகர்த்தா விருக்கின்றசலாந்திதான முர்தமாச்சு, அன்றீரேயமுர்தமதால் வாதமாமோ ஆச்சுதப்பாபுலத் தியனேயதையார்காண்பார், நன்றீரேயிவ்வுப்புவமுர்தவுப்பு நடுமுடி யில்விளங்குகின்ற பிரமவுப்பு, வன்றீரேயீய்ந்திடுவார்க்கிந்தவுப்புவா சம் வசனித்தோம்பட்டுதென்றால் வாழ்வார்தாமே, (171)

### ஆத்தாளைப் பூசிக்கச்சித்தி.

வாழ்வோர்க்குயிந்தவுப்பை வசனித்தோம்பார் மைந்தனேசீசா விற்பதனம்பண்ணி, ஆழ்வோர்க்குயாதாரபூசைசெய்து ஆத்தாளைத் தினந்தொழுது யடிவணங்கி, மாழ்வோர்க்குயிந்தவுப்பில் பலமே பத்துநலமான பீங்கானிலிவ்வுப்பிட்டு, மாழ்வோர்க்குவமுர்தமைங் காயமைந்தா மதுநடுவில் கடுகுவீதம் வைத்துப்பாரே. (172)

### நவநீதசுண்ணம்.

வைத்துப்பார் நவநீதச்சுண்ணங்கேளு மாட்டுகிறேன்புலத்தி யனே சௌமியத்தில், அய்த்துப்பாரதையுப்பில்வைத்து அண்ட மெழுகதனாலே கவசஞ்செய்து, வெய்த்துப்பார்விந்ததனா லேழுசீலை விவேகமதாய்செய்துரவிமுகத்தில்காழி, மைத்துப்பார்வைத்தெடுத் துப் பீங்கானைத்தான் மைந்தனேகவசமது சீலைவாங்கே. (173)

### வேதைகாண இக்குருவைச் சீசாவில் வைக்கவும்.

வாங்கியே பார்த்தையானால் நவநீதச்சுண்ணம் யாராலேயாகு மப்பா செய்யொண்ணாது, ஆங்கியேபூருவத்திலரணைவேண்டி யடிபத் துஞ்சென்றுதென்றாலருளக்கேளு, மாங்கியேபூருவத்தின் தியான

மானால்மவர்செய்வார்நவநீதச்சுண்ணம்சுண்ணம், ஓங்கியேயிச்சுண்ண மளவில்லாத ஓங்காகோ சிவகளையுறுதியாமே. (174)

ஆமென்றவிசுண்ணம் கர்ரச்சாரம் அண்டபிண்டம்நிறைந்த வியாதியந்தம், காமென்றசுண்ணமடாகோடாகோடி காடாமல்வேதை யிலேமனந்தங்கோடி, தேமென்றயிக்கருவால் சகலசித்துந் தெளி வாச்சுமகாவித்தை தொந்தங்கோடி, தாமென்றசூழிமூலமும்மூலந் தான் சராசரங்கள்முதலாகிச்சமைத்தவாறே. (175)

## ஞானகாவியத்திலுள்ள ஆதாரபூசை செய்யவும்.

வாறானசுண்ணத்தைச் சீசாகொண்டுவசனித்தோர்பதனமதாய் வைத்துநீயும், ஆறானஞானகாவியத்திலுள்ள ஆதாரபூசையைப்போ லடவாய்ச்செய்து, காறானசிதம்பரந்தான்வாலைபூசை நவசித்தாள் கந்தன்வீரன்வயிரவன்பூசை, பேறானபூசையெல்லாஞ்செய்து முடிப் பித்து பிரியமதாய்த்தெரிசித்துப்பணிந்திடாயே. (176)

## இச்சுண்ணத்தில் வேதையருளுகிறவிதம்.

பணிந்திடாய்வாலையைத்தான்புலத்தியனேயையா பலகாலமறந் திடப்போறாயப்பா, அணிந்திடாய் சுண்ணமதிலனேகவேதை யருளு கிறோமயச்செம்புயதீதவித்தை நணிந்திடாய்சேர்பத்துபெடுத்துக் கொண்டு கனிணமென்றபீங்கானில் நலமாய்வைத்து, வணிந்திடாய் செயநீருசுண்ணச்செயநீர் மகத்தானசெந்தூரசெயநீர்பலப்பத்தே.

பத்தானசுத்தசலம் பனிநீர் பலம்பத்து பரிவாகப்பீங்கானில் பண்பாய்வார்த்து, உத்தான அயச்செம்பை யிரண்டுநாழியூறவைத்து பெடுத்ததனைக்குகையிற்றுக்கி, செத்தானவிந்ததினாற்சீலையேழு சிறப் பானமெழுகதனாற்கவசமேழு, வித்தான அக்குகையைச்செய்துமுடிப் பித்து விளங்கவேரவிதனிலே வைத்திடாயே. (178)

## அயச்செம்பில் நவநீதகுருபோடவும்.

வைத்துநீயுலர்ந்தபின்பு யெடுத்துக்கொண்டு மகத்தான சீலை யெல்லாம்வாங்கிப்போட்டு, எத்துநீகுகையெடுத்து துருத்திகொண்டு என்மகனே துருத்திவாய்நரியும்போட்டு, அத்துநீகரிக்குள்ளே குகையைவைத்து அக்கினியைமூட்டிய யச்செம்பைமைந்தா, உத்து நீயுருக்கப்பா வுருகும்போது வோகோகோ நவநீதசுண்ணங்கடுகு போடே. (179)

போடப்பாவுருக்குமுகம் நன்றாய்ப்பார்த்து புகழானசுண்ண மதைப் போட்டாயானால், ஆடப்பாநவநீதமாடுமாடு மாயிரத்தெண் மாற்றதுதானயத்தங்கங்கேளு நாடப்பாகுகையெடுத்து அண்டசலம்

விட்டு களினமதாய்ச்சாய்த்துநீநின்றுய்த்தாலும், ஏடப்பாயித்தங்க மெடுத்துப்பார்த்தால் என்சொல்வேன்வாலையடா யெண்ணுந்தானே.

## வறுமைவருங்காலத்தில் மாறிக்கொள்ளவும்.

தானானவாலையைத்தானார்தான்காண்பார் தபோபலத்தில்மிகுதி யுள்ளோரவரேகாண்பார், ஏனானயித்தங்கமென்னசொல்லவேனிடை குறையாமாற்றிதுதானீசன் சொன்னார், வானானசிவயோகபூசை செய்து வைத்திதனைச்சதாகாலமாச்சியப்பாநீ, கோனானகுருவினிட கிருபையாலே கூறினேனையத்தங்கங்கோடிமாற்றே. (181)

## அயத்தங்கம் பதனம்பண்ணவும்.

மாற்றான தங்கமதைப்பதனஞ்செய்து வறுமைவருங்காலத்தில மாறிக்கொள்ளு, வாற்றானவறுமையது அகன்றுபோகும் வருகாது தரித்திரங்களொருநாளுந்தான், ஆற்றானயோகிகட்குதாயாதையா அண்டபிண்டமறிந்த மெய்ஞ்ஞானியோர்க்கு, கோற்றோகாம்சரம் போலேசௌமியத்தில் குருவானவித்தையிதுயறிந்திடீரே. (182)

## இந்நூல் சௌமிய சாகரம்பார்த்து இறக்கவேண்டாம்.

அறிந்திடீர்புலத்தியனே சொல்லக்கேளு அருளுகிறேன்மானி டர்களறியச்செய்யா, தெரிந்திட * ருலுத்தரென்றகாமுகர்க்குச்செய் பாகமொருநாளுஞ்செப்பவேண்டாம்,வறிந்திடீர்வசனித்தசௌமியத் தில்வாழலாஞ் சிவயோகமணந்தகாலம், இறந்திடவேவேண்டாமப்பா யிந்நூல்பார்த்து இறவாதேசதாகாலங் கற்பங்கொள்ளே. (183)

## அமுர்தவிந்துமூலம்.

கற்பமென்னவுடலுக்குவுறுதிகேளு காயாதிகற்பமடாயண்ட கற்பம் அற்பமென்றுநினையாதே யண்டபிண்டம் ஆருக்குந்தோன் றுதயாதியந்தம் அற்பமென்னயகாரமடா உகாரம்விட்டாலம்மாய்கை யெல்லாமற்றுவிடுங்கற்பத்தாலே, நிற்பமென்னகாயமடா தோண் ணூற்றாறு திருவிகற்பவிந்துவ டாகாதவற்பே. (184)

## இதற்கு உயிர்நாதம்.

வற்பமென்னஓங்காரமகாயினின்றமகத்தானசச்சிதானந்தமாமே சொற்பமென்று நினையாதேசுழினையான சூட்சமடாதாரபீட பிரமம் பிரமம், தெற்பமென்னதீபவொளியந்தமந்தம் தேவாரமானபதிசுழிக் கப்பாலே, நற்பமென்ன நவநீதமருவிப்பாயும் நாதாக்கள்குடியிருப் புவமுர்தமாமே. (185)

---

* ருலுத்தரென்பது - மூடர்கள்

## இந்தநதிகள் தீவினையையொழிக்காமல் வருகாது.

அமுர்தமென்ற விந்துவடாமூலமூலம் அந்தமென்றநாதமடா யதற்குயிரதாகும், வமுர்தமென்றயவ்வுரைமைந்தாகாணு வசனித்தோம் பஞ்சகர்த்தாள்வாழும்வீடு, மமுர்தமென்றயவ்வீடுபெரியவீடு மாணாக்களிருக்கின்ற மெய்ஞ்ஞானவீடு, கொமுர்தமென்றகைலாச மேருவீடுகூடருவிபாயுதடாசலமதாமே. (186)

ஆமேதானவ்வீட்டில் சலந்தியுமுண்டு அச்சலந்திதீர்த்தமருவிப் பாயும், வாமேதான்பாய்கின்ற சலத்தைக்கேளு வசனிப்போம்சுத்த சலம்பனிநீராகும், மாமேதான் மாதியடாயார்க்குந்தோணுமவுனமடா செம்பந்தியோகதீர்த்தம், தேமேதான்றீர்த்தமதைக் காணவென்றால் தீவினையைத்தானகற்றி நல்வினையைக்காணே. (187)

## நல்வினை தீவினை மனக்கண்ணாற் பார்க்கவும்.

காணடாநல்வினையை மனக்கண்ணாலே கண்டுசுழிமுனையருகை வாசிபூட்டி, ஆணடாயநமசிவ வென்றுகும்பி அங்கென்றுதம்பித்து வங்கில்பாய்த்து, மாணடாமயேந்திரகிரிவலமாய்வந்து மகமேருகிரி யிடத்தில் வாசிபூட்டி, ஓணடாஓங்காரமாகச்சத்தி யொருநிலையாய்க் கும்பித்துவுறுதிகாணே. (188)

காணுகின்றஙகதிலேவங்கென்றுதம்பி கசிந்தருவி கலந்ததுவு மோடிப்பாயும், நாணுகின்ற அங்குலைவத்துகாழிதம்பிநாதாந்த நவநீத மிறங்கும்பாரு, ஓணுகின்றமூலமடாசுவாதிட்டான மோகுறுதிபிலத் துதடாயுலுத்தகாயம், வாணுகின்றயக்காயம் பஞ்சவாசல் வடகலையு மிடகலையும் வசனிப்போமே, (189)

## வடகலை இடகலை.

போமென்றபுலையருக்குக்கண்ணோட்டந்தான் புகழ்ந்தரவிசோ தியடாயறிவேயாகும், ஆமென்றயவ்வறிவு பூர்வக்கியானம் அய் யிரண்டுபத்திரண்டுபனிரண்டாய்க்கூடும், ஏமென்றகண்ணோட்டம் சித்தியானால் யேறலாமாவரையீராறுமட்டும், நாமென்றபனிரெண்டு கலையுங்கூடி நட்டமதாய்ரவிமதிபோல் நல்குந்தானே. (190)

## இந்நூல் குறிப்பறிய.

தானாகக்கலையிருக்கும் நிலையார்கண்டார் தவநிலையைமறந்திடார் தவறாரையா, நானானசௌமியத்தில் நன்றாய்ச்சொல்வேன் நன்மை தீமையிரண்டினிடகூறேசொல்வோம், வானானவப்பதியிலிருந்துபாரு வளமாகச்சொல்லுவதை வணங்கிக்கேளு, ஆனானவமுர்தஞ்சொலிந் தருவிபாய்ந்த வமுர்தநதிவாசல்கடந்தப்பாற்செல்லே. (191)

## சஞ்சீவி கற்பம்.

செல்லடாவமுர்தங்கென்ற வாசல்சென்றுநீமணிபூரம் பிறையே காணும், அல்லடாயங்குநின்று மங்கென்றேகும்பி மைந்துநாழிகை சென்றுவாசிபூட்டி, கல்லடாயவ்வாசியங்கேநின்று களினமதாய்த்தம் பித்தால் நவமூலங்காணும், எல்லடாநவமூலமிறவியாகும் யேறடா மவுனகுளி யேணிபோட்டே. (192)

போட்டுநீயேறுகையில் சஞ்சீவிபாயும் போடப்பா கெவுனகுளி சிங்கென்றேநீ, நாட்டுநீபோடயிலேயணுகதமும்காணும் களினமென்ற சஞ்சீவிப்பாலருவிபாயும், ஆட்டுநீஅங்குநின்று வைந்துநாழியருளி னுங்கும்பித்துதம்பித்தார்கேள், சாட்டுறவுயில்லையடா சஞ்சீவியான் பால் சகலசித்தின்மோட்சமுனைக் கதிகந்தானே. (193)

## காத்தக்கிண்ணத்தில் சஞ்சீவிப்பால் வாங்கவும்.

தானென்ற சஞ்சீவிகாயகற்பந்தாயைப்போலென்னுளுஞ் சத மாய்வாழ, ஏனென்றயவ்வமுர்தமருவிப்பாயும் யேணிகொண்டுதெரி சிப்பாயிரவியாகும், நானென்றவாசியொட்டி யத்தலத்தில் நவநீதமிறங் குமப்பா நாவதனுல்வாங்கி, மானென்றநடுவிரலிற் சுழியைக்கோர்த்து வாங்கியந்தசஞ்சீவியை மாறக்கேளே. (194)

மாறக்கேள் புலத்தியனே காந்தக்கிண்ணம்மவுனசஞ்சீவியப் பாலேயதற்குள்வாங்கி, ஆறக்கேளப்பாநீ புலத்தியாகேள் அண்டவுப் புச்செந்தூரமரைப்பலந்தானிட்டு, வாறக்கேள் முப்புசெந்தூரங் கொண்டு மரைப்பலந்தான் விஷச்சுண்ணமரைப்பலந்தான்கேளு, தேறக்கேளிங்காயமரைப்பலந்தானிட்டு செயமானரவிதனிலேவைத் திடாயே. (195)

## சஞ்சீவி கற்பஞ்சாப்பிடச் சகல வியாதியும்போய்ச் சட்டையுரியும்.

வைத்திடாயரைநாழிசஞ்சீவிப்பாலேமகத்தானரவிதனிலேவைத் தாலேயா, அத்திடாய்லேகியம்போல்வருதல்கண்டு அப்பிங்கான்றனை யெடுத்துப்பார்த்தாயானல், கைத்திடாயதீதகற்பஞ் சஞ்சீவிதானுச்சு ஞானிகட்குந்தோணுதவமுர்தமாச்சு, எய்த்திடாய்மவுனசிவபூசை செய்து யென்மகனேநெல்லிபருப்பின் பாகங்கொள்ளே. (196)

கொள்ளடாஞானிகட்கு அடுத்தகற்பம் கூறினேமென்ளளவுங் குறையாதையா, கள்ளடாமண்டலந்தான் சிவயோகத்தில் களினமதா புட்கொண்டால் கவராசமுஞ்சித்தும், வள்ளடாவாசிபதனுலேவந்த

வாதமென்பதுவும்போமிரண்டும்போகும், எள்ளளவுங்குறையாது மிந்தகற்பம் யெடுத்தசடலத்திலுள்ள பித்தம்போமே. (197)

போமென்றபித்தமதுநாற்பதும்போம் புனிதமென்றரண்டான விகற்பம்போகும், ஏமென்றசிலேற்பனமிருபத்தொன்றும்போகும் யென்மகனேசடலத்தின் சூடெல்லாம்போகும், வாமென்றவந்தகர்ம மோடிப்போகும் வசனித்தோம்சஞ்சீவியின் கற்பத்தாலே, காமென்ற கோயெல்லோமோடிப்போக நனினம்தாய்க்கற்பமதைநாட்டினேமே.

## அமுர்த்தமதிகற்பம்.

நாட்டினதோரென்னவென்றால் புலத்தியனேஐயயா நாராசமற் றுநடாகற்பத்தாலே,மாட்டினேமிந்தகற்பமண்டலந்தான்கொண்டால் மாள்வதில்லைசஞ்சீவிதான்சட்டைபோகும், ஆட்டினதோரதுவேது வென்றாற்கேளு, ஆயிசுதான்கோடாகோடியளவிடாது, எட்டிலே சொன்னதென்று யெண்ணவேண்டாம் யிரவாதேகற்பமதையுண்டு தேரே. (199)

தேரடாசிங்கிருந்து வங்கிற்பாய்ந்தால் சிவையோகக்குகையது வுஞ்சணத்திற்காணும், வேரடாவிசுத்தியது கோணங்காணும் விபர முடன்வங்கிருத்திவாசிபூட்டி, ஆரடா யங்மங்கு ஷாயவென்று யைந்து நாழிவாசியதினாலேகும்பி, கோரடாகும்பித்துத் தம்பித்தாக்கால் கோ டாகோடிரவிமதிப்பால் சிந்தூரமாமே. (200)

சிந்துகின்றமதிப்பாலைக்கண்டாயானால் செடலசித்தி வாக்கமுர் தப்போசித்தி, கந்துபாய்ந்தருவிவருஞ்சாடைகண்டு கரமென்ற நடு விறலில்வாசிபூட்டி, அந்துசலம்னுவதனாலமுர்தங்கக்கும் அவ்வமுர்தம் பீங்கானிலடவாய்வாங்கி, முந்துநீதேறுதற்குபஞ்சவமுர்தம் முக்கிய முள்ளபீங்கானிற் சொல்லக்கேளே. (201)

## கற்பலேகியம்.

சொல்லக்கேள்பீங்கானிலமுர்தமதிவாங்கி சொற்பெரிபாலமுர் தம்சுத்தசலங்கொண்டு, அல்லக்கேளைந்துபலமிருநீர்கொண்டு அமுர்த மதிபால்தனிலேயடவாயிட்டு, நல்லக்கேளமுர்தமதில் கற்பசுண்ண மிட்டு நாதாந்தரவிதனிலேயொருநாழிவைத்தால், வெல்லக்கேள முர்தமெல்லாம் லேகியம்போலாகும் வெண்மைநிறமென்னசொல் வேன் விளக்கமாமே. (202)

---

'மதியென்பது - சந்திரன்'

விளக்கமென்னலேகியத்தை யெடுத்துப்பார்த்தால் விசையான மிதிலிகளோவிளங்கப்போமோ, களக்கமில்லாலேகியந்தான் மகத்தாங் கற்பம் கருவிதொண்ணூற்றுமப்பாமண்டலத்திற்,புளக்கமிதுவெகு பெருமைசித்தருக்குப் புகழ்பெற்றமதியமுர்தகற்பமாகும், விளக்க மெல்லாமிதினளவால் விளங்கவேணும் வேதாந்தமிந்நூற்குயெதிரில்லை தானே. (203)

தானென்றமதிகற்பம்சிவயோகபூசை சமர்த்தான சிதம்பரத்தின் வாலைபூசை, நானென்றபூசையெல்லாஞ் செய்துமுடிப்பித்துநாதாந்த லேகியத்தைப்பாகமாக, கோனென்றகுருபரனைத் தியானஞ்செய்து கொண்டிடாய்நெல்லிக்காயுட்பருப்பின்பாகம், வானென்றகற்பத்தை யுட்கொண்டேதான் வளமாகயாக்கினையிலேவங்கென்றூட்டே. ()

## பஞ்சபூதநிலையறிய.

பூட்டியேவாசியொட்டிக்கும்பித்தாயானால் புகழான மூலசுழி பொங்கும்பாரு, நாட்டியேயங்குநின்று யம்மென்றுவைந்துநாழிகை தான்தம்பித்தால்பஞ்சவாசல், ஆட்டியேதெரிசனமாமூலாதாரம் அரக ராசுவாதிட்டானமணிபூரந்தோற்றும், மாட்டியேமம்பென்றுகும்பித் தாக்கால் மனுகதமும்விசுத்தியாக்கினையுந்தோற்றும். (205)

தோற்றுகின்றவாகாசஞ்சுத்தமாகி இருவானவாயுவது காற்று மாகி, தேற்றுகின்ற தேயுவதுநெருப்புமாகி திருவானவப்பதுவுஞ் சலங்களாகி, நாற்றுகின்றபிறதிவியுமண்ணுமாகி நவமூலமானவெளி யுயிருமாகி, ஆற்றுகின்ற அகாரமது உகாரமாகி அதற்குயிருவோங் காரவட்டமாச்சே. (206)

## தொண்ணூற்றாறு தத்துவம் கரணாதிகளறியவும்.

வட்டமென்றவுள்வட்டமுடியுமாகி மம்முடியிலாதாரமாறுமாகி, அட்டகசத்துவாரபாலர்களாகி யவ்வட்டம்பஞ்சகர்த்தாளமுர்தமாகி, கட்டமென்றகண்ணோட்டஞ்சுழினையிலாகி நவசராசரங்களெல்லா மதற்குள்ளாகி, கட்டவொண்ணுக்கருவிகரணாதியாகிக்கருவியென்ற தொண்ணூற்றார் தத்துவமாமென்றே. (207)

என்றானபஞ்சபூதமதற்குள்ளாகி யெண்ணவொண்ணாப்பிதிர்க்க ளெல்லாமதற்குள்ளாகி, தன்றானசச்சிதானந்தவெளியாகிச்சலவமுர்த சலாகதியுமதற்குள்ளாகி, அன்றான ஆத்துமாவுமதற்குள்ளாகி யாதி யந்தஞ்சோதியொளியதற்குள்ளாகி, தொன்றான துரியந்துரியந்துரியா தீதமாகித் தொகுத்தகரணாதிகளுமதற்குள்ளாச்சே. (208)

ஆச்சென்றசக்கரமுஞ் சொற்பனமுமாகி யருளினதோர்சுழுத்தி முதலதற்குள்ளாகி, ஏச்சென்றரவிமதிமிரவிமதிவியாகி யெண்ணவொ ண்ணாச் சூரியகலைசந்திரனாகி, பாச்சென்றசராசரமுஞ் சோதியாகிப் பதினெண்பேர் நவமூலமிரண்டுமாகி, நாச்சென்றசரியையொடுகிரியை யாகி நனினமென்ற யோகமெய்ஞ்ஞானமாச்சே. (209)

ஆச்சடாயளவில்லா நதிகளாகி யருளானநதிக்குள்ளே யைந்து மாகி, பாச்சடாபஞ்சகர்த்தாள்குடியுமாகிப் பரமபதவெளியாகியொ ளியுமாகி, வாச்சடாவஸ்துவுடன் பானமாகி யண்டபிண்டமிரண்டா கிக் கடுஞ்சூலமாகி, ஏச்சடாயேகவசீதமாகி யிசைந்தநவ நீதமதில் பிறவியாச்சே. (210)

## பேரண்டம் ஏரண்டம் தலைமதனை.

ஆச்சடாயாண்பெண்ணாபதிவசத்தியாகி யம்மண்டலங்கள்மூன் றாகியண்டமாகி, நாச்சடாயானைந்துபூதமாகி நாதாந்தப்பெண்ணைந் துப்பிறவியாகி, பாச்சடாசாலோகசாமீபமாகிப் பகருகின்றசாரூப சாயுச்சியமாகி, பேச்சடாபெண்ணாணைப் பிரபஞ்சமாகிப் பேரண்ட மேரண்ட மானவாறே. (211)

வாறானபேரண்டமார்தான்கண்டார் வசனித்தயேரண்ட மார் தான்கண்டார், ஏறானயேளப்பால் நிறைந்தபோது யென்னசொல் வோந்தலைப்பிள்ளையவரேயாகும், நாறானவவருடையமுடியில்நின்ற நாதாந்தவிந்துவடாகாலைகாலை, ஆறானயக்காலைநவத் துவாரமெல் லாம் அருவியதுபாய்ந்ததுவும் விந்துவாச்சே. (212)

ஆச்சென்றவிந்துவடாபசலையாச்சு அவ்விந்துநாபியென்று குரு வண்டாச்சு, நாச்சென்றதலைவிந்து யோகமாச்சு நவிலுவோமதி மயங்கியதுவேயாச்சு, பாச்சென்றபதியாச்சுபனிநீராச்சு பரிசுத்தசல விந்துவமூர்தமாச்சு, காச்சென்றகருவிகொடிவேலியாச்சு கருவியென்ற வெண்சாரை யதுவேயாச்சே. (213)

ஆச்சென்று மதியாச்சுயறிவுமாச்சு ஆதாரமாறாச்சு ஆறுருயிறு மாச்சு, தேச்சென்றுந்திகைப்பூடுமதுவேயாச்சு திரிமூன்றுபோராச்சு மூன்றுப்பாச்சு, மூச்சென்றுமுப்பூவுமதுவேயாச்சு மூதண்ட மும்மூல மதுவேயாச்சு வாச்சென்று வழலையுப்புசாகைதுப்பு வசனித்தோம் வேகாவுப்பு ஆகாசவுப்பே. (214)

ஆகாசவுப்பென்றும்சத்துப்பென்றும் அகத்திலேவிளைந்ததென் றும் வேகாதென்றும், வாகாசவுப்பென்றுபூமியென்று மப்பூமிநாத

மென்றும்பூநீறென்றும் ஊகாசவுப்பென்றுமூமைமையென்றும் உடன் சேர்ந்தகருவென்று அண்டமென்றும், பாகாசவுப்பென்றும் பனிநீ ரென்றும் பங்குனிதான் சித்திரையின் பனியின்பேரே, 215)

## உடற்கருவிந்து நாதம் கருக்குருவின் பெயர்.

போரான பனியேதுமாசமேது பிண்டமென்றுமண்டமென்றும் பேர்தானேது, ஆரானபூமியென்றும் பூநீரென்றும் அப்பூமிநாத மென்றுமயந்தானேது, காருனசவுட்டுப்பு வருப்புயேது கவிலுவோ மதுகரைத்த சலந்தானேது, தேருனயென்குருவே யகத்தியசுவாமி தேசிநீருசிநீ தெரிசிப்பீரே. (216)

தெரிவிப்பீரென்குருவே தெட்சணுயன் தேசியென்றவாறெல் லாந் தெளிவாய்ச்சொல்லும், அரிசித்தேனகத்தியரே வையாவையா அண்டபிண்டமுற்பவித்த யடவேசொல்லும், கரிசித்தேன்புலத்தி யனு னெளியேனுக்கு கவநீதவழலையுப்பை கல்குவீர்தான், பரிசுத்த மாகவல்லோ புலத்தியனேகேளு பாடுகிறேன்சௌமிய சாகரந்தான் காணே. (217)

## அடையாளம்.

காணடாபுலத்தியனே சௌமியத்தில் கருச்குருவாய்ச்சொல்லி விட்டேன் காணுகாணு, ஆணடாவைம்பூத மதற்குமுண்டு அருனி னும்பெண்ணுக்கு மதுதானுண்டு, மாணடாபஞ்சறிவுமிரண்டுக்குந் தான் மற்றவொருசீவனுக்கு யில்லையில்லை, ஏணடாயெறும்புமுதல் மரங்கள்பூடு இயம்பினும்பூதமஞ்சு யிறவாய்க்கேளே. (218)

இறவாமலிருப்பவர்க்குக் கற்பம்வேண்டும் யென்மகனேயுடர் க்குதான் விந்துநாதம், நிறவாமல்நிராமயமா மதுவேகர்மம் நிருவிக ற்பமதற்குப்பேர் சஞ்சீவிதானுதும், பறவாமலதையறிந்து கற்பமுண் டால் பானுசதாகோடிகாலம் வாழலாகும், மறவாமல்நீகேளு புலத்தி யனேயையா மாறுட்டமில்லையடா யின்னூல்தானே. (219)

## நாதாக்கள் தவப்பலன்.

தானுனதலையறிந்தா லவனேயோகி தலைப்பிள்ளைப்பேரறிந்தா லவனேவாதி, பேனுனபிண்டமதை யறிந்தோன்ஞானி பேசினே மண்டமறிந் திடுவோன்மவுனி, கானுனகலையறிந்தோன் வேதாந்தி யாகும் கண்ணேட்டமறிந்தவனே தவசியாகும், ஊனுனவுருவறிந் தோன் சித்தன்சித்தன் உருளையென்றகல்லறிந்தோன் ரிஷிதான்பாரே

பாரப்பாயிவையெல்லா மறிந்தோன்கேளு பரப்பிரமமென்ற திலே யறிந்தோனீசன், ஆரப்பாவறிவார்க ளண்டபிண்டம் அடியென்றுகோடியென்று மதற்குப்பேரு, நேறப்பாபஞ்சபூத வாழ்க்கைகொண்டு தெளிந்தாக்கால்வாதியென்றும் திறமாவாய்நீ, கோரப்பாசற்குருவைத் தபோபலத்தால் கொண்டவனேமெஞ்ஞானி குணமுள்ளோன்தேறே. (221)

## ஆறாதாரக்குறி.

தேறப்பாசெயசித்தி பெறுவதற்கு தேனருவிப்பாய்கின்ற வமுர்தங்கேளு, ஆரப்பாவம்மமுர்த மிருக்கும்பீடம் ஆயிரத்தின்கொடிமுடிதா ஞர்தான்காண்பார், ஏரப்பாவாசியதி ஞலேயேறி யின்பாகியமுர்தமிலே யிறவாய்க்கண்டு, வேரப்பாவிந்தினிடம் பருவங்கண்டு விவேகமுள்ளவாதாரங் காணுகாணே. (222)

## வழலை இந்த சௌமியசாகரம் சித்தருக்கு உயிராகிய நூல்.

காணடாயாதார தெரிசனமேயானல் காணலாம்பட்சமுர்த கருவிலையத்தான், ஆணடாபெண்வேண்டும் பெண்ணுக்காணு அல்லாட்டாலொன்றுமில்லை யலைச்சலாகும், நாணடாமொடுக்கமெல்லாம் நன்றுய்ச்சொல்லும் நவசித்தாள்சொன்னநூற் கதிகமின்றால், கோணடா வாராதுஆறாதாரங் கூறெல்லாஞ்சொன்னமப்பா குறிப்பாய்த்தானே.

குறிப்பானவழலையடாயார்தான்சொன்னூர் கூறினேமானதியந்தமந்தம், வறிப்பானவழலையென்ற குறிப்பைக்கேளு வசனிப்போம்தலைப்பிள்ளை கொடியேகொண்டு, நறிப்பானமுழுதுடனே ரசம்போகாமல் நவிலுவோமூலமது பெட்டோடையா, கறிப்பானகல்லூரிலிவ்வண்டமிட்டுக் கணபதியைமுந்திமுந்தி தெரிசிப்பாயே. (224)

தெரிசித்துயிருப்புலக்கைக் கொண்டுசாடு தேனருவிபாயுமடாயிரண்டுசாமம், அரசித்துச்சாடியிலே மாப்போலாகும் அம்மாவைத்தோண்டியொரு பாண்டத்திட்டு, நாசித்து அப்பாண்ட மதிலேகேளு நாதாந்தசுத்தசலம் படிதானரண்டு, வெரிசித்துஅச்சலத்தை யதிலேவிட்டு விபரமுடன்கரமதுவால் கரைத்துக்கொள்ளே. (225)

கொள்ளடாபெண்மகனே கரைத்துநீயுங் குருசொன்னரிப்பாகமந்நாள்முழுதும், நள்ளடாதெளியவைத்தால் மறுநாள்தன்னில் நவநீதமிரங்கிசுத்த தெளிவதாகும், மள்ளடாயத்தெளிவை மறுபாண்டத்தில் மைந்தனே யிறுத்ததனைச்சொல்லக்கேளு, அள்ளடாயப்பாண்டமடுப்பிலேற்றி யக்கினிதீயைமூட்டி யருள்காண்பாய்த்தானே. (226)

## காவியமைந்துக்கும் இந்நூல் குருநூல்.

காணப்பாயிந்நூலும் மகத்தாம்பீடங் கருவானவாயிரத்திருநூரு
தான், ஆணப்ப சித்தருக்குவுயிர்தாமிந்நூல் அருளினேஞ்சௌமிய
சாகரந்தான்பாரு, காணப்பாகாவியமமைந்துக்குமிந்த நாதாந்தசர்வேத
பீடம்பீடம், கோணப்பாகுருநூலுசித்தருக் கூறினேஞ்திரவுகோல்
குருநூல்தானே. (227)

## நவநீதம்.

தானுணமுன்சொன்னநவநீதங்கேளு, தனதாகச்சொல்லுகிறேன்
தவறில்லாமல், காலுனசாமம்ரண்டு அக்கினியைமூட்டி களினமென்ற
பாகமதாயெரித்தாயானல், கோனுணகுருவருளால் பாகுபோலாங்
குருவானேபாகிறக்கிக்கூறக்கேளு, மானுணபாண்டமதை யிறக்கிநீயும்
வசனிப்போம் பீங்கானிலிறுத்திடாயே. (228)

இறுத்துநீயிரண்டுரசப்பீங்கான்றன்னி லென்மகனேரவிதனிலே
பத்துநாள்தான், நிறுத்துநீஞெளான்முழுதும்வைத்து நேர்மைபெற
வதின்கசிவையிழுத்துப்போடு, வறுத்துநீ மதிலிறங்கும் இந்திரகோப
மகத்தானயெண்ணெயது கழன்றுபோகும், அருத்துநீயிப்படியே
பத்துமுறையானு லருளானபஞ்சபூத வுப்புதாமே. (229)

## குருவுடன் சீஷன் தர்க்கம்.

உப்பானஉப்புக்குபேர்தானென்ன ஒருமுலைப்பாலுருளையென்ற
பேர்தானென்ன,அப்பானஅப்புக்குப்பேர்தானென்ன அடிமுடியென்
றிதற்குப்போதியென்ன நப்பானநவநீதமமுர்தமென்ன நாதவென்
றும் விந்துவென்றும் பேர்தானென்ன, செப்பானமுலைமாதர் நால்வ
ரென்ன செனித்ததென்னவுதித்ததென்ன செப்புவீரே. (230)

செப்பாதபொருளென்ன அண்டமென்ன செயலானபிண்ட
மென்ன கருதானென்ன, தப்பாதவுறுதியென்ன தலைப்பேரென்ன
தருவானகடுஞ்சூலாய் நின்றதென்ன முப்பாதையொழிக்குமேலான
தென்ன மும்மூலமுனைமூலமானதென்ன, எப்பாதையெந்தனுக்கு
யருள்செய்வீர்தானென்குருவேசௌமியத்திலியம்புவீரே. (231)

வீரானநாராசமூமைமையென்ன விதித்தவிதிவிட்டகுறைதொட்ட
குறையென்ன, மாரானமதியென்னரவிதானென்ன மகத்தானயிறவி
யென்னும்பேர்தானென்ன, காரானகம்பியுப்புகல்லுப்பென்ன கரு
வானபாரையுப்புநவுப்பென்ன, ஆரானஅடியுப்புமுடியுப்பென்ன
அருள்செய்வீரென்குருவே யருள்செய்வீரே. (232)

### வேகாத்தலை சாகக்கால் பஞ்சபூதம் விபரம் பெயர்கள்.

அருளானமுத்தியென்னசத்தியென்ன அறுபத்துநான்கு சித்து மானதென்ன, வெருளானதலையென்னவமுர்தமென்ன வேகாததலை யென்றபேர்தானென்ன, சருளானசாகாதகாலுமென்ன சற்குருவே கண்டனென்னநாபியென்ன, பருளானபனிநீருசுத்தசலமென்ன பக ராதபேரென்னபரிவாயச்சொல்லே. (233)

சொல்லையாயென்குருவேயகத்தியசுவாமி சூட்சமென்ன தூல மென்னதுதிதானென்ன, கல்லையாகருவிகரணுதியென்ன கடுஞ்சூலா யிறந்தபாலன்பேர்தானென்ன, மெல்லையரமேருவென்னயட்சரந்தா னென்ன மேகசத்தமாகாசம்வாயுவென்ன, தெல்லையாதேயுவென்ன அப்புவென்ன திருவென்னகுருவென்ன பிரிதிவுதான்காணே. (234)

காணுகின்றபிருதிவியோடஞ்சுமென்ன கனவென்னமவுனமெ ன்னயோகமென்ன, ஆணுநீசித்தமென்ன ஞானமென்ன அண்டசரா சரங்களுட பேர்தானென்ன, காணிநீயோதாரமானதென்ன நவசராசரங் களுடபேர்தானென்ன, மாணுநீமண்ணென்னவிண்தானென்ன மாய் கைவந்துசூழ்ந்துநின்ற வரலாற்சொல்லே. (235)

### நால்வகை சாதிவிபரம்.

சொல்லேது அல்லென்ன துக்கமென்ன தூராதுரைப்பாவை யென்றதுருவமென்ன, அல்லேதுமூன்றுபூஅதுவாறென்ன அத்தினி சங்கினிசித்தினிபத்மினிதானென்ன, மல்லேதுமண்டமுட்டையதுவா லென்னமார்க்கமென்ன ராப்பகலில்தான்வசனிப்பென்ன, கல்லேது யதின்வாயிலுடற்கல்லென்ன கருங்கோழிமுட்டையதால்வாதமாமே.

ஆமென்ற வூசிநீரோமநீரென்ன அக்குநீர்பேரென்ன இனிநீ ரென்ன மாமென்றமணநீர்சுத்தநீரென்ன மகத்தானசலாந்தின்காசி நீரென்ன, காமென்றவேசிநீரென்ன நலமானகேசரிநீர்கடல்நீரென்ன, வாமென்றசழிநீறுவுயர்நீரென்ன மகத்தானசலநீருவசனிப்பீரே. ()

### அகத்தியர் சொல்லுதல் புலத்தியர் கேள்வி.

வசனிப்பீரென்குருவேயகத்தியசுவாமி வாலைநீர்பாலைவசனிப் பென்ன, அசனிப்பீரகத்துநீரதுவாரென்ன ஆணீருபெண்ணீரு அருள்வதென்ன, நிசனிப்பீர்நிராமயமாய் நின்றபொருளென்ன நிற் குணநீர்நவநீதநதிநீரென்ன, நசநிப்பீர்சரசோதியின்தீர்த்தமென்ன நளினமதாயென்குருவே நவிலுவீரே. (238)

நவிலுவீரடியேனுக்குக்கோதாவேரி நளினமென்ற செம்புந்தி தீர்த்தமென்ன, ஏவுலுவீர்யமுனைநீர்முளநீரென்ன யென்குருவே சர

வணப்பொய்கைநீரென்ன, அவிலுவீர்பூபதியென்ன யந்தமென்ன
அருளானகுருவினடியானதென்ன, புவிலுவீர் புஷ்பகதிதீர்த்தமென்
னப் புனிவமென்றபாவையெல்லாம் புகலுவீரே. (239)

புகலுவோம்புலத்தியனேராசானந்தயோகிபுஷ்மமதிதீர்த்தமெல்
லாம்புகலக்கேளு, அகலுவோமண்டபிண்டமாதிபந்தம் அடிமுடிதா
னிதுவஞ்சும்பஞ்சபூதம், மகலுவோமிதுவஞ்சாலெல்லாமாச்சு மாடு
கோழிமரஞ்செடிகள் மிருகமெல்லாம், வகலுவோஞ்சலந்தனிலே
வாழுயிரெல்லாம் மைந்தனேவைந்துபூத மறுவஞ்சில்லை. (240)

இல்லையடாயெறும்புகடை பிரிதிவியில்வாழும் இயல்பான சீவ
னெல்லாமஞ்சபூதம், அல்லையடாயனந்தமுயிரனேகத்திற்கும் வைந்து
பஞ்சபூதமடாவையாகேளு, நல்லையடாசகலவுயிர்புல்லுபூடுமுதல்தான்
நவசராசரங்களிலே யிருக்குமுயிரெல்லாம், வல்லையடாவைம்பூதம்
சகலத்திற்கும் மறைப்பிலாச்சௌமியத்தில் மாட்டக்கேளே. (241)

## ஐங்காயத்திலுப்பு.

கேளப்பா புலத்தியனே மவுனயோகி கெணிதமதாய்ச்சொல்லுகி
றேன்கேளுஙமயா, ஆளப்பாயனந்தமுயிரானதெல்லாம் வைம்பூத
மென்றுநாமருளிச்செய்தோம், காளப்பாமனிதராயுதித்ததெல்லாம்
மாயாசத்திபெண்ணுதித்தவரலாரெல்லாம், ஏளப்பாவைம்பூதம்பஞ்
சரிவுமுண்டு என்மகனேயிதரண்டு மியம்பினேமே. (242)

இயப்பினதோர் சோதியென்றால் சொல்லக்கேளு இயல்பாகச்
சொல்வமப்பாயின்னங்கேளு, அயம்பினதோர்காயமடா வைங்காயந்
தான் அதிலெடுத்த அண்டவுப்புவதனுள்மைந்தா, நயம்பினதோர்
நவப்பிரமமதற்குள்ளாச்சு நவசராசரங்களெல்லா மதற்குள்ளாச்சு,
மயம்பினதோரைம்டுதமதற்குள்ளாச்சு மண்டபிண்டமாதியந்தமதற்
குள்ளாச்சே. (243)

ஆச்சென்ன பஞ்சறிவுமதற்குள்ளாச்சு அடிமுடியும் பரமாத்மா
வதற்குள்ளாச்சு, காச்சென்ற கருவிகரணாதியாச்சு கருக்குருவும்பஞ்ச
நதியதற்குள்ளாச்சு, வாச்சென்றவஸ்த்துவாலே பகிரண்டமாச்சு வச
னித்தோம்சலகநதிதீர்த்தமாச்சு, காச்சுதென்றவாண்பெண்ணுயைப்
பிரபஞ்சமாச்சு காசினீரால்கல்லுப்பு கம்பியாச்சே. (244)

## பிண்டயெழுத்து முன்சொன்னவுப்பிலுடற்குறி.

ஆச்சப்பாபஞ்சமுர்தமதற்குள்ளாச்சு அண்டபகிரண்டமெல்லா
மதற்குள்ளாச்சு, காச்சப்பா நலப்பேறு பிண்டமாச்சு, காதமிர்து

செனித்தநீரதுவேயாச்சு, ஏச்சப்பாயிளப்பானகடுஞ்சூலாச்சு இரவி மதிரவியுடனே பிரவியாச்சு, வாச்சப்பாவஸ்துவென்றும் பானமாச்சு வசனித்தோமுடியாச்சு மூலமாச்சே. (245)

ஆச்சென்றநீரெல்லாமதற்குள்ளாச்சு அருளினதோருப்பெல்லா மதற்குள்ளாச்சு, மாச்சென்றமண்டலங்கள் மூன்றுமாச்சு, வாதபித்த சேத்துமமுமதுவேயாச்சு, ஏச்சென்றயேகவுப்புமதுவேயாச்சு மியம் பினதோருடற்கல்லு அதுவேயாச்சு, தாச்சென்றதலைமண்டை விந்து நாதந் தற்பரமுஞ்சிற்பரமு மதுவேயாச்சே. (246)

மதுவானநாதமடா உகாரமாச்சு மாணவந்துவிந்துவடாஅகார மாச்சு, அதுவான ஓங்காரமண்டமாச்சு அண்டத்திலமுர்தசலப்பிறவி யாச்சு, வதுவானவஸ்துவதுவாலையாச்சு வசனித்தோம் பிறிதிவுதான் வுப்புமாச்சு, செதுவானதேயுவதுவாய்வுமாச்சு செனித்ததெடா காசமைந்துமாச்சே. (247)

ஆச்சடாயதற்குப்பஞ்சகர்த்நாளாச்சு அதற்குள்ளே மேரு வென்றறேரையாச்சு, மாச்சடா அதற்குமட்சரந்தானுச்சு மளவில்லாத் தொண்ணூற்றூர்தத்துவமாச்சு, வாச்சடாமாமிஷத்தோ டெலும்பு சதையாச்சு மச்சுரோணிதமுடன் மச்சையாச்சு, ஏச்சடாயீரல்குட லுதிரமாச்சு இயம்பினதோர் வேதமெல்லாமிதிற்குள்ளாச்சே. (248)

## சத்தசலத்தெளிவு.

ஆச்சுதிந்தவுடற்குறிகள் முன்சொன்னவுப்பில் அரன்சொன்னு ரானப்பாதலச்சனுகும், கோச்சுதிந்தவற்குப்பேர்கோடாகோடி கூறி னேமேலண்டமதுக்கும்பேர்தான், வாச்சுதிந்தவுடற்குறியாலெல்லா மாச்சு மனுஷசென்மமதனுலே வழலையாச்சு, கோச்சுதிந்தநூலெல் லாம் ராசியோர்க்குகூறினேமுண்மையாய்ப்பலிதந்தானே. (249)

பலிதமதுவருகவென்றால் ராசியில்லோன் பாவிகட்கு யென்ன சொன்னுல்தெரியுமோபார்,கலிதமதுராசியிருந்தவற்கேகேளுநலமான சாத்திரங்களெல்லாஞ்சித்தி, கெலிதமதுவருகவென்றால் மற்றபேற் குக்குருசொல்லப்பலிதமடாகுறைவராது, வலிதமதுவருகவென்றால் லண்டங்கோழி மகத்தானவிந்துவப்பா சுத்தசலமாமே. (250)

ஆமென்றசுத்தசலந் தெளியவகைகேளு ஆராதாரத்தினுசிதலை யண்டம்வாங்கி, வாமென்றமூலமதுசிதறுட்டாமல் மகத்தானதலைப் பிண்டம்சுண்ணமாக்கி, தேமென்றசுத்தசலமண்டநீரிற்போடத்தெளி யுமப்பாசுவநீதம்போலேயாகும், மாமென்றவத்தெளிவில் தலையண்ட சுண்ணம்போட்டால் மைந்தனேகோடாகோடி நீறதாமே. (251)

## தலைச்சனுடவிவேகத்தால் தன்னைத்தானறியவும்.

தாமென்ற தலைச்சனிடவிவேகத்தாலே தன்னைத்தானறியவேண் டுந்தருவாய்நீதான், ஏாமென்றசௌமியத்தில் நன்ருய்ச்சொன்னேம் நவகோடிவித்தையெல்லாமினிமேல்மைந்தா, வானென்றவிவேகத்தால் விளம்பினேம்பார் மானிடரிலறிவுள்ளோர்வாதஞ்செய்வீர்,யானென்ற நீதமெல்லாமைம்பூதமாகு மாதாரமறிந்தவர்க்கே வாதஞ்சித்தே. ()

வாதமென்று அலைந்துகெட்டமாடுகளேகேளும் மகத்தானசாத் திரங்களனந்தங்கோடி, போதமென்றபொன்னுவெள்ளிக் கதுவோ பாடி போடயில்லைநூல்களெல்லாம் பொல்லாக்காயம், தேசமொன் னும்வாராமலனந்தக்காலந்தேகசித்திபெறுவதற்குவாதஞ்சொன்னேம் ஆதமென்றகற்பமடா வாதகற்பம் அக்கற்பங்கொண்டவனேயரனென் பாரே. (253)

## முன்சொன்ன வுப்புவித்தை யறியவும்.

பாரடாபுலத்தியனே முன்சொன்னவுப்பு பாடுகிறேன் சௌமி யத்தில் பரிவாய்நாமும், ஆரப்பாவறிவார்களைம்பூதவுப்பு அகாரவுப்பு உகாரவுப்பு ஓங்காரவுப்பு, மாரப்பாமூன்றுப்பு மதன்பேரைக்கேளு மகத்தானகம்பியுப்பு கல்லுப்பாகும், மாரப்பாபாறையுப்பு மூன்றுப் பாச்சு மகத்தானபிங்கானி லெடுத்துக்கொள்ளே. (254)

கொள்ளடா புலத்தியனே யென்மகனேகேளு குருவானவுப்பி னுட வர்ணமென்றால், அள்ளடாசொல்லவுமோ நாவுமுண்டோ அகத் திலேவிளைந்தவுப்பு ஆர்தான்காண்பார், நள்ளடாயெடுத்து அதைப் பார்த்தாயானல் நவநீதமூர்தமது மருவிப்பாயும், கொள்ளடாருருவாக் கியம்சிதம்பரத்தின்பூசைகோதையிளமாமயில்தன்வாலைபூசைசெய்யே.

## சிவயோகபூசை ஐம்பூதசுண்ணம்.

செய்யடா சிவயோகபூசைசெய்து செயலானவுப்பதனைப் பத னம்பண்ணு, அய்யடாயந்தவுப்பிலைந்துபலம்வாங்கி, அருளானவைம் பூத சுண்ணங்கேளு, மையடாயண்டமெழுகதனல்மைந்தா மகத்தான குகைசெய்து ரவியுலர்த்தி, மெய்யடாயச்குகையிலைம்பூதவுப்பு வேதா ந்தவுப்பதனையதனிற்போடே. (256)

## புடம்.

போடப்பாபுலத்தியனேயிந்தவுப்பிட்டு புகழானயதன்மெழுகதன் மேற்கேளு, வாடப்பாகலசமது வலுவாய்ச்செய்து வளமானசீலை யேழுமண்ணுஞ்செய்து, ஆடப்பாரவிசாமமுலர்ந்தபின்பு அருளான

குகையெடுத்து ஆடக்கேளு, நாடப்பாகாட்டுமுட்டை வலுவாய்க் கொண்டு நவிலுவோங்கெசபுடந்தான் போடுவாயே. (257)

## சுண்ண நிறமறிய.

போடுவாய் கெசபுடந்தான்போட்டாயானால் புகழானவைம் பூதச்சுண்ணமைந்தா, நாடுவாய்புடமாறியெடுத்துப்பாரு நானென்ன சொல்வமப்பாயிந்தசுண்ணம்,சாடுவாய்சுவசமெல்லாந்தட்டிப்போட்டு சமர்த்தானசிலையேழுங்கழட்டாய்நீ, ஆடுவாய்க்குகையைப் பார்த்தாயானால் வைம்பூதச்சுண்ணமென்னாலறையப்போமோ. (258)

போமென்ற சுண்ணமதைப்பார்த்தாயானால் புவனமெல்லாந் தங்கநிறம்போலேகாணும், ஆமென்றவகத்திலேவிளைந்தசுண்ணம்ஆரு மறியார்களுண்மையண்டசுண்ணம், தேமென்றயிச்சுண்ணங்கோடா கோடி திரிமூன்றுமூவுலகுஞ்சோதிகாணும், நாமென்றசுண்ணமதைச் சீஷாதன்னில் நவிலுவோம்பதனமதாய் வைத்துப்போற்றே. (259)

## சுண்ணத்தில் வாலைகற்பமறிய.

போற்றடாயென்மகனே புலத்தியனேகேளு புதுமையென்ற சுண்ணத்திற்கற்பங்கேளு, வாற்றடாவாலைகற்ப மார்தான்செய்வார் மண்டலத்தில் மெய்ஞ்ஞானியவரேசெய்வார் ஆற்றடாயோகிசெய் வார் மவுனிசெய்வார் அருளினேஞ்சித்தர்முதலனைவோர்செய்வார், ஏற்றடாமண்டலந்தான் தினந்தோறுண்டால் என்னைப்போலாயிடுவா யிறவாய்க்காணே. (260)

## நவநீதலேகியம்.

காணப்பாபுலத்தியனேசொல்லக்கேளு கருவானவாலைகற்பங் கருத்தாய்க்கேளு, ஆணப்பாதலையுப்பிலைந்துபலம்வாங்கி யருளான சுணணமதில்விராகனைந்துவாங்கி, பேணப்பாபீங்கானிலிதுரண்டு மிட்டு பேரானபனிநீருசுத்தசலமைந்து, காணப்பாயதிலிட்டுரவியில் வைத்தால் நவநீதமிரங்குமப்பா யென்னசொல்வேன். (261)

சொல்லவொண்ணாநவநீதமெடுத்துக்கொண்டு சொற்பெரியமது பீங்கான்மதனிலிட்டு, அல்லவொண்ணாமதிதனிலேயொருநாழிவைத் தால் அரகராநவநீதம்லேகியம்போலாகும், வெல்லவொண்ணாலேகி யத்தையெடுத்துப்பார்த்தால்விசிதமதாயிருக்குமப்பாவிதமாய்க்கேளு, நல்லவொண்ணாலேகியத்துக்கணபதியின்பூசை நவிலுவோம்வாலைபுட பூசைசெய்யே. (262)

## வாலைபூசை.

செய்யப்பாசிவயோகஞ்செய்யும்போது செயலானவாலைலேகியத் தைக்கொண்டு, அய்யப்பாநெல்லியுட்பருப்பளவாக அரகராநாவு

தட்டாமற்கொள்ளு, ஷநயப்பாகொண்டிடவேயுள்மூலத்தில் நனின மதாயக்கினியோமாண்டுபோச்சு, மெய்யப்பாமேகமிருபத்தொன்றி னாலே விளங்கியதோர்பிரமூலமற்றுப்போச்சே. (263)

## வாலைலேகியங் கொள்ளும் விபரம்.

போச்சப்பாபித்தத்தாலெழுந்தவாய்வு புகழான வாழ்வதாலெழு ந்தபித்தம், ஒச்சப்பாயுடலைவிட்டுயோடிப்போச்சு வொன்றான வாதத் தாலெழுந்தவாய்வு, வாச்சப்பாவாலையுடலேகியத்தால் மாண்டுதடா, வாதபித்த சிலேட்டுமும்போச்சு, எச்சப்பாமண்டலந்தான் பத்திய மாய்க்கொள்ள இயம்புகிறேன்புலத்தியனே யியம்பக்கேளே. (264)

## பத்தியமறியும் விபரம்.

சேளுநீ பித்தத்தாலெடுத்தகறியெல்லாம் கெணிதமென்றபுளி யுடன் கல்லெண்ணைசுண்ணம், ஆளுநீகாரமதுகடுகுகல்லரிசி ஆகாது பச்சரிசியடுக்குமைந்தா, பேளுநீபுளியாரைகற்பூரசுண்ணம் பேசு கிறேன்மிளகுத்தூள்பசும்பால்நெய்தான், நாளுநீயிவ்விதமாய்மண்ட லந்தான்கொண்டால் நவரத்நதேகவச்சிரமாகுந்தானே. (265)

## நரைதிரை மாண்டுபோக.

தானென்றவாலையப்பா மண்டலத்துக்குள்ளே தருவானநரை திரையுமாண்டுபோகும், ஏனென்றயிளம்பாலன்தலைச்சனைப்போல் இயம்பினேந்தவராதுயிதற்கீடுண்டோ,பானென்றபாடல்பதினாயிலட் சம் பாடினேஞ்சௌமியத்தில்பலனெல்லாந்தான், வானென்றபொரு ளாகவசனித்தோம்பார் வாலையுடகற்பமதை மாட்டினேமே. (266)

மாட்டினேம்புலத்தியனே மகத்தாஞ்சுண்ண மறைக்கவில்லை யிதுகளெல்லாமுண்மையாக, சாட்டினேமம்புசரம்போலே யிந்நூல் சாடினேம்பொருள்களெல்லாந்தவறில்லாமல், நாட்டினேஞ்சௌமிய சாகரந்தானிந்நூல் நாதாந்தசித்தருக்குக்கருநூல்பாரு, ஏட்டிலே சொன்னதென்று யெண்ணவேண்டாம் யென்மகனேலபியிருந்தா லெய்தும்பாரே. (267)

பாரடாமுன்சொன்னமூலவுப்புபரிவானதலையுப்புசெயநீர்கேளு ஆரடாவறிவார்களிந்தசெயநீர் அளவில்லா முறைகளெல்லாங்குரு முறைதான்பாரு, வாரடாபீங்கானில்சுத்தசலபனிநீர் வகைகையொன்றுக் கைந்துபலம் நிறுத்துவிட்டு, பாரடாமும்மூலவுப்புபலம்பத்து பரி வானபீங்கானில் நிறுத்துப்போடே. (268)

## புத்திதேறுதல்.

போடப்பாபுலத்தியனோசானந்தயோகி புகழானபீங்காணி லிந்தவகையெல்லாம், நாடப்பாகரமதுவால் பிசைந்துருட்டி நல்ல ரவிதனிலொருநாழிகையேவைத்தால்ஏடப்பாசெயநீருயென்னசொல்வேன் இறங்குமப்பாதலையுப்புசெயநீர்தானும், ஆடப்பாசெயநீரதிககாரம் அரன்சொன்னநீந்தமுறையான்கண்டேனே. (269)

## மானிடருக்குப் புத்திசொல்லுதல்.

கண்டதொருசெயநீரையெடுத்துக்கொண்டு கருவானசிசாவில் பதனம்பண்ணி, அண்டர்தொழுஞ்சதாசிவத்தை மனதிலெண்ணி யகண்டசெயநீரதற்குவாலைபூசை, மாண்டலங்கள்தீருமடாபதினென்வாத்தியமகத்தானபூசைசெய்துமகிழ்ந்துபோற்றி, தொண்டனென்று பேறுபெறச்செயநீர்தன்னை துதிசெய்வாய்சதாகாலமதியாற்றேறே.

தேறுவதுமதியாலே தேறவேண்டும் தெளியவதுமதியாலே தெளியவேண்டும், கோறுவதுமதியாலேயறியவேண்டுங் குருசெயலு மதியாலேபுத்திவேண்டும், சேறுவதுமதியாலேசித்திவேண்டுந் தெசதிட்சைபெறுவதுந்தான் மதியால்வேண்டும், பேறுவதுமதியாலே செல்வம்வேண்டும் பேரின்பச்சாத்திரத்தைப்பேணிப்பாரே. (271)

சாத்திரந்தான்பார்த்துத்தெளியாதபேர்க்குத் தந்தைதாய்கொடுமையென்றுதவத்திலாதோர், யாத்திரைதான்போனாலாவதென்ன அறிவில்லாக்கொடுமையதாலெபியாதையா, கோத்திரந்தான்விளங்கவிந்துதத்துவத்தைக்கண்டு குருவாதிநிலையளவுதானறிந்துபாத்திரம், தானிசுக்கமில்லாப்பாவிகட்கு பார்த்துப்பார்தினந்தோறுமலைவார்தாமே. (272)

அலைவோர்க்குயென்னசொன்னாலாவதென்ன அறிவறிந்தபிள்ளைகளேயன்பாய்க்கேளும், மலைவோர்க்குமாய்கையைத்தாண்டித்துத்தள்ளிமாதாரதெரிசனத்தின்பொருளைக்கண்டு நலைவோர்க்குத்தன்னைத்தான்தான்றனென்று நவநீதலேகியத்தை நாடோறுமுண்ணே.

## நவநீததிராவகம்.

உண்டாநவநீத திராகவகத்தைக்கேளு வுறுதிபெறச்சொல்லுகிறேனுண்மையாக, கண்ணடாமுன்சொன்னவழலையுப்பு நனினமென்றபலமைந்துவெடியுப்பைந்து, கண்ணடாகம்பியுப்புசல்லுப்பைந்து கருவானபாறையுப்புபொட்டுப்பைந்து, மண்ணடாமதியுப்புரவியுப்பைந்து மகத்தானபடிகாரவுப்புபலமைஞ்சே. (274)

அஞ்சாலங்கையெல்லாம் பலமஞ்சாக அருளுகிறேன்மிடை குறையாதெடுத்துக்கொண்டு, கஞ்சானரசக்கலசமதனிலிட்டுக் கருவானசுத்தசலம்பனிநீர்பலமைந்து, மிஞ்சாமலின்னீரைக்கலசத்திட்டு மேன்மைபெற மெழுகதனாற்கவசஞ்செய்து, மஞ்சானவிந்ததனாற் சீலையேழு மைந்தனேசெய்துமுடிப் பித்துக்கொள்ளே. (275)

கொள்ளடாவென்மகனே புலத்தியனேயப்பா குருவானவண்ணானுட அடுப்புபோல, செள்ளடாசெய்துமுடிப்பித்துநீயும் செயலான கலசமதையெடுத்துக்கொண்டு, அள்ளடாயடுப்புமேற் கவசம்வைத்து அப்பனேகலசமதின்பக்கத்துவாரம், மெள்ளடாசில்லுபோக்கி யக்கினியைமூட்டி மேலானபாலைகொண்டு சொல்லக்கேளே. (276)

கேளடாவென்மகனேசில்லுசெய்த கெணிதமென்றதுவாரத்திற் சரியாய்மைந்தா, பாளடாபாலையொன்றுசெய்துமுடிப்பித்துப் பரிவானபாகமதாய்வைத்துநீயும், காளடாகாளமேகம்போலத்தீயைக் கருணைதரவேண்டுமென்று கனிகூர்ந்தையா, தேளடாகொடுமூதல் போல் திராவகத்தைமைந்தா தென்பாகநீயிறக்கியிறுத்துக்கொள்ளே.

கொள்ளப்பாமௌனரசனந்தயோகி கூறினேந்திராவகம்போன லொன்றுமில்லை, அள்ளப்பாமறாசக்கலசந்தன்னி லப்பனேயிறுத்த தனைப்பதனமாக, கள்ளப்பாநவநீததிராவகத்தை நாம்சொன்னோம் சிதம்பரத்தின்வாலைபூசை, செள்ளப்பாசெய்துமுடிப்பித்துக்கொண்டு செயல்தருகவேணுமென்று தெரிசிப்பாயே. (278)

செய்யப்பா திராவகந்தானீதவித்தை தேகியென்றயோகிகளே செய்வீரையா, அய்யப்பாதிராகவத்தினாலேமைந்தா யளவில்லாக் கோடிவேதைதானேயாகும், நய்யப்பாநவகோடிசித்துமாடும் நவசாரசரங்களெல்லமெரிந்துபோகும், எய்யப்பாயிந்நூல்போலொருநூலுண்டோ இயம்பினேஞ்சௌமியசாகரந்தான்பாரே. (279)

## இந்நூல்போலொருநூலுமில்லை ஆயிரத்திருநூறில் அறுபத்துநான்கு சித்துமாடும்.

பாரப்பாபுலத்தியனே சொல்லக்கேளு பாடுகிறேன்மாயிரத்திருநூறிந்நூல், அரப்பாவறிவார்களளவில்லாத அப்பனேவெகுகோடி சித்துமாடும், தேறப்பாயிந்நூலிலனேகஞ்சித்தர் தேறினார்நாவதனால் சொல்லப்போமோ, ஊரப்பாயிடங்கொள்ளாதிந்தநூலு ஒருகோடி தவஞ்செய்தோர்க்கெய்துமாமே. (280)

எய்துமப்பா யிந்நூலுமகத்தாம்பீடம் யெண்ணவொண்ணாவொடுக்கமெல்லாமியம்பினேனமப்பா, வைதுமப்பாவாதகாவியத்தின்

பூட்டு மறைப்பெல்லாந்திறவுகோலாய்த் திறந்துவிட்டோம் மைந்த மப்பாபஞ்சகாவியத்துக்கெல்லாம் மகத்தானநவநீதபீடம்பீடம், ஐந்து மப்பாயிந்நூலுண்மையாக அரனேயென்னாணையப்பாவிண்டேனே,

### வாதகாவியத்திற்கு திறவுகோலிந்நூல்.

விண்டோமேபுலத்தியனேயொவ்வொன்றாக விரித்துசொன்னோ மாறாய்ந்துபார்ப்போரில்லை, அண்டோமேயொவ்வொன்றாய்ச்சோதித் தாக்கால் அரசப்படுங்காண் பாடுபட்டோர்க்கெல்லாமெய்தும், நண் டோமேநாம்சொன்னதிறவுகோலு நளினமதாய்த்திறப்பார்கள்ஞானி ஞானி, கண்டோமேகருக்குருவை யின்னூலில்விண்டோம் கருவான மௌனியென்றாற்காணுவானே. (282)

### வெடியுப்புத் திராவகம்.

காண்பதற்குத்திராவகத்தைக் கருவாய்ச்சொன்னோம் கடைத் தேறும்யோகிகட்குக்குருவைக்கேளு ஆண்பதற்குயின்னமொருதிராவ கத்தைக்கேளு, அருளுகிறேன்சித்தர்களேயாய்ந்துபாரும், மாண் பதற்குமகத்தானதிராவகந்தான் மைந்தாமருளுகிறேன் வெடியுப்புத் திராவகத்தைக்கேளும், காண்பதற்கு நாம்சொல்வோம்வெடியுப்பு பலம்பத்து நலமானபொட்லுப்பு கல்லுப்புபத்தே. (283)

பத்தானநவாச்சாரம்சீனம்பலம்பத்து பரிவானபாறையுப்புகம்பி யுப்புபலம்பத்து, நத்தானயிவ்வகைகள்கல்வத்திலிட்டு நளினமதா யொருசாமந்தூளதாக்கி, கத்தானநசக்கரகமதனிலிட்டு கடோமென்ற யண்டமெழுகவசஞ்செய்து, தெத்தானவித்ததனை லேழுசீலைசெய்து செயம்பெறவேசில்லுபோக்கிச் செயமாய்த்தானே. (284)

தானென்றசுத்தசலம்பனிநீர்கேளு தண்மைபெறப் பலம்பத்து திருத்தெடுத்து, தானென்றகரகத்தைரவியிற்சாமம்வைத்து கருணைதர வேண்டுமென்றுயெடுத்துநீயும், பானென்றதுவரமதில் பனிநீர்சுத்த சலம்விட்டு பரிவானவடுப்பேற்றிமுன்போற்றீயை, நானென்றபாலை யடாயதுமையத்தில்வைத்து நாதாந்தவக்கினியை மூட்டுவாயே. ()

மூட்டுவாயக்கினியைக்காளமேகமாக முக்கியமுடன் தீமூட்டி யெரித்தாயானால், எட்டுவாயிறங்குமப்பாவெடியுப்புத்திராவகம் என்ன சொல்வேன்தன்பெருமையெவருஞ்சொல்லார், ஆட்டுவாயதையெடு த்துசநவசீலைதட்டி அரகராகற்பத்தைப்பார்த்தாயானால், நாட்டிலே யிப்படியார்செய்யப்போறார் நாதாந்தவெடியுப்புத் திராவகந்தான் காணே. (286)

## இந்த நூலில் கோடிவித்தை.

காணப்பாபுலத்தியனே ராஜயோகிகபடில்லா நூலிதுதானிதுபோ லுண்டோ, தோணப்பாதிராவகத்தைச்சிசாவிற்றுன் செயம்பெறவே யெடுத்துவிட்டுச்செயலாய்நீயும், நாணப்பா பதனமதாய்வைத்துப் போற்றி நாதாந்தச்சிதம்பரத்தின்வாலைபூசை, சேணப்பாசெய்து முடிப்பித்துநீயும் சிவயோகப்பூசைசெய்து தெரிசிப்பாயே. (287)

தெரிசிப்பாயென்மகனேபுலத்தியனேஐயா தெளிவானவெடியுப் புத்திராவகத்தைப்போல, நாசிப்பாய்நாடதிலேசெய்வாரேதான் நாம் செய்தோமகத்தியன்வாக்கமுர்தமாகும், அரிசிப்பாய்திராவகத்திலனந் தங்கோடி யளவில்லாவேதையெல்லாமாடலாகும், பரிசிப்பாய்சௌமி யத்தில் பாடினேம்நாம் பாடுபடவேண்டாமப்பாபரிவாய்க்கேளே. ()

## கல்லுப்புத்திராவகம்.

கேளடாவெடியுப்புத்திராவகத்தைச்சொன்னேன் கெடியானகல் லுப்புத்திராவகத்தைக்கேளு,நாளடாகல்லுப்புபலமோபத்துநடுவான பாறையுப்புபலமோபத்து, வாளடாமுப்பூவும்பலமோபத்து வருளு கிறும் வேதையுப்புப்பலமோபத்து, தாளடாதலையுப்புப்பலமோ பத்து தருளானவுப்பெல்லாஞ் சரியாய்ச்சேரே. (289)

## கல்லுப்புத்திராவகம்.

சேர்த்துநீயிடைகுறையாதெடுத்துக்கொண்டு செயமானகல்வத் திலிதுவெல்லாமிட்டு, ஆர்த்துநீயொருசாமந்தூளாக்கி யத்தூளையெடு த்துநீகலசத்திட்டு நார்த்துநீசுத்தசலம்பனிநீர்பலம்பத்து நன்றாககலச மதில்கண்பாய்வார்த்து, பார்த்திபனேயண்டமெழு கவசஞ்செய்து பரிவானவிந்ததிறற்சீலைசெய்யே. (290)

செய்யப்பாசீலையேழு செய்துமுடிப்பித்து செயலானரவிதனிலே காயப்போடு, மெய்யப்பாயக்கலசமெடுத்துக்கொண்டு மேலான வண் ணனடுப்பின்மேலேற்றி, துய்யப்பாகலசமதுதுவாரம்போக்கி துதி பெறவேபாலையதற்கெதிரேவைத்து,அய்யப்பாயக்கினியைக்காளமேக மாக அப்பனேதீமூட்டியடவாய்ச்செய்யே. (291)

செய்யடாசாமமதுயெரித்தாயானல் திறமானகல்லுப்புத்திராவ கந்தான்மைந்தா, எய்யடாயென்னசொல்வேனிறங்கும்பாலு யென் மகனேபாலையிலேயியம்பக்கேளு, மெய்யடாயிறங்கினதோர் பாலை யைத்தான் மேன்மைபெறவைத்தனைச்சொல்லக்கேளு, வையடா சீஷாவில்திராவகத்தைவிட்டு வசனிப்போம்சிதம்பரத்தின் வாலை பூசைசெய்யே. (292)

## சுண்ணவங்கத்தில் தங்கவேதை.

செய்துயிந்ததிராவகத்தைக்கடுகின்வீதம் இறயாகயெடுத்துநீகல் விற்பூசி, அய்துயிந்தயண்டமெழுகவசஞ்செய்து அப்பனேகோழி யென்றபுடந்தான்போட்டால், தெய்துயிந்தக்கல்லெல்லாஞ்சுண்ணமா குந் தெளிவானசுண்ணமதையெடுத்துக்கொண்டு, கொய்தமலர்வாச மதுபோலேயையா கொடிதானவங்கமது சேர்தாணெட்டே. (293)

எட்டானசேர்வங்க மெடுத்துக்கொண்டு எண்ணவொண்ணுக் குகைதனிலேயின்பமாக, உட்டானவுடற்சுண்ணம்விராகன்போட்டு உருக்கும்ப்பா துருத்திகொண்டு வுருகும்போது, கட்டானகல்லுசுண் ணங்கடுகின்வீ தங்கருணைதரவேண்டுமென்று போட்டாயானல், அட் டானகைமப்பா மாற்றேசொல்வேன் ஆயிரத்தெண்மாற்றதுதான் யாகும்வாரே. (294)

வாரானவங்கத்தின் தங்கந்தன்னை வசனிப்போமண்டயச்சில் சாய்த்துநீயும், ஓரானவொருநாழிசென்றால்மைந்தா லொன்றனதங் கத்தையெடுத்துக்கொண்டு, ஆரானசிதம்பரத்தின்வாலைபூசை ஆதார பூசைசெய்துபதனம்பண்ணு, பேரானபேர்களெல்லாமிந்நூல்மைந்தா தேறலாஞ்சௌமியத்தில் தெளியலாமே. (295)

## தேராதபேர்களுக்கு இந்நூல்வேண்டும்.

## பொட்டுப்புத் திராவகம்.

தெளிவதற்குவங்கத்தின் தங்கவேதைசொன்னோம் தேசியென்ற யோகிகளேதென்பாய்க்கேளு, களிவதற்குப்பொட்டுப்புத்திராவகத் தைக்கேளு கருவாகச்சொல்வமப்பா களிகூர்த்தையா, லளிவதற்குப் பொட்டுப்புபலமோபத்து வசனிப்போமுப்பூவும் பலமோபத்து, களிவதற்குநவாச்சாரம்பலமோபத்து களினமென்றசீனம்பத்துவெங் காரம்பத்தே. (296)

பத்தென்றபடிகாரம்பலமோபத்து பரிவானபாறையுப்புபலமோ பத்து, அத்தென்றவுப்பெல்லாமிடைவீதமாக அருளுகிறேன்கல்வத்தி லடவாய்ப்போட்டு, நெத்தென்றதுபோலேசரமங்கொண்டு நீமகனே தூளாக்கியெடுத்துமைந்தா, அத்தென்றரசக்கலசமதனிலிட்டு அரு ளானசுத்தசலம் பனிநீர்பலம்பத்தே. (297)

பத்தப்பாவிரண்டுநீர்கலசந்தன்னிலிட்டு பண்மைபெறவிச்சுண் ணம்வழலைச்சுண்ணமைந்தா, வித்தப்பாவிகாரனெனடைகலசத்திலிட்டு வேதாந்தமெழுகதனுற்கவசஞ்செய்து, நெத்தப்பாவிந்ததினு லேழு

சீலைசெய்து நீமகனேசோரவியுலர்த்தியெடுத்துக்கொண்டு, அந்தப்பாமுன்
னடுப்பிலேதுமேல்வைத்து அருளானகவசமதில் துவாரம்போக்கே.

போக்கின்றதுவாரமதிலேநேரதாகப் புனிதமதாய்ப் பாலைவைத்
துப்புரமூயய்நீயும், மாக்குகின்றவக்கினியைக்காளமேகமதுபோல்மைந்
தனே தீமூட்டிடுவாயையாகேளு, காக்குகின்றயிரண்டுசாமமெரித்தா
யானால் கனகம்போலிரங்குமட்டாகாணுகாணு, ஏக்குகின்றபாலையைத்
தானெடுத்துக்கொண்டு யென்மகனேசீஷாவில்திராவகத்தைவாரே.

வாரடாயென்மகனே புலத்தியனேகேளு வசனித்தோம் பொட்
டுப்புத்திராவகந்தான், ஆரடாவிதம்பரத்தின்வாலைபூசை அடவாகச்
செய்துமுடிப்பித்தேநீதான், ஆரடாதெரிசித்துஅடிபணிந்து யான்
சொன்னதிராவகத்தைப்பூசைசெய்து தேரடாதினமதுவுந்தெரிசித்தா
யானால் தெளியலாந்திராவகத்தால் தேறலாமே. (300)

## அட்டமாரணக்கரு.

தேரலாம்புலத்தியனே சொல்லக்கேளு தேனருவிபாயுகின்ற
தலைச்சன்பிள்ளை, ஊனெல்லாந்திரிந்ததனுலாவதென்னவுடன்சேர்ந்த
பிண்டமடாயண்டபிண்டம், சாரலாமுழுதண்டமூலத்தோடே சரகெ
டுத்துச்சுத்தசலம்பனிநீர்கொண்டு, ஏரலாமிரண்டுநீர்பலம்பத்தப்பா
யென்னசொல்வேன் ரசப்பாண்டமதனில்வாரே. (301)

வாரடாயென்மகனே சுந்தாமேகேளு வசனித்ததலைச்சனடா
பேரண்டங்கொண்டு, பாரடாபாண்டமதிலிட்டுநீயும் பரிவானகொச்சி
மஞ்சள்பலமிரண்டையா, ஆரடாபடிகாரம்பலந்தானிரண்டு அரைகி
றேன்வெண்காரம்பலந்தானிரண்டு, மீசரடாசீனமதுபலந்தானிரண்டு
செயமாகயிதுவெல்லாம் வாசங்கேளே. (302)

கேளப்பாசுந்தரமோசயோகி கெணிதமென்றபுழுகுபலங்கஸ்
தூரியிடைபத்து, ஆளப்பாயிவ்வகைகள் சரக்கெல்லாந்தான் அருணி
னுமிதுவெல்லாங்கல்வத்திலிட்டு, தூளப்பாதுதிபெறவேதூளதாக்
கிச் சொல்லுகிறேன்மஷ்டமாரணக்கருவைக்கேளு, ஏளப்பாயித்
தானைப்பாண்டத்திலிட்டு யென்மகனேபிசறியேயியல்பாய்க்கேளே.

கேளேநீபுலத்தியனேஐயாவையா கெணிதமென்றபாண்டத்திற்
குச்சொல்லக்கேளு,வாளேநீயண்டமெழுகவசஞ்செய்து வதன்மேலே
சாணைக்கைவனமாய்மூடி, ஏளேநீயிப்பாண்டம்சீலைகேளு யென்மகனே
விந்திலுமேழுசீலை, கோளேதும்வாராதரவியில்சாமம்வைத்து குண
முடனே பாண்டத்தையெடுத்துக்கொள்ளே. (304)

எடுத்துநீயிப்பாண்டம் பூமிதனிற்கேளு இயல்பாகமுழக்குழிதா
னிறவாய்ச்செய்து, அடுத்துநீபாண்டமதைக் குழிக்குள்வைத்து
வதன்மேலேகையிட்டுமண்பரப்பி, கடுத்துநீமண்டலந்தான்சென்ற
பின்பு நளினமதாயப்பாண்ட மதையெடுத்துப்பார்த்தால், மடுத்துநீ
மண்டலமெல்லாஞ்சிவப்புநிறங்காணும் மகத்தானகவசஞ்சாணக்கை
வாங்கே. (305)

வாங்கடாவென்மகனேபுலத்தியனேயையா மகத்தானசீலையெல்
லாங்கழற்றெரிந்து, பாங்கடாபாண்டத்தைப்பார்த்தாயானால் பரணரு
ளாலட்டமாரணநவநீதந்தான், ஆங்கடாநவநீதமருவிபாயும் அருளா
கப்பாய்கின்றநவநீதத்தை, எங்கடாவெடுத்துஅதைப்பீங்கான்றன்னில்
இருத்துநீவார்த்திடுவாலிறவாயென்னே. (306)

என்னவேபீங்கானிலிருத்தநவநீதத்தில்லென்மகனேபேரண்டச்
சுண்ணம்பலமொன்று, அன்னவேபொட்ளுப்புத்திராவகந்தான்கேளு
அரைப்பலந்தா னீதத்திலடைவாய்விட்டு, ஈன்னவேரவிதனிலேயரை
நாழிவைத்தால் நாதாந்தமெழுகதுபோல்கட்டும்பாரு, மன்னவே
மெழுகெடுத்துப்பார்த்தாயானால் மதியென்னயிதற்குநிகரில்லைதானே.

## மாந்திரிகமட்டசித்து.

தானென்றமெழுகெடுத்துச்சிவயோகபூசை தருவானசிதம்பரத்
தின்வாலைபூசை, தேதென்றகணபதிதனகந்தன்பூசை தெளிவான வீர
பத்திரன்வைரவன்றன்பூசை, நானென்றநவசித்தாள் பூசைசெய்து
நாதசக்திபூசைசெய்துநவிலக்கேளு, ஏனென்றயவரவர்க்குலட்சமுருச்
செய்து வென்மகனேயட்டசித்துமாடுவாயே. (308)

ஆடுவாயெட்டெட்டுஞ்சித்தியாகும் அறுபத்துநான்குசித்தியாடு
மாடும், நாடுவாய்மாந்தரிகசித்தியெட்டும் நவிலுவோமுனைவிட்டுப்பிரி
யானையா, தேடுவாரனேகம்பேர்கருவைக்காணார் தெளிவாகச்சௌமி
யத்தில்தெரியச்சொன்னோம், ஏடுவாய்மாந்திரிகஞ்சித்திபெறவென்
றால் இக்கருத்தானுண்மையப்பா யெடுத்தாடுவாயே. (309)

ஆடவென்றாலென்மகனே சொல்லக்கேளு அட்டமாரணக்
கருவையருளிச்செய்தோம், பாடவென்றாலிக்கருவைப் பரண்டிக்
கொண்டு பரிவாகயதில்வைத்துப்பரண்டிமூடி, நாடவென்றால்பொட்
டகத்திற்பதனம்பண்ணு நளினமதுவென்மகனேநவிலக்கேளு, தேட
வென்றால்மாரணத்தின்கருவைக்கொண்டு தினந்தோறுமடிபணிந்து
தெரிசிப்பாயே. (310)

## ஐந்துருத்தைலம்.

தெரிசிப்பாய்புலத்தியனே கருவைச்சொன்னோம் தெளிவான வைந்துருவின்றயிலங்கேளு, அரிசிப்பாயைந்துருவின் றயிலஞ்சொல்வோம் அறுபத்துநான்குசித்துமாடுதற்கு, வரிசிப்பாயென்மகனேயுடன்கட்டையேரும் வஞ்சிதீப்பாய்ந்தவள்தான்மாதுதலையண்டம், கரிசிப்பாய்கழுதாக்குங்கடும்பாலண்டங் கருவானமுழுவண்டங்கடுஞ்சூலாமே. (311)

## வாசத்தூளிடை.

ஆமென்றதலைச்சனடாயண்டபிண்டம் அருளானமுழுவண்டமெடுத்துக்கொண்டு, நாமென்றயெட்டுக்குளிறந்தபாலன் நவிலுவோமுருவெல்லாமாகும்மாகும், யாமென்றமஞ்சுக்குளிறந்தபாலன் மகத்தானவுருவெல்லாமெடுத்துக்கொண்டு, வாமென்றமனிதாரவம்படாதயிடம்போய் மைந்தனேவைந்துவின்வகைசொல்வோமே. (312)

சொல்வோமேமாங்கிஷங்களெலும்புமண்டை சொற்பெரியமாகவேதான்வெவ்வேராக, நல்வோமேகண்டித்துப்படிகாரம்பலமைந்துகருவானசீனமைந்துவெடிகாரமைந்து, அல்வோமேவெடியுப்பு கம்பியுப்பைந்து அழகானபாறையுப்புவழலையுப்பு, நல்வோமேநவாச்சாரம்பலந்தானைந்து நவிலுவோங்கொச்சிமஞ்சள் பலந்தானஞ்சே. (313)

அஞ்சானபுழுகுயிடைமூன்றதாகும் அப்பனேகஸ்தூரியிடையஞ்சதாகும்,மஞ்சானதிதுவெல்லாங்கல்வத்திலிட்டு மைந்தனேதூளாகப்பொடித்துக்கொண்டு, துஞ்சாமல்பீங்கானில்சுத்தசலம்பனிநீர்துதிபெறவேபலம்பத்துயிட்டுநீயும், நஞ்சானபொடித்தூளதனிலிட்டுநலம்பெறவேகுழம்பாகி முன்மாங்கிஷத்திற்பிரட்டே. (314)

## மாந்தோலில்மாங்கிஷமூலம் அண்டமெழுகுகவசம்.

பிரட்டியேமாந்தோலிலதனிலிட்டுப் பேராகரவிமண்டலந்தானுலர்த்தி, சரட்டியேயுலர்ந்தசரகெடுத்துநீயும் சமர்த்தானரசப்பாண்டமதனிலிட்டு, அரட்டியேயதன்மேலேசாணக்கைமூடி யாகாரயண்டமெழுகவசஞ்செய்து, தெரட்டியேவிந்தினு லேழுசீலைசெய்து செயலாகரவியுலர்த்திச்செப்பக்கேளே. (315)

## குழித்தயிலம்.

கேளடாயென்மகனேகனுக்காலாழும் செடியானகுழிதோண்டிபாண்டத்தைத்தான், ஆளடாபக்குழியில்கலசம்வைத்து அருளானபாண்டமடிசில்துபோக்கி, காளடாகலசமேற் பாண்டம்வைத்துக்கருவானகாட்டுமுட்டைக்குழிரொம்பக்கொட்டி,காளடாவக்கினியாற்றீயைமூட்டி நவிலுவோங்குழித்தயிலமிறக்குவாயே. (316)

இறக்குவாய்புலத்தியனே சொல்லக்கேளு என்சொல்வேனிந்துரு
வின்றபிலமைந்தா, அறக்குவாய்கலசமதிலிறங்கும்பாரு அதனுடைய
மகத்துவத்தையென்னசொல்வேன், நறக்குவாய்சாமமூன்று சென்று
தானால் நவிலுவோம்பாண்டத்தையெடுத்துநீயும், கறக்குவாய்க்கலச
மதையெடுத்துக்கொண்டு கருணைதரவேண்டுமென்று பூசைசெய்யே.

செய்யப்பாசீசாவிலெடுத்துவிட்டுச் செயம்பெறவே சிதம்பரத்
தின்வாலைபூசை,ஐயப்பாசெய்துமுடிப்பித்துநீயும் அருள்தருகவேண்டு
மென்றுதயிலத்தைத்தானே, பையப்பாபதனமதாய் வைத்துப்போற்
றிப் பறிவானபொட்டகத்தில்பதனம்பண்ணு, நையப்பாதயிலத்தி
லாடும்வித்தை நிமிஷத்திற்கோடாகோடி சித்துதானே. (318)

தானென்றதயிலமதிலாடும்வேதை சதாகோடிசுண்ணத்திலதீதங்
கோடி, நானென்றகட்டுகளி லனந்தங்கோடி நலமான சரக்குகளிலனந்
தங்கோடி, சானென்றசரக்குகளில் வேதைகோடி, சரக்குகளில்செய
நீர்கள்கோடாகோடி, வேனென்றசெயநீரில்திராவகங்கள்கோடி வெகு
கோடிசித்துகள்தான் விளம்புவோமே. (319)

விளம்புமோ மின்னூல்தானதீதபீடம் வேதாந்தியோகிமுதல்
மவுனஞானி, அளம்புவோம்தவமுனிகள்ரிஷிகள்சித்தர் அதீதமென்ற
நாதாக்கள்பெரியோர்பண்போர், நளம்புவோம்வாசிசித்தர் வாதியா
னோர் நனினமென்றசற்குருதான்சௌமியபீடம், புளம்புவோம்புண்
ணியநல்லோரானவர்க்கும் புனிதமென்றநூலிதுதான்புகழ்ந்துபாரே,

புகழ்ந்துபார்புலத்தியனே சொல்லக்கேளு புகழ்பெரியகாவி
யந்தா னஞ்சுக்கும்பார், அகழ்ந்துபாலரந்துக்கும் பொருளாய்நின்ற
ஆதாரபீடமப்பா யுயிராமிந்நூல், நகழ்ந்துபாராயிரத்து யிருநூறையா
நாதாக்கள்பணியுமிந்த சௌமியந்தான், மகிழ்ந்துபாரிந்நூலைப் பூசை
செய்து மகத்தானபொருள்களெல்லா மாய்ந்துபாரே. (321)

பொருளானபொருள்களெல்லாஞ் சொல்வோமையா புண்ணிய
ராய்ப்பிறக்கரிது யாண்ஜென்மந்தான், பொருளானபிறந்ததனு லாவ
தென்ன பெண்மாய்கையிருக்குதப்பா தடையாகத்தான், அருளான
தேதென்றால் மாயாசத்தி அன்பானகிரியாசத்தி வாமசத்தி, மருளான
வஸ்துசத்தி சாமளாசத்தி மகத்தானயாமளாபஞ்ச சத்தியாமே ()

ஆமென்றபஞ்சபூத மொருபூதமாக யதீதமென்றுபஞ்சசத்தி
யொருசத்தியாகி, மானென்றவாராதார மாறுக்குந்தான் மாயாசத்தி
யாறுபே ரிறப்பதில்லை, ஓமென்றயாகவிதின் விரிவைக்கேளு மொரு

புத்தியறிவுடையோ ரறிந்துபாரு, நாமென்றசௌமியசாக ரந்தானிந்
நூல் நவநீதவருவிய துபாயந்தானே. (323)

பாய்கின்றவருவிபது தேன்ரசந்தான் பண்போர்கள்யோகிகட்
கமுதரந்தான், ஆய்கின்றவதீதரச மெல்லாஞ்சேர்ந்து அறிதக்கெவு
ணக்குளிகையடா மவுனபேர்கள், மாய்கின்றபுரவியடா வாய்வுவாசி
வளர்ந்தயிடமூலம்விட்டு மருவிப்பாயும், மாய்கின்றமூலம்விட்டால்
மேலேபனிரண்டு மதற்கடியில்பனிரண்டு நவிலுவோரே. (324)

நவிலுவோம்பிரிதிவுதா னப்புத்தேய்வு நாம்சொல்வோம் புலத்தி
யனே வாய்வுவாகாசம், மவிலுவோமாகாசஞ் சத்தயாகும் மாகயிது
ஆரோடே யாராதாரம், மெவிலுவோமேலாதாரஞ் சத்திபாதார மே
லானவலுவதற்கு வைந்துபூதம், எவிலுமிந்தப்படி யஞ்சுமாக மேவுசதா
சிவத்தோடே யாறதாகும், (325)

தாமென்றவாதுசத்தி மபமோபோக்கும் தவப்பெரியபுண்ணியர்
க்கு பெல்லாஞ்சித்தி, ஆமென்றவாண்செனன மாகமைந்தா அருளி
னேம்பிறக்கரிது பிறந்தாலென்ன, காணென்றகருவிகளைக் காணவே
ணும் காமவலையாசையைத்தான் தள்ளவேணும், நாமென்றபெரியோ
ரை யறிக்கவேணும் நாதாந்தசாத்திரத்தைப் பாருபாரே. (326)

பாரடாவிந்துபால் கட்டவேணும் பரிவானகற்பங்க ளுண்ணவே
ணும், ஆசடாயப்பிபாசஞ் செய்யவேணும் அருளினேம்வாசிநிலை
யறியவேணும், காரடாகாயாதி கற்பம்வேணும் கணவென்றசொற்ப
னத்தைக் காணவேணும், மாரடாயாதார தெரிசனமேவேணும் மான
தமாம்பூசை சிவபூசைகாணே. (327)

காணப்பாமௌனமெஞ் ஞானபீடங் காவியந்தானுயிரத்தின்
சித்திவேணும், ஆணப்பாயதீதசித்தி மந்திரசித்தி யாதாரசித்திபெற
வதீதம்வேணும், ஊணப்பாவுடல்தெரிச னந்தான்வேணும் வுறுதி
பெறத்தத்துவத்தை யறியவேணும், பூணப்பாபூசையனுட் டானம்
வேணும் புகழ்பெருகசௌமியமும் வேணும்பாரே. (328)

பாரப்பாயின்னூலு யதீதபீடம் பரிவானசௌமியசாக ரந்தான்
மைந்தா, ஆரப்பாவறிவார்க ளகத்தியன்வாக்கியம் ஆயிரத்திருநூறு
யதீதபீடம், வேரப்பாசகலத்துக்கும் சற்குருதானின்னூல் வேதாந்த
நூலிதனைப் பதனம்பண்ணி, சீரப்பாபிசகாம லாய்ந்துபாரு செனித்த
பொருளதீதமெல்லாஞ் செய்வீர்தாமே. (329)

செய்வோர்க்குக்கருக்குருவா யிந்நூல்சொன்னோம் செயசித்தி
யாவதற்கு யின்னூல்சொன்னோம், ஐவோர்க்குவதீதபொரு ளாகச்

சொன்னோம், எவ்வோர்க்குச்சற்குருதா னிந்தநூலு யெமனொருநாள் காடாது யிந்தநூலு, மைவேர்க்குமவுனவே தாந்தபீடம் மகத்தான யிந்நூலைத் தெரிசிப்பீரே. (330)

தெரிசிப்பாய்புலத்தியனே ராசயோகி தெளிவாகச்சொன்னமை யா யிந்நூலைத்தான், பரிசிப்பாய்சௌமியத்தைப் பதனம்பண்ணி பாபூசைசிவபூசை வாலைபூசை, தெரிசிப்பாய்பூசைசெய்து பதனம் பண்ணு நீமேகனேயடிபணிவாய் தினந்தோமையா, நாசிப்பாயிந்தநூலி லனந்தசூட்சம் நாம்சொன்னோம்யோகிகட்கு அடுத்தவாரே. (331)

## வைப்புமுறை சவர்க்காரம்.

வாரானவைந்துருவின் றயிலஞ்சொன்னோம் வசனிப்போம்வை ப்புமுறை வணங்கிக்கேளு, ஆரானவேதாந்தஞ் சித்தர்க்கெல்லாம் அருளினோங்காவியத்தோ டாறதாகும், காரானசூட்சமெல்லா மாறுக் குள்ளே நாம்சொல்வோம்புலத்தியனே நன்றாய்த்தானும், மாரான யோகிகட்கு யடுக்குமிந்நூல் வாதிகட்குமெத்தநன்று வைப்பைத் தானே. (332)

வைப்பானசவர்க்கார மதீதவைப்பு வையகத்தில்வாதிசெய்வார் மற்றோர்செய்யார், ஐப்பானமில்லையடா யாதியந்தம் அருளானஅகார மடா உகாரந்தானும், கைப்பானபூரண ம் நிராமயமாய்நின்ற கரு வானவாத காவியத்திற்சொன்ன, கைப்பா கைப்பாகப் பெருளாக த்தா நாம்சொன்னோமன்னூலில் வர்க்காரவைப்பே. (333)

வைப்பானயன்னூலுக் கின்னூல்வேணும் வாதியென்றால்கோர் வைநூல் வகையாய்ச்சேரும், ஐப்பானவைப்பெடுத்து யாடுதற்கு அறையக்கேளாதியென்ற யண்டபிண்டம், செப்பாதேயொருவருக் குஞ்சீஷாகேளு செயலானதலைச்சனுடமுடியைவாங்கி, முப்பானமுழு தண்ட மூலத்தோடே மூதண்டமுடியெடுத்துச் சொல்லக்கேளே. ()

## சலாந்தியின்பை.

சொல்லக்கேள்புலத்தியனே யையாவையா சொற்பெரியமூல மதின் மேலேசாய்வு, சல்லக்கேளச்சவ்வைப் போக்கிநீயுஞ் சம்பிரம தாயக்கல்லுாலி விட்டுமந்தா, எல்லக்கேளிருப்புலக்கை யதனாலேபா யிடித்ததனையொருசாமந் தூளதாக்கி, அல்லக்கேளுடன்சேர்ந்த மந்த மந்தம் ஆதியென்றசலாந்தியின் பையைவாங்கே (335)

வாங்கியந்தப்பையெடுத்துப் புலத்தியனேகேளு வசனிப்போம் வகைவிபர மாகத்தானும், சாங்கியந்தச்சலாந்திதா னுர்க்குத்தோணு

சரவணப்பொய்கையென்ற பனிநீரையா, வேங்கியந்தப்பிராணய மொடிங்கிநின்ற பெண்ணடிதானுதியடா பிரியாதையா, ஓங்குவதுமத னாலே நாடிபத்து மொடிங்கிநின்றதலமதுதா னாணிப்பாரே. (336)

## நஞ்சுக்கொடிச் சுண்ணம்.

ஊனுவதுமதனாலே புலத்தியனேயையா யொடுங்குவதுமதனா லே யோகோகேளு, பானுவதைதும்பையறிவார் பெரியோர்சொன்ன பெருந்தாப்பாளறிந்தவனே பரமஞானி, தானுவதுந்தன்னுக்குள் பிரியாநின்ற தவப்பெருமையறிந்தவனே தவத்தோனாகும், ஆனுவது மடங்குவது மதுதன்னாலே யறிவார்கள்பெரியோர்க ளன்னீர்காணே.

காணுகின்றதையெடுத்துச்சொல்லக்கேளு கருவானயண்டரசக் கலசந்தன்னில், ஆணுகின்றவங்கீரைக் கலசந்தன்னில் அருளிநீரைமெ டுத்துவிட்டு வையாசேளு, ஒணுமென்றுயோருறுதி யாகநீயு முடண வஞ்சிக் கோடிசுண்ணந்தன்னை, நாணுகின்றசுண்ணமதி லிடைதான் கொண்டு நல்லசுத்தசலந்தனிலே போட்டிடாயே. (338)

போட்டிடாய்போட்டவுடன் புலத்தியனேகேளு புதுமைபனிநீ ரது சலமாய்ப்போகும், ஆட்டிடாசலத்திலரை சேர்கொண்டு அரு ளானயண்டரசப் பிங்கான்றன்னில், ஏட்டிடாயின்னீரை யெடுத்துரு ட்டு இயலானமுன்மாவை யதனிற்போட்டு, நாட்டிவுள்ளோர் செயம் பெறவே கறத்தாற்கூட்டி நாற்பத்துமுக்கோணபூசை நண்பாய்ச் செய்யே. (339)

## சவர்க்கார நீறு.

செய்யப்பாபாலையுட தியானங்கொண்டு சேவிப்பாய்நீநூற்றெ ட்டு செபமேசெய்தால், குய்யப்பாகூட்டிவைத்த பனிநீர்வேகங் கொ திக்குமடாவக்கினிபோல் சுண்ணவேகம், ஐயப்பாயப்பாகங் கண்டா யானால் அருளுகிறேன்ரவிதனிலே யெடுத்துநீயும், மெய்யப்பாசொல் லுகிறேன் சௌமியத்தில் வேதாந்தசித்தர்களே விளங்கக்கேளே. ()

கேளடாரவிதனிலே யிரண்டுநாழி கெணிதமதாய்வைத்துநீ யெடுத்துப்பார்த்தால், நாளடாநாமென்ன சொல்வோமப்பா நாதாந்த மகிமைசித்தர் நாட்டந்தன்னை, கோளடாவாராதுபுலத்தியனேயையா கூறினேஞ்சவர்க்கார நீறுய்நிற்கும், ஆளடாயங்கீரைமறு பிங்கான் றன்னில் அருளிநீரைமெடுத்துநீவிட்டுப் பாருபாரே. (341)

விட்டுநீபார்த்தையானா லதன்மகிமை விளக்கொளியின்தீபசுட ரதுபோற்காணும், விட்டுநின்றசவர்க்காரமகிமைமெத்தமணியதுபோ

விறக்கியது கட்டும்பாரு, அட்டியொன்றும்பண்ணுதே யாயிபாதம் அன்பதினுற்பூசித்து யருளேக்காணு, சிட்டர்தொழுஞ்சவர்க்காரமணி யெடுத்து செய்பாகஞ்செய்யுகின்ற சேதிகாணே. (342)

## சவர்க்காரமெழுகு.

காணுகின்றவகையென்ன புலத்தியனேயையா கருவானபாறை யுப்புகம்பியுப்பு, ஆணுகின்றகல்லுப்புமூன்றுங்கேளு ஆறுபலம்வகை யொன்றுவீதமாக, சாணுகின்றசரியிடையா யெடுத்துக்கொண்டு தரு வானவாயிபதம் பணிந்துபோற்றி, நாணுகின்றமூன்றுப்பு மணியுங் கொண்டு நவிலுவோம்கல்வமதில் நன்ருய்ப்போடே. (343)

போடப்பாபுலத்தியனே முன்சொன்னபணி ீர் புகழ்பெறவே பலமெட்டும் புனிதமாக, நாடப்பாமூன்றுவிசை பலமிரண்டாக நனி னமதாய்வகைமூன்று சாமவீதம், ஆடப்பாவிட்டதிலே மெழுகுபோ லாடி, ஆயிமனேன்மணிகிருபை யன்பில்வைத்து, சாடப்பாயாட்டை யிலே மெழுகுபோலாகும் சமர்த்தானமெழுவழித்துச் சாடக்கேளே.

கேளப்பாயண்டரசப்பாண்டத்திட்டுக் கிருபையதாய்ச்சுத்தசலம் பனிநீரிட்டு, நாளப்பாகரமதுவால்கூட்டிமத்திநளினமதாய்க்கூட்டை யிலே குழம்புபோலாம், ஆளப்பாயக்குழம்பில் முப்புபலமொன்று அருளினேம்பொடித்ததனைபதனிலிட்டு, காளப்பாகற்பூரவாச புகை காட்டி கருணைநந்திபதம்போற்றிக் கருவாய்க்காணே. (345)

கருவானபாண்டமதின் மேலேகேளு கண்டிணியேசாணக்கை யதன்மேல்மூடி, அருவானயண்டமெழுகலசஞ்செய்து அருளுகிறேன் விந்தனுற்சிலேயெழு, நருவானயச்சிலேயெழுஞ்செய்து நனினமதாய்ப் புற்றுமண்ணு சிலேசெய்து, மருவானபாண்டத்தைரவியிற்சாம மைந் தனேவைத்ததனே யெடுத்துக்கொள்ளே. (346)

## பூமிக்குழி.

கொள்ளடாபுலத்தியனே யையாவையா கூறுகிறேன்பூமிதனில் குழிதான்கிண்டி, கள்ளடாகணுக்காலு ஆழக்குழிதான் கருவாகக் கிண்டியதைக் கைப்பாகமாக, கள்ளடாவக்குழியில் பாண்டத்தை விட்டு நவிலுவோமதன்மேலே பலகைமூடி, வள்ளடாயதன்மேலே மண்பரப்பி மண்டலந்தான்சென்றுதென்ருல் வகையாய்க்காணே.

## சவர்க்காரவுப்பு.

காணுமதியுள்ளவரைகருவாய்ச்செய்தால் கைபாகந்தவருதுகருத் துன்ளோர்க்கு, காணுமிப்படிசெய்தோம்வாதியானும் நவசாரசரங்க

ளெல்லாஞ்செயமேபெற்றோம்,ஒனுமதியுறுதிபெறப்பொதிகைவாழ்ந்தோமுடன்சேர்ந்தகருக்குருவைமதியாற்கண்டோம், ஆனுமதியறிவுள்ளோர்செய்துபாரீர் ஆத்துமாவின்றனுக்குட் குருவைக்காணே.

காணுதற்குச்சௌமிய சாகரந்தானிந்நூல் கருவானவாயிரத்திருநூறையா, ஒனுமென்றுலோருறுதி யாகக்காணு மொருமனதாய் பாடுபட்டா லெயிக்குமைந்தா, பாணுதற்குமண்டலந்தான் சென்றுலையா படருமப்பாசவர்க்காரம் பரிவாய்க்கேளு, ஊனுநற்குச்சமாதியுப்பு மௌனவுப்பு வுடன்சேர்ந்தகல்லுப்பு சவர்க்காரவுப்பே. (349)

உப்பானசவர்க்கார மிதுபோலுண்டோ வுடன்சேர்ந்தகருவிதுதா னிதுபோலுண்டோ, செப்பாதவப்பூவைக் கண்டாராகில் சித்துவறுபத்துநான்குஞ் செயமாகும்பார், அப்பாகேள்புலத்தியனே பாணங்கொண்டு * அண்டமெழுகவசமதின் சாணக்கைவாங்கி, முப்பாணசிலையேழுந் தட்டிப்போட்டு முயற்சிபெறப்பாண்டமதை யெடுத்துப்பாரே. (350)

பாரப்பாரோசானந்த மவுனயோகி பாடுகிறேன்யிந்நூல்தான் சௌமியத்தில், ஆரப்பாவறிவார்கள் வாதியானோர் அறிந்தவரைக் கைவிட வேண்டாமையா, சேரப்பாசெயகுருதான் சகலசித்துக்குஞ் சித்திபெறவேண்டுமென்றால் சவர்க்காரவுப்பில், தேரப்பாவயித்தியந்தா னதீதவித்தை செய்குருதானில்லாவிட்டால் சிதறிப்போமே. ()

போமென்றபுலையருக்கு மனமங்கேது பொல்லாதகாமுகர்க்குப் பொருளங்கேது, நாமென்றகசடருக்குக் கருவங்கேது ஞானியண்டமறியாதோர் நாவங்கேது, காமென்றகன்மிகட்குக் கருவங்கேது கருவறியாப்பாவிகட்குக் கருவங்கேது, தேமென்றதெளிவறியார் பொருளுங்காணார் தெருத்தெருவாய்மாடுகள்போல் திரிவார்கேளே.

திரிவோர்க்குயென்னபுத்திவந்தாலென்னதெளிவறிந்தபெரியோர்கள்செய்தநேர்மை, அறிவோர்களவராசான்சொன்னாரானால் அறிவுகுருமனதாலேயறியவேண்டும், நறிவோர்கள் சௌமியத்தில் சொன்னதெல்லாம் ஞானிகளேயறிந்திடுங்காரணவினமாக, பெரியோர்கள்வாக்கிதுதான் பிழைவராது பேணிப்பாரண்டபிண்டந் தன்னுக்குள்ளே.

தன்னுக்குள் தலமாறுங்காணவேண்டும் தத்துவந்தான்றொண்ணூற்றுதுமேலாறுங்காணும், மண்ணுக்குள்மின்றநேர்மைகாணும்மாத்துமாவில் பஞ்சபூத மறுவஞ்சகாணும், கண்ணுக்குள் மணிதீபஞ்சோதி

* அண்டமென்பது - கோழிமுட்டை, ஆகாயம்.

காணும் கைலாசமுடிகாணுமுமிரைக்காணும், விண்ணுக்குள்வாதம் நின்றநேர்மைகாணும் விட்டகுறைதொட்டகுறை விதங்காண்பாயே.

விதங்காணவறிவாசான்விளங்கன்றுவிதப்படிக்குயறிவுறிந்துவிதங் கண்டாக்கால், சதமாகுஞ்சவர்க்காரமனந்தமான சதாகோடிவித்தை யெல்லாம்சணத்திலாடும், நதங்காணசவர்க்கார வுப்பைக்கொண்டு நளினமதாய்ச்சிஷாவிற்பதனம்பண்ணி, கதமானகணபதிதன்சுப்பிர மணியன் கருணைவீரபத்திரன் வயிரவன்றன்காணே. (355)

காணப்பாகால்வரிட தியானபூசை கருணைதரவேண்டுமென்று கனிந்துநீயும், ஆணப்பாயோகசிவபூசைசெய்து அடிபணிந்து சவர்க் காரமதை தினந்தோறுமையா வாணப்பாபூசித்துத் தாயைப்போற்றி வறுமைவராமலேனைக் கார்த்துரட்சி, கோணப்பாவென்றுசொல்லிக் குருபதத்தில் கூறினேனும்சதாகாலம் பணிந்திடாயே. (356)

## அண்டசவுர்க்காரவுப்பு

பணிந்திடாய்சவர்க்கார வைப்பைச்சொன்னேம் பாடுகிறேன் மண்டசவர்க் காரவுப்பு, அணிந்திடாயண்டசவர்க் காரந்தன்னை அருளுகிறேன்புலத்தியனே யன்பாய்க்கேளு, நணிந்திடாய்நாம்சொல் வோமையாவையா நாதாந்தவண்டத்தின் பெருமைதன்னை, கணிந் திடாயண்டவைப்பை யார்தான்காண்பார் கருவறிந்தபெரியோர்கள் காண்பாரையா. (357)

காணவென்றால் புலத்தியனேசொல்லக்கேளு கன்னிதிரோதா யினிடகனிவினாலே, ஆணவென்று லண்டசவர்க்காரமைந்தா ஆறறி வார்மெய்ஞ்ஞானி யவரேகாண்பார், நாணவென்றால் நாம்கண்ட படியேசொல்வோம் நாதாந்தஞானதியண்டப் பெருமைதன்னே, பெண வென்றால் பெண்ணடிதான் மூலமூலம் பேராணத்தலையண்டமுழு தண்டங்கேளே. (358)

கேளப்பாபுலத்தியனே ராசயோகி கெணிதமென்றயண்டமது முழுதாய்வாங்கி, காளப்பாகல்லுரலிலண்டமிட்டுக் கருவானயிருப் புலக்கையதனற்சாமம், பாளப்பாபோகாது முன்சொன்னபனிநீர் பரிவானபனிநீரில் சேர்தான்வாங்கி, மூளப்பாமூஞ்றுவிசையாகவிட்டு முக்கியமதாய்மாச்சிதறத் தூளதாக்கே (359)

ஆக்கியேமாவெடுத்து ரசப்பீங்கானிலிட்டு அருள்பெருகுஞ்சுத் தசல மதனில்சேரண்டு, பாக்கியேகூட்டிமத்தித்துச்சொல்லப் பானு வென்றரவிதனிலே வைத்திடாய்நீ, நாக்கியேயிரண்டு நாழிசென்று லையா நளினமதாய்ப்பாலைப்போல் நுரைபோலாகும், மாக்கியேயப்

பாகங்கண்டாயானால் மக்த்தானகொடிசுண்ணம் பணவிடைதான் காணே. (360)

## தாழிசை

காணும்விடைசுண்ணமது சுழியாகியநஞ்சு காளாலதைக்கண்டு களிகூறுமனப்பூவால், மேவனுமொருநிலையாகிய குருவாகியநாயன் விதப்படியுணரும்மொழிமேல் சிற்றொருவாசல், ஓனுமொரு நிலை பெற்றவர்கலையத்தனைக் கண்டோ ருலகந்தனிலரிதாகிய வொருமைப் படுமறிவோர் தோனுமெனக்குருவாகிய வருளாகியவாசான் தொழி லுமறிவாலறிசொல் நின்றிடமுமறியே (361)

அறிவாலறிகுருவின் மொழியுணர்வாலறிபாச மதுவாலறிபெரி யோரிடவாசானிலையாகில், அறிவாலறிகொடிசுண்ணமே முனையாகிய தோர் அமரும்பதிநஞ்சாகியமவுனப்பதியாகில், அறிவாகியமனமான தை யறியாருலகோர்கள் அறியப்படுமிந்நூலினி லறிவிலுணரறியும், அறிவாலறியிதுதாழிசை யறிவார்பெரியோர்கள் அருளுஞ்சௌமிய சாகரமொழி நூலிதுபாரே. (362)

இதுதானிடமகிமைத்தனை யெவர்காணுவராகில் இல்லம்பலதச தீட்சையி லியல்பார்சிவயோகி, இதுதானிடவுயிரத்தனை யியல்பாரொ ருக்காலும் இயலும்பலகலைகண்டவர் மொழிவார்செயவாய்கு, இது தானிடகுருவத்தனை மொழிவோஞ்செவிகேளி இனியப்படுந்தொனி சங்கமுமின்பப்படுமாகில், இதுதானிடபேராகிடை குறையாதிது வாகில் இதனைக்குறிகொடிநஞ்சுவின் குருசுண்ணமும்நன்றே. (363)

வேறு

நவநீதமெழுகு மேற்படி சிமிளில்வைக்கவும்

நன்றான புலத்தியனேசுந்தரமேகேளு நவநீதபூப ைய நண் பாய்க்கேளு, சென்றானமுன்சொன்ன முறையைக்கேளு செயசுண் ணம்பட்டவுடன் மெழுகாய்ப்போகும்; அன்றானவிதற்குப்பேர்நவ நீதந்தான் ஆரறிவார்மெழுகிடவதிதப்போக்கு, குன்றுமலம்மெழுகை யெடுத்துக்கொண்டு கூறுவோமப்பரண்டி லம்மெழுகைவையே(364)

குருவின்னருள்செயலும் படுமுழுவாகிதனாலே குறிபங்கழு மனவின்பமுங்குணமுமதியாகில், அருவின்கெதியுணரும்வெகு பருவ நிலையறிவோர் தன்காபதிநதி காணுவாதனப் பதியாகில், அருவின் முடலிதுவாகுதல்கருவத்தனையறியு நதியக்குருவிதுவத்தனை மகிழ் வார்பெரியோர்கள், பருவின்கடுவிதிநோயிதன் படுவாரறிவார்கள் பாராதிதுயுணர்வோரிதின் பாவக்குறிநன்றே (365)

## தியானம்

வைத்ததனைச்சிவமூலத் தியானந்தன்னை மைந்தனே சொல்லு கிறேன் மருவிக்கேளு, வையத்ததனைமைந்தனே யகோரசிவநயவவெ ன்று, மறியாடச்சிவத்தியரமுருநூற்றெட்டு, ஐந்ததனைச்சேவித்துப் பிராணபமொட்டியருள் பெருகச்சுழிக்கன்னில் மனதைவைத்து, நந்ததனைமனக்கண்ணா லொட்டிப்பார்த்தால் நாராசமணிவாசல்தோற் றும்பாரே (366)

தோற்றுமணிவாசல்கண்டால் சிவமூலதீட்சை தொண்ணூற் ருற் கருவிக்குமேகதீட்சை, வாற்றுநவமூலமெழுத்தியாச்சு வறுபத்து நாலுசறக்குருகிப்போச்சு, நீற்றுமதுபிம்மெழுகு சறக்கெல்லாந்தா னிலைத்துதையாவுருக்கிடங்கள்கோடிகோடி, சேற்றுதொந்தசறக்கெல் லாமித்தாருகொண்டையா செணத்தில்வென்றுவருமெழுகாகும்பாரே

## வெள்ளிச்செந்தூரம் குப்பிமூசை

மெழுகானவெள்ளிசேர் வெகுசாய்க்கொண்டு மேலானகுப்பி தனில் விதமாய்வைத்து, சுழுகானசெந்தூர மிதுபோலுண்டோ சூன் யமையாவெள்ளிவித்தை யதிகமாகும், பழுவானமெழுகுதனில் பண விடைதானிட்டுப் பராபரியைத்தியானித்து வெண்கவசஞ்செய்து தழுவானகுப்பிவாய் சிறுகச்செய்து சைதன்னியமாகவுமூசை செய்யே (368)

செய்தந்தமூசைதனிற் குப்பிவைத்துச் செயமாகத்துருத்தி கொண்டு கரியைக்கொட்டி, மைதுபெறக்கரிக்குள்ளே மூசைவைத்து மானதமாம் பூசைசெய்து அக்கினியைமூட்டி, பைதுபெறத்துருத்து ருத்திவாய் பறக்கச்சாடி பசுமைநிசமதுபோலப் புகைத்தான்வீசும், செய்துநீயப்புகையைக் கண்டுகுப்பியதையெடுத்து சேராசுசின்மய த்தி னொளியைக்காணே. (369)

## வட்டு

காணப்பாவுருகியது வட்டமாய்போகும் கண்டுகண்வட்டெ டுத்துப் பார்த்தாயானால், ஊணப்பாயென்சொல்வே னிறந்தான் பச்சை யுலகமதிலிவ்வித்தையார்தான்செய்வார், நாணப்பாவட்டத் தின்மேல் நஞ்சுகொடிசுண்ணம் நவமூலமெழுகுடனே யிரண்டுவகை யாகில் பாணப்பாபணிவிடைதா னிரண்டுவகைகொண்டு பனிநீராற் குழைத்துமே லதன்மேற்பூசே (37)

## சத்திதசதீட்சை பதினொன்றுஞ்சுத்தி.

பூசியேரவியுலர்த்திக்குகைக்குள்ளவைத்துப் புதுமைபெறவதன் மேலேழ்சீலைசெய்து, தேசியொருக்கொண்டுநீ புடத்தைப்போடு செயலானபுடப்போட்டுயெடுத்தாயானால், வாசிபதம்பெருவதற்குக் குகையெடுத்து மதன் சீலையேழுசீகேழட்டெரிந்து, ஆதியேபீங்கானிற் போட்டதனைச்சேனு அருணநிறமேலதிகமாகுந்தானே (371)

ஆகுமென்றசெந்தூரமதீதமாகும் அறுபத்துநாலுசரக் கதிதங் கொல்லும், வெகுமென்றவேதையெல்லாமிதனாலாடும் வேணவித்தை செந்தூரமாடுமாடும், நாகுமென்றசெந்தூரம் பதனஞ்செய்து ஈனின மாய்ப்பிராணையைவாசியொட்டி, சேருமென்ற சிவயநமவென்று நூற் றெட்டு செபித்திடவே மூலசுழிதிரளும்பாரே (372)

திரளினதோர்சுழிமுனைதான் திரண்டாலையா தெசதீட்சைசத் திபதினொன்றுஞ்சித்தி, அருளினதோர்செந்தூரம் பதனஞ்செய்து ஆயிதிரோதாயிபதம் பணிந்துபோற்றி, பெருளினதோர்பிராணைய சோதிகாணப் பெலத்ததொரு சிவயோகக்குகையிற்சென்று, வரு ளினதோர்வஸ்துவைத்தான் மனதிலெண்ணிவசனித்தோம்செந்தூர மருவிக்காணே (373)

மருவியதோர்செந்தூரம் பணவிடைதான்கொண்டு மகத்தான பனிநீரில்குழைத்துநீயும், அருவினதோரதிகாலம் பிராணசித்தியாக வென்றுசின்மயத்தையுச்சாடித்து, குருவியதோர்மனவிகற்பங் கொள் ளாமற்றான் கொண்டிடாயிருபோது நாள்பத்துந்தான், பருவியதோர் பத்தியமாய்க்கொண்டுதேறு பத்துநாளிருபோதுபரிவாய்கொண்டே

கொண்டிடவேமூலசுழி திரண்டுபோச்சு கூறினதோர்பிராணைய மொடுங்கிப்போச்சு, விண்டிடவேவிந்துவுங் கற்போலாச்சு விகற்ப மெல்லாமெல்லாமொருமனதாய்க் கூடிப்போச்சு, மண்டிடவேமாயா சத்தி கிரியாசத்தி மயக்கமெல்லாமற்றுப்போய் மாய்கைபோச்சு, ஒண் டிடவேசித்தியெல்லாம் பரசித்தியாச்சு ஓங்காரக்கம்பம்போ லொடுங் கிப்போச்சே. (375)

ஒடுங்கினதோர்வாயுவெல்லா மூலம்புக்கி யொருமித்துபாரிது தான் பிராணபஞ்செய்து, அடங்கிநிற்குமோங்கார மொன்றேவாசல் அதுவழியாலதுபோக்கு வருகலாகும், மடங்குதடையிராதுமே வச் சிரகாயம் வசனித்தோமதுபோல விறுக்கிக்கட்டும், செடங்கமுமோ முணடுணர்ந்த செந்தூரகற்பம் செபராசதூபதிபோல் வாழலாமே. ()

## வெள்ளிசெந்தூரவேதை.

வாழ்வதற்குவெள்ளி செந்தூரவேதை வசனிப்போம்சௌமியத்தில் வளமாய்க்கேளு, தாழ்வதொருநாளுமில்லை புலத்தியனேகேளு தங்கமென்றபாளமெல்லா மிதனாலாகும், நாழ்வதற்குத்தாம்பரந்தான் சேர்பத்தாகும் கவிலுவோமதைநறுக்கி மணிபோலாக்கி, ஆழ்வதற்குக் கருங்கல்லு பலம்பத்தப்பா அருளினேனுங்கல்வமதி லிட்டுத்தாக்கே. ()

## தாம்பரத்தங்கம்.

தாக்கிடாய்வெண்கருவிட்டலரைத்துச்சாடிசாடினபின்மெழுப்போலாமெழுவழித்து, ஆக்கியேயம்மெழுகைமூசைபோற்செய்து அம்மூசை ரவியுலர்த்தி யெடுத்துக்கொண்டு, நோக்கியேதாம்பரத்தின் சுத்தி செய்து நண்மையதாய்மூசையதற் குள்ளேவைத்து, வாக்கியேதுரித்திகொண்டு கரியைக்கொட்டி வதுக்குள்ளேமூசைவித்து வழங்கிடாயே. (378)

வழங்கிடாய்கருநொச்சி யழுகண்ணிச்சார் வளமானசெம்பிரண்டை சிறியாநங்கை, உழங்கிடாயுத்தாமணியுஞ் சிலையுங்கொண்டு ஒருமையதாய்சாறிடித்துப் பலந்தான்மூன்று, அழங்கிடாபலமூன்றுமிடைகுறையா அருளினதோர்மூசையதுக் குள்ளேவிட்டு, தழங்கிடாய்சாமமது சாடினுக்கால் சந்தமேகமெழும்பும் புகையதுபோற்காணே. ()

காணுகின்றபுகையெழும்பும் பாகம்பார்த்து கருவானசெந்தூரமதில் விராகனெடைகொண்டு, கோணுகின்றமூசையதில் போட்டாயானால் குலவுமணிபோல்நின்று ஆடுமாடும், ஆணுகின்றவம்மணிபாலாடுநேர்மை யதுகண்டுயிறக்கியண்டச்சில் சாய்த்தாயானால், காணுமதி னருவியதுபோல்பாய்ந்து கம்பியதாய்நின்றதுவுங் காணுங்காணே.

காணுகின்றபரியேமமிதற்கொவ்வாது கண்ணென்றமனக்கண்ணாற் கண்டாயானால், தோணுமெய்ஞ்ஞானமெல்லாம் விளக்கமாகுந் தொல்லுலகில்நீயுமொரு சித்தனாவாய், ஒணுமென்றுயித்தங்கஞ் செய்துக்கொண்டு வுலகமதிலெளியோர்பேர விருந்துவாழ்வாய, வேணுமென்றுமாய்கைவிட்டு நிராமயத்தையெண்ணி விளங்கினால்சகலகலை விளங்கும்பாரே. (381)

விளங்குவார்சிவயோகி யானபேர்க்கு விளங்குமின்னால்சௌமியந்தானதீதபீடம், களங்குவாரென்னாலை சகலத்தோர்க்கும் களங்கமருஞ்சித்தருக்கு ஞானத்தோர்க்கும், யுளங்கிறேன்பெருமை யுலகந்தன்னில் பொதிகையருள்சாயனென்று பூரிப்பார்த்தான், அளங்குவார் வெள்ளிசெந் தூரங்கொண்டு அனேகம்பேர்சித்தரென்று திரிவார் பாரே. (382)

## பூரணச்சந்திரோதய காசிதேசர் நிலகல்லுசிவந்தபூமி.

பாரப்பாபூரணசந்திரோ தயந்தான்கேளு பாடுகிறேன்சௌமி யத்தில் பண்மையாக, நேரப்பாநிலக்கல்லுசிவந்தபூமி நேரானகாசி க்குமேற்கேகாதம், சேரப்பாநான்குதிசைச் சித்தர்தானும் சிருவை வருங்காலமதிற் கூட்டங்கூடி, மாரப்பாமாசிபங்குனி மாதந்தான் வருசிக்குஞ்சித்திரை வைகாசிகாலமென்றே. (383)

என்றனகாலமதிற்சத்தமேகம் இயம்பினேனொருமித்து வொன் றாய்ச்சேர்த்து, வன்றனபனியதுதான் வருஷிக்கும்பார் வசனித்தோ மாசமொன்று பதினைந்துநாள்தான், நன்றனமாசம் நால்படியே யாகும் நனினமென்றகாலமதி லகுவாய்ச்சென்றால், அன்றனசித்தர் களேநன்றாய்க்கேளும் அப்பூமிநிலக்கல்லுபாறையதைக்கேளே(384)

### நிலவுப்பு

பாறையென்றநிலவுப்பு சவுட்டுப்பாறை படைபடையாய்ப்பூர்க் குமப்பாயப்பூத்தாலும், பாறையென்றயப்பாறை போர்த்தாயானால் அரைமுழந்தான் பாறையதுபோலேபேரும், நிறையானபாறையதை வேணமட்டு நீமேகனேகொண்டு மலையேறியேதான், சறையாமல்சசி யாதேகுகைக்குள்ளேகி சைதன்னியமாக விதைப்பதனம்பண்ணே.

பண்ணுவது நிலவுப்புச்செய்யவென்றால் பாலகந்தான் கடுஞ் சூலிற்பனிநீர்வாங்கி, பண்ணுவதுபாண்டமதிற் பனிநீர்விட்டுப் படி மூன்று அளந்துவிதப்பாகமாக, பண்ணுவது நிலவுப்புபாறையடை மூன்று பாண்டமதிற்போட்டு நீயொருநாழிவைத்தால், கண்ணுமது நீருருங்கரைந்தேபோகுங் கண்டுகரமதனாலே கரைத்திடாயே (386)

கரைத்திடாய் கரைத்திட்டு மறுபாண்டத்தில் கலக்கமில்லா திறுத்துமேயிறுத்துக்கொண்டு, மறைத்திடாயதன்மேலேசாணக்கை மூடி மண்ணுஞ்முழுதும்வைத்து மறுநாள்தன்னில், இரைத்திடாய்ப் பின்னுமொரு பாண்டந்தன்னி லிறுத்துமேயெடுத்ததனையடிப்பிலே ற்றி, வரைத்திடாயக்கினிகொண்டடவாய்மூட்டி வஸ்துவைத்தான் நிடானித்து மனதிலெண்ணே. (387)

### வாலைமூலம்உப்பு

எண்ணியேதீமூட்டியெரித்தாயானால் ஏறிய துசிவந்தநிறமியல்பா ய்க்காணும், கன்னிமயேஸ்வரிவாலேதேவியைத்தான் கருத்திலெண்ணி கிலியுங்கிறியும்மென்ன, உன்னியேயுச்சரித்துயுச்சாடித்தால்ஓர்கொதி

யெழும்புமையாவுகட்டியாக, வன்னியுடகிருமையென்று யிறக்கி
வைத்து மகத்தானவஸ்துவதை யாறவையே (388)

## எண்ணெய்கழட்ட

ஆறினபின்னெடுத்ததனைப் பீங்கான்றன்னில் அளவாகயிரண்டு பீங்கான்றன்னிலிட்டு, மாறியிடைகொள்ளாமல்மாதமாத மகத்தான சித்திரையின்ரவிகாலத்தில், தேறுஞ்சித்தரிம்முறைகண்டு செய்தாரானால் செணத்திலேயாடுமடா நிலக்கற்பாறை, கோறினேமுண்மைமிது நாள்தான்பத்து கூறினேம்ரவியில்வைத்து யெண்ணெயதை வாங்கே. (389)

## கல்லுப்பு கம்பியுப்பு-பாறையுப்பு

வாங்கிடாரவிகாலம் ரவியில்வைத்து மதிகாலமெண்ணெயதை யிறுத்துப்போடு, ஏங்கிடவேண்டாமையா புலத்தியனேகேளு மியம்பினேன் நாள்பத்துமிறுத்தாயானால், காங்கிடாநிலவுப்பின் கசிவேபோச்சு கல்லுப்புவதன்மேலே படரும்பாரும், தூங்கிடாயிந்தமுறை சித்தர்செய்வார் துரைராசபூபதியோர் செய்வார்தானே (390)

தானென்றமணிமணியாய்த்திரளும்பாரு தருமண்டலங்கால் பத்துக்குவஸ்துவாகும், மானென்றபீங்கானை யெடுத்துப் பார்த்தால் மணிமணியாய் திரண்டதுவுங்கல்லுப்பாகும், கானென்றகம்பியுப்புக் கடியிலாரும் கருவானவதற்கடியில் பாறையுப்பாகும், மூனென்ற மூன்றுப்புமறைபறைபாய்ப் பூர்க்கும்மூலயகமடிவடியுப்பதாமே(391)

உப்பானமூன்றுப்பவெவ்வேறேவாங்கி யுசிதமென்றபீங்கான்றானாய்க்கொண்டு, செப்பானவுப்பெடுத்து வெவ்வேறாய்த்தானும் தெளிவானபீங்கானில் நன்றாய்ப்போட்டு, முப்பாகவேண்டுமென்று தேவியைத்தான் மூலபிரசன்னத்தியானந்தன்னை, எப்போதுமனதிலெண்ணிப்பனிநீரையா இயம்புகிறேன் பீங்கானில்பலந்தானெட்டே

எட்டிரண்டும்பத்துடனே கால்மண்டலந்தானையா இயம்பினதோர்புந்தலிட்டு மேடைபோட்டு, வட்டுவதுபோலாகா வாலைதேவி வஸ்துவைத்தான் மனதிலெண்ணி மௌனங்கொண்டு, கட்டிவாபிதிர்க்கவெல்லாமென்றுதாமே கைலாசமுடியறிந்து மேடைமீதில், செட்டுபலிமாதரசேகலிவாராமற் செயமானமேடைமீதில் பீங்கான் வையே (393)

வைத்திந்தப் பீங்கான்றானுமைந்தா வசனித்தோமண்டலந்தான் பனிநீர்கொண்டு, தைக்துவாராகாருசெகதேவிமாயி தையனே யுன்பதனமையுஞ் சவ்வுமென்று, சித்துவறுந்துகாலதீதமாடச்

சிறி ஓம் கிலி யென்று செபிப்பாய்லட்சம், முத்துமழை பொழிந்தி டுங்காண் பீங்கான்றன்னில் முனையான நிலவுப்பு முப்புவாமே (394)

ஆமப்பாசுந்தரமே புலத்தியனேயையா ஆடலாமிதிற்கோடி கோடாகோடி, வேமப்பாவேதையெல்லாமிதனாலாடும்விளங்கினதோர் நிலவுப்பு பாறையினாலே, காமப்பாசொல்லிவிட்டோம் சித்தர்க்கெல் லாம் நவதிசையிலுள்ள மெய்ஞ்ஞானிகட்கெல்லாம், ஓமப்பாமுப் பூவை யெடுத்துக்கொண்டு ஒன்றானசிசாவிற்பதனம்பண்ணே (395)

## ஆறுப்பின்பெயர்

பண்ணப்பாபாயாறுப்பின் பேரைக்கேளு பரிவானவகத்திலே விளைந்தவுப்பு, நண்ணப்பாவேகாதசாகாவுப்பு நனினமென்றகல்லுப் புகம்பியுப்பு எண்ணப்பாபாறையுப்பு வெவ்வேறதாக யெடுத்துரைத் தோமாறுப்பின் முப்பேசொன்னோம், கண்ணப்பாமனக்கண்போல் மனதில்வைத்துக் காட்டியெல்லா முப்பூவாற்காணுகாணே (396)

காணுகின்றவாறுப்பு மெடுத்துக்கொண்டு கருவானசிசாவிற்பத னம்பண்ணி, ஆணுகின்றசிவயோகக் குகைக்குள்ளேகி யருளானபரா பரியைத்தியானஞ்செய்து, ஓணுகின்ற ஓமமடா யிதிரிசூலிவாவா ஓங்காரவாலைமகமாயிவாவா, தோணுகின்ற யிறேமாயி சிறியும் கிலி யும் ஓம் சிறியும் சிமாயவவாவாவென்னே (397)

வென்னப்பா புலத்தியனேமூலமேகி விளங்கவே பிராணயம் வாசியோட்டி, மன்னவேவஸ்துவைத்தான் மனதிலெண்ணி மனக் கண்ணால்துரியமொட்டிப் பார்த்தாயானால், புன்னைமலர்போலவல் லோபரிமளிக்கும் பூமலர்போல்தோற்றுமப்பா பிராணயபீடம், அன் னமென்றசிங்குவையாக் கிராணமாகில் அதில்தோற்றும் பாசியொட் டிக்கும் பித்துப்பாரே (398)

தோற்றுமப்பா பிராணயங்கண்டாயானால் தோன்றுஞ்சூடச் சடாதார பீடந்தோற்றில், வேற்றுமைகளெண்ணாதே விசுத்தியறு கோணம் விளங்கியதோரதிற்சோதி வீசுமாகில், ஆற்றுமனமதில் நினைவாலொட்டிப்பார்த்தால் அதிற்கோடிபிரபையொளி யதீதங்கா ணும், கார்த்துநீதம்பித்தும்யாரு நிலையாய்த்தானுங் கதிரொளியைக் கண்டுகளிகூறுவாயே (399)

## அகத்தி லுப்புச்செய நீர்

கூறுகிறேன்புலத்தியனே யுப்புனேர்மை கூறினதோர்சாத்தி ரங்களிதுபோலுண்டோ, தேறுபெறச் சௌமியத்திற்றோலாகுந் தெளிவதற்குவகத்தினுட் புச்செயநீர்கேளு, பேறுபெற்றோர்சித்த

ரவ ரனந்தங்கேடி பேரானசெயநீரி லனந்தம்வேதை, மாறுபாடாச் சொல்லவில்லைசெயநீர்வித்தை மாட்டுகிறேன்சித்தருக்குமாட்டுறேமே

மாட்டுகிறேமகத்திலுப்புச்செயநீர்கேளு மகத்தானமுப்பதிலே சேர்பத்தப்பா, நாட்டுகிறேனுப்பெடுத்துப் பீங்கானிலிட்டு நல்லசுத்த சலம்விட்டுக்கூட்டுமத்தி, வாட்டுகிறேங்கரமதுவால் பிசைந்துருட்டு வளமானரவிதனிலே வைத்தாயானால், கூட்டுறவாய்நின்றவுப்பு நீரா யோடுங் குருசெயநீர்கற்குப்பே ரிறங்கும்பாரே 401

இறங்குமப்பாகுருசெயநீரென்னசொல்வே னியல்பானசீசாவில் விட்டுநீயும், இறங்கினதோர் செயநீரைப் பதனம்பண்ணி இயல்பான வாலையுடதியானஞ்செய்து, வறங்கினதோர்வடிவில்நின்ற முப்பு மைந்தா வசனித்தோங்குழம்பதுபோ லிருக்கும்பாரு, அறங்கின தோரக்குழம்பையெடுத்துநீயும் அருளானரவிதனிலே வைத்திடாயே

வைத்துப்பார்புலத்தியனே வைத்தாயானால் வளமானகுழம் பதுவுமெழுகுபோலாகும், சைத்துமதைத்தானெடுத்துப் பரண்டில் வைத்து சைதன்னியத்தேவியைத்தான் றொழுதுபோற்றி, சைத்துப் பாரென்தாயே வாலைதேவி கனிமதாயென்பங்கி லாடுவாய்நீ, குற் றம்பொறுத்தென்னைரட்சி யம்பாளென்று குவிந்துமுடிசாய்ந்து நீ கூறிவாயே (403)

## தாளகமெழுகு

கூறுவாய்தாளகத்தின் மெழுகுகேளு குறிப்பானகுருசெயநீர் பலமிரண்டையா, தேறுவாய்செயநீரில்தோய்த்துத்தோய்த்துச் செய லாகச்சுருக்கிடவே தெளிவாய்த்தானும், பாறுவாய்பத்துவிசை சுருக் குத்தாக்கப் பரிவானதாளகத்தின்மெழுகதாகும், வாருவாய்பரண்டி தனில்மெழுகைவைத்து வாலைமனோன்மணியினிட பூசைசெய்யே ()

## தாம்பரசுத்தி

செய்யப்பாதாளகத்தின் மெழுகுசொன்னேஞ் செயமானயதில் வேதைசெப்பக்கேளு, தையப்பாதாம்பரஞ்சே ரேட்டுவாங்கித் தரு வான்குருசெயநீரி லூறப்போட்டு, தையப்பாநாள்முழுது மூறிற்று ஞல் நல்லவதின்களிவுபோஞ் சுத்தியாகும், எய்யப்பா தாம்பரத்தை யெடுத்துக்கொண்டு இயலானமூலிகைபிதேயிதமாய்வையே (405)

## தாம்பரத்தில் தங்கவேதை தங்கமாறிக் கொள்ளவும்

வையப்பாதுருத்திகொண்டு கரியைக்கொட்டி வகுத்தகரி நடு விலையா மூசைவைத்து, துய்யப்பாதுருத்தியால் சரித்துவாய்மூடி

தொகுப்பாகச் சாமமதுசாடினுக்கால், உய்யப்பாவுருகியது நீராய்ப் பாயும், ஓகோகோயப்பாகங் கண்டாயானால், தையப்பாதாளகத்தின் மெழுகிடைமூன்று தருவானபண்விடையாய்த் தருவாய்மூட்டே. ()

மூடப்பாயன்னீரில் மெழுகுபாய்ந்து மும்மூலமணிபோல வருவிபாயும், சாடப்பாகுரட்டதனால் மூசையதைக்கொண்டு தனையிறக்கியண்டசயில் சாய்த்தாயானல், நாடப்பாகம்பிலையப்போலருவிபாயும் கலமாகவாரினபின் னெடுத்துக்கொள்ளு, வாடப்பாதாளகத்தின் மெழுகதனால் வளமானதாம்பரத்தில் தங்கமாச்சே. (407)

ஆச்சடாபுலத்தியனே ராசயோகி அருளினேமுகக்கெனிமை வருகுங்காலம், பாச்சடாவுளுந்தினிடை சடைபயருகொண்டு பரியே மதங்கமதை மதித்தாயானல், வாச்சடாமற்றதுதா னென்னசொல்வேன் வசனிக்கவாயதனாற் சொல்லப்போமே, ஏச்சடாயித்தங்கங் கோடாகோடி இடைகுறையாதிருக்குமப்பாயியல்பாய்த்தானே(408)

## உரோமசெய நீர் ரோமமெழுகு

தானென்றதாளகத்தின் மெழுகதனாலே தாம்பரத்தில் தங்கமதைத்தருவாய்ச்சொன்னோம், தானென்றசாகாதமுப்பிலேயா சாற்றுகிறேன் ரோமசெயநீரைக்கேளு, மூனென்றமுப்பெடுத்துப் பீங்கானிலிட்டு முனையானபனிநீரு பலமைந்திட்டு, நானென்றகரமதுவாற் கூட்டிமக்தி நலமானஉண்டைபது போலச்செய்யே (409)

செய்தாவிமுகத்தில்வைத்து யிருநாழிசென்றால் செயமான ரோமசெய நீரிறங்கும்பாரு, செய்தந்தநீரதுவும் நிறந்தான்மைந்தா செங்கற்றாழைவனமது போலேகாணும், செய்தந்தச்சீசாவிற் செயநீர்விட்டுச் சிற்பரையைமனதிலெண்ணித் தியானஞ்செய்து, கைதொழுதுபதனமதாய் வைத்துப்போற்றி கருணைபெற வடியில்நின்ற குழம்பைவாங்கே. (410)

வாங்கடாயடியில்நின்ற குழம்பைத்தானு மகத்தான ரவிதனிலே வைத்தாயானல், நோங்கடாரோமமெழு கதுபோற்கட்டும் தன்மையதாய்ப்பதம்பார்த்துயெடுத்துக்கொள்ளுதாங்கடாயிம்மெழுகைப்பரணில்வைத்துத் தாயானமனோன்மணியைப் பூசைசெய்து, ஏங்கிநீதிரியாதே யிம்மெழுகினாலே யெடுத்த்முறைசகலசித்தும் யெய்தும்பாரே. (411)

## சாதிலிங்கமெழுகு

எய்துகின்ற சர்திலிங்கமெழுகைக்கேளு இயம்புகிறேன் புலத்தியனே யியம்பக்கேளு, நைதுகின்றசாதிலிங்கம் பலமெட்டையா

நவிலுவோஞ் சுத்திசெய்து யெடுத்துக்கொண்டு, நய்துகின்றரோம
செயநீரிற்றானும் நுண்மையதாய்ப்பத்துமுறை சுருக்குத்தாக்க, மெய்
துகின்ற மெழுப்போலாஞ், சாதிலிங்கம் மேலானமெழுகதனைப்பாண்
டில்லைவயே. (412)

## காரீயத்தங்கவேதை

வைத்துநீபுலத்தியனே சொல்லக்கேளு மகத்தானகாரீயத்தங்
கங்கொண்டு, செத்துநீபிறக்கமலுபாயஞ்சொல்வோம் செயமான
காரீயஞ்சேர்பத்தையா, கைத்தபொருளொருவருக்குங் கருதவேண்
டாங் காரீயத்தங்கமட்டா யதீதமாற்று, வைத்துமனக்கருத்திலெண்ணி
யறிவையொட்டு மனக்கருத்தைக் குருவொழியவேறில்லைதானே, ()

குருவானகாரீயஞ் சேர்பத்தையா கொண்டுவந்துரோமசெய
நீரிற்றாக்கி, மருவானநாள்முழுது மூறவைத்து மறுநாள்தானதை
யெடுத்துச்சொல்லக்கேளு, பருவானமூசையதற் குள்ளேவைத்து
பருத்ததொருதுருத்திகொண்டு கரியைக்கொட்டி, சருவானகரி நடு
வில் மூசைவைத்துச் சாடுவாய்துருத்தியாற் சாமந்தானே. (414)

சாடயிலேநீறதுபோ லுருகியாடும் சமயமதைக்கண்டுநீ சார்த்
தாய்த்தானும், ஆடயிலேசாதிலிங்க மெழுதானையா ஆறுபணவிடை
யதுதா னடவாய்ப்போட்டால், நாடயிலேசாதிலிங்க மெழுகுதானும்
நலமாகவிரண்டுமொன்றாய்ச் சேர்ந்தாடும், வாடவேண்டாஞ் சுந்
தரமேயொருநாளுந்தான் மதத்தானபூசை கொண்டு யிறக்கிவையே.()

வைத்து அண்டயச்சுதனில் சாய்த்தாயானால் வளமான கம்பி
யதுபோலேயோடும், அத்துமணியருவியது பெருகிப்பாயும் அரு
ளினதோர் காரீயத்தங்கமாகும், சித்துயிதிற்கோடாகோடி செணத்தி
லாடும் செப்பினேன் காரீயத்தங்கந்தன்னை, கைத்துயிதின் பொருள
தனையொருவருக்குங் கருதாதே புலத்தியனே களிகூர்வாயே. (416)

களிகூறச்சிவயோகஞ் செய்யும்போது கண்மணியேயுனக்கெ
ளிமை வருகுங்காலம், கனிகூறக்காரீயத்தங்கமதிலேயா கணக்காக
விராகனெடை மூன்றுக்கொன்று, களிகூறக்கடையசார் தன்னிற்
சென்று கருத்தாகயித்தங்க மதித்தாயானால், களிகூர்வாரனேகம்பே
கோடாகோடி காரீயத்தங்கமிது கணக்கில்லைத்தானே. (417)

தானான தங்கமிதை மாறிக்கொண்டு சதாகோடிகனயோகஞ்
செய்தாயானால், பேனுணடிராஜய மொடிங்கிப்போச்சு பிலத்துதடா
கற்போலக்காயந்தானும், மானுணபிதிர்க்களெல்லா மொடிங்கிப்
போச்சு மாயாசத்திகிரியாசத்தமபக்கம்போச்சு, நானுவல்லமையாற்
சொல்லிப்போட்டேனுடலிலேதேறும்பேர் நவிலக்கேளே. (418)

## தேசிசெய நீர்

கவிலக்கேள் ராசானந்தயோகவானே கலமானதேசிசெய நீரைக் கேளும், வெவிலக்கேள்வேகாத வுப்பதனைக்கொண்டு விளங்கியதோர் பீங்கானிலுப்பதனைவிட்டு, அவிலக்கேள் சுத்தசலம் பனிநீர்சேரிட்டு அடவானகரமதுவாற் கூட்டிமத்தி, மவிலக்கேளுண்டைசெய்து ரவியில்வைத்தால் மகத்தானதேசிசெய நீரிறங்கும்பாரே. (419)

பாரடாதேசிசெயநீர் சீசாகொண்டு பரிவானபனிநீரை யதனிலிட்டு, காரடாசிவபூசை குருபூசைசெய்து களங்கமறவாலையுட பூசைசெய்து, நேரடாபதனமதாய் வைத்துப்போற்றி நீமகனேயடியில் நின்றதுழும்பைக்கொண்டு, சேரடா ரவிதனிலே வைத்தாயானால் தேசிமெழுகாகுமிது தெளிந்துபாரே. (420)

## துருகமெழுகு

பாரப்பாசுந்தரமே புலத்தியனேகேளு பாடினேமெழுவழித்துப் பரண்டில்வைத்து, காரப்பாகன்னிசிவ காமிபூசை களங்கமாத்தியானஞ்செய்து பணிந்துபோற்றி, ஆரப்பாவறிவார்களையாகேளு அருளினேம் தேசிமெழுகமுகாய்த்தானும், தூரப்பாசகியாதேதுடு சின்மெழுகப்பா சொல்லுகிறேன்காயாதீத வித்தைகாணே. (421)

காணுகின்றதுருசினிட போக்கைத்தானுங் காணார்களுலகம திற் கட்டுவாதி, நாணுகின்ற துருசினிடவதீதப்போக்கு நாம்சொல்வோம் ராசபூபதியைக்கேளு, ஆணுகின்றதுருசதிலே சேர்பத்தையா அளினேமெடுத்ததனைச் சுத்திசெய்து, வாணுகின்றதேசிசெய நீரிற்றுணும் வளமாகப்பத்துவிசை தோய்த்துவாட்டே. (422)

வாட்டியேசுருக்கிடவே துருசமெழுகாரு மாணுக்காள்செல்வதரிதாகுமாகும், ஆட்டியேயம்மெழுகைப் பரண்டிதன்னில் அடக்கமதாய் வைத்துநீபதனமாக, கூட்டியேசிவயோகப்பூசைசெய்து குருபூசைமானதமாம் பூசைசெய்து, நாட்டிலேயிந்தப்படி யார்தான்செய்வார் நாம்செய்ததுரிசினிட மெழுகதாச்சே. (423)

## அயச்செம்புத்தங்கம்

ஆச்சப்பாதுருசினிட மெழுகைச்சேர்ன்னேம் ஆரறிவாரதில் வேதையாடக்கேளு, பாச்சப்பாவையம்பத்து சேர்தான்கொண்டு பரிவானதேசிசெயநீரிற்றுக்கு, மாச்சப்பாநாள்முழுது மூறிற்றுனல் மறுநாள்தானதையெடுத்துப் பார்த்தாலையா, காச்சப்பாயயத்தகடுயற்றுப் போகுங் கசடற்றபோதேயையா செம்பதாச்சே. (424)

செம்பானயச்செம்பு யார்தான்செய்வார் செகத்திலுள்ள வாதி களோசெய்யப்போருர், செம்பானசெம்பெடுத்துசொல்லக்கேளு சிற் பரையைமனதிலெண்ணித் தியானஞ்செய்து, நம்பானசெம்பதுவை மூசைக்குள்வைத்து நலமானதுருத்திகொண்டு கரியைக்கொட்டி, விம்பானகரிநடுவில் மூசையதைவைத்து விளங்கவேயக்கினியைமூட்டு வாயே. (425)

மூட்டியேதுருத்தியால் சாமமைந்தாடு மூர்க்கமுடன் சாடிவரவு ருகும்பாரு, நாட்டியேயருகினிலோர் பதந்தான்கண்டு நலமானதுரிசி னிடமெழுகிற்கேளு, பாட்டியேபணவிடைதான் மூன்றுக்கொன்று பராபரியை மனதிலெண்ணிப்பாகமாக, ஊட்டியேயுருகுமுகமதிலே யையா வொன்றுன துரிசினுட மெழுகைப்போடே. (426)

மெழுகான மெழுகதனைப் போட்டாயானல் மேலாகவுருகிவரு மயச்செம்பிற்றுன், கழுகாமற்கலந்தேபோ மெழுகிதாம்பார் கலந்த தொருபதம்பார்த்துமூசையதைக்கேளு, எழுகானமூசையதையெடுத் தாறவைத்துஎன்னசொல்வேனண்டயச்சில்சாய்த்துப்பாரு,வழுகான வருவியதுபோலேயாய்ந்துமகத்தானகம்பியைப்போல்கேண்டவாறே

வாருவையத்தங்க மிதுபோலுண்டோ வசனித்தோஞ்சிவயோ கஞ்செய்யும்போது, ஊறுனவுனக்கெளிமை வருங்காலத்தில் ஒகோ கோ வயத்தங்கவிராகனுற்கொண்டு, பாருணமகாராச பட்டணமே யேகிப் பரிவானகடைபசார் தன்னிற்சென்று, மாருணமாறியிதைப் பேரஞ்செய்தால் மைந்தனேகோடாகோடி யீவார்பொன்னே. (428)

ஈவார்கள்திரவியந்தா னனந்தங்கோடி யீய்ந்ததொரு திரவியத் தைவாங்கிக்கொண்டு, சேய்வார்கள் சிவயோகச்செலவுசெய்து செல் காலம் வருங்காலம்பாரு பாரு, மூய்வார்கள்மூன்றினுடகாலங்கண்டு மும்மூலச்சுழியில்நின்றுமனக்கண்ணேட்டி, மாய்வார்கள்வாசிகொண்டு பிராணபத்தொட்டி மணமறிவால் நிலக்கண்ணுடி மகிழ்ந்துபூட்டே.

## * மதியமூர்த மெய்ஞ்ஞானப்பதி

பூட்டியேமெஞ்ஞான வாசல்தாண்டி பூரணமாந்துரியங்கண்டப் பாற்போனல், மாட்டிருக்குஞ் சுழியதுவுமங்கேகாணும் மவுனபிற சோதியுமங்கேகாணும், ஆட்டியேபப்பதியே சென்றுபோனல் அரு வியென்றமதியமூர்தமங்கேபாயும், சாட்டியேயவ்வமூர்தங் கொண்டா யானல் சாவேதுசதகோடி காலம்வாழ்வே. (430)

* மதியென்பது சந்திரன்.

## ஊசிசெய நீர்

வாழ்கவென்று அயத்தங்கமைக்தாசொன்னேன் மகத்தானவூசி செயநீரைக்கேளு,காழ்கவென்றுகல்லுப்புப்பீங்கானிலிட்டுக்கருவான பனிநீருபலமஞ்சிட்டு, தாழ்கவென்றுகரமதுவாற் கூட்டிமந்தி தருவானவுண்டைசெய்து பீங்கான்றன்னே, காழ்கவென்றால் ரவிதனிலே யிருநாழிவைத்தால் நலமானவூசிசெயநீரிறக்கும்பாரே. (431)

## ஊசிசெய நீர்மெழுகு.

இறங்கினதோர்செயநீரைச் சீசாதன்னி லெடுத்துவிட்டுவெகு பதனமாகச்செய்து, இறங்கினதோரடியில்நின்ற குழம்புதானும் யென்னசொல்வோம் ரவிதனிலே யெடுத்துவைத்தால், இறங்கின தோருசிமெழுகாகும்பாரு மியம்பினதோர்மெழுவழித்துப் பரண்டில் வைத்து, இறங்கினதோர்வஸ்துவடா வாமிபூசை இயல்பானவயலையுடதியானஞ்செய்யே. (432)

## சவ்வீரமெழுகு.

செய்யப்பாவூசிசெய நீர்மெழுகைச்சொன்னேஞ் செயலானசவ்வீரமெழுகைக்கேளு, சையப்பாசவ்வீரஞ்சேர்பத்தையா சமர்த்தாகக் கொண்டுவந்துசொல்லக்கேளு, உய்யப்பாவூசிசெய நீரிற்றுக்கி யோர் சாமஞ் சுருக்கிடவே மெழுகாய்ப்போகும், பையப்பாமெழுகெடுத்துப்பாலைபூசை பைரவாதன்பூசைசெய்து பதனம்பண்ணே. (433)

## வெள்ளிவித்தை.

பண்ணியேசுந்தரமே சொல்லக்கேளு பாடினேஞ்சவ்வீர மெழுகைச்சொன்னேம், அண்ணியேயதில்வேதை சொல்லக்கேளு அருளுகிறேன் வெங்கலத்தில்தீதவெள்ளி, உண்ணியேவெங்கலந்தான் சேர் பத்தையாயொருமையதாய்க்கொண்டுவந்துசொல்லக்கேளு, கண்ணியேமயேஸ்பரியின் றியானஞ்செய்து கருவானவூசிசெய நீரிற்றுக்கே.

தாக்கியேயூறவைப்பா யோர்நாளுந்தான் தனதாகவூறினபின் மறுநாள்தன்னில், ஏக்கியேயெடுத்ததனைபார்த்தாயானால் யென்சொல்வேன்வெள்ளிசொக்க நிறம்போற்காணும், மூக்கியேமூசையதற்குள்ளேவைத்து மூர்க்கமென்ற துருத்திகொண்டுகரியைக்கொட்டி, ஆக்கியேயக்கரிக்குள் மூசைவைத்து வனல்சிதறுத்தீமூட்டிச் சாடு சாடே. (435)

தானும், மேடுவாய்விராகனெடை மூன்றுகொண்டு மெழுகதனை யுருக்குமுகம் விட்டுத்தாக்கு, நாடுவாய்வெங்கலமுமெழுகுஞ்சேர்த்து நலமானவெள்ளிசொக்கம் நவிலதாமே. (436)

## பாகங்கள் கிளிஞ்சிசெய நீர்.

நவிலக்கேள்புலத்தியனே சுந்தரமேயையா நலமானவப்பாகங் கண்டாயானால், முவிலக்கேள்மூசையதை யெடுத்துநீயு மூலமென்ற யண்டயச்சில்சாய்த்துப்பாரு, அவிலக்கேள்சாய்த்திடவே யருவிபாயு மருளினோங்கம்பியது போலேநீயும், மவிலக்கேளக்கம்பி யெடுத்து மைந்தா வாலைதிரிபுவனையுட தியானஞ்செய்யே. (437)

செய்துநீவெள்ளிபதைத்தான் பதனஞ்செய்து சிவயோகஞ்செய் யுமந்தக் காலந்தன்னில், செய்துநீயுனக்கெளிமை வருதலாகில் தெளி வானவெள்ளியதை மாற்றிக்கொள்ளு, மைதுநீதிரி ஈதே பிராணாய யோக மதன்பிறகுகனயோக மடவாய்ச்செய்யும், கைதுமிந்தவெள்ளி வேதை சொல்லிப்போட்டோம் நாடதிலேவாதிகளே நண்பாய்த் தேறே. (438)

தேறும்பேர்கம்பியுப்புத் திறத்தைக்கேளுந் தெளிவானவுப்பெ டுத்துப் பீங்கானிலிட்டு, கேறுமிதின்கிளிஞ்சிநீர் வகைகளைக்கேளுங் கிருவைபயென்றபனிநீரு பலமாற்கொண்டு, ஊறுமுப்பில்பனிநீரை நன்றாய்த்தாக்கி யுசிதமுடன்கரமதுவாற் கூட்டிமத்தி, வீறுமுண்டை செய்துநீ ரவியில்மைந்தா விளங்கவேயிருகாழி வைத்திடீரே. (439)

வைதிடவேகிளிஞ்சிசெயநீ ரிறங்கும்பாரு வளமாகச்சீசாவிலந் நீரைக்கொண்டு, எய்திடவேயெடுத்ததனைச் சீசாவிலிட்டு என்மகனே பதனமதாய் வைத்துநீயும், கைத்திடவேசிவயோகக் குகைக்குட் சென்று காமியபிராமியைத்தான் தியானஞ்செய்து, முத்திபெறப்பிரா ணாய வாசியொட்டி மூலசுழிமுனையருகே கும்பிப்பாயே. (440)

## சுழிமுனையில் வாசியொட்டி தம்பிக்கமவுனம்.

கும்பித்துச்சுழிமுனையில் வாசியொட்டி குமுறவேபிராணாயத் தங்கிநாட்டி, வம்பித்துயிடைகலையால் தம்பித்தாக்கால் வருஷிக்குமதி யமுர்த முண்ணக்காலே, வெம்பித்துமதியமுர்த ருசினைக்கண்டு விளங் கவேயவ்வமுர்த முண்டாலையா, கம்பித்தபிதிர்க்களெல்லா மோடிப் போச்சு கழன்றிடுங்காண்தொண்ணூற்றூற் சட்டைபோச்சே. (441)

கழன்றுபோம்சட்டையெல்லா மதியமுர்தத்தாலே கழன்று தென்றூற்காயம்பலப் பட்டுப்போச்சு, வழன்றுபோம்வச்சிரம்போல்

தேகமாச்சு மதியமுர்த்தமதனாலே சித்தியாச்சு, நழன்றுபோம்சிதம்பர மு மப்போசித்தி நாற்பத்துமுக்கோண வாலைசித்தி, அழன்றுபோம் மவுனம்பிலப் பட்டுப்போச்சு ஆதாரமேலாதார மடங்கிப்போச்சே. ()

பொச்சென்றகிளிஞ்சிசெய நீரைச்சொன்னோம் புகழானவாயி ரத்திரு நூறுபீடம், வாச்சுதப்பாபுலத்தியனே யிந்நூல்பீடம் வச னிப்போம்சௌமியசாக ரந்தான்பாரு, நாச்சுதென்றநாற்றிசையுந் திரிந்தாலென்ன நலமானயிந்நூலுக் கெதிர்நூலுண்டோ, தேச்சு தென்றசிவயோகிக் கிந்நூல்கிட்டுந் தேசத்தில்பீசத்தோர் கிட்டா தென்றே. (443)

## கெந்தக மெழுகு.

என்றானகெந்தகத்தின் மெழுகுகேளு எடுத்ததனையதீதமெல் லா மிதற்கீடுண்டோ, அன்றானகெந்தகந்தானெட்டுச் சேர்வாங்கி யட வாகச்சுத்திசெய்து யெடுத்துக்கொண்டு, நன்றாகவேயெடுத்துக் கிளிஞ் சிச்செயநீர் நலமானசெயநீரில் சுருக்குத்தாக்க, சென்றுடுங்கெந்தகத் தைத் தாக்கினுக்கால் செயநீரின்வேகம்பட்டு மெழுகதாச்சே. (444)

## பொதியையகம் கும்பமெழுகு.

ஆச்சப்பாகெந்தகத்தின் மெழுகுதானும் மாரறியப்போறார்க ளார்தான்செய்வார், காச்சப்பாநாம்செய்தோம் பொதியைக்கண் டோம் நலமானவேழுகிலைக் கும்பம்பாய்ந்தோம், வாச்சப்பாவுந்த னுக்குக் கெந்தகத்தின்மெழுகு மகத்தானகோடாகோடி வேதையா டும், பாச்சப்பாவெள்ளிசெம்பி லரைகடுகுமீய்ந்தால் பதினாயிரமாற் றுப்பரி யேமமாமென்றே. (445)

ஏமமென்றயேமமெல்லா மிதிலேசொல்வோ மியல்பானசித்தர் களே யின்னங்கேளு, ஏமமென்றபரியேம மிந்நூலிற்சொல்வோம் யெடுத்தொருமூலமெல்லா மிதிலேசொல்வோம், வாமமென்றவாலையடா வாலைப்பெண்தான் வாமியடாபத்தவய தானகன்னி, சேமமென்ற சேமமதி லிருந்தாலையா செகமுழுதுமவளுக்குத் தெளிந்தவாரே. ()

வாராவவாமியைத்தான் மவுனங்கொண்டு மவள்பதமேயருள் பெற்றோ மனந்தகாலம், சீராகமவுனமிதிலெனைக் கண்டாளப்பா சிரஞ் சீவிசாயுச்சிய பதமேதந்தாள், பேராகவவள்பதத்தைப் பூசித்தோம் பார் பிரபல்யமாகவல்லோ வாழ்ந்தோநாமும், ஆரானபிராணயமதி தஞ்சொன்னூ ளாயிரத்தெட்டிதழனில் யதுமுண்டோமே. (447)

உண்டதொருவமுர்தென்ன வென்றாற்கேளு வுத்தமர்மனமல்லோ சித்தமாகில, கண்டதொருகாட்சியெல்லா மனதாற்கண்டோம் கருவி

காரணுகியெல்லா மறிவாற்கண்டோம், தொண்டனென்றுபேருபெற்றோ மனதாலேபா தொல்லுலகில்சித்தருக் குருவேயாளும் அண்டமெல்லாம்நிறைந்துநின்ற குண்டலியைக்கண்டோ மவர்பதமேபூசித்து வடிபணிந்தோம் பாரே. (448)

## பாஷாண மெழுகு.

பாரப்பாபுலத்தியனே மகாராசியோகி பாடுகிறேன்பாஷாண மெழுகுகேளு, நேரப்பாவெகுசூட்ச மெழுகிதாம்பார் நேரறிந்தசிவயோகி செய்வாரையா, ஆரப்பாவறிவார்கள் பாஷாணஞ்சேரெட்டு அடவானபாஷாண மதைக்கொண்டுநீயும், வேரப்பாசுத்திசெய்து யெடுத்துக்கொண்டு விளங்கவேமெழுகுசெல்யும் வித்தைகாணே. ()

காணுகின்றபாஷாணந்தன்னைவாங்கி கருவானகினிஞ்சிசெயநீரிற்றாக்கி, வாணுகின்றசெயநீரில் சுருக்கிணுங்கால் வஸ்துபோலமெழுகாகு மருவிடாய்நீ, ஒனுமென்றுபாடுபட்டா லெல்லாமெய்தும் ஒன்றுணகழுவிதுபா ரோகோபாரு, வேணுமென்றுபாஷாண மெழுகைக்கொண்டு மேன்மைபெறப்பரண்டில்வைத்துப் பதனஞ்செய்யே. ()

செய்யப்பாவெள்ளிசே ரெட்டுவாங்கி செயலானபீங்கானில் வெள்ளியதைவிட்டு, உய்யப்பாவூசிசெயநீர் பலந்தானைந்து ஓகோகோ கினிஞ்சிசெயநீரிற் பலந்தான்மூன்று, நையப்பாவிட்டுவதில்ரவியிற் சாமம்வைத்தால் நலமானவெள்ளிநிறம்போய் பொன்னிறமேயாகும், பொய்யப்பாசொல்லவில்லை வெள்ளியதைக்கொண்டு பூரணசெந்தூரம் வைக்கு முறையைக்கேளே. (451)

## பூரண செந்தூரம்.

கேளப்பாபூரணசெந் தூரநேர்மை கெடியாகச்சொல்லுகிறேன் கேளுகேளு, காளப்பாசெல்லாதுவெள்ளியதைக்கொண்டு நவிலுவோமூசையதில் நண்பாய்வைத்து, தூளப்பாதருத்திகொண்டு கரியைக் கொட்டி துதிபெறவேவிதூநடுவில் மூசையதைவைத்து, கோளப்பா வாராது சாமமதுசாடு குருவின்செயலருள்பெறவே யுருகும்பாரே. ()

## வெள்ளிபொன் வெட்டு.

உருகினதோர்மூசையதையெடுத்துப்பார்த்தால் ஓகோகோவெள்ளிபொன் வட்டதாகும், முருகினதோர்மூசையதை யுடைத்துநீபுமேலானபூரணத்தின் வட்டைக்கொண்டு, அருகினதோர்வட்டுஅதின் மேலேகேளு அருணிறேம்பாஷாணமெழுகிற் பலமொன்று, கருகினதோர்கினிஞ்சிசெய நீரிற்பலமொன்று நலமாகமெழுகில்விட்டுக் குழைத்திடாயே. (453)

## பூரணதிகற்பம் பிராணயபூரணம்.

குழைத்துப்பொன்வட்டுமேற்பூசிநீயும் குணமாகவிந்ததனாற்சிலையேழுசெய்து, அழைத்தூவிதனில்காழி யுலரவைத்து அதன்பிறகு யெடுத்ததனைச்சொல்லக்கேளு, புழைத்துவொருகாடையென்ற புடத்திற்போட்டால் பொருமியேநீறியது செந்தூரமாகும், வழைத்துமனஞ்சகியாதே யெடுத்துச்சிலை வளமாகவாங்கியே பாருபாரே. (454)

பார்த்திடவேயதனிறந்தான் வெகுசேர்கோடி பதினாறுகலையுமிதுக் கிடுண்டாமோ, பூர்த்திடவேபூரணமாஞ் செந்தூரமிதுபோற் புகழ்பெறலாம்வாதியோர்க்குருவிதாகும் கார்த்திகைசயும்வென்றுவரும் செந்தூரமிதுபார் நவலோகமனேகமெல்லாம் நீற்றும்நீற்றும், பார்த்தி பனேசரக்குவறு பத்துநான்கும் பண்மைபெறக்கட்டுமடா பூரணத்தினாலே. (455)

பூரணமாஞ்செந்தூர மார்தான்செய்வார் பூவிலுள்ளமனிதர்செய்யார்சித்தர்செய்வார், வாரணமாம்பூமுலையாள் சொன்ன குருவிதுதான் வசனித்தோஞ்செந்தூர மதிகமாகும், காரணத்தாலெபியிருந்தாற் பூரணமேயெய்தும் கனகமென்றபாளங்க ளிதனாலாகும், சீரணமாயிராது செந் தூரங்கொண்டு சிமிளானசுரைப்பரண்டி லடைத்திடரே. (456)

அடைத்துநீசிவயோகக் குகைக்குள்ளேகி யருளானசெந்தூர மருகேவைத்து, புடைத்துநீபூரணசெந் தூரந்தன்னை புகபூகவராகனிடை கரத்திலேந்தி, மடைத்தனமாயிராதேநீ கினிச்செயநீர் பணவிடைதான்ரண்டுமோர்க்கமதாய்க்குழைத்ததனைக்கொண்டிடாய்நீ துரைத்தினராராசபூபதிபோலாவாய் துதிபெறலாம்பூரணத்தின்கற்பமாமே.

கற்பமெல்லாமிதற்கி டுண்டோசொல் கருவாகமண்டலந்தான் கொண்டுநீயும், அற்பமென்றுநினையாதே மும்மூலமேவி யருளானபிராணயத் தங்கிபூட்டி, விகற்பமொன்றுமெண்ணாதே சுழிகண்ணாடி விளங்கவேவாசிபூட்டிக்கும்பித்தாயானால், நிகற்பமென்றமறிங்கென்று தம்பித்தாக்கால் நிலைத்துதையா வாசியது பூரணத்தாச்சே. (458)

ஆச்சென்றபூரணந்தா னெங்கேயென்று லருளினேம்பிராணயமருள்கண்டாக்கால், வாச்சென்றசோதிசுடர் பிரபைதோற்று மச்சுடரில்தீபமென்ற மதிபோற்காணும், கூச்சமனஞ்சகியாதேயச் சுடரிற்றூனுங் குருவிருப்பாரவர்பெருமை கூறப்போமோ, காச்சுதென்றவக் கருவைக் கண்டாயானால் கைலாசமுத்திதந்து களிகூர்வாரே (459)

## அயச்சுத்தில் அயவெட்டு.

கூறுகிறேன் அயச்செந் தூரங்கேளு குருவான அயமதுவில் சேர் பத்தப்பா, வாறுகிறேன் அயமதனை வாங்கிக்கொண்டு வளமானகிளி நீரி லடவாய்த்தாக்கி, சேருகிறேன் வோர்நாள்முழுது மூறவைத்து செயமாகமறுநாளில் தானெடுத்து, ஆறுகிறேன்மூறையதற் குள்ளே வைத்து அடலான துருத்திகொண்டு சரியைக்கொட்டே. (460)

கொட்டியேகரிநடுவில் மூசையதைவைத்துக் குழறவேசாமமது சாடினுக்கால், ஊட்டியேயச்சுத்தி யதீதமாகும் ஓகோகோமூசையதை யெடுத்துக்கொண்டு, வாட்டியேயாறவைத்து மூசையதையுடைத்து வளமாகப்பார்த்தாக்கால் வட்டதாகும், பேட்டியாய்த்திரியாதே யய வட்டங்கொண்டு பேணியேகிளிச்செயநீர்பல மூன்றுவாங்கே. (461)

வாங்கியேபாஷாண மெழுகதாகில் வளமாகமெழுகதனில்விராக னெடையொன்று, தாங்கியேகரமதுவால் நடுவில்வைத்து தருவான கிளிசெயநீர்தருவாய்விட்டு, தூங்கியேதிரியாதே குழைத்துக்கொண்டு துதிபெறவேயவ்வட்டு மேலேதாக்கி, ஆங்கியேரவியுலர்த்தி யதன் மேற்கேளு அடிவாகவிந்ததனுற்சீலை யேழுசெய்யே (462)

செய்துநீரவியுலர்த்தி நூறெருவிற்புடம்போட்டால் செயமாக வயச்செந்தூர நீறியாடும், பைதுநீயப்பாகங் கண்டாலையா பண்மை பெறப்புடமாறி யெடுத்துப்பாரு, கைதுநீயெடுத்ததனைச் சீலையேழும் வாங்கி கருணைபெறச்சுரைச்சிமிழில் பதனஞ்செய்து, கைதுநீபிரா ணுய பூசைசெய்து நன்றாகச்சிவயோகக் குகைக்குச்செல்லே. (463)

## மெய்ஞ்ஞானப்பதி.

சொல்லெனவேமகாராசசிவயோகியிலை நங்கேளு செபமானசெந் தூர மருகேவைத்து, துல்லெனவேசிவயோகம் பிலக்கச்செய்து சிங் கென்று துரியாதீதங் கடந்தயோகி, மெல்லெனவேபிராணுயவாசி கொ ண்டிமுத்து மெய்ஞ்ஞானபதிகடந்து சென்றுபானுல், துள்ளெனவே பனிச்சென்று சோதிகாணுந் துதிபெறவேயங்குநின்று பூசிப்பாயே.

## மெய்ஞ்ஞானக்கரு.

பூசித்துவடிபணிந்து தெரிசித்தாயானல் புகழ்பெறவேகுருசெ யல்தா னங்கேதோற்றும், ஆசித்துபாக்கினையைத் தொழுதுபோற்றி யருள்சதாசிவத்தினருளன்பாய்க்காணும், வாசிப்பார்சகலகலைக் கியா னமெல்லாம் வதிதகணேசதீட்சைபதி னென்றுமீவார், மாசிப்பார் கெவனயோகபீடமீவார் மதிரசக்குளிகையீவாரட்டசத்துமீவார்பாரே

பாராய்நீபுலத்தியனே சுந்தரமேகேளு பாடினேமெய்ஞ்ஞான பதி யறிதலாகும், வாராய்நீபதியறிவோ ரிதற்குமதுபாரு வாசிநிலை பிராணாய மதீதங்கண்டோர், தேராய்நீமெய்ஞ்ஞான பதியைக்காணு சிவயோகிதலமறிவார் செய்வினையினாலே, பூராய்ச்சிவயோகமுத்தி யதைப்பாரு பூரணநிகற்பமதை யுண்டுதேறே. (466)

உண்டுபாரதனுடைய மகிமைதனைக்கேளு உலுத்தமென்றகாய மெல்லா மழுத்தமாச்சு, கண்டுபார்சிவயோகி யவர்தானுண்பார் கருது மனக்கசடதனைக் கருதுவார்பார், உண்டுவொருவருஷமுந்த னுண்டாலையா ஆயிசுக்கோயழிவில்லை யபாயமோயில்லை, கொண்டனைப்பாயிந்த கற்ப மாண்டொன்றையா கோடாகோடிவெகுகால யுகங்கண்டோமே.

கண்டோம்நாம்புலத்தியனே மெய்ஞ்ஞானத்தால் கலைகாணு வெகுபோக்கு கருக்கள்கண்டோம், விண்டோமேமெய்ஞ்ஞானம் காணவிட்டால் விருதாகுஞ்சகலசித்தி யெய்தாதையா, உண்டோமே மனக்கருத்தால் மெய்ஞ்ஞானங்கண்டோம் உலகத்துவிர்த்தாந்தங் தள்ளிப்போட்டோம், நிண்டோமேயொருநிலையாய் மனதையுன்னி நிலை யறிந்தோங்குருசெயலி னறிவாற்றானே. (468)

## சௌமியத்திற் கருகாணவும்.

தானென்றபலகலையும் பார்த்துத்தேறிச் சௌமியத்திற்கோடா கோடி கருக்களெல்லாம், நானென்றசித்தருக்கும் ஞானத்தோர்க்கும் நலமானமவுனத்தோர் யோகத்தோர்க்கு, பானென்றபே றும்பேர் தே ராதோர்க்கும் பயனறிந்துமொழியெனவே யுரையாய்ச்செய்தோம், தேனென்றவிந்நூல்தான் சாகரந்தான்பாரு தெளிவதற்குச்சௌமியந் தான் தெளிந்துபாரே. (469)

## காந்தசுத்தி.

தெளியலாந்தெளிவதற்குப் புலத்தியனேகேளு செயலறிந்துகாந் தத்தின் மெழுகுசொல்வேன், தெளியலாங்காந்தமது சேர்பத்தையா செயமாகக்காந்தமதை யெடுத்துக்கொண்டு, தெளியலாம்பீங்கானில் கிளிசெயநீர் பலமஞ்சு தெளிவாகவிட்டுநீ காந்தமதைவிட்டு, தெளியுங் காண்காந்தசுத்தி யதீதமாகுஞ் செயநீரிலூறவொரு நாழிகைவையே. ()

## காந்தமெழுகு.

வைத்துஅதையூறவொருநாள் முழுதும்வைத்து வாகாகயதை யெடுப்பாய் மறுநாள்தன்னில், சத்துமதைத்தானெடுத்துக் கிளிமெ ழுகுமேற்றுக்கி சைதன்னியமாகவுந்நீ ரவியிலொருநாழி, உத்தியேபுலா

வைத்து வெடுத்துப்பாரு ஓகோரோகாந்தம்வெடிப்பாரு மனதையறிந்து, கர்த்தனருள்வேணுமென்று பீங்கானிலிட்டுக் கருவானசெயநீ ரோமநீ ரென்றே. (471)

## காந்தம் சுருக்குத்தாக்குதல் சிவயோகதீட்சை.

என்றனயிருசெயநீர் மும்மூன்றுபலங்கூட்டி யியம்பினதோர் காந்தமதைச் சுருக்குத்தாக்க,நன்றாகப்பத்துவிசை சுருக்கிட்டாக்கால் நற்காந்தமெழுகாகு மெழுகுதன்னை, ஒன்றாகவேயெடுத்துச்சுரைப் பரண்டிலிட்டு ஒருமைபரிபூர்ணத்தை மனதிலெண்ணி, சென்றாகச்சிவயோகக்குகைக்குட்சென்று சிங்கிலிலும்மென்றுநீபிராணயமோட்டே.

ஓட்டியேசிவயோக தீட்சையிதினாலே வோங்காரமும்மூலத் தங்கி நாட்டி, நாட்டியேகாந்தமெழுவிராக னென்றுவாங்கி நலம்பெறவே குருசெயநீ ருள்ளங்கைநடுவில், வாட்டியேமெழுகதுவுஞ் செயநீருங் கூட்டி மத்தித்துவுண்ணுவில் பிரளயேற்றி, காட்டியேகாந்த பற்பமென்று பெரிதுதான்கைலாசமுத்திதனைக் காணுவாயே. (473)

காணுவாய்வேதாந்தி பதியேகாணுங் ககசடறவேமனக்கண்ணுள் கருத்துபூதி, வேணுறவாய்பிறமலபி யெழுத்தைக்காணு விளங்குகின்ற சுழியிதழின் றலத்தைக்காணு, பாணுவென்றயத்தலத்தைக் கண்டாயானல் பலகோடிரவிமதியு மங்கேகாணும், பூணுறவுகொண்டுமனங் களித்துநில்லு பூரணத்தையெந்நாளு மனதாலுனே. (474)

## இரசபாகம்.

மனமானவேதாந்த பதியேசொன்னேம் மகத்தானரசமெழுகின் மார்க்கங்கேளு, வனமானரசசூதஞ் சேர்தான்பத்து வாங்கியேபீங்கானில் வைத்துநீயும், கனமானபனிநீருங் குருசெயநீர்காணும் கலங்கமறவாறுபலம் பீங்கானிலிட்டு, அனமானரவிதனிலே யோர்நாள்முழுதும் அலைதவைத்துவருளினேம் ரசசுத்திசூதமதுவாமே. (47)

## இரசமணிபதினாறு.

ஆமென்றபீங்கானில் ரசக்களங்கந்தானும் அருவிபோலடியில் நிற்கு மதுதான்பாரு, காமென்றரசக்கலகம் கழன்றுதானல் நாடெல்லாமரசவேதை யாகுமாகும். ஓமென்று அச்சூதம் வாலைரசமாகு மொன்றனரசச்சுத்தி யார்தரின்காண்பார், வாமென்றசூதமதி சுத்தியாகு மகத்தானசுத்திசெய்த ரசத்தைவாங்கே. (476)

## முடுகுவிருத்தம்.

வாங்குவாய்ரசமெழுகுசெய்யும்வகைகேளு வரிசைபெறச்சுத்திசெய் தசூதந் தன்னைவாங்கி, பாங்குபெறப்பீங்கானில் சூதந்தன்னையிட்டுப் பரி

வானகுருசெயநீர் பலமுமைந்திட்டு, தூக்குறவேகெந்திமெழுபண விடைதானப்பா துதிபெறவேபீங்கானி லருள்பெறவேவிட்டு, தேங்கி மனஞ்சலியாதே சுந்தரமேயிதைக்கேள் தென்பாகரவியிலொருநாழி வைத்துப்பாரே. (477)

வைத்துப்பாரொருநாழி வைத்தெடுத்தேயிதைக்கீகளும் வள மாகப்பார்த்தையென்றால் சூதமதுகட்டும், சித்துவறுபத்துமிதின்ரச மணிதானும் செகவசியம்ஸ்திரீவசியஞ் செனவசியமாடும், நைத்து முனிராசபூபதி வசியமாகு நவிலும்வாம்புருஷரிட நல்லவசியமாகும், முத்தும்ரசமணியினுட பெருமைதனைக்கண்டோம் மூவுலகும்வசிய மென முணர்வதிதின்மொழியே. (478)

முணர்வதிதின்ரசமதுவும் நாரதுபோல்நீளும் முனையாகவதை யெடுத்துவுள்ளங் கையிலிட்டு, உணர்வதிதினுருட்டிப்பதி னுறுமணி யாக்கி யொருமைபெரும்ரோமசெய நீரிலதைத்தைக்க, துணர்வதென பிருநாழிசெயநீரி லதைத்தாக்கி துருவமதாயெடுத்திதனைப் பார்த்திடி னுமாகில், உணூர்பெறவேசெகமுழுது மெச்சுமிதைப்பாருங் கற்போ லக்கட்டுமணி சூதமணியாமே (479)

மணியிதுபார்செகமதுவில் மனிதர்செய்யார்பாரு மவுனபதியோ கிகள்தான் ஞானிசெய்வாராகில், செணியானசிவனுமைக்கு மணியித னைச்சொன்னார் செயமானத்தேவியுமே நந்திக்கிதைச்சொன்னாள், உணியிதுபார்நந்திவாச மணியைச்செய்து வொருமையதாய்த்தன்வந் திரிபகவா னுக்குச்சொன்னார், அணியாகத்தன்வந்திரி மணிப்பெரு மைகண்டு அசுவனிக்குமகிழ்பெறவே யருளினார்பாரே. (480)

பதினெட்டுலட்சங்காப்பு பதினுறுலட்சங்காப்பு.

பாரும்புலத்தியனே ரசமணியாகில் பருவந்தனைக்கண்டுமவரார் பாடினார்நூலும், ஏழும்வரையாரினுடபெருமைதனைக்கண்டு யெடுத்து ரைத்தார்பதினெட்டு லட்சங்காப்பாகில், கோறமவர்பாடினதோர் நூ லதனைக்கண்டு கூறுகப்பத்துமணங் கதிகமதாய்ச்சொன்னேம், தே ருமதிமுன்னோர்கள் பஞ்சவர்களாகில் தேவமுர்தமைவருமே யெனக் கருளினரே. (481)

அருளினதோரென்னவென்றால் சுந்தரமேகேளு ஐவரிட நூ லிதுவி னறிவதனைக்கண்டு, பருளினதோர்பதினுறுலட்சம் கவிசொன் னேம் பாடினேம்பஞ்சகாவியந்தனைப்பாரு,தெருளினதோரதனுடைய நிகண்டதனைப்பாரு தெளிவானசூத்திரங்கள் கோர்வைநூல்காணு, சருளினதோர்சௌமிய சாகரந்தனைப்பாடி சம்பிரமதாய்ச்சிவனருகே யலங்கிருதமாமே. (482)

## நவகோடிசித்தர் மதியமூர்தம்.

ஆமேபுலத்தியனேயிதை யறிவாய்க்கேளு ஆதிசிவன்குகையி லிதை யலங்கிருதஞ்செய்தோம், நாமேயிதன்பொருளறிந்து நன்றாய்ச் சொன்னோம் நவகோடிசித்தரென் னருநதனைச்சூழ, வாமேபுலத்தி யனேயிந்நூல்விருத் தாந்தங்கேளீர் வசனித்தோம்சிவனருகே வாவெ ன்றழைத்தார், தேமேதென்பொதிகையைவளர் நாயனெனைமகிழ்ந்து தெளிவதனால்மதியமூர்தந் திகட்டினரே. (483)

## மவுனகுருபேர்கொடுக்கல்.

திகட்டினரைவருமே சூதரசங்கண்டு தேவியுமெழுத்தாறுந் தெ ளிவாய்சொன்னாள், அகட்டினர்சிவனுமுமையவருக்குமதிக அகத் தியனென்றும்பேரிட்டுச் சகஸ்திரத்தைக்கேட்டார், புகட்டினர்சௌ மிய சாகரந்தன்னைப் பூலோகமனிதர்களில் தேருஞ்சித்தருக்கும், மக ட்டினர்சகலகுருவுக்கு மதிகமெனக்கூர்ந்துமவுன குருநீயென்றுபே ரீய்ந்தார்பாரே. (484)

## இரசமெழுகு

ஈய்ந்ததொருவிர்த்தாந்த மென்னவென்றாற்கேளு மியம்பினோம் சமணியின்பெருமைதனைச்சொன்னோம், மாய்ந்ததொருரசமெழுகின மகிமைதனைக்கேளு ஐமவர்சொல்லுமெழுகதற்கதிகமிதுவாகும், முயம் பினதோர் முன்சொன்னரசமணிபோற்கட்டி முழுக்கட்டுச்சேர்பத்து வொருகட்டாயக்கண்டு, காய்ந்ததொருபனிநீருங் குருசெயநீர்தானும் கவிலுவோங்கிளிசெயநீர் முச்செயநீராமே. (485)

## முச்செய நீர்

ஆமேயிதுமுச்செயநீரடவதனைக்கேளும் அருளினேமொவ்வொ ன்றுசெயநீர்பலமஞ்சு,ஊமேநீர்பதினைந்துபலந்தான் ஒன்றாகக்கூட்டி யொருபிங்கானிலிட்டு, பாமேமுறைபத்து விசைரசமணியைத்தோய் த்து பரிவாகச்சுருக்கிடவே ரசமெழுகதாகும், காமேயிதன்பருவமதை நண்பாகச்சொன்னேம்நவராசபூபதியைநனினமதாய்ச்செய்யே(486)

செய்ததொருரசமெழுகைச் சுரைப்பாண்டிலிட்டு சிவயோகக் குகைதேடிரவியோகஞ்செய்தால் பைததொருபிராணை வாசியது கேளும் அங்கென்றுசிங்குதனில் நங்கென்றுகூட்டி, மைததொருமவு னசிவ யோகமதுவாகில் வாசிதனைச்சுழிமுனையில் தம்பித்துநின்றால், கொய்தமலராக்கிராணம் பீடமதுகாணும் கும்பித்துவொரு நிலையாய்த் தம்பித்துநில்லே. (487)

நிற்சவேமுனைகழியில்தற்பிராண பீடம்நிராமயச்சோதியொளி குருவினிலைகாணும், வற்கவேமகாராஜபூபதியைக்கேளு மவுனகுரு பிரசன்னமாயிடுவார்பாரு, அற்கவேயபவரொளியை மவுனமதிற்கண்டால் ஆயிசுகோடாகோடி யதிதமென்னலாகும், கற்கவேகுருவினடி தெரிசித்தாயானால் கைலாசமுத்திபாகதிவருகும்பாரே. (488)

## அசுவனிதேவரருளிச்செய்த கருக்கிடைநூல் ஆறும்பார்க்கவும்

பாரும்புலத்தியனே ரசமெழுகின்போக்கு பாடினேம் குருவின் செயல்பதம்பெறவேதானும், ஆருமறியார்களிந்நூல் சௌமியத்தைக் காணார் அருளினாசவ்வியாயிரத்தெண்ணூறும், தேறுமதிசகலகலைக் ஞானங்குருபீடம் தெளியலாமந்நூலுக்கருக்கிடையைப்பாரு, மாறுபடச்சொல்லவில்லையைவருக்குமதிக மகத்தானநிகண்டாயிரத்தைந் நூறுபாரே. (489)

பார்க்குங்கலைக்கியானமாயிரத் தெண்ணூறும்பாரு பரிவானநிகண்டாயிரத்தைந்நூறும்பாரு, சேர்க்குமுன்னூறதை தெண்டகத்தைப் பாருசிவயோகமிருநூறுகற்பமதைப்பாரு, ஆர்க்குங்கிடையாதரிதாகு மசுவனி யிந்நூலருளினார்பட்சணிநூற் றைம்பதுக்குள், பூர்க்குமதி தெளிவாக வசுவனிதான்கேளு புகட்டினார்காவியமாயிரத்திருநூறே.

நூறானயிவ்வளவுங்கருக்கிடையாய்ச்சொன்னார் நுண்மையாய்ப் பாரும்புலத்தியனேயிதுவாகும், தேரானமுன்னோர்கள் பாடியதோர் நூலில் தெளியலாமசுவனிலதனைப்பாரும், ஆரானயந்நூலின்மகிமை தனைக்கண்டுமருளினேஞ்சௌமியசாகரமிதாகும்,வேரானகருக்கிடை களதிதப்பொருள்கண்டு விளங்கினேங்கங்குநதி தேசக்கருக்காணே,

## கங்குநதிதேசம் பொதிகைசித்தர்

காணுகின்றகங்குந்தி தேசமதின்வளமை கருவாகச்சொல்லுகிறேன் புலத்தியனேகேளு, காணுகின்றபொதிகை ராச்சியமதுவாகுங் கருவானபருவதங்கிரிமேருவுண்டு, காணுகின்றபொதிகையச்சித்தராயிரம்பேரையா கருவாகக்கூட்டமிட்டுக்கூடியேசென்று, ஓணுமென்று சிறுமைவருங்காலத்திற்கேளு ஓங்காரகோகங்குநதிதேடிவருவாரே. ()

## பதினைந்துநாள்பனியில்லை

வாரானமலைச்சார்வுயடிவாரந்தண்ணில் மகத்தானசதுரம்போல் நிலப்பூமியுண்டு, வேரானவப்பூமிவெளுமைநிறங்காணும் விளங்கினேம் யோஜனைதூரமதுவாகும், காரானமாசிபங்குனிசித்திரையாகில்

கருவானவைந்நாள் தனிற்கேளு, நீரானசத்தமேகங்களுஞ்சூழ்ந்து நிலையாகப்பனிபெய்யுநாள்பதினைந்தே. (493)

## பதினைந்துநாள்பனியுண்டு நாலுமாதம்பனிபெய்தல்

அஞ்சானபதினைந்துநா ளருவிவிட்டு மதுபனியும்பேயும் பதி னைந்துநாளில்லை, வஞ்சானநால்மாத மப்படியேபேயு மகத்தானவப் பூமிமகிமைதனைக்கேளும், பஞ்சானபனிபெய்யுங் காலங்கள்தனில் படருவெளிர் கல்லுப்புமணிமணியைப்போல, கஞ்சமலைச்சித்தர்கள் கல்லுப்பெடுப்பார் கல்லானசதுரகிரிசித்தர்கல்லுப்பே. (494)

கல்லானகாசிக்குமேற்கேயிருநூறு காதவழிக்கப்பாலே யஸ்த கிரியுண்டு, அல்லானயக்கிரியில்வாழுஞ்சித்தர்கள்தான் ஐயாயிரம்பேர் கள் சித்தர்தானுண்டு, வல்லானசித்தரவர் கூட்டங்கள்கூடி வருவார் கள் கங்குந்திதேயவர்தானும், மல்லானவொருபக்கங் கல்லதனைக் கொண்டு வருவார்கள்கல்லினுட மகிமைதனைக்காணே. (495)

## கண்டிகதிர்காமதேசம் தன்வந்திரிசீஷர்பதினாயிரம்பேர்

காணும்புலத்தியனே கண்டிகதிர்காமதேசம் கடந்தவொருநூறு காதவழிபோனாயானால், சாணுமது சமுத்திரமிரைச்சலதற்கப்பால் தாண்டியோரைங்காதவழி கடந்தாக்கால், ஏனுமேயேமகிரிபர்வதமு முண்டு இருப்பார்கள் சோதிரிஷிசித்தரவர் பெருமை, காணுமிப்படி சொன்னேமெண்ணாயிரம்பேர் நடந்துகங்குந்திநதிதேடிவருவாரே.

## கல்லுப்புநாலுதிசைசித்தர்

வருவார்கள்வெள்ளைக்கல்லுப்பதனைக்கொண்டு வருவாரொரு பக்கமெண்ணாயிரம்பேர், அருவார்கள்காசிதேச மதற்கப்பாலே அன் னூறுகாதவழிகடந்து அப்பால், மருவார்கள்வடபூமியுத்தராதிதேசம் வடமேருகிரிசாரல்பருவதமுண்டு, பருவார்கள் பர்வதகிரிவாழுஞ்சித் தர் பண்மைபெறுங்கன்வந்திரி சீஷருடபெருமை. (497)

பெருமையென்றசித்தர்பதினாயிரம்பேர்கள்பேராகக்கூட்டங்கள் கூடிக்கொண்டு, அருமையென்றகங்குந்திசாரலதுதேடி அடவான வெள்ளைக்கல் லுப்பதனையெடுக்க, ஒருமையென்றவொருபக்கமவர் கூட்டமிட்டு ஓகோகோவாருவார் கல்லுப்பிநேர்மை, வருமைவந்தனு காதுவெள்ளைகல்லுப்பின் வசனிப்போம்நாலுதிசைசித்தரெடுப்பாரே

## சாப நிவர்த்தி

எடுத்துமேயவரவர்கள் குலையதற்குப்போவா ரிதன்பெருமை மகத்துவங்களென்னூற்சொல்லவெளிதோ, அடுத்துயெனைக்காத்தாய்

புலத்தியனேயிவைதக்கேளும் அவ்வுப்பின்மகிமையுடவருடனேயேபா வும், நடுத்துநங்குமலைச்சாரலருகிலேகி நம்முடையதியானமதைச் செபிப்பாய்நாளும், கடுத்து ஓம் ஸ்ரீம் அரிகலிங்கிரியுமென்று கரு வாக ஓம்ஐயும் சவ்வும் சிறிம் மென்னே. (499)

என்னவேவெகுகோடி சாபங்களிதனு லியம்பிடுலெட்சமுருசக் கிரவாரந்தன்னில், சென்னவேகுருவினடி செயலதனைக்கண்டுசேவித் துத்தூபதீபங்கள்செய்து, கன்னவேவெள்ளைக்கல்லுப்பருகேசென்று கருணைபெறவுனக்குவேண மட்டுமெடுப்பாய், உன்னவேயுப்பதனை யெடுத்துநீமைந்தாவொருமைபெறக்குகைச்சார்பு தேடிவையே (500)

## குகைச்சார்புபிராணஸ்திரீ கடுஞ்சூல்

தேடிநீகுகையதற்குட்சென்றுநீயும் செயலானபதினறுவயது தானகில், பேடியாய்த்திரியாதேபிரமகுலமாகில் பிராமணஸ்திரீயீன்ற கடுஞ்சூலாகில், ஆடியேயவளீன்றமுதற்பாலன்று னன்பிறக்கும் பனிக் குடந்தானதிதம்வாங்கி, சாடிநீபாண்டமதிலிட்டுத்தாக்கிச் சமர்த் தான அண்டோட்டின்சுண்ணங்கேளே. (501)

## கடுக்காய்த்தூள்

கேளப்பாயண்டோட்டின் சுண்ணம்பலம்பத்து கிருமைபெயன்ற கடுக்காயைத்தூளதாக்கி, ஆளப்பாபொடித்துவடிகட்டிநீயும் அச்சுண் ணமித்தூளுமொன்றாய்த்தாக்கி, தாளப்பாபனிநீரிற் போட்டுவொரு சாமம் கைசுன்னியமாகவல்லோ ரவியில்வைத்தால், கோளப்பாவா ராது தெளிந்தசலமாகுங் கூறினேங்குருவாணையுண்மையிதுதானே.

## பனிநீர்வெள்ளைக்கல் நீறு

உண்மையென்றசலமதனைச்சீசாவிற்கொண்டு வொருமைபெறப் பதனமதாய்வைத்துநீயும், வண்மையென்றபாண்டமதிற்சீசாவிலிட்டு மகத்தானபனிநீரிலிரண்டுபடிவாங்கி, தன்மைபெறப்பாண்டமதிற் பனிநீரிட்டுச்சம்பிரமதாய்வெள்ளைக்கல்லுப்புசேரிட்டு, துண்மையது வாராமற்பனிநீரதிலிட்டுத் துதிபெறவேரவிதனிலேசாமமதுவைவே,

வைத்ததனைச்சாமஞ்சென்றெடுத்துப்பார்த்தால் மகத்தானவெள் ளைக்கல்நீராய்ப்போகும், பத்துமிதிலில்லையையா பனிநீருங்கல்லும் பருத்தசுத்தசலமதுபோ லருவிபாயும், செத்தகனைப்பாண்டமதை யெடுத்துக்கொண்டு செயல்பெறவே மறுபாண்டங்கொண்டிடித்துப் போடு ஐக் கனயப்பாண்டமதிலிதுத்தசலமதனை அடுப்புமேலேற்றி யக்கினியைமூட்டே. (504)

## நிலத்தும்பப்பூண்டு பீங்கான் வெள்ளைக்கல்லுப்பு

மூட்டியேநிலத்தும்பைப் பூண்டதனைப்பிடிங்கிமூர்க்கமுடன்ரவி
யுலர்த்தியுலருமதுவானால், காட்டியேயுலர்ந்ததேவெரடுத்துமைந்தா க
ருணைபெறவடுப்பிலிட்டுயெரித்தாயானால், தாட்டிகமா யிடியிடித்து
மின்னலதுபோலத் தான்சிதறும்பாவனைபோல் கொதிகொதிக்கும்
பாரு, பேட்டியாய்த்திரியாதேயப்பாசமதுகண்டால் பேரானபீங்கா
னாற்கொண்டதனைவாரே. (505)

வார்த்துரவிபத்துநாள் முழுதுமதைவைத்தால் வாங்கிடுங்கா
ணெண்ணை சிவப்பாயிறங்கும்பாரு, நாற்றிசையும்புகழ்பெறவே
யெண்ணையதைகழட்டி நலமாகயிறுத்துவிடு நளினமதாய்த்தானும்,
சேர்த்துவதினீரெல்லாஞ்சுண்டியதுபோகுந் தேனருவிபாயுமதுலுப்
புகட்டும், கார்த்துபத்துநாள்முழுதும் பாகமதுவானால் கல்லான
வெள்ளைக்கல்லுப்பதுவுமாமே. (506)

## மதியுப்பு.

உப்பானவுப்பதனை வைத்தெடுத்துப்பார்த்தா லுறுதிபெரும்
வெள்ளைக்கல்லுப்பதனையாகும், செப்பானநிறமதுவுமென்றாற்சொல்
லத்தெரியாது எடுத்தெல்லாஞ்சீஷாதனிலிட்டு, முப்பாகுஞ்சேதிதனைச்
சொல்லக்கேளு மூர்க்கமுடன்பீங்கானிலுப்பதனையிட்டு, அப்பான
மதியுப்பு அருளதனைக்கேளு, அடவானசுத்தசலம்பலமைந்துவாரே.

வார்த்துநன்றாய்க்கூட்டியதைமதியிலிதைவைத்து வளமாகவார
மட்டும்சுத்தசலமதன்மேல், தேர்த்துநன்றாய்த்தெளித்துசலமதியிலி
தைவைத்தால் தெளிவானதும்பைப்பூகிறந்தான்போல, பூர்த்துநன்று
யிதழதுபோல்பரிமளிக்கும் புகழானபீங்கானில் நிறையத்தானும்,
கார்த்துஅதைத்தாரெடுத்துப்பீங்கான்றன்னைக் கரிவானமதிமுப்பைச்
சீசாதனிற்போடே. (508)

## வாலைதியானம் கைபாகம்

போட்டுநீமுப்பூவைச்சிவயோகக்குகையில் போய்நின்று வாலை
யுடதியானமதுலட்சம், சேட்டுநீபேலிக்கும்படி செகதேவிதாயே செய
மாகவெந்தனுக்குவரமேதாராய், நாட்டிலேயுள்ளசித்தர் ஞானத்தோர்
க்கும்நலமானமவுனத்தோர்சிவயோகத்தோர்க்கும், காட்டிவைகப்பாகம
தாய்ச்சொன்னேம்பாருகருணைதருமனோன்மணியின்கருத்தாலாச்சே

## இரவிமுப்பு.

ஆச்சப்பாபுலத்தியனேமதியிலுப்பு அருளினமின்னமொருமுப்
புவகைகேளு, பாச்சப்பாரவிமுப்புப்புருவமதைச்சொல்வோம் பண்
மைபெறசேர்மூன்றுவுப்பதனைக்கொண்டு, காச்சப்பாபீங்கானிலுப்ப

தனைவிட்டுக் கருணைபெருங்கிளிசெயநீர்பலமாறுவாரு, வாச்சப்பா வார்த்ததனைக்கரமதுவாற்கூட்டிமகத்தானரவிதனிலேவாரமதுவையே

## எண்ணெய்கழட்ட

வைத்துரவிவாரஞ்சென் றெண்ணெயதைவ ங்கு வளமாகநல் லெண்ணெய்போலததானிறங்கும், பைத்துபெறயெண்ணெயதை வாங்கியதைவிட்டால் பரிவான *ரவிமுப்பு பீங்கானதிற்படரும், கைத்துமேபூர்க்கும் கண்ணொளிவுமெத்த கடினமாம்வெகுகோடி வேதையாமே, கைத்துமல்லிப்பூவதுபோல் ரவியில்முப்புபூர்க்கும் கருவாகவதைக்கண்டு பீங்கானதைவாங்கே. (511)

## முப்பூவுக்குச்சிவயோகபூசை

வாங்கியேபீங்கானை யெடுத்துக்கொண்டு வளமாகவதிலிருக்கு முப்பைத்தானும், தூங்கியேதிரியாதேசிசாலதுகொண்டு துதிபெறவே ரவிமுப்பையதிலேயிட்டு, தாங்கியேயந்தமுப்பையெடுத்துக்கொண்டு தருவானசிவயோகபூசையதுசெய்து, பாங்குபெறப்பதனமதாய்வைத் துப்போற்றி பரிசுடையரவிமுப்பைப்பணிந்துபோற்றே. (512)

## மதிசெயநீர்.

போற்றுவதற்கின்னமொருசேதிகேளு புகழானமதிசெயநீர்புக லக்கேளும், வேற்றுமைகளில்லையப்பா மதிமுப்பைவாங்கி விளங்கிய தோர்சோறுன்றுபீங்கானிலிட்டு, சாற்றுவதுதேசிசெய நீர்பலமூன் றிட்டு சமர்த்தாகக்கூட்டிமத்தியுண்டையதுவாங்கி, பார்த்துரவிமுகந் தனிலேசாயமதுவைத்தால் பரிசுடையமதிசெயநீ ரிறங்கும்பாரே. ()

## மதிமெழுகு.

இறங்கினதோர்மதிசெயநீ ரென்னசொல்வே னியல்பானசந்தி ரன்போல்நிறந்தான்காணும், மறங்கமழுமதிசெயநீர் சீசாகொண்டு வளமாகப்பதனமதாய் வைத்துப்போற்றி, அறங்கினதோரதனடியில் நின்றதொருகுழம்பை அழகானபீங்கானிலிட்டுத்தாக்கி, கறங்கின தோரவிமுப்பில்பணவிடைதான்கொண்டு நலமானகுழம்பதனிலிட் டுத்தாக்கே. (514)

தாக்கியேமதியிலொருநாழிவைத்தால்,தருவானமதிமெழுகுதன தாயாகும், ஆக்கியேயப்பாகங்கண்டாயானால் அம்மெழுகையெடுத்து வொருபரண்டிலிட்டு, வாக்கிலேநின்றுடும்வாலைதேவியென்றுமனோன் மணித்தாய்பூசைசெய்துபதனம்பண்ணி, நோக்கியேசிவயோகக்குகை யிற்சென்று பிராணபமோட்டிருசியவங்கென்று வாசிபூட்டே. (515)

*ரவியென்பது சூரியன்.

பூட்டியேவாசியொட்டிமவுனகுருபீடம் போதரவாயங்குநின்று தம்பித்தாயானால், சாட்டியதும் நாராசமணிபோலேயா சதாசிவத்தி னுக்கினையிலடிபடரும்பாரு, தாட்டிகமாயவ்வோசைகண்டபோது சதாகோடிபிதிர்களெல்லாமற்றுப்போச்சு, பேட்டியாய்த்திரியாதே பரப்பிரமந்தான் பிராணபகொலுவினிடதெரிசனமாமென்றே. (516)

என்றுகத்தெரிசித்துயர்ச்சித்தாக்கால் இயல்பானசோதிசுடர் பிரபைதோற்றும், நன்றானபிரபையிலேவாசியொட்டி நலமானமனக் கண்ணாற்பார்த்தாயானால், பன்றானவைம்பூதநிலையுங்காணும் பாமிருக் குந்தலங்காணும்பிரமங்காணும், பொன்றானபூசித்துதெரிசித்துநீயும் புகழாகவையவரையும் பூசைசெய்யே. (517)

## இரவிசெயநீர்

செய்யப்பாபுலத்தியனேமதிசெயநீர்சொன்னோம் செயலானரவி செயநீர்செப்பக்கேளும், உய்யப்பாரவியின்முப்பு சேர்தானென்று வுபாயமதாய்ப்பீங்கானிலிட்டுநீயும், மெய்யப்பாசுத்தசல மூகிசெயநீர் விபரமதாய்விதமொன்று பலந்தான்மூன்று, வையப்பாபீங்கானில் செயநீர்விட்டு வளமாகக்கூட்டிமத்தியுண்டையாக்கே. (518)

## சிவயோகபூசை

ஆக்கியேரவிதனிலேவைத்துச்சாமம் அருளாகப்பார்த்தையானு லிறங்கும்பாரு, வாக்கியேரவிசெயநீரெடுத்துப்பார்த்தால் மகத்தான யிந்திரகோபமதுபோற்காணும்,தாக்கியேசீசாவிலெடுத்துவிட்டுச் சம் பிரமதாய்ச்சிவயோகக்குகைக்குட்சென்று, தூக்கியேதூபதீபனைவே த்தியஞ்செய்து துதிபெறவேபதனமதாய் வைத்துப்போற்றே. (519)

## இரவிமெழுகு

போற்றியேரவிசெயநீரிறங்கும்பீங்கான் புகழாகப்பூச்சானிலடி யில்நின்ற, கோற்றியேகுழம்பதுவாய்நிற்குமூலக் குருவதனைத்தானெ டுத்துரவிமுப்புபணவிடைதான், ஆற்றியேகுழம்பதுவி விட்டுத்தாக் கித் துதிபெறவேரவிதனிலே யிருநாழிவைத்தால், காற்றியேரவிமெழு குயாகும்பாரு நலமானமெழுகெடுத்துப்பாரண்டில்வையே. (520)

வையப்பாசுந்தரமேயின்னங்கேளு வசனிப்போமெழுகினுடவ திதஞ்சொன்னோம், மையப்பாநானுமிந்தப்படியேசொன்னே னருள் பெறவேயகத்தியனென்று பேரும்பெற்றோம், செய்யப்பாரவிமெழு கின்பெருமைதனைச்சொன்னோம் செயலறிந்துசித்தர்களேசெய்து பாரீர், மெய்யப்பாசொல்லிவிட்டோமிந்தப்படியாக மேலானதிராவ கத்தின்விதஞ் சொல்லக்கேளே. (521)

## பஞ்சகாவியச்சூத்திர நூற்றிரைகையில் சௌமியசாரச்சூத்திரத்தொகுப்பு

சொல்லுகிறேம் சௌமியசாகரமிதாகும் சொல்லொண்ணுப் பொருள்களெல்லாஞ் சொல்வேகாமும், வெல்லுவார்சித்தர்கள்தானி தனுடையகருவை வெகுவிதமாய்ச் சொல்லிவிட்டோமெய்ஞ்ஞான மிதுவாகும், கல்லுவார்கங்குருதிதேசமிதின்வண்மைகருதவேகருவை யெல்லாங்கருதினேம்பார், அல்லவேவெள்ளைக்கல் திராவகத்தின் வண்மை அருளுகிறேமதீதமெல்லாமறிந்துப்பாரே. (522)

அறிந்துபார்வாதகாவியத்தைப்பாரு அருளினேம் வயித்திய காவியத்தைப்பாரு, வறிந்துபார்மாந்திரீகக்காவியத்தைப்பாரு மகத் தானஞானகாவியத்தைப்பாரு, வெறிந்துபார்லட்சண காவியத்தைப் பாரு விதின்கோர்வைசூத்திரங்களாய்ந்துபாரு, மறிந்துபாரின்னூலு சௌமியந்தான மகத்தான நூலினிட மகிமைகாணே. (523)

மகிமையப்பாவாயிரத்திருநூறுமீட மாலயந்தான்சௌமியசாக ரத்தினேர்மை, குவிந்ததொருமூலமெல்லாங் கருவாய்ச்சொல்வோங் கூறினேமிந்நூலிற்சுருக்கங்கேளு, அகிமையென்றவித்தைச்சுருகியெண் ணூற்சொன்னேம் ஆடலாமகாகோடாகோடிவித்தைதெகிமையென்ற திரட்டைஞ்ஞூற்றீதசூட்சங் தெளிவானமுன்னூருதிருவாம்பாரே.

## வியாதிவிபரம் இதற்கு இருநூற்றைம்பது

திருவானயிருநூற்றுவைம்பதுக்குள் செய்வினைநோயதர்க்கெல் லாமதீதஞ்சொன்னேம், மருவானமயேந்திரபூபதிசெந்தூர மாலைக் கண்ணேத்திரத்தின் மையைச்சொன்னேம், வெருவானவெடிசூலை கண்டமாலை விற்புருதிசிலைபுண்கள் வழுவன்கட்டி, வருவானவாய்ப் புற்று சன்னப்புற்று மதிகணுக்கால்குதிக்கள்ளன் வாழையறை யாப்பே. (525)

கன்றானகரிக்கள்ளன் சத்துக்கள்ளன் நடுவிரலிணக்கள்ளன் தூமைக்கள்ளன், கன்றனதுடைவாழைசந்துவாழை கருவானலிங் கப்புழுகள்ளன்குத்து, அன்றானபுண்புரைகள்மேகக்கட்டி யருளான வெடிசூலைகண்டக்கட்டி, குன்றானநீகேளுகுன்மக்கட்டி குறல்கட்டி முதுபுண்கள் மாந்தக்கட்டியாமே. (526)

## சௌமியசாகரம் சிவனுமையுங்கேட்டது

ஆமென்றவாதத்தாற்பித்தக்கட்டி அங்கத்திலெங்குவரும் பித்தச் சூட்டால், சேமென்றசிலேட்டுமத்தினதீதக்கட்டி தீராதகருமத்தால்

வருநோய்க்கெல்லாம், பேரென்றபிளாஸ்திரிபெண்ணெய்சீலைதான் பேராகநான்குவித யெண்ணெய்சொன்னோம், தாமென்றகத்தியது யேழுக்குந்திசையாகஞ் செய்யுகிறனித்தைசொன்னோம். (527)

விதமானயிதற்கெல்லாமவிழ்தஞ்சொன்னோம் விளங்கவேகியாழ மதாய்நசியஞ்சொன்னோம், சதமானகலிக்கங்கள்சன்னிக்கெல்லாஞ் சாற்றினோமிருநூற்றுவைம்பதுக்குள், சதமானலோக பண்டிதர்க்கா கத்தான்சொல்லிவிட்டோம்சௌமியத்தின்சுருக்கங்காணும், புதமான வதைக்குறுக்கிநூறுஞ்சொன்னோம் புதைப்பொருளாயதீதமெல்லாம் புகட்டினோமே. (528)

புகட்டினோமைம்பதுக்குள் முப்புத்தாலும் பூரணமாய்முப்ப துக்குள் சுத்திசொன்னோம், நகட்டினோமிவ்வளவுஞ்சொல்லிவிட் டோம் நாசெம்பீசத்தோர்க்கேற்காதையா, வகட்டினோமனமொன்று புத்தியொன்று வாழ்வித்தோர்க்கெய்துமென்று வகுத்தோதாமும், திகட்டினோம்திரைகடலி னமுர்தத்தைத்தான் தெளிவதனாலுண்பதற் குட்செப்பினோமே. (529)

செப்பினோம்சௌமியத்தைநன்றாய்ப்பாடி சிவனுமைக்குயெதிர் நின்றுதெளிவாய்ச்சொன்னோம், ஒப்பிதமாய்க்கேட்டு வலவருரை சொன்னார்பாரு உலகசாகரமென்றும் பேருமீய்ந்தார், இப்புவியிலறி வோர்களாருமில்லை யேகவுபனறிந்தபடியுமையுங்கண்டாள், தப்பற வாய்ச்சொல்லிவிட்டோம் சிவயோகிக்கு தூண்டினாடவருமையைத் தான்சொல்லொணாதே. (530)

## துன்மார்க்கருக்கு நூலீயாதே.

சொல்லொணாச் சௌமியத்தைவெளிவிடாதே துன்மார்க்கப் பிசாசரோடுறவாகாதே, கல்லொணாப்பொருளதனைமனதில்வைத்துக் கன்மவினைமனமறிந்துசெய்திடாதே, புல்லொணாவென்றமனமொன் றாய்க்கொண்டு பூச்சக்கரவில்வளைத்துநாணியேற்றி, வில்லொணாமன மதனையுண்டையாக்கி விட்டுவிடுரேசகத்தில்வாசிபூட்டே. (531)

## ரவிமனம் ரேசகம்.

பூட்டியேரவியில்நின்றுமனதையுன்னிப் புனிதமாய்ச் சிங்கென் று ரேசகம்விட்டப்பால், பாட்டியேகும்பித்துமங்கென்றெழும்பி பாய் ந்துவிடுபூரகத்தில்தூரிரீயும், சாட்டிவிடுசக்கிரயோகரூபதிதான்பீடம் சதுர்முகந்தான் பலகோடிநிறமாய்க்காண்பார், காட்டியேகைகுவித் துத்தெரிசித்தாக்கால் கைலாசமுத்திபரகெய்தும்பாரே. (532)

## பூரகம் கும்பம்.

எய்துகின்றசிங்கென்றுவாசிபூட்டி யெழும்பியேபூரகம்விட்டப் பார்பாய்ந்தால், கொய்துகின்றதும்பகந்தானங்கேதோன்றுங் கும்பித் துவங்கென்றுதம்பித்தாக்கால், கைதுகின்றபிராணபஞ்சுவாதிட்டா ணம் நல்லமணிபூரகத்துக்கப்பாற்றண்டி, ஐதுகின்ற வநாகதந்தான் விசுத்திதாண்டி ஆக்கினையின்பீடநடுக்கமலங்காணே. (533)

## நவகோடிசித்தி.

காணவேசதாசிவந்தானங்கேகாணுங் கனயோககோடாகோடிபிர பைதோற்றும், காணவேயங்குநின்றுதெரிசித்தாக்கால்நவகோடிசித்தி கள்தா னெய்தும்பாரு, ஓணுவென்றுவொருமனதாயநிலைவொட்டி யோனிவாய்ச்சடலமதைக் கழட்டிப்போட்டு, தோணவேமவுனகுரு நிலையைக்கண்டு துதிபெறவேகுளிகைகொண்டு கெவுனம்பாயே.534

## தெளிவு அறிவு பருவம்.

பாயுகின்றதெளிவினுட வறிவுஞ்சொன்னேம் பாடினேம்நூலி னுட தொகுப்புஞ்சொன்னேம், ஆயுகின்றதிராவகத்தின் கருவைக் கேளு அருளுகிறேன்மதனுடைய போக்கைத்தானும், வேயுகின்ற வதன்கூர்கே ளதீதவேகம் வெட்டவெளியாகவுநான் விளக்குவோம் பார், தேயுகின்றதேயுவப்பா மதியைக்கேளு தேறுவோர்க்கதீதமடா சித்திதானே. (535)

## புணர்ச்சி.

தானென்றசித்திரைநாள் பருவந்தன்னில் தனித்துவருஞ்சுக்கிர வாரவருக்கனுகில், ஏனென்றயிருவாரந்தனிலேமைந்தாயிப்புவியிலெச் சாதி யானாலுமயா, நானென்றரவிகாலம் பூரமாகும் ராகுகாலம்வருமுன் பு புணர்ச்சிக்கேளு, தேனென்றஸ்திரீபுருஷாள் கூடினுக்கால் தேய்வி னிடபார்வைவர்து யெய்தும்பாரே. (536)

## வைகாசி.

பாரப்பாபுலத்தியனே மகிபதியேகேளு பட்சத்தில்ஞாயிருதா னருக்கனுகும், ஆரப்பாபுணர்ச்சிசெய்தால் ரவியானுதிக்கு மருனி னேம்வைகாசி யந்நாள்கேளு, தேரப்பாசுவாதிகுரு யிந்திரன்பார்வை தேயுவிருப்பான் பதினுறிடத்திலாகும், சீரப்பாபதினைந்துக் குள் ளேபுத்திரன் சாயுச்சியநிலைகண்டு வுற்பவிப்பாராமே. (537)

## தலைப்பிள்ளை நாமம்.

ஆமென்றதலைப்பிள்ளை பவர்க்குநாமம் அப்பிள்ளையுற்பவிக்கு முன்படாக, தாமென்றபனிக்குடந்தான் விழுகுநேரந் தரைதனிலே

தட்டாமல் குடத்தில்வாங்கி, ஈாமென்றபனிநீரு சேரொன்றிருந்தால் நாலுபங்குகடுக்காய்தானலமாய்க்கொண்டு, வாமென்றமாசமஞ்சுக்குள் காடிவாங்கி வசனிப்போங்காடிதனி லூரப்போடே. (538)

## கடுக்காய்த்தூள்.

போட்டுரவிமுகந்தனிலே முச்சாமம்வைத்து புகழ்பெறவேகடுக் காயை யெடுத்துக்கொண்டு, சாட்டுநீகல்லுரலில் கடுக்காயிட்டுச் சார்பானயிருப்புலக்கைக் கொண்டுசாடு, ஆட்டுநீசாடியதைத் தூளதாக்கி யத்தூளைவடித்தெடுத்து யிருபலந்தானுக்கி, வாட்டுநீபனிநீரில்தாக்கு நாற்சாமம் வளமானசுத்தபனி நீரதாச்சே. (539)

## ஆண்பனிநீர்சிவகங்கை.

நீரானவாண்பனிநீர் சிவகங்கையாகும் நேராதபூநீறு நாதங்கட் டும், ஆரானயண்டக்கல் லதில்சுத்தியாகும் ஆதிமுதல்திராவகங்க ளிதனுலாகும், தேரானசரக்குசுத்தி திராவகத்தாலடும் சிவகங்கை யிதனலே முப்புவாகும், நாரானயின்னீருத் தெளிவைவாங்கி நலமான சீசாவிற் பதனஞ்செய்யே. (540)

செய்துசிவயோகமப் பூசைதனில்வைத்து செயல்தரவேபிரா ணுய வாகியொட்டி, மைதுஙிங்கென்றுலட்சம் தம்பித்தாக்கால் நல்ல சிவகங்கையடா சாமம்போச்சு, பைதுசிவகெங்கையிதைப் பதனஞ் செய்து பனிக்குடத்தினிரெனவே பகிர்ந்துநீயும், கைதுரேசகந்தாண் டி பூரகத்தில்நின்று கைலாசபதியறிந்து கும்பகத்தில்நில்லே. (541)

## சிவசத்திகங்கை மாசியிரவையிடம்.

கும்பகந்தான்சித்தித்தால் குளிகைசித்தியாகுங் கூறினேமதன் பிறகுகெவுனசித்தியாகும்கும்பகந்தான் பனிநீருநன்றாய்ச்சொன்னேம் நல்லசிவசத்தியுடநீ ரதனைக்கேளும், வம்பகந்தான்மதிகால மாசியாகு மதியில்நிற்பானிந்திரனும் பார்வையிடங்கேளு, உம்பகந்தானுந்தி னில்பிரசோற்பதிதான்மைந்தாவுறுதிபடுமொன்பதாம்விடந்தானுமே.

## உத்திராடம் திங்கள்.

ஆருமேநாழிகைதா னிருபத்திரண்டு அருளினேமுத்திரந்தான் றிங்களாகும், யேகுமேயிதின்பட்சம் சூரியனுகும் இயம்பினேம்சதி புருஷ னென்றாய்ச்சேர்வார், நாகுமேநாதவிந்து சிவனிந்திற்சேரும் நாதசத்திவிந்ததற்கு நாமமாகும், வாகுமேயதுதனிச்சன்கடுஞ்சூலாகு மதிற்பிறவிபெண்ணிந்து வுற்பவித்தநாளே. (543)

## தலைச்சன் பெண் பனிக்குடம் நாத நீர்பரவுதல்.

நாளான பங்குனிதான் பட்சமாகும் கலத்தசந்திரன்பார்வைவ ரும் நலமாய்க்கேளு, தேளடாபதினைந்தா மிடமதாகும் தெசமிநாள் புதன்கிழமை திருவோணமாகும், கோனேதும்வாராது குருவுநிலை காணுங் கூறினேமதிகால மேகாதசியாகும், தாளானபதினென்று நாழிக்குள்ளே தலைச்சனுற்பவிக்குமைந்தா தண்மைபாரே. (544)

பாரப்பாபெண்பிள்ளை யுற்பவிக்குமுன்பு பனிக்குடந்தானுதநீர் பரவும்பாரு, தாரப்பாதரைதட்டாப் பாண்டங்கொண்டு தருவான நாதசத்தி கங்கையிதைப்பிடித்து, காரப்பாமுன்சொன்ன பாகமது வாகக் கடுக்காய்த்தூளிரண்டுபலம் சேரொன்றுக்கு, வாரப்பாநாத சத்தி சிவகையிற்போட்டு வளமாகவொருநாள்முழுதும் வைத்திடரே.

## மதி பனி நீர்.

வைத்துவொருநாட்சென்று யெடுத்தாயானால் மதிபனிநீர்கங்கை யமுர்த மதுவாகும், ஐந்ததனையந்நீரை யெடுத்துப்பார்த்தால் அதீத வெளிவாகுமிது சீசாதன்னில், நைந்துஅந்நீரைவிட்டுப் பிரடைபோ ட்டு நாதசத்திகங்கையென்று நாமமதுவைத்து, கைத்துசிவயோகஞ் செய்யு மருகேவைத்து கண்ணுடிச்சுழிதனிலே வாசியோட்டே. ()

## சலகங்கையமுர்தம் நாதசத்தி நீர்.

ஓட்டியேபிராணுடம் ஸ்திரீங்கென்றையா ஒருலட்சமவுனமதில் தம்பித்தாயானால், நாட்டியேநாதநீர் சாபமதுபோச்சு நாடதிலேவாதி களே நண்பாய்ச்சொல்வீர், தேட்டியேநாதசத்தி கெங்கையிதனாலே தேகசித்திவாசிசித்தி காயசித்தி, பாட்டிலேசொன்னதென்று மெண் ணவேண்டாம் பாவிகட்குயிந்நூலைக் காட்டிடாதே. (547)

## சாப நிவர்த்தி.

காட்டிடவேண்டாமையா புலத்தியனேகேளு கருவாகச்சொல்லி விட்டோம் சிவமுப்புசத்தி, பாட்டிடப்பருவமதைப் பாகமாய்க்கேளு பருசுடையபாலகனைப் பண்மையாக, பூட்டினிடதிறவறிந்து நிற்க வேணும் பூரணத்தில்மனதைவைத்து நிற்கவேணும், நாட்டிலேயிப் படியார் சொல்லுவாரோ நாம்சொன்னேம்நாதசத்தி நீரைத்தானே.

## பூநீரெடுக்கும்பூமி.

தானனபூநீறு யெடுக்கச்சொல்வோம் சார்வானநிலப்பூமி தண் மைகேளு, மானனவசந்தகாலங்க டன்னில் மாசிபங்குனிசித்திரை வைகாசியாகில், நாலானமாதமதில் சத்தமேகம் நலமாதமொன்றுபதி

னைந்துநாள்தான், தேனுணபனிபெய்யுங் காலந்தன்னில் தேசமதில் வைகையாற் கரையிற்றுனே. (549)

## சிவசத்தி பூநீறு.

கரையானவாறங்கே யிருக்கும்பூமி காசினியில்மெத்தவுண்டு கண்டுபார்த்து, நரையானசவடதுதான் பூமிமேற்பொங்கி நளினமென்ற சந்திரன்போல் வெளுமையாகி, வரையானநாதநீர்பூநீ றிதற்குப்பேரு மதனருகேசிவப்புனீ றதர்ப்பிற்காணும், அரையானவாற்றோரமொரு பக்கத்தில் அரிதாகுங்கிடைக்கிறது பூநீறுமே. (550)

## சாப நிவர்த்தி.

நீறுனயந்நீரைச் சுக்கிரவாரம் நீமகனேயாற்றோரஞ் சென்றுதானும், ஓரானஓம்கிலியும் கிறிமென்றையா வுருலட்சந்தம்பித்து மவுனமாக, சாறுனவொருவார மங்கிருந்து சமர்த்தாசச்செபித்திடவே சாபம்போச்சு, வேறுனசிவஞ்சத்தி யிரண்டுநீரும் வெவ்வேறெசுரைக்குடுக்கை யடைந்திடீரே. (551)

அடைத்திடீர்வேணமட்டு மெடுத்துநீயும் அருளாகநீயிருக்குமில்லறமேயேகி, படைத்திடீர்பாண்டமதில் சேரண்டையா பண்மைபெறயிட்டுமே சொல்லக்கேளு, நடைத்திடீர்சிவகங்கை படிசேரண்டு நவிலுவோம்பூநீறில் வார்த்திடீர்தான், வடைத்திடீர்கரமதுவால் கரைத்தாயானல் மகத்தானமேல்வெள்ளம் வருதலாமே. (552)

## நாதசத்திப்பூநீர் சுத்தசலம் வல்லாரைகம்பு.

வருகலாமோர்நாளு முழுதுமதைவைத்து மறுநாளிற்பாண்டமதை யெடுத்தாயானல், அருகலாமத்தெளிவு சுத்தசலமாகும் அச்சலத்தைச்சீசாவிற் பதனம்பண்ணி, கருதலாமச்சலத்தை வேணமட்டுங்கொண்டு கண்மணியேபாண்டமதி லெடுத்ததனைவிட்டு, வருகலா மடுப்பேற்றிப் பாண்டமிதையா வல்லாரைக்கம்பதனு லக்கினியை மூட்டே. (553)

## இரவியில் வைக்கவும்.

மூட்டியேமுச்சாம மெரித்தாயானல் மோசமொன்றும்வாராது பூநீர்சலமாகும், காட்டியேசாமமொன்றுக்கெட்டுக் கொதிகொதிக்கும் நலத்தமுச்சாமங்கொதி கொதித்துதானல், வாட்டியேபாண்டமதை யிறக்கிவைத்து வசனித்தோம்பீங்கானில் வார்த்திடீர்தான், பூட்டியே வார்த்துப்பூநீர் சலத்தைக்கொண்டு புனிதமென்றரவிதனிலே வைத்திடீரே. (554)

### பூநீரெண்ணெய்கழட்ட பூநீருப்பு.

வைத்திடீர்நாள்பத்து முழுதுமதைவைத்தால் வளமானபூநீறி லெண்ணெயதாயளும், எத்திடீரெடுத்தெடுத்துப்பத்துபத்துநாள்வீத மென்மகனேயிறுத்திடுவா யெண்ணெயதுகயளும், ஆர்த்திடீரதுகழன்றால் சலசலப்பையாகும் அப்பீங்கானிறையப்பூநீ ருப்பதாகும், பேத்திடீர்பூநீறப்பை யெடுத்துக்கொண்டுபுகழ்பெறவேபிராணயமூல மதையோதே. (555)

### பிராணயமூலம் பூநீர்சாபம் நிவர்த்தி.

ஓதடாபிராணய மூலமதைக்கேளு ஓங்சிங்கு கிறியுமென்று வாசியதுவொட்டி, வாதடாகும்பித்துத் தம்பித்தாக்கால் மகத்தானபூ நீரு சாபமதுபோச்சு, ஆதடாயச்சாபம் நிவர்த்திசெய்து அருளான பூநீறுப்பு சீசாவிலிட்டு, நாதசடாதாரகுருபூசை வாலைபூசைசெய்து நலமானபூநீருப்பில் சேரிரண்டுவாங்கே. (556)

### பூநீர்திராவகம்.

வாங்கியேபூநீறு திராவகத்தைச்சொல்வோம் வளமானபூநீருப்பு மண் கரகமதிலிட்டு, ஆங்கியேபூநீரு சலஞ்சேரொன்றிட்டு அருளான தருசினிட மெழுகுபணவிடைதான், தாங்கியேதாளகத்தின் மெழுகு பணவிடைதான் தருவானகரகமதி லிட்டுத்தாக்கி, நாங்கியேகூட்டி யுண்டை யாக்கியேதான் நலமானகரகத்துக் கவசஞ்செய்யே. (557)

செய்தந்தக்கரகமதைப் பீங்கானில்வைத்து செயமாகரவியிலிரு சாமமதைவைத்தால், பெய்தந்தக்கரகமதின் மூக்கிலேயா பேறுகவூறிட் டோடிப் பாயும்பாரு, பொய்தந்தப்பூநீறுதிராவகந்தானிறங்கும் புனி தமதாய்ச்சீஷாவில்நீ பதனஞ்செய்து, நைதுமும்மூலமதில் வாசியொ ட்டி நலமானபிராணயங் கும்பித்துப்பாரே. (558)

### சாபநிவர்த்தி.

கும்பித்துப்பூநீறு திராவகத்தின்சாபம் கூறுகிறேன்ஓஊயும்கிலி யும் சவ்வுமென்று, தம்பித்துமவுனமதா யருக்கன்றன்னில் சாற்றுவாப் லட்சமுரு தம்பித்தாக்கால், அம்பிததுதிராவகத்தின் சாபம்போச்சு அருளினதோர்திராவகத்தா லனந்தமாடும், கம்பித்தால்நவநீதங் களங்கமாகும் நல்லபூநீர்திராவகத்தா லுருக்கினங்களாமே. (559)

### சிவமுப்பு.

ஆமப்பாசரக்குவறுபத்துநான்கும் அருளிலேமெழுகாகும் வைப்புமாகும், வாமப்பாவாலைரச மெழுகதாகு மகத்தானதிராவகத்தாற்

சுன்னமாகும், போமப்பாவேதையிதி லனந்தமாடு மோகோகோகுளி கை சாரணைகளாகும், ஈரமம்பாசிவமுப்பு திராவகத்தினாலே நாடெல் லாம்பொன்னாகும் நவகோடிசித்தே. (560)

## நாதசத்தியுப்பு.

சித்தானசித்தெல்லாம் மிதனாலாகுந் திராவகத்தின்மகிமையதை திறமாய்ச்சொன்னோம், சித்தானசிவமுப்பு திராவகத்தைச்சொன் னோம் செப்புகிறோம்நாதசத்தி யுப்பைக்கேளும், சித்தானநாதசத்தி பூநீர்சேரிரண்டு செயமானபாண்டமதி லிட்டுத்தாக்கி, நத்தானநாத சத்திப் பனிநீரையா நலமாகச்சேரிரண்டு பாண்டத்தில்வாமே. (561)

## சத்திப்பூநீர்சலம்.

வார்த்துமுன்போலேயல்லோ கரமதுவாற்கரைத்து மன்னாள் தான்முழுதும்வைத்து மறுநாள்தன்னில், பார்த்துஅதையெடுத்து யென்றால் பூநீர்சலமாகும் பண்மைபெறுமத்தெளிவை மறுபாண்டத் தில், ஏர்த்துவதையெடுத்துநன்று யதனில்வார்த்து இயம்புவாய்பாண் டமதை யடுப்பிலேற்றி, நார்த்துகருநொச்சிலைதன் கொம்பாலையா நாள்முழுதுமக்கினியை மூட்டுவாயே. (562)

## நாதசத்தியுப்பின் சாபநிவர்த்தி.

மூட்டியேயெரித்ததையென்றால் புலத்தியனேஐயா மூர்க்கமதாய்க் கொதியெழும்பும் சமம்நாலு, எட்டியேயொருஜாமத்துக் கெட்டுதர ங்கேளு இடைவிடாமகொதிக்குமப்பா யந்நீர்தானும், தாட்டியேயப்பா கங் கண்டாயானால் தருவாகப்பாண்டமதை யிறக்கிவைத்து, காட் டியேகைபாகஞ் சிதறுமற்றுன் சண்மணியேயாறவைத்துப் பீங்கா னில்வாரே. (563)

வார்த்துரவிமுகந்தனிலே பத்துநாள்வீதம் வசனித்தோம்வைத் துஅதி னெண்ணெயதையிறுத்து, பார்த்துபத்துநாள்முழுது மெண் ணையதுபோனால் பண்மைபெறுநாதசத்தி யுப்பதனிலாகும், நாத்து மிந்தப்பீங்கானில்நிறைய வுப்புப்படரும் நலமானவுப்பெடுத்துச் சி சாவிலிட்டு, கார்த்தந்தபிராணயம் வாசியதுவொட்டி கருவாகக்கும் பித்து தம்பிப்பாயே. (564)

தம்பிப்பாய்வாசியதை ரேசகத்தில்மாட்டி தருவாகயங்குநின்று பூரகத்தையொட்டி, நம்பித்துக்கும்பகந்தான் வங்கென்றெழும்பி சுமசி வயஓம்றீம்யங்கு ஷாயாவென்று, அம்பித்துமவுனமதி லட்சமுஞ் செபித்தால் அதிதநாதசப்பின் சாபம்போச்சு, சம்பித்தப்பூசைசெ ய்து பதனம்பண்ணிக் கடைத்தேறவொருமனதாய்க் கருதுவாயே. ()

## நாதசத்தியுப்புத் திராவகம்.

கருதுவாய்நாதசத்தி யுப்பைச்சொன்னோம் கருவாகச்சத்தியுப் பிற் றிராவகத்தைச்சொல்வோம், மருதுவாய்மண்கரக மதிலேகேளு மருவினதோருப்பில்சே ரிரண்டுதாக்கி, வருதுவாய்நாதசத்தி பனிநீர் சேரிரண்டு வளமாகக்காகமதில் வார்த்துநீயும், கருதுவாய்காந்தமெழு கிராகனிடைகொண்டு கருவானரோமசெயநீரிற்பல மொன்றுவாரே.

## மதுசலம்.

வாரப்பாவார்த்ததனைக் கரமதுவாற்பிசைந்து மத்தித்துக்கூட்டி மத்தி யுண்டையாக்கி, காரப்பாகரசமதி லுண்டைவைத்துக் கரு வானவிந்ததனுற் சீலேயேழுசெய்து, ஆரப்பாயதையெடுத்துப் பீங்கா னில்வைத்து அடவாகரவிமுகத்தி லிருசாமமையா, கோரப்பாவைத் ததனைப் பார்த்தாயானல் குபுகுபென்றுமதுசலம்போ லிறங்கும்பாரே.

இறங்கினதோர்திராவகந்தா னென்னசொல்வேன் ஏகவுபரிட தேவி யுப்பினாலே, இறங்கினதோரிதற்குப்பேர் சொல்லக்கேளு என் னசொல்வோம்நாதசத்தித் திராவகந்தான்பாரு, அறங்கினதோர்சீஷா வில் திராவகத்தைவிட்டு அடவாகயதற்குமைந்தா பிரபைபோட்டு, நறங்கினதோருனதருகே வைத்துநன்றாய் நற்சாபநிவர்த்திதனை நவி லுவோமே. (568)

## திராவகத்துக்குச் சாபநிவர்த்தி.

நவிலுவோம்சாபமதி னிவர்த்திகேளு நயவசிம்ஓம்ஐயு மங்குஷா யா, அவிலுவோமாக்கினையில் மனக்கண்ணேநாட்டி யங்குரின்றுபிரா ணயம் வாசிபூட்டி, எவிலுவோமிடைகலையி லட்சமுருகச்சேபி யெய் தம்பாயதிதசித்தி சாபம்போச்சு, மவிலுவோம்நாதசத்தி திராவகத் தாலையா மாண்டுபோம்சரக்குவறு பத்துநாலே. (569)

## சிவமுப்பு.

காலானசிவசத்தி திராவகத்தைச்சொன்னோம் நவிலுவோம்சிவ முப்புநேர்மையெல்லாம்,வேலானசிவவுப்பிவிரண்டுசேர்வாங்கி விளங்க வேபீங்கானி லிட்டுத்தாக்கி, வாலானசிவகங்கைபொன் றரைசேர்வி ட்டு மைந்தனேமத்தித்துக் கூட்டிமத்தித்து, மாலானமதிதனிலே வாரங்கொண்டையா மகத்தானசிவயோககங்கை தெளிந்திடாயே. ()

## மும்மூலரேசகம்.

தெளித்துமேவாரமது சென்றாலையா சிவமுப்புபீங்கானில் நிறை யப்பூக்கும், களித்துமேமுப்பூவை யெடுத்துநீயும், நலமானசீஷாவில்

பதனஞ்செய்து, களித்துமேகால்கொண்டு கலையிலொட்டி கண்ணாடி சுழிதனிலே மனதைவைத்து, மூளித்துமேபிராணய வாசுபூட்டி மும் மூலரேசகம்விட் டப்பார்பாயே. (571)

## சிவமுப்பு சாபநிவர்த்தி.

பாய்ந்திடவேசிவமுப்பு நிவர்த்திமைந்தா பாடுகிறோம்சாபமெல் லாம் பறந்துபோக, ஆய்ந்திடவே-யகம்-சிவ-யரிவோமென்று அங் குஷாயாஜுயுமென்று மவுனமேவி, நாய்ந்திடவேகும்பகத்தில் கிலைக் கண்ணாட்டி நலமாகப்பூட்டிலட்ச முருத்தான்சேபி, தாய்ந்திடவே சாபமெல்லாம் நிவர்த்தியாச்சு சதாசிவத்தினுப்பதற்குவுயிர்தானச்சே.

## சிவமுப்புத் திராவகம்.

ஆச்சப்பாசிவமுப்புத் திராவகத்தைக்கேளு ஆச்சரியமாச்சரிய மார்தான்செய்வார், வாச்சப்பாசிவமுப்புயிரண்டுசேர்வாங்கி வளமான பிங்கானிலடவாயிட்டு, தேச்சப்பாசிவகங்கையொன்றரைசேர்விட்டுத் தேசிசெயநீரதிலேபலமஞ்சிட்டு, நாச்சப்பாலிங்கமெழுவிராகனெடை யிட்டு நலமாகமத்தித்து அக்கரத்தாற்கூட்டே. (573)

கூட்டியேயுண்டைசெய்து கரகமதிலிட்டுக் கூருகவிந்ததனுற் சீலையேழுஞ்செய்து, நாட்டியேபீங்கானில் நடுவேவைத்து நலமாக யெடுத்ததனீரவியிற்றூலும், வாடியேயிருசாம மடவாய்வைத்தால் வச னித்தோங்குபுகுபென்று வருவிபாயும், சாட்டியேயப்பாகங் கண்டா யானல் சாதுரியமாகவல்லோ யெடுத்திடரே. (574)

எடுத்துநீசிஷாவில் வார்த்தையையா யின்பமுடன்பிரடையதை ப் போட்டுநீயும், அடுத்துநீயருகுவைத்துப் பிராணயமொட்டி யர கராரேசகத்தில் யங்கென்றுநாட்டி, தடுத்துமனக்கண்ணாலே சுழிக் கண்ணெட்டி சம்பிரமதாய்க்கும்பகத்தில் பாய்ந்தாயானல், நடுத்துநீ யகோரசிவம் தெரிசனமுமாகும் நவகோடிசாபமதி னிவர்த்திகேளே.

## சிவமுப்புத்திராவகத் துக்குச் சாப நிவர்த்தி.

கேளென்றசிவமுப்பு திராவகத்தின்சாபங் கிருபையதாச்சொல் லுகிறேன் நிவர்த்திதானும், ஆளென்றசிமகயவசிறியும் கிறியுமென்று ஐயும்மங்கிஷாயாவென்று மவுனமேவி, வேளென்றதம்பித்து லட்ச முருசாதி வெகுகோடிசாபமெல்லாம் நிவர்த்தியாச்சு, நாளொன்றுஞ் சொல்லாதவாதியோர்க்குநலமானசிவமுப்புதிராவகஞ்சொன்னேமே

## நாதசத்தி முப்பு.

சொல்லுகிறேன்நாதசத்திமுப்புவதுகேளு துடியானசத்தியுப்பில் சேர்தான்ரெண்டு, அல்லுகிறேன்பீங்கானி லுப்பையிட்டு அருளான

நாதகங்கை யொன்றரைதான்சேரு, வல்லுகிறேன்வார்த்துநன்றாய்க் கிளிசெயநீர்பலமாம் வளமாகமத்தித்துக் கரத்தாற்கூட்டி, நல்லுகிறேன்ரவிதனிலேபீங்கான் வைத்துநலமாகவாரமதுசத்திகங்கைதெளிவே.

## கும்பகசித்தி.

தெளித்துநன்றாய்ப்பாகமதாய்வாரஞ்சென்றெடுத்தால் திருவான பீங்கானில் முப்புபூர்க்கும், களித்துநன்றாயதினிறையச் சத்திமுப்பு கவிலுவோம்பூர்த்து யிருக்குமாகில், வழித்துநன்றாயப்பூவை யெடுத்துநீயு மகத்தானசீஷாவிற் பதனஞ்செய்து, களித்துநீகருவிதொண்ணூற் றாறுமைந்தா கருதவேயொருமித்துப் பிராணயமோட்டே. ()

ஓட்டிவே வங்கென்று ரேசகந்தான்செய்து ஓகோகோகும்பகத்திலங்கிபூட்டி, நாட்டியேபூரகத்தில் சிங்கென்றுநிறுத்தி நலமாகபங்குநின்று வாசியொட்டி, மூட்டியேமூலமதில் வடகலையினாலே மும்மூலச் சுழிமுனையில் குளிகைநாட்டி, ஆட்டியேநாதசத்தி முப்பூவுக்கு அங்குநின்றுசாபமதி னிவர்த்திசெய்தே. (579)

## சத்திமுப்பு சாபநிவர்த்தி.

செய்யப்பாநாதசத்தி முப்புசாபம் செப்புவோநிவர்த்தியுட திறத்தைக்கேளு, நையப்பாநவசியஓம் றீயும்ஸ்ரீயும் நவிலுவோம்யங்கென்று லட்சமுருவையா, மையப்பாமவுனமதில் தம்பித்துநீயு மகத்தான சாபமெல்லா நிவர்த்திசெய்வாய், பொய்யப்பாசொல்லவில்லை யகத்தின்வாக்கு புகட்டினேம்புலத்தியனே நிவர்த்தியாச்சே. (580)

## சத்திமுப்புத் திராவகம்.

ஆச்சென்றமுப்பினுடநிவர்த்திசொன்னேம் அடவானசத்திமுப்புத் திராவகத்தைக்கேளு, நாச்சென்றசத்திமுப்புயிரண்டு சேர்வாங்கி நலமானமுப்பதனைப் பீங்கானிலிட்டு, வாச்சென்றசத்திகங்கையொன்றரைதான்சேரு வார்த்துஅதிலிங்கமெழுகு விராகனெடைபோடு,நோச்சென்றரோமசெயநீர் பலமுமொன்று நுண்மையதாய்மத்தித்துக் கரத்தாற்கூட்டே. (581)

கூட்டியேகரகமதி லிட்டுத்தாக்கிக் குருவானவிந்ததனுற்சிலையேழுசெய்து, சாட்டியேபீங்கானிற் கரகமதுவைத்து சமர்த்தாகரவிமுகத்தி லிருசாமம்வைத்தால், நாட்டிலேநவசித்தர்செய்யு முறைக்கெல்லாம் நாதசத்திதிராவகத்துக் கீடுண்டாமோ, போட்டியாய்த்திரியாதே புலத்தியனேயையா பேரானசீஷாவில் திராவகத்தைவாரே. ()

---

* ரவியென்பது சூரியன்.

## முப்புத்திராவகச் சாபநிவர்த்தி.

வார்த்துமேபிரடையது நன்றாய்ச்செய்து மைந்தனேநீயிருக்கும்
சாகைதன்னில், நார்த்துமேயருகேவைத்து மவுனமேவி நவிலுவோம்
விசுத்தியதில் வாசிகொண்டு, போர்த்துமேபூரகம்விட்டு ரேசகத்தை
யொட்டி புனிதமாய்வடகலையில் வங்கென்றுகும்பி, பூர்த்தமலர்கும்ப
கத்தில் மனதைநாட்டி பூரணமாம்நிலைகண்டு தம்பிப்பாயே. (583)

தம்பிக்கச்சத்திமுப்புத் திராவகத்தின்சாபம் சார்பாகநிவர்த்தி
யுட நேர்மைசொல்வோம், கும்பிப்பாய்மசிவயந குருரேமயிரேமென்
று கூறுவாய் அங்அங்ஐஓ மங்குஷாயா, அம்பிப்பாய்ச்சக்கரத்தில் மவு
னங்கொண்டு அடவானகும்பகத்தி லறிவைநாட்டி, நம்பிப்பாய்பூரகத்
தில் கும்பிப்பாய்நீ நலமானரேசகங்கொண் டோடுதானே. (584)

தானுகயங்குநின்று மவுனமாகித் தம்பிப்பாய்லட்சமுரு செபித்
தாயானால், வேனுகப்பரந்துவிடு மதிகசாபம் வெகுகோடாகோடியிதிர்
நிவர்த்தியாகும், தேனுகச்சொல்லிவிட்டோம் சௌமியத்தில் திசை
சித்தர்நவசித்தர்சாபம்போச்சு, மானுகச்சொல்லிவிட்டோ மறையோர்
சாப மகாகோடிசாபமெல்லாம் நிவர்த்தியாச்சே. (585)

## சிவமுப்புச்சுண்ணம்.

நிவர்த்தியென்றசத்திமுப்புத் திராவகத்தைச்சொன்னேம் நேர்
மைபெறுஞ்சாபமதி னிவர்த்திச்சொன்னேம், அவர்த்தியென்றசிவத்
தின்முப்பு அருளக்கேளு அடவாகச்சொல்லுகிறேன் மதீதச்சுண்ணம்
பவர்த்தியென்றவாயிரத் திருநூறுக்குள் பாடுகிறேன்கோடாகோடி
கருக்களெல்லாம், வ்வர்த்தியென்றபுலத்தியனே ராசயோகி மகத்தான
சுண்ணஞ்செய்யும் வகையைக்கேளே. (586)

கேளப்பாசிவமுப்புச் சுண்ணந்தன்னைக் கெடியானமுன்னோர்
கள் மறைத்தாரையா, காளப்பாசெல்லாது சௌமியத்தில் ஞானிகள்
தானனேகம்பேர் தேறினார்கள், வாளப்பாசிவயோகிக் கிந்நூல்வேண்
டும் மவுனிகட்குந்தவசிகட்கு மிந்நூல்வேணும், கோளப்பாவாராது
சித்தர்க்கெல்லாம் குருநூலுசௌமியத்தை வெளியிடாதே. (587)

## குருசெயநீர்மெழுகு.

வெளியாகச்சொல்லுகிறேன் சிவமுப்புச்சுண்ணம் வேதாந்த
ஞானிகளே விளம்பக்கேளு, அளியாதமுப்பதிலேசே ரிரண்டில்வாங்கி
யடவாகனருகுசெயநீர் மெழுகுபலமாறு, சுழியாதயீங்கானில் மெழு
கதனையிட்டு சுத்தசலமூன்றுபலம் சுருக்காகயிட்டு, பெளியாகுமெழு
கதனைப் பிசைந்துருட்டிப் போரானகுகையதுபோல் செய்திடரே. ()

## குகையை ரவியில் வைக்கவும்.

செய்திடீர்குகையதனை ரவியில்வைத்துச் செயமாகக்குகைபுண ர்ந்தால் செப்பக்கேளும், ஐதிடீரக்குகையில் சிவமுப்பிட்டு அதன் மேலேகினிசெயநீர் மெழுகாலேயா, கைத்திடீர்கவசமது நன்றாய்ச்செய் து நலமானவிந்ததனுற்சீலை யேழுஞ்செய்து, பைதிடீரவிதனிலேயிரு நாழிவைத்துப் பானுமுகமலர்ந்துதென்றால் பகரக்கேளே. (589)

## புடபாகம்.

பகரக்கேள்முசற்புழுக்கைப் பெருங்கூடைகொண்டு பண்மை பெறக்கெசம்புடம்போல் பரிவாய்ச்செய்து, அகரக்கேளதுநடுவில் குகையை வைத்து அக்கினியைமூட்டிபுடம் போட்டாயானல், நகரக் கேள்புடமாறி யெடுத்துமைந்தா நல்லகுகைக்கவசமதைச் சீலையேழும் வாங்கி, தகரக்கேள் பார்த்தையென்றால் புஷ்பமதுபோலாம் தன்கரு பங்கோடாகோடி களைதானுமே. (590)

## வஸ்துதெளிவு.

ஆமப்பாயச்சுண்ணம் பரிட்சையதுபாரு அடவானவஸ்துவதில் கடுகு வீதமிட்டால், நாமப்பாசொல்லிவிட்டோ மமுர்தமதுவாகும் நாடதிலேயிதுவதிக நாம்சொன்னேம்பாரு, காமப்பால்திரையகற்று மிந்தச்சுண்ணங் காயசித்திஞானசித்தி மிதனுலாகும், தேமப்பாதேக சித்தி யோகசித்தி தெளியலாம்வாசிசித்தித் தேறலாமே. (5୧1)

## அமுர்தம்.

தேறும்வார்க்கிந்தசுண்ணஞ் செய்தாரானல் செணத்திலேகோ டாகோடி வேதையாடும், ஆறுவோஞ்சரக்கறு பத்துநான்கும் அரை கொடியில்மெழுகாகுங் களங்கமாகும், தாறுவோம்சவரத்த மிதனுலேயா தருவாகச்சுண்ணமுமாஞ் செந்தூரமாகும், பாருமிதுசுண்ணமிதைச் செய்துக்கொண்டு பலகோடிரவிமதியி லமுர்தமுண்ணே. (592)

அமுர்தமாஞ்சுண்ணமிதைச் சீஷாவிலிட்டு ஆக்கினையிலங்கிதனை யடவாய்ப்பூட்டி, மமுர்தமாமவுனமதி லறிவைக்கொண்டு மகத்தான பிராணய வாசியோட்டி, வமுர்தமாமங்குநின்று ரேசகத்திற்பாய்ந்து வளமானகும்பகத்தில் சிங்கென்றுபூட்டி, திமிர்தமாங்கும்பகத்திலொ ருமனதாய்நின்று தெளிவாகவர்ச்சித்துப் பூசிப்பாயே. (593)

## சாபநிவர்த்தி.

பூசித்துரேசகத்தில் மவுனகுருபீடம் பிராணயசித்திபெற நிவ ர்த்திக்கேளு, ஆசித்துயவசிமந அரிஓம்ஐயும்அடவாகஓம்கிலியும்சிறியு

மென்று, தேசித்துச்சிவமுப்புச் சுண்ணத்திற்கு தியானமூலசாப
மதி னிவர்த்திதன்னை, நாசித்துத்தம்பித்து லட்சமுருச்செபித்தால்
நவகோடிசித்தியெய்துஞ் சாபமதுபோச்சே. (594)

### வாலைதியானம்.

போச்சென்றசிவமுப்புச் சுண்ணத்திற்குப் புனிதமதாய்ப்பூசித்
துப் பதனஞ்செய்து, வாச்சென்றயிர்தசுண்ண மார்தான்செய்வார்
வாசிசிவயோகஞ்செய்வோ ரவரேசெய்வார், ஆச்சென்றசுண்ணமடா
மகத்தானசுன்னம் ஆச்சரியம்வாலையுட தியானந்தன்னை, பாச்சென்ற
சவ்வுங்கிலியுஐயுமென்று பண்மைபெறகிலியும்கிறியும்சிறிஓமென்னே.
என்னவேபிராணய மூலத்தேகி மியம்புவாய்மவுனமதிலச் சுண்
ணத்திற்கு, வென்னவேலலட்சமுருத் தியானஞ்செய்தால் விவேகமதில்
வாலைபிர சன்னமாவாள், உன்னவேயடிபணிந்து தெரிசித்தாக்கால்
உனதுசெடக்காயசித்தி யகந்தேசொல்வாள், நன்னவேநாம்சொன்
னோம் வாலைதியானம் நாடதிலேவாதிகட்கு நவிலுவோமே. (596)

### நாதசத்தி முப்புச்சுண்ணம்.

நவிலுவோம்புலத்தியனே நாதசத்திமுப்பு நலமானமுப்பினுட
சுண்ணமதுகேளும், அவிலுவோங்கிளிச்செயநீர் மெழுகுபலமாறு
அன்பானமெழுகதனைப் பிங்கானிலிட்டு, பவிலுவோநாதசத்தி பல
மைந்துசங்கை பரிவானமெழுகதனிற் பண்பாயிட்டு, குவிலுவோமத்
தித்துக்கூட்டிக் காமதுவால் கூருகப்பிசைந்துநட்டிக் குகையதுவாய்
ச்செய்யே. (597)

### புடபாகம்.

செய்துகுகைரவியுலர்த்திச் சாமமதுவைத்துச் செயலானகுகை
யதனிற் செப்பக்கேளு, முய்துசத்திமுப்பூவி லிரண்டுசேர்கொண்டு
மூர்க்கமதாய்க்குகையதனில் முப்பூவைவிட்டு, கைதுவிந்ததனாலேசீலை
யேழுசெய்து ரவியிலிருசாமமதை நன்றாகவைத்து, மைதுமானபுழுக்
கையது கூடைகொண்டையா வசனித்தோங்கெசபுடம் போடுவாய்த்
தானே. (598)

### சுண்ண நிறம்.

தானென்றபுடம்போட்டு மாறியெடுத்தாக்கால் தனதாகநாதசத்
திச் சுண்ணமதுவாகும், கோனென்றகுகையதனை யாறியெடுத்தப்பா
கூரானசீலையதை யேழுமதைவாங்கி, நானென்றபிங்கானிற் சுண்ண
மிதையிட்டு நலமாகப்புலத்தியனே பாருமதன்வருணம், தேனென்ற

பாலசந்திர னுதித்தாற்போலத் தெளிவானசத்திமுப்புச் சுண்ணமிதுகாணே. (599)

## ரேசகம்

இதுவானசுண்ணமிதைச் சீஷாவிட்டு இயலானவாய்பிரட்டைமூடிநன்றாய், இதுவானமுனதருகே வைத்தீயப்பா யியல்பானபிராணயபீடஞ் சென்றையா, வதுவானவாசியதனாலே கும்பிப்பாய் வளமானரேசகம்விட்டப்பாற் கும்பகத்தில், அதுவானபூரகம்பாய்ந் தப்பாற்சென்று அங்கென்றுகும்பித்துத் தம்பித்துநில்லே. (600)

## சாப நிவர்த்தி.

நில்லெனவேசிவசத்தி சுண்ணமதற்கப்பா நிவர்த்திசாபமதினேர்மை யதனைக்கேளும், அல்லெனவேசிவயை ஒங்கிறுங்கிறியும் ஐயுஞ்சவ்வும்கிலியும் அறிங்அங்ஷாபா, மல்லெனவேபிராணய பீடஞ்சென்றையா விளங்கவேதம்பித்து மவுனநிலைகொண்டு, மல்லெனவேமங்கென்று ரேசகம்பாயந்து வாசிபதைப்பூட்டிநீவங் கென்றுநில்லே. ()

நீங்கவேமவுனமதிலித் தியானங்கொண்டு நிராமயப்பூரணமேசுழிமுனையில்காட்டி, கற்கவேதம்பித்து வொருநிலையாய் நின்று கருதவேலட்சமுருச் செபித்துநின்றாக்கால், நற்கவேநலசாபம்திசை சாபம்போச்சு நவகோடிசித்தியது மெய் துமம்பாரு, அற்கவேயித்தியானமூட்டினலையா அளவில்லாச்சாபங்க ணிவர்த்தியதுவாச்சே. (602)

## கைலாசசித்திமுத்தி பொதியை.

ஆச்சுதேசிவசத்தி சுண்ணமதின்சாபம் அருளினேமின்னமொரு வடவதனைக்கேளும், வாச்சுதேயிச்சுண்ணமார் செய்யப்போறார் வசனித்தோமகத்தியனு நாம்செய்தோம்பாரு, காச்சுதேசுண்ணகருவதினாலே கைலாசமுத்தியது சித்திபெறலாகும், வேச்சுதேசாக்கறு பத்துநான்குந்தான் விளங்கவேசெந்தூர சுண்ணமதுவாமே. ()

ஆமப்பாமெழுகோடி களங்கங்கள்கோடி அளவில்லாத்தயிலங்கள் திராவகங்கள்கோடி, தேமப்பாவெள்ளிபொன் வேதையில்கோடி தெளிவானகற்பங்கள் செயநீர்கள்கோடி, நாமப்பாயிச்சுண்ணங்கடுகளவுபட்டால் நாடெல்லாம்வைப்புமுறை நளினமிதுவாகும், வாமப்பாசிவசத்தி சுண்ணமிதைச்செய்து வாழ்ந்தோமேபொதிகைதனில் வெகுயுகந்தானே. (604)

## சிவமுப்புச் செந்தூரம்.

தானானசிவமுப்புச் செந்தூரஞ்சொல்வோம் தருவாகநீகேளுபுலத்தியனேயையா, மானானசிவமுப்புச்சே ரிரண்டுகொண்டு வளமான

பீங்கானில் முப்பதனையிட்டு, தேனைசிவகங்கைபல மைந்துசேர்த்து செயலானகுருச்செயநீர் பலமூன்றுவாரு, வானனமதிசெயநீர்பல மிரண்டிட்டு மத்தித்துக்கூட்டியே யுண்டையதுசெய்யே. (605)

## சிவமுப்புச் செந்தூரவுண்டை.

செய்துநீரவிமுகமுதலா யதைச்செய்து செயமாகயெடுத்துநீ செப்பக்கேளு, ஐதுநீகிளிச்செயநீர் மெழுகுபலமாறு அம்மெழுகு பீங்கானிலடவாய் நீவைத்து, கைதுமேரவிதனிலே நல்லதேங்கா யது போலகுகைதான் செய்துவைத்து, மைதுநீரவிதனிலேயொரு சாமம் வைத்து மகத்தானகுகையதனை யெடுத்துக்கொள்ளென்றே (606)

## திரிஞ்சலெரு.

கொள்ளென்றசிவமுப்புச் செந்தூரவுண்டை குகைதனிலேவை த்துநீ குருமெருகுகவசம், தெள்ளென்றவிந்தனுற் சீலையேழுசெய்து செயமாகரவிமுகமுதலாய் வைப்பாய்நீ, அள்ளென்றவிருசாமம்ரவி யுலாவைத்தால் அருளினேம்செழுமையது யதிதமதுவாகும்,கள்ளமே யில்லையது வப்பாகங்கண்டு கைபாகமாகவுநீ யெடுத்துக்கொள்ளே. ()

## செந்தூர வர்ணம்.

கொள்ளுவாய்திரிஞ்சலுட வெருங்கூடைகொண்டு குமுறவே கசபுடங் குகையதனைவைத்து, அள்ளுவாயக்கினியை மூட்டியிருசா மம் ஆலகாலவிஷம்போலத்தீ மூட்டுவாய்நீ, புள்ளுவாய்புடம்போட்டு மாறியெடுத்தாக்கால் புதுமையென்ன வதனுடைய புகழதனைக்கேளு கள்ளுவாய்குகைக்கவசஞ் சீலையதைவாங்கிக் கருவானபீங்கானிற்செந் தூரங்கொட்டே. (608)

கொட்டியேசெந்தூரக் குருவதனைக்கேளு கூறினேமிந்திரகோப மதுபோலாகும், நாட்டிலிங்கசெந்தூர மார்தான்செய்வார் காய்செய் தோம்ஞானிகள் மவுனிசெய்வார்கள், காட்டினேமிந்தசெந்தூரம் புல த்தியனே கைபாகந்தவறுமற்பாதமதாய்ச் சொன்னேம், ஏட்டிலே சொன்னதென்று மலையாதே யெடுத்துச்செந்தூரமிதைச் சீஷாவிற் போடே. (609)

## பூரணசித்தி சாபநிவர்த்தி.

போடப்பாமேல்பிரடை போட்டுநீமைந்தா பூரணமாகவேபிரா ணபீடம், சாடப்பாசுழிமுனை மணக்கண்ணலொட்டித் தம்பித்து அங்கென்றும் கும்பிப்பாய்நீயும், நாடப்பாகும்பித்து ரேசமும்காட்டி நலமானகும்பகம் பாய்ந்திடூர்தானும், ஆடப்பாயாக்கினை சதாசிவஞ் சத்தி அங்கென்றுதம்பித்துப் பூசிப்பாய்த்தானே. (610)

தாமென்றசிவமுப்புச் செந்தூரசாபந் தருவானனிவர்த்தியுட னியானமதைக்கேளு, வாமென்றுவயநசி ஓமென்றுநீயும் வளமான பிராணாயம் வாசிகொண்டையா, மாமென்றரேசகமவுனங் கொண்ட ப்பா வளமாகத்தம்பிப்பாய் லட்சமுருவாக, ஆமென்றகும்பித்துப் பூரகம்பாய்ந்தால் அஷ்டசாபங்கணி வாத்தியதுவாச்சே. (611)

ஆச்சென்றசாபங்க ணிவர்த்தியாக அருளினேந்தியானமிது யார்சொல்வாரையா, காச்சென்றசெந்தூரஞ் சாபமதுபோச்சு நா டெல்லாம்பொன்வெள்ளி வேதையிதிலாச்சு, பாய்ச்சுயமாகடுகுவீசுங் கல்மலைகளெல்லாம் பரித்தங்கங்கோடிகளே மாற்றதிகமாகும், எச்சென் றசெந்தூரமிதை விட்டாலையா எய்தாதுவேதையினி சொல்லக்கேளே.

## சிவசத்தி முப்புசெந்தூரம்.

சொல்லக்கேள்புலத்தியனே யின்னங்குருகேள் சொல்லுகிறேன் சிவசத்தி யுப்புசெந்தூரம், வெல்லக்கேள்சிவசத்தி முப்பிரண்டு விள ங்கவேபீங்கானி லிட்டுநீயப்பா, மெல்லக்கேள்தேசிசெயநீரு பலமாறு மேலானசிவசத்தி கங்கைபலம்ரண்டு, அல்லக்கேளிவ்வகைக ளிட்டுநீ யப்பா அருளினேமத்தித்துக் கரமதனாற்கூட்டே. (613)

## மெழுகுவகை.

கூட்டியேயுண்டையது செய்துநீயையா கூருகரவிமுக மிருசாமம் வைத்து,காட்டியேகினிசெயநீர்மெழுகுபலமாறுகருணைபெறபீங்கானி லிட்டுநீமைந்தா, தேட்டியேசிவசத்தி கெங்கையிருபலந்தான் தெளி வாகவிட்டுஅதை மத்தித்தாலும், ஆட்டியேகுகையதுபோற் சீலைசெய் திடீர்தானும் அக்குகையைரவியுலர வைத்திடீர்தானே. (614)

வைத்திடீர்குகையதனை யுலரவைத்தெடுத்து வளமாகச்செந்தூர வுண்டையதைக்கொண்டு, கொத்திடீர்குகைதனிலே யுண்டையதனை வைத்துக் கூறினேங்கிளிமெழுகு கவசமதுசெய்து. ஐத்திடீர்வித்து யதின் சீலையேழுசெய்து அழகானரவிமுக முலரவைசாமம், நைத்திடி ரவியுலர வைத்தகுகைதன்னை நவிலுவோம்பசுஞ்சாணங் கெசபுடம் போடே. (615)

## புடநிறம்.

புடமானகெஜபுடம் போட்டுநீயப்பா புனிதமதாய்ப்புடமாறியெ டுத்துநீபாரு, அடமானகுகைக்கவசஞ் சீலைவாங்கி யருளினேம்பீங்கா னிற் செந்தூரத்தையிட்டு, சடமாகனிறைந்தனேயே சம்பிரமதாய்ப் பாரு சார்வாகுங்கஸ்தூரி யருணைவால்போலவே, திடமானவகனிறந் தான் செந்தூரமாகும், நீநினைத்தபடி வேதை யிதனாலாமே. (616)

## சாபநிவர்த்தி.

ஆமெனவேசெந்தூரம் சீஷாவிலிட்டு அருளானசிவயோகக்குகை யருகேசென்று, வாமெனவேசெந்தூர மருந்ததனைவைத்து வசனித் தோம்பிராணை வாசிதனையொட்டி, கும்மெனவேயெழும்பிரேசகந்தா ண்டியப்பா கும்பித்துஅங்கென்று தம்பிததுப்பாரு, நம்மெனவேகும் பகம்கொண் டோடிவாசி நல்லமவுனப்பதி தாண்டிநீபோகே. (617)

போகவேயப்பதி தெரிசனமாகும் பூசித்துச்செந்தூரம்புகழ் பெறவேதாலும், ஆகவேசிவசந்தி பிரசன்னமாவாள் அடிபணிந்தங் கனே கனகசபைகாணுஞ், சாகவேயொருநாளு மிறப்பதுவுமில்லை சாயுச்சியபதவியுண்டாகு மிதுபாரு, வேகமாஞ்செந்தூரம் பூசித்தைத யாகு மெஞ்ஞானசாபமதி னிவர்த்தியதுசெய்யே. (618)

செய்யவேசிவசத்தி செந்தூரமாடச் செப்புகிறேஞ்சாபமதி னிவர்த்திதனைக்கேளு, ஐயவேயநவசிம்ஓம்றீங் அறிங்கென்று அவ் வுமங்குஷாயாவென்றுரு லட்சஞ்செபிப்பாய், தப்புதவறில்லாமல்மவு னங்கொண்டையா தமர்த்துச்செந்தூரசேர்வையதைச்காணும், நப்பு கிறேஞ்சிவசத்தி சாபமதும்பாச்சு நவசித்தாள்சாபமது நிவர்த்தியது வாச்சே. (619)

ஆச்சப்பாசெந்தூரம் பூசித்துவைத்து அணைவருமறியக்கோடா கோடிவேதை, வாச்சப்பாயிந்தசெந் தூரமிதனாலே வைக்கலாம்வெகு கோடி வைப்புமுறைமைந்தா, நாச்சப்பாசிவசத்தி முப்புசெந்தூரம் நாம்செய்தோம்நாடதிலே மனிதர்செய்யார்கள்,பாச்சப்பாயரைக்கடுகு செந்தூரந்தன்னைப் பாய்ச்சிறைபரியோமங்கோடி மாற்றென்றே. (620)

## சிவகேந்திர பூபதிசுண்ணம்.

மாற்றானசிவகேந்திர பூபதிசுண்ண மாட்டுகிறேமார்சொன்னார் சௌமியத்தைப்போல, காற்றானசிவசத்திமுப்புசேரிரண்டு கருணை பெறும்பீங்கானில் முப்பதனையிட்டு, சேர்த்தாகில்சிவசத்திகங்கைபல மைஞ்சு சிதறுமற்பீங்கானில்பதறுமல்வார்த்து, சூத்தானகுருசெயநீர் கினிசெயநீரையா முனையாகவொவ்வொன்றுபலமிரண்டுவாரே. (621)

## புருவெச்சம் புடம்போடவும்.

வார்த்துமத்தித்துநீ கரமதனுற்கூட்டி வசனித்தோமுளங்கைபல மதுபோல, சேர்த்துநீவில்லையது அகலமதாய்ச்செய்து தேசிமெழுக தனாலேநவசமதுசெய்து, பார்த்துநீயிந்ததினாலேமூசிலேசெய்து பரி வானசித்திரைமுன்னேழுவியில், கார்த்துநீவில்லையதையுலர்நீசெய்து கருதுவோம் புருவெச்சம்புடம்போடுவாயே. (622)

போடுவாய்பெருங்கூடை யெச்சமதைக்கொண்டு புகமூகசெச புடம்போட்டுவில்லே, ஆடுவாயதனடுவில்வில்லையதைவைத்து ஆலகால மதுபோலேயக்கினியையூட்டி, நாடுவாய்புடம்போட்டுமாறியெடுத்த தனை நற்கவசமதின்சீலேயேழும்வாங்கி, சாடுவாய்சிவகேந்திரபூபதி சுண்ணம் சமர்த்தானபீங்கானிலெடுத்துநீபோடே. (623)

## சிவகேந்திர பூபதிகற்பம்.

எடுத்துநீகெந்துருவைப்பார்த்திடீரையா யென்னசொல்வேன தினிறமதனைக்கேளு, அடுத்துநீபார்த்திடீர்மாற்றதிகங்கோடி அருளி னேஞ்சந்திரனிறமதுவுங்காணும், தடுத்துவொருபணவிடைதான்சிவ கங்கைதன்னில்தானுமதையெடுத்து மண்டலங்கொண்டிட்டால், கடு த்துக்கொள்ளாதேயிதுபரமபதஞ்சேர்வாய் கைலாசமுத்திதனைச்சேர் க்குமிதுவாமே. (624)

சேர்க்குஞ்சிவகேந்திர பூபதிகற்பஞ் செகத்திலேதேறும்பேர் கொண்டிட்டாலேயா,ஆர்க்குங்கிடையாதரிதாகுமிதுபாருஅருளினேம் சட்டைதொண்ணூற்றாறுமதைக்கழட்டும், பூர்க்குமிதுகற்போலாஞ் சடலமதின்வாழ்க்கை பொன்னிறமதுபோலாம்பூபதியிதாகும், கார்க் குங்காயாதிகற்பமிதற்கீடோ கனயுகயுகாந்தரங்கடத்தேறலாமே. 625

ஏறலாஞ்சிவசத்திசுண்ணமதைச்சொன்னேம் என்போலேபா சொன்னாரசுவனிதான்சொன்னார், தேறலாமசுவனிதன் னூலதனைப்பார் க்கும் திரட்டாயிரத்தைந்நூறதிசயத்தைக்காணும், பாறெலாந்திரிந்தா லுமகத்தியனூல்போல பாடல்கிடையாதரிதாகுமிதுபாரு, சேறேநீ பெண்மாய்கையோனிதனைவிட்டால் செய்வினையணுகாதுதீவினைதான் போமே. (626)

போமப்பாபுலத்தியனேசிவகேந்திரம் பூபதிகற்பமதைப்புகட்டி னேம்பார், காமப்பாசொல்லிவிட்டோம் சௌமியம்போலுண்டோ சுவசித்தர்பாடியதோர் நூல்களுக்கெல்லாம், காமப்பாயென்னூலுக ரைகாணாது கருவெல்லாந்திறந்துயின்னூல்குருவாய்ச்சொன்னேம், ஏமப்பாயிந்நூலுமரிதையாகே கெடுத்தோயேயாயிரத்துயிருநூறுமே.

## அகோரகாலாக்கினியின் கற்பம்

ஆமேதானின்னமொருகுருவைக்கேளுஅகோரகாலாக்கினியின் கற்பங்கேளு, காமேதான்சொல்லுகிறோம் சிவமூப்பிருபலந்தான்காத சத்திசிவமூப்புயிருபலந்தானையா, தேமப்பாபீங்கானிலிருமூப்புபுட

மிட்டு விளங்கவேசிவகங்கைசத்திகங்கை ஓமேதானெவ்வொன்றாயிரு
பலந்தானிட்டு உசிதமென்றசிவசுண்ணஞ் சத்திசுண்ணங்காணே. ()

காணுகின்றவொவ்வொன்று பணவிடைதானிட்டுக் கருவான
குருசெயநீர்தேசிசெயநீர், தோணுகின்றகிளிசெயநீருசிசெயநீர் செய
லானரோமசெயநீர்விதம்பணவிடைதான், ஆணுகின்ற சிவமுப்புசெந்
தூரம் பணவிடைதான் அருளானசத்திசெந்தூரம் பணவிடைதான்,
காணுகின்றயிதுவெல்லா மொன்றாயிட்டு நல்லகரமதுவாலேமத்திப்
பாயே. (629)

## மதனப்பால்

மத்திக்கவயணமென்ன சொல்லக்கேளு மைந்தனேகரம்பட்
டால்வெந்துபோகும், கெத்தித்துச்செவ்வாமணக்கிலைச் சார்பிழிந்து
கிருபைபெறமுழங்கைதூரம்பூசிநீயும், அத்தித்து அச்சாற்றில் மூன்
றுபலங்கண்டு அருளினதோர்வலைகயதனிலொன்றாய்ச்சேர்த்து, கத்
தித்துக்கூட்டிநீ மத்தித்தாக்கால் கருநாகப்பழமதுபோற்கற்பமாமே.

## கற்பலேகியம்

ஆமப்பாகற்பமென்ற கருவைக்கொண்டு அருளினதோரவிதனி
லேயரைச்சாமம்வைத்தால், வாமப்பாலருவியது கசிந்துபாயு மகத்
தானவருவியடாமதனப்பாலு, நாமப்பாசொல்லிவிட்டோமப்பாலைத்
தான் நலமானசீஷாவிற்பதனஞ்செய்து, சேமப்பாலடியில்நின்ற வ
கோரகாலாக்கினைதான் செயகற்பந்தனையேமதியில்வையே. (631)

## சிவயோகவாசி.

வைத்துநீமதிதனிலேயிருநாழியானால் மகத்தானலேகியம்போல்
வருதலாகும், பைத்துமேயப்பாகங் கண்டாயானால் பரிவானசுரைப்
பரண்டில் பதனஞ்செய்து, கைத்துமேசிவயோகக் குகைக்குள்ளேகி
நலமானபிராணாயபீடஞ்சென்று, கைத்துமேகற்பமதை யருகில்வைத்
துக் கண்ணாடிச்சுழிமுனையில் மவுனங்கொள்ளே. (632)

## மகேசுரதெரிசனம்.

கொள்ளவேவாசியுதனாலேயையாகும்பித்து அங்கென்றுகும்பித்
தாக்கால், அள்ளவேரேசகத்திற்பாய்ந்தாயானால் அறுகோணமயேஸ்
வரத்தின்பீடங்காணும், வள்ளவேமனதிலெண்ணி மவுனங்கொண்டு
மகத்தானமகேஸ்வரனைத் தெரிசிப்பாய்நீ, கள்ளமேசொல்லவில்லை
கற்பபூசை கருணைபெறமெய்ஞ்ஞான பூசைசெய்யே. (633)

## மவுனபூசைசாபநிவர்த்தி

செய்யப்பாபணிச்சென்று சோதிகாணுஞ் செகச்சோதியொளி
வில்நின்றுதெரிசிப்பாய்நீ, மையவேமவுனப்பால்பூசையாச்சு மகத்
தானகற்பசாபநிவர்த்திகேளு, ஐயவே-அறிம்-இறிம்-இலியும்-சவ்வும்-
ஐயும்-யங்குஷாயாவென்றுமவுனமேவி, நையவேபிராணபம் கும்ப
கத்திலேஇத் தம்பித்துலட்சமுருச் செபித்துப்பாரே. (634)

பாரப்பாசெபித்தையென்றால் சொல்லக்கேளு பரிவானசாப
மெல்லாம் நிவர்த்தியாச்சு, காரப்பாகற்பங்கள்பலிதமாகுங் கைலாச
முத்தியருள் பெறுவாய்நீயும், ஆரப்பாவறிவார்களிந்தகற்பம் அருளி
னேமுன்னோர்கள்சாபம்போச்சு, வேரப்பாயிந்தகற்பஞ்சடலத்திற்கு
வெகுகோடியுகாயுசுங் திரங்கள்காணே. (635)

காணப்பாயகோரகாலாக் கினியின்கற்பங் கருவானகற்பமதிற்
பணவிடைதான்கொண்டு, ஆணப்பாமதனப்பால்பணவிடைதான்கொ
ண்டு அடவாகமத்தித்துகாவிலேற்றி, கோணப்பாவாராமல் மண்டலந்
தான்கொண்டால்கூறினேம்வாசியதையிழுத்துக்கட்டும், தோணப்பா
தொண்ணூற்றுற்சட்டைதள்ளுந் தேகவச்ரகாயமதாயாக்குந்தானே.

ஆக்குமப்பாவாதாரம் நிலைத்துப்போகும் ஆயுசுதான்வளர்ந்தே
போ மவுனியாவாய், தாக்குமப்பாதராதங்கள் கடந்தேபோவாய்சதா
கோடியுகமளவும் யோகஞ்செய்வாய், நாக்குமப்பாயிக்கற்பங் கொண்
டாலையா கமனே துநாட திலேசித்தனுவாய், வாக்கமூர்தஞ்செயசித்தி
கற்பத்தாலே வாழலாங்கோடாகோடி யுகங்கடானே. (637)

தானென்றகற்பத்தாலட்டசித்துமாகுந் தாக்சானவறுபத்துநான்
குசாக்காடும், வேனென்றவேவதையிலேயனந்தமாடும் வெள்ளிபொன்
னுடதிலே காடாகப்போகும், நானென்றஞானசித்தி யிதனாலாகும்
நலமானசரக்கெல்லாஞ் சுண்ணமாகும், வானென்றசெந்தூரமெழுகு
மாகும் வாதமெல்லாமிதனாலே செயமாமென்றே. (638)

செயமானயோகிகட்குமின்னூல்வேணுஞ்செயலானஞானிகட்கு
மின்னூல்வேணும், மயமானமவுனிகட்குமின்னூல்வேணு மகத்தான
சித்தருக்குமின்னூல்வேணும், தயமானதவசிக்குமின்னூல்வேணுந்
தபோதனர்க்குமுனிகளுக்கு மின்னூல்வேணும், வியமானரிஷிகளு
க்குமிந்நூல்வேணும் வேதாந்திபாவோர்க்கு மிந்நூல்தானே. (639)

தானனவாதிகட்குமின்னூல்வேணுந் தருவானபண்டிதற்குமின்
னூல்வேணும், காரணகாரியக்குருவுக்குத்தான் காரணக்குருவுக்கு

மின்னூல்வேணும், தேனைதேறும்போதேருதோர்க்குந் தெளிவோர்க்குமின்னூலுவேணும்பாரு, கோனைகுருவின்மொழி சௌமியக்தான் குவலயத்தில்சாகரமென் றிதற்குப்பேரே. (640)

## அண்டகாயாதிகற்பம்.

போரானயகோரகாலாக்கினியின்கற்பம் பேசினேன்மின்னமொரு செய்திகேளும், ஆரானயண்டகாயாதிகற்பம் அருளுகிறேன்புலத்தியனேயடவாய்காளும், தேரானதெளிவுள்ளோரறிந்துபாரு தேகவதின்சட்டையெல்லாங்கழட்டுங்கற்பம், பாராய்நீபுலத்தியனே யிந்தகற்பம் பாடுகிறேன்கருக்கிடையாய்ப் பாடக்கேளே. (641)

கேளப்பாயத்தினியினண்டமதுபத்துசிறுபையென்றசங்கினியினண்டமதுபத்து, தேளப்பாசித்தினியினண்டமதுபத்து தெளிவானபத்மினியினண்டம்பதினொன்று, நாளப்பாசுற்பத்தொன் றண்டங்கொண்டு நலமானபீங்கானில்காதம்வித்துவாங்கி, கோளப்பாயண்டமதின்சவ்வதனைப்போக்கி கூறினேனண்டமதின் கோரைதனைப் போக்கே. (642)

## அண்டசவ்வு அண்டகோரைபோக்கவும்.

போக்கியேகல்லுரலிலண்டமதுவிட்டுப் புகழாககாதவிந்தையெடுத்ததனிலிட்டு, ஏக்கியேயிருப்புலக்கைகொண்டுநாட்டி இணைவிடாமிருசாமஞ்சாடினலையா, ஆக்கியேகடுஞ்சூலுமாவழிபோலாகும் அம்மாவைத்தோண்டியொரு பாண்டமதிலிட்டு, சேக்கியேசிவகங்கைபடியொன்றிட்டுச் சிவசத்திசுத்தசலம் படியொன்றுவாரே. (643)

வார்த்துகரமதனலேகரைத்தம்மாவை வடிகட்டிமறுபாண்டமதனிலிட்டு, மார்த்துமக்காள்முழுதும்வைத் ததனைமைந்தா மறுகாளில்பாண்டமதை யெடுத்துநீபார்த்தால், சேர்த்தப்பாபாண்டமதில்தெளிவதுவுநீராம் செயமானநீரதனை மறுபாண்டந்தன்னில், கார்த்துசலம்விட்டதிலே யடுப்புமேலேற்றிக் கருங்காலிவிறகதனல் தீமூட்டுவாயே.

மூட்டியேமுச்சாமக் கினியைமூட்டி முனைவிடாரவிசிதரு தெரித்தாயானல், வாட்டியேநீரெல்லாம் வற்றிப்போகு மாமெழுகாகுமது பாவதுபோல்காணீர், ஏட்டிலேயிவ்வண்ணஞ் சொல்வரோதான் இறக்கியேபாண்டமதைச் சருகாமலையா, நாட்டியேபாண்டமதை யாறவைத்து நலமானபீங்கானிற் கலையாமற்போடே. (645)

## காயாதியமுர்தம்.

போடப்பாயம்மாவு மெழுகதனையையா புகழாகபீங்கானிற் போட்டுநீமைந்தா, சூடப்பாசிவகங்கை சிவசத்திகங்கை சொல்லுவோ

மொவ்வொன்றுபலம்வீதமாய்வாரு, நாடப்பாலூசிசெயநீர் பணவிடை
தான் நலமானரோமசெயநீர் பணவிடைதான், வாடப்பாகுருசெயநீர்
இனிசெயநீரையா வசனிப்போம்பணவிடைதான் வார்த்திடீரே. ()

வார்த்திடீர்தேசிசெயநீர் பணவிடைதான் மதிசெயநீரவிசெயநீ
ரதுவுமிப்படிதான், சேர்த்திடீர்சிவமுப்புச்சுண்ணம் பணவிடைதான்
சிவசத்திமுப்புசுண்ணம் பணவிடைதான்சேரு, ஆர்த்திடீர்சிவசெந்
தூரம் பணவிடைதான் அருளானசத்திசெந்தூரம் பணவிடைதான்,
கார்த்திடீர்பீங்கானி லிவ்விதமெல்லாஞ்சேர்த்து கரமதனால்முன்போ
லே மத்திப்பாய்த்தானே. (647)

மத்தித்துக்கூட்டிபத மாக்கியையா மகத்தானரவிமுகம்சாமம்
வைத்திட்டால், கத்திந்துக்காயாதி யமுர்தமிறங்கும் கருவானசீஷாவி
லெடுத்துவிட்டு, கொத்தித்துக்குருவினடி போற்றிப்பூசித்துக் குரு
வானவமுர்தமதைப் பதனஞ்செய்து, பெத்தித்துப்பீங்கானி லடியில்
நின்ற பேரானகாயாதி கற்பமதுகேளே. (648)

## சிவன்சொல்ல உமைகேட்க உபதேசம்.

கேளப்பாயவ்வடியில் பீங்கானில்நின்ற கெவுனமெழுகாயாதி
யண்டலேகியமாம், காளப்பாகருநாகப் பழமதுபோற்காணும் காயா
திகற்பமதை மதிதனிலேவைப்பாய், ஆளப்பாயரைச்சாமஞ்சென்
றதனையெடுத்தால் அதுவென்னவெகுபெருமை யாருஞ்சொல்லார்,
கேளப்பாமுப்புறமெரித்தசிவன் சொல்லவெகு விசுத்தியுமையவளும்
விளங்கினள்பாரே. (649)

விளங்கினள்நந்தியவர்க் குபதேசஞ்சொன்னாள் விபரமதாய்நந்தீ
சர் தன்வந்திரிக்கருள, வழங்கினார்தன்வந்திரி பகவானுமையா வச
னித்தாரசுவனி தேவருக்கருள, உளங்கினாரசுவனி தேவர்தானு முப
தேசமெந்தனக் கருளினார்பார், புளங்கிஞேமென்பெய ரகத்தியன்று
னையா புலத்தியனேயுந்தனுக்குப் புகட்டினேம்காமே. (650)

## கற்பூசை யமுர்தபூசை மவுனபூசை.

புகட்டினேமென்னவென்றால் புலத்தியனேயையா பூதலந்தன்
னிலே தேறும்பேர்க்கெல்லாம், புகட்டினேங்காயாதி லேகியந்தன்
னைப் புகழானசுரைப்பரண்டில் பதனஞ்செய்து, புகட்டினேஞ்சிவ
யோகஞ்செய்யும் குகைதன்னில் பேரானவமுர்தலேகிய மிரண்டுமை
யா, புகட்டினேம்பிராணய பீடஞ்சென்று பேரானவாசிகொண்டிழு
த்துத் தம்பிப்பாயே. (651)

கொண்டுநீவங்கென்று ரேசகமொட்டி கூறுஞ்சுழிமுனையருகே மன்னக் கண்ணைநாட்டி, கொண்டுநீயங்கென்று தம்பித்தாயானால் குருவினடிதெரிசனமாகும் புலத்தியனே, கொண்டுநீகும்பகம் பூரகம் பாய்ந்து குருபூசைபரபூசை சிவபூசைசெய்தால், கொண்டுநீயமூர்த லேகியமதற்கையா கூறினேமௌனபூசை யதுசெய்யே. (652)

## சாபநிவர்த்தி.

செய்துநீயகண்டகா யாதிகற்பம் செயசித்தியாவதற் கருளுவோம்பார், செய்துநீயச்சாப நிவர்த்தியைக்கேளு செப்புகிறேன்ஓம்சிறிம் கிறியும் மூன்றெழுத்தை, முய்துநீமும்மூலம் வாசியதையொட்டி மூர்க்கமதாய்ப்பிராணயங் கொண்டுநீயப்பா, நைதுநீயித்தியானம்லட்சமுருச்செபி நவசித்தாள்சாபமது நிவர்த்தியாச்சே. (653)

## மண்டல முண்ணவும்.

ஆச்சுதேகாயாதிகற்பமதற்கையா அருளினேம்சாபங்கணிவர்த்தியாச்சு, பேச்சுதேசிவயோகஞ் செய்யுங்காலம் பேரானகாயாதிகற்பம் பணவிடைதான், வாச்சுதேகாயாதியமூர்தம் பணவிடைதான் மத்தித்துக்கரமதனுற் கூட்டியேசென்று, ஒச்சுதேயோங்கார மூலசுழியேகி யொருமித்துமண்டல மிருபோதுண்ணே. (654)

உண்ணயிலேரவிமதி யிதுபோதுண்டா லுடற்கூடுபுறக்கூடு மூலக்குடையா, அண்ணயிலேசெய்வினை கன்மக்கூடுந்தான் அற்றுப்போமொருபோது அன்னமுண்டு கண்ணயிலேகனயோகஞ் சிவயோகஞ் சித்தி கருதவேஞானமெஞ்ஞான மதுசித்தி, மண்ணயிலேமண்டலமுமுண்டபோதையா மகத்தானதோற்சட்டை கழன்றிடுந்தானே. ()

## நமனுக்கு நமனவாய்.

ஏறலாமண்டமிரு பதுகொண்டால் யெமன்பார்வையற்றுபோம் நமனுநீயாவாய், ஏறலாயிந்தக்காயாதி யுண்டோர்கள் இயல்செல்வபூபதியென் றறைபலாம்பார், கோறலாமண்டலங்கொண்ட போதையா கொடியவயதாகிலுங்காயம்பிலப்படுங்காண், பாரெலாந்திரிந்தலையாதே யிந்நூலைப் பார்பாடினேம்சௌமிய சாகரமிதாமே, (656)

## குன்றின்மணிப்பிரமாணம் கொண்டபேதே சட்டைகழட்டும்.

ஆமென்றகுன்றின்மணிப் பிரமாணங்கொண்ட லதீதமென்ற போதையாவோர்சட்டைகழலும், தாமென்றகுன்றிமணி தொண்ணூற்றாறுண்டால் தோற்கருவிதொண்ணூற்றாறுமுறியும்பாரு, தாமென்ற

குன்றிமணிநூறுமணியுண்டால் நண்மையதுவாகிலும் நூறுகோடி வயதாம், பாமென்றபத்துநூறுகுன்றிமணியுண்டால், பாடினேம் லோகாதிகர்த்தரீடாமே. (657)

ஆமேபுலத்தியனேநாமாயிரமணிதான் அடவாகக்கொண்டுநாம் பொதிகையகஞ்சேர்ந்தோம், தேமேதெட்சணப்புறங்கர்த்தனுமானே ம்திசையுகாயுகாந்தாம் புவனங்கள்பாய்ந்தோம், நாமேபுலத்தியனே கேளநந்திசர்கற்பம் நன்றாகமூந்நூறுமணியுண்டார்பார், தாமேதன் வந்திரிபகவானுமையா தனதாகவதிற்பாதியுண்டார்கள்பாரே. (658)

## பஞ்சநாதாக்கள் தொகுப்பறியவும்.

பாரப்பாயசுவனிதேவரையாகேள் பண்மைபெறவதிற்பாதியுண் டார்களையா, ஆரப்பாவவர்களுடதபோபலத்தாலே ஆயுசுமிகப்பெரு கவளர்த்தினரையா, நாரப்பாகற்பத்தால் கனயோகஞ்செய்தோம் நவ கோடியென்னுடையசீஷர்தாணையா, காமப்பால்மாய்கைதனை விட்டா லையா கருதவேவெகுநாலம்வாழ்ந்தார்கள்பாரே. (659)

## சிவன்கொண்டகற்பம் பாஷாணகற்பம்.

வாழ்ந்தார்கள்சிவன்கொண்ட கற்பமதைக்கேளு வசனிப்போம் ரவிசெயநீர்மூன்றுவாங்கி, நாழ்ந்தார்கள்பீங்கானிற்செயநீர்விட்டு நல மானபாஷாண மெழுகுசேரண்டு, சாழ்ந்தார்கள்சிவகெங்கை பலமஞ் சிட்டு சரக்கொன்றைசாரதிலேமூன்றுபலமிட்டு, கேழ்ந்தார்கள்குரு செயநீர்பலமைந்துவாங்கி கெடியானகடுக்காய்தான்பலமாறுபோடே.

போட்டதிலே சாமமொன்றாறவைத்தாக்கால் பொடியாகுமத னுடையவேகம்பட்டடைபா, காட்டிநீயப்பொடியைப் பீங்கானிலிட்டு நாகசத்திமுப்புசுண்ணம்பணவிடைதான்போட்டு, காட்டதிலேபோ ட்டுநீமத்தித்தாயானால் கருநாகப்பழமதுபோலாகும்பாரு, சாட்டுநீ விதனிலேவைத்துநீசாமம ஙசதன்னியப்பாஷாணகற்பமெடுத்தாடே.

## மண்டலமிருபோதுண்ண.

ஆடுவாய்சிஷாவிற்பதனமதாய்வைத்து அடவானகனயோகஞ் செயுங்காலந்தன்னில், தேடுவாய்பிராணயபீடஞ்சென்றையா தெளி வாகவங்கென்றுதம்பித்துப்பூசி, நாடுவாய்குன்றிமணிப்பாஷாணகற் பம் நலமானசிவகெங்கைசலந்தனிற்குழைத்து, சாடுவாய்நாவினிலே யெத்தியுட்கொள்வாய் சார்பாகமண்டலமிருபோதுகொள்ளே. (662)

கொள்ளவேசிவன்கொண்டபாஷாணகற்பங் குருவானகற்பம தைக்கொண்டிடும்போது, துள்ளவேதொண்ணூற்றாற் கருவிகளுந்

தோன்றும் துதிபெறவேகட்டிடும்வாசியதைக்கட்டும், கள்ளவேதேக மதிற்சட்டதனைப்போக்கும் நவநீதமதுபோலேதேகமிரமாகும், மன் ளவேமண்டலமிருபோதுகொண்டால் மகத்தானயுகாயுகங்கடந்தேற லாமே. (663)

## சிவசத்திகொண்டகற்பம்

ஏரலாமீறாறுபனிரண்டுவகையு மியல்பானபாஷாண கற்பமிதனு லே, தேறலாஞ்சிவன்கொண்டகற்பமிதாகுஞ் செயலானவுமைதேவி கொண்டகற்பங்கேள், சேறலாம்பரமபதஞ்செயசித்தியாகுஞ் சிவசத் திகற்பதைச்சொல்லக்கேளையா, பாறலாந்திரிந்தலையாதே நீகேளும் பண்மைபெறும்பெரியோர்கள் சொல்லுமொழிவாக்கே. (664)

## வாலை ரசம்.

வாக்காயுமைதேவிகொண்டகற்பங்கேள் வசனிப்போம்வாலைரச மெழுகுசேரிரண்டு, நாக்கானவாலைரசகற்பமதாற்செய்வார் நாம்செய் வோம்புலத்தியனேநன்றாகக்கேளும், சாக்கான ரசமெழுகுபீங்கானி லிட்டுச் சார்வானசிவசத்திகங்கைபலமஞ்சு, ஆக்கானவாணகெங்கை பலமூன்றிட்டு அருனிலேனும்ரோமசெயநீர் பலமொன்றே. (665)

## குருசெயநீர் ஊசிசெயநீர்.

ஒன்றானகுருசெயநீர்பலமொன்றுவாறு ஊசிசெயநீர்பலமேகோ கோவாறு, அன்றானகிளிநீர்பலமொன்றுவாறு அடவானமதிசெயநீர் பலமொன்றுவாறு, சென்றானரவிசெயநீர்பலமொன்றுவாறு தேசி செயநீர்பலந்தெளிவாகவாறு, மூன்றானவமுர்தமதிசேர்கொண்டுபீங் கான் முளகுசேரதிலிட்டுவூறவைப்பாயே. (666)

ஊறநீமிளவதனை வைத்தீராகில் ஓர்சாமம்மதற்குள்ளே பொடி யாகும்பார், ஆறவைத்ததனையேயெடுத்துநீயப்பா அருனினதோர்முன் சொன்னபீங்கானிலிட்டு, ஏறவைத்தெழுத்தாணிபச்சிலைச்சாறு இயல் பாகப்பலமூன்றுபீங்கானிலிட்டு,கூறவைத்ததனையேமத்தித்துக்கூட்டி குருவானரவிதனிலேவைத்திடீர்தானே. (667)

வைத்திடீரொருசாமம் வைத்தீராகில் மலைமஞ்சனிறமது போ லேயாகும், ஐத்திடீரவிதனையே யெடுத்துநீயப்பா அடவானசீஷாவிற் பதனஞ் செய்தையா, கைத்திடீர்பிராணுய பீடஞ்சென்றையா நவிலு வோம்அங்கென்று கும்பிப்பாய்நீயும்,செத்திடீரேசகங்கொண் டங்கே யோடுஞ் செயலானவாசியைச்சிங் கென்றுநாட்டே. (668)

## சாயுச்சியபதவி.

நாட்டியேசிவயோகஞ் செயுங்காலந்தன்னில் ரசமெழுகுவாலை புட கற்பமதைக்கொண்டு, பூட்டிடுகுன்றுமணி மண்டலமிருபோது துறுதிபெறுஞ்சிவசத்திகெங்கை பணவிடையில், சாட்டிடுமத்தித்து நாவதனிலேற்ற சட்டையதுதொண் ணூற்று மதாகமுட்டும்,மீட்டியே நாளொன்று மிருபோதுண்டால் மேலானசாயுச்சியபதவிபெறுவாயே.

## நந்தீசர் கொண்டகற்பம்.

பெறுவதற்கின்னமொரு கற்பமதைக்கேளும் பேரானநந்தீசர் கொண்ட கற்பங்கேள், அறிவதற்கின்னமொன்று சொல்வோமையா அவர்கொண்டகற்பமது யார்கொண்டார்பார், நறுவதற்கருளுவோம் நந்தீசர்கற்பம்நாம்சொல்வோம்புலத்தியனேநன்றாய்க்கேளு,வெறுவத ற்கருளுவோம்வீரமெழுகையாவிளங்கவேயிரண்டுசேர்கொண்டுபாரே.

கொண்டுநீவீரமெழு கற்பமதைக்கேளுங் குருவானநந்தீசரவர் மகிமைமெத்த, கண்டுநீபீங்கானில் வீரமெழுகிட்டுக் கருவானசிவகங் கை பலமாறுவிட்டு, அண்டுநீசிவசத்தி கெங்கைபலமஞ்சு அடவான குருசெயநீர்பலந்தான் யெழுகோர்பலந்தான், துண்டுநீபோகாமலே யச்செயநீர்பலந்தான் துருவானரோமசெய நீருபலமொன்றே. (671)

## நந்தீசர்கற்பம் சாமீபம்பெறுதல்.

ஒன்றானயன்னீரு மெழுகுபலமொன்று ஓகோகோகினிசெயநீர் பலமொன்றுவாரு, நன்றானயன்னீரு மெழுகுபலமொன்று நலமான கெந்திசெயநீர் பலமொன்றுவாரு, குன்றுமலன்னீரு மெழுகுபல மொன்று கூறினேம்ரவிசெயநீர் பலமொன்றுவாரு, சென்றானயன்னீ ருமெழுகுபலமொன்று செயலானமதிசெயநீர் பலமொன்றுவாரே.

வாரப்பாரவிமெழுகு பலமொன்றுபோடு வசனிப்போம்மூசிநீர் பலமொன்றுவாரு, ஆரப்பாயதன்மெழுகு வொன்றுபோடு அடவான முப்புசுண்ணம் பணவிடைதான், பாரப்பாசிவசத்திசுண்ணம் பண விடைதான் பரிவானசிவசெந்தூரம் பணவிடைதான், நாரப்பாசிவ சத்தி செந்தூரமப்படிதான் நவிலுவோஞ்சீதேவி சாறுபலமூன்றே. ()

மூன்றானயச்சாறு பீங்கானில்வார்த்து மூசிநீர்பலமஞ்சில்சேங் கொட்டைகேளு, ஆன்றானயக்கொட்டை பலமெட்டுவாங்கி அந்நீரில் நாள்முழுது மூறினாலையா, தூன்றானபொடியாகு மப்பொடியைத்தா னும் துதிபெறவேயவ்வகையி லொன்றாகச்சேர்த்து, கன்றாகமத்தித் துக்காமதுவாற்கூட்டி கருதவேரவிமுக மிருசாமம்வையே. (674)

## தன்வந்திரியுண்டகற்பம்.

வையப்பாயிருசாமம் வைத்தீரேயாகில் வளமாகசங்குமிற மது போலாரும்; பொய்யப்பாபுலத்தியனே சொல்லவில்லைபாரு புகழான லேகியம்போ லதுவுமாகும், ஐயப்பாநீபாகங் காண்பீரேயாகில் அப் பிங்கான்லேகியத் தடவதனைக்கொண்டு, மெய்யப்பாசீஷாவி லேகிய மிட்டு மேல்பிரடைபோட்டுநீ மேவிநிற்பாயே. (675)

மேவுவாய்வீரமெழு சற்பமதைக்கொண்டு மேலானசிவயோகஞ் செயுங்காலத்தில், பேவுவாய்பிராணுய பீடமேசென்று பேரானசுழி முனையில் வாசிகொண்டிழுத்து, ஆவுவாயங்கென்று ரேசகமொட்டி அதுகடந்தப்பாலே பூரகம்பாய்ந்து, நாவுவாய்கும்பக மூலமருகேகி நண்பாகமவுனகுரு பீடமதுகாணே. (676)

சாணவேசிங்கென்று கும்பகம்பாய்ந்தால் கருதவேகுருவினடி காணும் புலத்தியனே, தேணவேதெரிசித்துப் பூசித்தாயானல் தெளி வாகசெயசித்தி யாகும்புலத்தியனே, தேணவேவீரமெழு கற்பமதைக் கொண்டு விளங்கவேமண்டல மிருபோதுமை, கூணவேகுன்றிமணிப் பிரமாணமையா குருவானசிவகெங்கையதனில்குழைத்திடரே.(677)

குழைத்ததைநாவதனி லேற்றிவையையா கூராகமண்டலமுண் டீரேயாகில், தழைத்தசடமேற்றோலு சட்டைதொண்ணூற்றூறு தரு வாகக்கழட்டிடுந் தங்கம்போற்றிரேகம், அழைத்ததொருபிராணுய வாசியதுதானும் அடங்கியேயொருமித்து வொடுங்கியதுபோச்சு,பழை த்தவாதாரமே லாதாரமாகில் பனிரண்டுமொடுங்கியே பண்மைபெறுந் தானே. (678)

பண்மைபெறுமண்டல மிருபோதுங்கொண்டால் பரிவானவாயு ளுக்கழி வில்லைமைந்தா, தண்மையிதுகொண்டு தபோபலமாகில் தரு விக்கும்யுகாயுகந்திரங்கள் நிலைகாண்பாய்,வண்மையிதுவீரமெழு கற்ப முண்டாக்கால் வாதசித்திகைகூடிமிது மிகவும்பாரு, நண்மைபெறும் நந்தீசருண்டகற்பந்தான் நாம்சொன்னேம்சாமீப நளினமிதுவாமே.

## சாதிலிங்கமெழுகு.

வாமென்றதன்வந்திரியுண்ட கற்பங்கேளும் வசனிப்போம்புலத் தியனே வண்மையிதுபாரீர். நாமென்றசாதிலிங்க மெழுகுகற்பம் நவி லுவோம்நன்றாக நளினமிதுவாகும்,பேமென்றபீங்கானி லிங்கமெழுகு கேளு பேராகரெண்டுசேர் கொண்டுமையாகேள், ஆமென்றபீங்கானி லிங்கமெழுகிட்டு அடவானசிவகெங்கைபல மஞ்சுவாரே. (680)

அஞ்சானசிவசத்திகெங்கைபலமஞ்சு அருளினேம்ரோமசெயநீருபலமொன்று, வஞ்சானயதன்மெழுகுபலமொன்றுவாரு வகையானகுருசெயநீர்பலமொன்றுவாரு, கஞ்சானவதன்மெழுகுபலமொன்றுவாரு கருவானகிளிசெயநீர்பலமொன்றுவாரே, நஞ்சானதேசிசெயநீர்பலமொன்றுநவிலுவோமிதின்மெழுகு பலமொன்றுபோடே. (681)

பலமானவூசிசெயநீர்பலமொன்று பரிவானவதன்மெழுகுபலமொன்றுபோடு, சலமானரவிசெயநீர்பலமொன்றுவாரு சார்வானவதன்மெழுகுபலமொன்றுபோடு, அலமானதிதிசெயநீர்பலமொன்றுவாரு அதன்மெழுகுபலமொன்றுவளமாயதிற்போடு, வலமானமதியமூர்தம் ரவியமூர்தமப்பா மடவாகவொவ்வொன்றுபலம்போடுவாயே.

போடுவாய்சிவசுண்ணம்சிவசத்திசுண்ணம் புகழானசெந்தூரஞ் சிவசெந்தூரம், ஆடுவாயொவ்வொன்றுவீதம்பணவிடைதான் அடவானசிறியானின்நங்கையின்சாறு, சாடுவாய்முப்பலஞ்சாற்பிழிந்தையா சைதன்னியமாகவேபிங்கானிலிட்டு, வேடுவாயிவ்வீதமொன்றாகச் சேர்த்து விளங்கவேலிஞ்சிசேர் விசிதமதாய்க்கொள்ளே. (683)

கொள்ளவேயிஞ்சிதனை ரவியுலரவைத்துக் கூறாகக்கல்லுரலிற் குணமாகயிட்டு, வள்ளவேயிருப்புலக்கைகொண்டுமேயையா மாசிதறயிடித்துமேதூளதாக்கிமைந்தா, முள்ளவேமுன்சொன்னபிங்கானிலிட்டு மூதண்டமாகவேமத்தித்துக்கூட்டி, கள்ளவேயில்லையிதுரவிசாமம் வைத்தால்கருதசிவசெழுமைமிற கற்பமிதுவாமே. (684)

இதுவானசாதிலிங்கமெழுகுகற்ப மிபம்பிணைஞ்சிசாவிற்பதனஞ் செய்து, அதுவானசிவயோகஞ்செயுங்காலத்தில் அடவானபிராணயவாசிதனையொட்டி, சதுவானரேசகஞ்சிங்கென்றுநாட்டிச் சம்பிரமதாகவேமவுனகுருபீடம், நதுவாகத்தம்பித்துக் கும்பித்தாயானால் தருவாகமவுனகுரு தெரிசனமாமென்றே. (685)

## சிவயோகம்பூசித் தடிபணிதல்

தெரிசித்துயங்கென்றுகும்பகமேவித் தெளிவாகலிங்கமெழு கற்பத்துக்கையா, அரிசித்துப்பூசித்து அடிபணிந்தாகில் அடவானசித்திமுத்தியங்கேயெய்தும், பரிசித்துச்சாதிலிங்கமெழுகுகற்பம் பரிவாகக் குன்றிமணிப் பிரமாணங்கொண்டு, தெரிசித்துச் சிவகெங்கைபணவிடைதன்னில் கிருபையதாய்க்குழைத்துநீ மண்டலங்கொள்ளே. ()

கொள்ளவேமண்டலமிருபோதுங்கொண்டால் கூரானசடலமிதற்கழிவோயில்லை, துள்ளவேதொண்ணூற்றாற்சட்டையுந்தான் தொகு

திபெறமண்டலத்துரித்தங்கேபோகும், வள்ளலேவாசியதையிழுத்தங்
கெகட்டும் வசனித்தோம்தேகமதுகற்போலாகும்,தெள்ளவேதேகவச்
சிரகாயமாகும் செணப்போதிற்காயசித்துவதுவாமே. (687)

வாகுமேமண்டலமிருபோதுண்டால் வாழலாம்யுகாயுகாந்திரங்
களிதுவாகும், சாகுமேபிதுர்க்களெல்லாமோடிப்போகுஞ் சாயுச்சிய
பதவிவந்தெய்துமிதுபாரு, நாகுமேநவநீதமமுர்தமதுபாயும் நலமான
குளிகையதுசித்திக்கும்பாரு, ஆகுமேதன்வந்திரி கொண்டகற்பந்
தான் ஆர்செய்தார்நாம்செய்தோ மவர்செய்தார்பாரே. (688)

செய்தவொருதபோபலமிருந்தேயாகில் சித்திக்குஞ்சாதிலிங்க
மெழுகுகற்பம், கைதவோருகற்பத்தால்நவகோடிசித்தர் நலம்பெறவே
காயசித்தியதுவானார், எய்தவொருயிக்கற்பம் நன்றாய்ச்சொன்னோம்
யென்குருவசுவனிதேவருடகற்பம், பொய்தவொருபூமலர் வாசமது
போலப் புகழாகவசனிப்போம்புலத்தியனேகேளே. (689)

## அசுவனிதேவருண்டகற்பம் கெந்திமெழுகுகற்பம்.

கேளென்றவசுவனிதேவருண்டகற்பம் கெடியானகற்பமதைக்கி
ருபையதாய்க்சொய்வேன், நாளொன்றுஞ்செல்லாது நாம்செய்தோம்
பாருநலமானவசுவனிதேவருடமகிமை, தேளென்றகொட்டுதல்போ
லேயிக்கற்பம் செயகற்பமகிமைதனைச்செப்புவோமையா, பாழொன்
றும்வாராதுகெந்திமெழுகற்பம்பாடுகிறேன்நன்றாகப்பரிவாய்க்கேளே.

பரிவானகெந்திமெழுகிரண்டுசேர்கொண்டு பண்மைபெறும்பிங்
காணில்மெழுகதனையிட்டு, வரிவானகாந்தமெழுசேரதுதானிட்டு வள
மானதுரிசினுட மெழுகுசேரிட்டு, வரிவானதாளகமெழுகுசேரிட்டு
விதமானகுருசெயநீர்பலமொன்றிட்டு, அறிவானயதன்மெழுகுபல
மொன்றுபோட்டு அருணிஞெங்கிளிசெயநீர்பலமெழுகுவாரே. (691)

ஒன்றானயம்மெழுகுபலமொன்றுபோல ஓகோகோ ரோமசெய
நீருபலமொன்று, அன்றானமெழுகுபலமொன்றுபோடு அடவானகிளி
செயநீர்பலமொன்றுவாரு, வன்றானவம்மெழுகு பலமொன்றுபோடு
வசனிப்போமூசிசெயநீருபலமொன்று, குன்றுமலதன்மெழுகுபல
மொன்றுபோடு கூறினேம்தேசிசெயநீருபலமொன்றே. (692)

நீரானவம்மெழுகுபலமொன்றுபோடு நீமகனேரவிசெயநீர்பல
மொன்றுவாரு, மாரானவம்மெழுகுபலமொன்றுபோடு மதிசெயநீர்
பலமொன்றுவம்மெழுகுபலந்தான், வாரானரவியமுர்தம்பலமொன்று
வாருவசனிப்போமதியமுர்தம் பலமொன்றுவாரு,சேரானசிவகங்கை
சிவசத்திகங்கை செப்புவோமிரண்டுபலஞ் சேர்த்தங்குவாரே. (693)

## சாதிக்காய்த்தூள்.

வாரப்பாசிவழுப்புச் சுண்ணம்பணவிடைதான் வசனிப்போம் சிவசத்திசுண்ணம் பணவிடைதான், சேரப்பாசிவசெந்தூரம் பண விடைதான் சிவசத்திசெந்தூரஞ்செப்பும் பணவிடைதான், காரப்பா யழுகண்ணிச் சாறுபலமஞ்சு கருதவேவகையெல்லா மொன்றாகச் சேர்த்து, சாரப்பாசாதிக்காய் பலமாறுவாங்கி சார்வானகல்லூரலிற் போட்டங்குகாணே. (694)

காணவேசொல்லுகிறேன் மிருப்புலக்கைகொண்டு கருதவேமா வதுபோல் தூளதாயிடித்து, வாணவேவடிகட்டித் தூள்கொண்டுநீயும் மகத்தானமுன்சொன்ன முறையதனிற்போடு, சாணவேமத்தித்துக் கூட்டியேயப்பா சார்பானரவிமுகஞ் சாமம்வைத்தாக்கால், நாணவே கருநீலி வன்னமதுபோலாம் நலமானலேகியம் வருதலதுகாணே. ()

## சிவயோகபூசை.

வருதலதுகண்டுநீ பிங்கானெடுத்து வளமானசீஷாவிற்பதன மதாய்ச்செய்து, அருதலதுபோகாமல் பிராணயமேவி யங்கென்றுரே சகம் கும்பித்தாயானால், குருதலதுகாணுமது சிவயோகந்தன்னில் கும்பித்துக்குருவினடி போற்றிநீசெய்து, கருதலதுவாகவே மவுனங் கொண்டையா நந்திபதம்பணிந்துநீ பூசிப்பாய்த்தானே. (696)

பூசித்துச்சிவபூசை செய்யுங்காலத்தில்புகழாகக்கெந்தியுட கற்ப மதைக்கொண்டு, வாசித்துயிருபோது மண்டலமுறைமையா வசனித் தோங்குன்றுமணிப் பிரமாணங்கொண்டால், காசித்துகாந்தியொளிபிர சன்னங்காண்பாய் நரைதிரையுமற்றுப்போ மண்டலந்தன்னில்,பாசித் துப்பரமபத மரைகொடியிற்காண்பாய் பசுபதிபாசவுபநிட மதனைக் காணே. (697)

மதுவானகற்பமதை யுண்டுநீயப்பா மகத்தானசிவயோகம்பிரா ணயமொட்டி, வதுவானரேசகம் வாசியதைக்கொண்டு வங்கென்று யிழுத்துநீ கும்பித்தாயானால், கதுவானமுத்தியது காயம்பெலப்படும் காயசித்தியாகுமது தேகசித்தியாகும், அதுவானசடலமது கற்போலே கட்டும் ஆயுசுக்கழிவில்லையெமன் பார்வைபோச்சே. (698)

போச்சென்றகெந்திமெழு கற்பமேயுண்டால் பொன்னிறம்போ லே தேகமதுவாகும், வாச்சுதேவாதமே சித்தியதுவாகும் வாசிசித்தி காயசித்தி தானுமதுவாகும், ஏச்சென்றயெழுகுவச்சிர காயமாகும் என்னசொல்வேன்கோடா கோடிவயதாகும், தூச்சுதேதொண்ணூற்

ரூறு சட்டையதுதள்ளூர் தொகுதிபெறக்கழட்டிவிடுஞ் சுருதிசொன்னேமே. (699)

சொன்னமேகெந்திமெழு கற்பமதையா சொல்லுமசுவனிதேவருண்டகற்பந்தான், அன்னேமேயவர்கொண்ட கற்பமதனாலே அதீதமுறைகற்பங்க ளகத்தினும்கொண்டோம், முன்னேமேகொண்டதொரு முன்னோர்கள்கற்ப முறையாகச்சொல்லிவிட்டோம் பாருநீமைந்தா, வன்னேமேயின்னாலு சௌமியந்தன்னில் வசனிப்போம்வாதமுறை சவர்க்காரபோக்கே. (700)

## சவர்க்காரம் பசுமைநிறப்பூமி ஏலகிரிதேசம்.

போக்கானசவர்க்கார வைப்பைக்கேளு பூதலந்தன்னிலே பசுமைநிறப்பூமி, வர்க்கானயப்பூமி தேசமதிலுண்டு வளமானதேசமடா யேலகிரிராச்சியம், தாக்கானயக்கிரி சாரலடிவாரந் தருவானகுளமேரி மடுவுசுனிலையா, சாக்கானகிளியூற லேரியெதிர்வாயில் தன்மொழிபோல்பரவும்கிளி யானையாமே. (701)

ஆனகிளிநீளஞ் சாணஞ்சாறுகொண்டு அருளுவோமதனோடுகத்தி கொண்டெடுத்து, வானமதினையுட சவ்வதனைப்போக்கி வளமானகோரையது நஞ்சதுவும்வாங்கி, கானகிளியானையைநீ கல்லுரலிற்போட்டுக் கருதவேயிருப்புலக்கைநீ கொண்டுமேதான், மானமுடன்சாடியொருபாண்டத்திலிட்டுமகத்தானசிவசத்திகங்கையதில்வாரே.

வார்த்துகரமதனாலே கரைத்தீரேயாகில் மாக்குழம்பதுபோலே பாகமதுவாகும், மூர்த்துமுன்சொன்னதொரு சிவசத்தியுப்பு மூதண்டவுப்பதனிற் சேர்கொண்டுநீயும், கார்த்துமுன்கரைத்தகுழம் பதுவுலுப்பிட்டுக் கருதவேகுருசெயநீ ராறுபலம்விட்டு, சேர்த்துவெட்பாலை விறகுகொண்டையா செயமாகவடுப்பேற்றி யவித்திடாய்தானே.()

தானாகவவித்திட்டுச் சாமமதுவானால் தருவானபாண்டமதை யிறக்கியேநீயும், ஆனாகவப்பாண்ட மாறவைத்ததனை அதுவாகப்பார்த்ததையே யாமாகிற்கேளு,பானைப்பானையது போலேயதுகட்டும் பரிவாகவதனையே கல்லுரலிலிட்டு, ஏனைக்கிளிசெயநீர் சேர்கொண்டுநீயும் இயம்புவோமுரல்தனி லின்னீருவாரே. (704)

## ஐந்துமாதக் கடுஞ்சூல பனிக்குடம்.

வாரப்பாயன்னீரு வார்த்துக்கல்லுரலில் வளமாகயிருப்புலக்கை கொண்டுமேநீதான், ஏரப்பாசாமமது யிடித்ததனைக்கேளு இயல்பாகக்குமிறியது பிசினிபோலாகும், ஆரப்பாயப்பாகங் கண்டபோதையா

அதைத்தோண்டிப்பாண்டமதி லடவாகயிட்டு, மாரப்பாமாதகஞ்ச மதனிற்கேளு மகத்தானகடுஞ்சூலு பாலன்பனிக்குடமே. (705)

குடமானபனிநீரைச் சுத்தசலமாக்கிக் கூறுவோம்சவர்க்காரம் பாண்டமதிலிட்டு, மடமாகமத்தித்துக்கூட்டியேஜயாமலையாமற்பிசை ந்ததனையுண்டைசெய்வாய்நீ, படமானபசுமைநிற சவர்க்காரமாச்சு பாப்பிரமவஸ்ததனைப் பணிந்துபூசித்து, திடமாகச்சிவபூசையோகஞ் சாதித்துத் தீபவொளிசோதிதனில்கேமஞ்செய்திடீரே. (706)

## பிராணயபூசை ஞானமூலம்.

செய்திடீர்வாசியைநீபிராணயமொட்டி செயகும்பரேசகம்பூரக மும்பாய்ந்து, கைதிடீர்கருணைபெறக்கமலவிதழ்தனிலே கைகுவித் தடிபணிந்தருள்பெறவேமூட்டி, சைதன்னியபதிலைகண்டு கும்பமலர் சாற்றி தாயானமனோன்மணிபாதமர்ச்சித்து, முப்திடீர்சவர்க்காரஞ் செயசித்திபெறவே மூலமுதலாறுவரைஞானப்பொருளோதே (707)

ஓதவே சிமநயவ ஓம் நீயுமென்று பூட்டுவாய்லட்சமுருஸ்தாபித் தாலையா, வாதவேசித்தியமுத்தியதுவாகும் மவுனமெஞ்ஞானமுதல் செயசித்தியாகும், சேதமொருநாளுமிதுவாராதையா செயமானசவர்க் காரஞ்செப்பினேம்பாரு, பூதமேவைம்பூதபிறிதிவியினாலே பூநீரைக் கைவிடலாகாதுபாரே. (708)

## பிண்டசவர்க்காரம் சகதேவி துருவம்.

பூநீரேகுருவொழியவேறொன்றில்லை பூதலந்தனிலேசகதேவிது ருவம், காணீரோயத்தேசம்வெளுமைநிறப்பூமி கருதவேயக்கிரிசாரல டிவாரம் தேன்மாரிபொழியும்பனிவெகுதாரமையா செயமானசவர்க் காரஞ்செப்பினேம்பாரு, போநீரேயாமாகில்சாரலடிவாரம் புகழான சித்தாராறுயிரம்பேரே. (709)

## அடிவாரசித்தர் ஆறுயிரம்பேர்.

போனசித்தாராறுயிரம்பேரும் பெருமையதாக் கிரியைவிட்டி றங்குவார்பாரு, வாரானகாற்றிசையுஞ்சூழ்ந்தங்குகூட்டி வாருவார்பூ நீரைவசனித்தோரு, ஆரானயச்சார்புமலையடிவாரம் ஆறுகுளமேரி யெதிர்வாயலதுகேளு, போரானபூநீறுமெத்தவுண்டங்கே புகழாகப்பு லத்தியனேவேணமட்டையா, சூரானசுரக்குடுக்கைகொண்டுநீபோய் சயம்பெறவேபூநீரையெடுத்தங்குவாயே. (710)

## பூநீறு ஆறுமாதப்பிண்டமாக்கறு.

எடுத்துஅதைநீயிருக்கு மில்லஞ்சென்று இசைவானபிண்டத்தி லிட்டுநீதாக்கி, தடுத்தவாறுமாதங்கடுஞ்சூலுபாலன் தருவானபனிக்

குடஞ்சலங்கைவாங்கி, கடுத்துநீசடுக்கா கடுஞ்சுத்திசெய்து கரு தவேபூநீறில்படிமூன்றுகங்கை, வெடுத்துக்கொள்ளாதேயதில்விட்டுநீ கரைத்து விளங்கவேமுழுதுமொருநாள் தெளியவைவயே. (711)

## பிண்டக்கரு சவர்க்காரவுண்டை.

வைத்துமறுநாள்தனிலேதெளிவைவாங்கி மறுபாண்டங்கொண் டுநீவார்த்துநீஜயா, தைத்துமடுப்பேற்றியே பாண்டமதையும் தருவா கவைத்துமேயெரித்திடுவாய்சாமம், பைத்துவதில்வாராது பாகமது போலாகும்பாகமதைக்கண்டுநீபாண்டமதையிறக்கிஜத்துமாறுமாதங் கடுஞ்சூலபாலன் அடவாகவுருகுலையாதெடுத்துகுடல்வாங்கே. (712)

வாங்குவாயுள்மூலமூத்திரப்பையை மகத்தானபெருக்குடல்மல ப்பையையவாங்கு, தாங்குவாய்பிச்சதின்சலப்பையையவாங்கு தருவான மண்ணீரல்கவிச்சதனைப்போக்கு, பாங்குபெறக்கோரையதின் சவ்வ தனைப்போக்கி பானுவென்றரவிதனிலே சரகதுவாயுலர்த்தி, காங்கு வ ய்பல்லூரலில்மாவதுபோலிடித்து கருவானமாத்தோண்டிவடித்துக் கொள்வாயே. (713)

கொள்ளவேசீஷாவில்மாவதனையிட்டுக் கூறுகவம்மாவில்சேர்கொ ண்டுநீயும், முள்ளவேமுன்சொன்னபூநீறுபாகை மூதண்டமாகவேகல் லூரலிலிட்டு, தெள்ளவேயிம்மாவைக்கூடநீசேர்த்துத் தேசிசெயநீர திலேசேர்கொண்டுவார்த்து, எள்ளவேயிருப்புலக்கையிற்கொண்டை யாயிருசாமமிடித்திடவே பிண்டக்கருவாமே. (714)

ஆமென்றபிண்டக்கருபிசின்போலாகும் அக்கருசீஷாவில் பத னமதாய்ச்செய்து, சேமென்றகருவதனில் சேரெட்டுகொண்டு சிவக ங்கைமூன்றுசேர்கருவதனிலிட்டு, மாமென்றுமத்தித்துக்கூட்டிப்பி சைக்தாக்கால் மகத்தானபிண்டசவர்க்காரமதுவாகும், ஊமென்று சவர்க்கார முண்டையதாய்ச்செய்து உருட்டியேயுண்டைதனைப் பத னஞ்செய்வாயே. (715)

## மூலதியானம்.

பதனமதுசெய்துநீசிவயோகமேவிப் பஞ்சாஙபிராணய வாசி தனையோட்டி, சதனமதுரேசகத்தில்சிங்கென்றுநாட்டி சதுர்முகப்ப ரப்பிரமவொளிவதனிலேகி, வதனமதுவாய்வுயபானமேலேறி வரு ஷித்துக்கும்பித்துப்பூரகம்பாய்ந்தால், மதனமதுலேகியரிபோல் வரு ஷிக்கும்பாரு வயநமசி ஓம் ஸ்ரீரிமடவாய்ச்செபிலட்சம். (716)

அடவாகமேவுமிது பூவைப்போல்தோற்றும் அழகாகயங்கென்
றுதெரிசிப்பாய்த்தானே, அடவானபூமலர்கமலயிதழ்காணும் அறி
மென்றுபூசித்துயர்ச்சிப்பாய்நீயும், தடமானமனோன்மணித்தாய்பிரச
ன்னமாம் முங்கென்றுசவர்க்காரப் பிண்டமதைதனைவைத்து; நடமாடுங்
தேவிலையத்தியானமதாலோதஞானசித்திகைக்குள்ளாகுமிதன்குறியே

குறியானபிரிதிவியின்கூறினாலே குறிப்படுமண்டபிண்ட மதின்
கூறுகும், சிறியானசிவவிந்து ஆறியப்போறார் சிறப்பானவாச்சரிய
நாதவிந்ததனால், பிறியாதுவொருக்காலு மதியிதனைவிட்டால் பிரியு
மோரவிபீசம் பேசொண்ணாது, தறியானமடமட்டை யுலகப்பேய்
காணார் தனைசவிந்துசுக்கிலத்தின் உண்மையறிவாயே. (718)

## அண்டசவர்க்காரம் எட்டுத்திங்கள் பிண்டம்.

அறிவோர்க்குயின்னமொரு சவர்க்காரங்கேளு அண்டசவர்க்
காரமதினறிவதனைப்பாரு, பிரியாதமாதமது யெட்டுதனிற்கேளு பேச
வொண்ணாக்கருவதனைப் பேசுவோகாமும், தெரியாதகருவப்பாவறியா
ருலகோர்கள் தெரியும்படியகத்தியனும் தெளிவதனாற்சொல்வோம்,
குறியாகமுன்சொன்ன துருசுமெழுகையா கூறினோம்பணவிடைதா
னெடுத்துக்கொள்வாயே. (719)

கொள்ளுவாய்குருசெயநீர் பணவிடைதான்வாங்கி குருவான
மெழுகதனைக் குழைத்துநீயப்பா, தள்ளுவாய்கருப்பற்றும் ஸ்திரீசாதி
கெர்ப்பந் தனைக்கழட்டவுபாயமதாய்த் தருவிப்போம்பாரு, மெள்ள
வேபேரீச்சம் பழத்துள்வைத்து விளங்கவேயுள்ளுக்குக் கொடுத்திடு
மைந்தா, கள்ளமேயில்லையிது குருவாணைசொன்னோம் கைப்பாகம்
பிசகாமல் கருவதனைவாங்கே. (720)

## கெற்பக்கழ்ட்ட மருந்துகியாழும்.

வாங்கவேயொருநாழி சென்றதுவுமானால் வசனிப்போம்சிவகங்
கை சேர்கொண்டுநீயும், தூங்கவேசட்டிதனிற் சலகங்கைவிட்டுத் துதி
பெறவேசுக்குவகைப் பலம்நருக்கிப்போட்டு, ஆங்கவேயடுப்பேற்றி
யதன்மேற் சட்டிவைத்து அரைச்சேருசிவகங்கை யாகுமட்டுமெரிப்
பாய், ஏங்கவேயெரித்ததனையிறக்கிவைத்து இயலானஸ்திரீசாதிக் குட்
கொடுத்தே. (721)

## ஜல்லியவித்தை.

கொடுத்துவரைநாழிகைக்குள்கடுஞ்சூலபாலன் கூறினோம்வீறிட்
டுப் பூமிதனில்வீழும், அடுத்ததன்மேல்மாக்கரு வென்னசொல்வோம்

அதைவழித்துச்சுரைப்பாண்டில் பதனஞ்செய்து, இடத்தனமாய்த் திரியாதே சல்லியவித்தை யிதனாலேயாடுமடா யியம்பினேனும்பார், கடுத் துநீயில்லாதே குருசெயநீர்பலத்தான் கருவானமாககருவில் விட்டு மத்தித்தே. (722)

மத்தித்துயெக்கலா தேவியுடதியானம் மண்டலமிருபோதும் வச னிக்கக்கேளு, அத்தித்துஅங்சிங்அறிங்உங் ஐஔவசிமக கிலியும்சவ்வும் வாவாதேவி, எத்தித்துயெக்கலாதேவியைத் தான்றொழுது இயம்பி னேமிருபத்தை யாயிரஞ்செபித்து, வத்தித்துவந்துமுன் பூவைப்போ ற்றோன்றும் வாவாவாதேவியென வசியங்கொள்வாயே. (723)

## எட்டாந்திங்கள்.

கொள்ளுவாயெட்டாமாதக் கடுஞ்சூலபாலன் கூறுவோமதைக் கொண்டு சொல்லக்கேள்மைந்தா, கள்ளுவாயொருநாழிக் குள்ளே தான்வேளு நாவறண்டுவுயிரதுவும் போய்விடும்பாரு, அள்ளுவாயதை க்கொண்டு கத்தியினாற்கீறி அதன்குடல்மூத்திரப் பையைநீவாங்கி, மள்ளுவாய்மலப்பையும் பிச்சுசவ்வும்போக்கி மகத்தானகோரையதி னஞ் சதுவும்வாங்கே. (724)

## நாட்டுசலசுத்தி.

வாங்கியேநாட்டுசலங் கொண்டுசுத்திசெய்து வளமானபொட்டி லுப்பு படிகாரவுப்பு, தாங்கியேகறியுப்பு மூன்றுப்புங்கொண்டு தரு வாகத்தூளாக்கி மஞ்சள்தூக்கி, ஆங்கியேயதன்வாயி லுப்புத்தூளிட்டு அடவானவயிறதனிற் றூளுமிட்டு, நாங்கியேகதம்பகஸ்தூரி கந்தகம் கவினுவோமுட்கொண்டு பூசிட்டாயே. (725)

## பரிமளவாடை.

பூசியேமனிதருடஅரவம்படாத பூமிதனில்வைத்துரவி சாகூல ரச்செய்து, பாசியேகல்லுரலிலிட்டுமைந்தா பருத்தயிருப்புலக்கையத னாற்சாடு, தாசியேமுச்சாமஞ்சாடினாலையா சம்பிரமதாகவேயண்டமாத் தூளாம், வாசியேவடிகட்டி மாவதனையெடுத்து வளமானசீசாவிற் பத னஞ்செய்யே. (726)

## அண்டமாக்கரு.

பதனமதாப்ச்செய்துநீ யண்டமாத்தூளில் பண்மைபெறச்சேர் கொண்டு மாவதனையெடுத்து, விதனமதாயிராதேமுன் சொன்னபாகி ல் விளங்குவோமூன்றுசேர் விபரமதாய்க்கொண்டு, கதனமென்றுகல்

லூரலி லதனையிட்டுக் கைப்பாகமாகவே குருசெயநீர்சேர்தான், அதன மதாய்முச்சாமஞ்சாடிணலையா அண்டசவர்க்காரமெனும் பிசின்போ லாமே. (727)

## அண்டப்பிசின் அண்டசவர்க்காரம்.

ஆமென்றசவர்க்காரப் பிசினதனைத்தானும் அருளுவோஞ்சீசா விற் பதனஞ்செய்ந்தயா, வாமென்றஅண்டக்கருவிதற் கெதிருண் டோ வசனிப்போமிக்கருவில் மூன்றுசேர்கொண்டு, போமென்றபா ண்டத்தில் கருவதனையிட்டுப் பெருமைபெறவூசிசெய நீருசேர்வார்த் து, கோமென்றுகாமத்னுற் கூட்டிமத்தித்தால் கூறுவோமண்டசவ ர்க் காரமிதுவாமே. (728)

## பிண்டசவர்க்காரவைப்பு.

மிதுவானசவர்க்காரப்பிசினைத்தானும் மேலானவுண்டையதுவி ளங்காய்போலச், சிதறுமற்செய்துயேுடையதாய்ச்செய்து சிவயோக வாசிகொண்டிழுத்துப்பூசிப்பாய், வதுவானரேசகமுனை சுழியிலையா வங்கென்றுபாரப்பிரமவொழிவதனிலேகி, நதுவானகும்பகம்பிராணய மொட்டி நங்கென்றுபூசித்தியர்ச்சிப்பாய்தானே. (729)

அர்ச்சித்து அண்டசவர்க்காரவைப்பை அனுதினமுமாயிபதம வள்பதமேவைத்து, யர்ச்சித்தவவள்பதமேபணிந்திட்டாலையா பரம பதமுனக்களிப்பாலவள்தான்பாரு, துர்ச்சினவுலகதுறமாற்கரறிவா ரோ துதிபெறலாமண்டசவர்க்காரமதனுலே, வர்ச்சித்துச்சவர்க்கார வுண்டையதைத்தானும் வசனித்தோம்பதனமதாய்ச்செய்திடீரே. 730

## மலைப்பாடி துருகம்.

செய்திடீர்புலத்தியனே யின்னமொருகாரஞ் செயலானபிண்டம தின் சவர்க்காரவைப்பை, சைதிடீர்நாம்சொல்வோம் நாடதிலேகேளு நலமானகிரியொன்றுமலைப்பாடிதுருகம், மைதிடீரதில்வாழுஞ்சித்தர வர்கேளுமக்களேயவர்பெருமைமனிதறறிவாரோ, எய்திடீரேழாயிரம் பேர்களையா இறங்குவார்கிரிவிட்டுயின்னஞ்சொல்வோமோ. (731)

## மஞ்சள்நிறப்பூமி.

சொல்வோம்நாமக்கிரிமலைபடிவாரஞ் சொற்பெரியகுளமடுக்கள் தானுண்டு, அல்வோம்நாம்குளமெரிபொ திர்வாயில் அலர்ந்தசெந்தா மரையதுமகிமைத்த, நல்வோம்நாம்புலத்தியனேயம்மலைராச்சியம் நல மானமஞ்சணிறப்பூமியதுவாகும், சொல்வோமேயம்மலைராச்சியந்தன் னில் செயலானகருவேங்கை யதுமகிமைகாணே. (732)

## பூநீறுநாதம்.

காணுநீகருவேங்கைப்புலியதுவுமாகில் காணூர்களுலகமதில்மா ணிடர்கடாணும், சேணுநீசித்தரவர்காணுமவராகில் செயலானயக்கிரிச் சாரலடிவாரம், தோணுநீசிறியாநங்கையதனேகம் தேவிநாதசத்திப்பூ நீறுவிளையும் ஆணுநீயங்கீறுபூநீறுநாதம் அப்பூமிநாதமகினருடனைப் பாரே. (733)

பாருநீசித்தரேழாயிரம்பேரும் பண்மைபெறுஞ்சித்தலையில்கிரி விட்டிழிவார், ஏருநீகிரிவிட்டுப்பூநீறுநாத மெடுப்பார்களநாற்றிசை யுஞ் சூழ்ந்தங்கேமைநதா, சூருநீசுரைக்குடுக்கையதனிற்பூநீரைசோர வதிற்பூநீறடைத்துக்கொண்டையா, வாரிநீயெடுத்தங்கனேமலைப்பாடி துருகம் வசனித்தோங்குகையேகிச் சொல்லுவார்பாரே. (734)

## மூன்றுதிங்கள் பனிக்கும்.

பாரப்பாபுலத்திபனே யின்னங்கேளையா பரிசுடையபூநீற்றை வேணமட்டுங்கொண்டு, சூரப்பாசுரைக்குடுக்கையதனில்ரெப்பி சிவ யோகக்குகைக்குநீசென்றங்குயேகி, மாரப்பாபாண்டமதிற்பூநீற்றை யிட்டு மகத்தானமூன்றுதிங்கள் பனிக்குடங்களு, மூரப்பாமுன் சொன்ன துருசுமெழுகூட்டி முலைமாதர்க்கியாமற்பனிநீரைவாங்கே.

வாங்கியேபாண்டத்திலன்னீரைவிட்டு மத்தித்துக்கூட்டிகரவள மாய்க்கரைத்து, ஆங்கியேயங்காள்முழுதுந்தெளியவைத்ததனை அரு ணிமறுநாளில் பாண்டமதையெடுத்துநீ, தூங்கிநீதிரியாதேயத் தெளிவைத்தானுந் துதிபெறவேமறுபாண்டந்தெளிவிறுத்துநீ, தாங் கியேயடுப்பேற்றி யதுமேற்பாண்டம்வைத்து தணல்மூட்டிமுச்சாம மெரித்திடுவாய்நீயே. (736)

எரித்துயப்பாண்டமதை யிறக்கிவைத்ததனை இயல்பாகவாறின லதுபாறையாகும், மறுத்துநீயெடுத்ததனைக்கல்லுரலிலிட்டு மகத்தாக முன்சொன்னமாக்கருவையா, தரித்துநீயிரண்டுசே ருரல்தனிலிட்டு தளமாகத்தேசிசெயநீருசேரொன்று, குறித்துநீவிட்டதிலேயுலக்கை கொண்டையா கூறுகமுச்சாமஞ் சாடுவாய்த்தானே. (737)

சாடவேபிசின்போலவருதலாகும் சார்பாகவதைக்கண்டு தோ ண்டியெடுத்ததனை,ஆடுவாயண்டமதிலிட்டுநீயப்பா அருளினேங்குரு செயநீருசிசெயநீர்தான், வாடவேயொவ்வொன்றுசெயநீர்பலமாறு வசனித்தோம் பாண்டமதில்வளமாகவிட்டு, நாடவேமத்தித்துபிசைந் ததனையையா ரவியிலரைச்சாமம்வைத்திடீர்தானே. (738)

## ஆருதாரபூசை அட்டமாசித்திமூலசுழிவாசிபதம்.

வைத்திடவேகற்போலாம் பிண்டசவர்க்காரமதையெடுத்துவுண் டையதாய்ச்செய்திடீலையா, ஐத்திடவேபிண்டசவர்க்காரமதுவாச்சு அருளினேம்பதனமதாய்வைத்துநீர்பாரீர், சைத்திடவேபிராணயவா சிதனையொட்டி கருணைபெறரேசகமங்கென் றுகாட்டி, முத்திபெறமூல சுழிமுனையருகுநின்று மூலமுதலாறுவரைபூசிப்பாய்தானே. (739)

பூசித்துநயனமிரு மனக்கண்ணாலொட்டிப் பூரணமாம்வாலைம னேன்மணிபாதம், ஆசித்துவவள்பதமேதெரிசித்தாயானல் அட்ட மாசித்தியுனக்கருளுவாள்பாரு, பேசித்துத்தவப்பொருளிருந்தயாகில் பிண்டசவர்க்காரமது சித்தியதுவாகும், மூசித்துயதுசாரூபமுனக்கெ ய்தும்பாரு மூலசுழிமுனையருகில் வாசியதுகாணே. (740)

காணுநீபிண்டசவர்க் காரஞ்சொன்னேம் கருணைபெருஞ்சித்தர் களே கைலாசமுத்தி, காணுநீவாசிபதங் கண்டதேயாகில் நால்மறை யின் கருவினுட குருவினருள்காண்பாய், ஆணுநீபுலத்தியனே யதுவப் படியென்றால் அருளுவோமின்னமொரு சவர்க்காரங்கேளு, வாணுநீ பிறிதிவியின் வலுமையினாலே வஸ்துவுடமகிமைதனை வசனிப்போங் கேளே. (741)

## பத்மினிசாதியில் நாதம்வாங்க.

வசனிப்போம்பிரமகுல வங்கிஷந்தன்னில் வடிவானபதிவிருதா பத்மினிசாதி, அசனிப்போம்சாதிதலைச் சனதுவாகும் அடவாகப்பத் தாளுள் மெத்தநன்று, கசனிப்போங்கன்னியுட நாதமதைக்கழட்ட கருதுவோம்வீரமெழு பணவிடைதான்கொண்டு, நசனிப்போம்புளி யாரைத் துவரைப்பலந்தா னதற்குள்ளேமெழுகதனை நவிலுவோங் கேளே. (742)

கேளப்பாபுலத்தியனே மெழுகதனைக்கொண்டு கெடியாகவதி காலை மூட்டியையா, வாளப்பாயவ்வுண்டை யுண்டுவரைநாழி வளமா கக்கெடுவீத மானலதுகேளு, சூளப்பாமுன்சொன்ன சுக்குக்கியாழும் துடியாகவுள்ளுக்குக் கொடுத்திட்டுநீயும், ஆளப்பாவதன்பிறகு புலத் தியனேகேளு அருளுவோங்குய்யபீடம் பீங்கான்வைக்கச்சொல்லே

## புவனை மும்மூலத்தியானம் நாதக்குரு.

சொல்லவேபீங்கான்வைத்திட்டாலையா சொரியுமதுவருவிபோல் நாதவிந்தையா, அல்லவேயவ்விந்து சொரியுமதன்பிறகு அப்பீங்கான் வாங்கியொரு சீஷாவிற்கேளு, நல்லவேநாதமதைச் சீஷாவிலிட்டு நவி

லுவோம்புவனேயுட மும்மூலத்தியானம், உல்லவேஓம்றீயும் அவ்வும் உவ்வும் நவ்வென்றவுருலட்சஞ் செபிப்பாயே. (744)

செபித்துநீபுலத்தியனே சொல்லக்கேளாயா செப்புவோம்பற் பிணிகளை வந்தெய்தும், அபித்துமுன்சொன்னதொரு சிவகங்கையத னி லாறுபலங்கொண்டுபசும்பா லரைப்படிதான், ஒபித்துஅதையொ ன்றாகக் கலந்துவுள்ளுக்கு ஓகோபார்கொடுத்துவிடக் களைதெளியும் பாரு, தபித்ததொருமுன்சொன்ன மாக்கருசேரண்டு தருவானபாகு சேர் சரிவிதமாய்த்தானே. (745)

## சவர்க்காரவுண்டை.

தானானகல்லூரலி லிரண்டையுமிட்டுத் தருவானபத்மினி நாத மதுசேர்தான், வேணுகவிட்டதிலே யிருப்புலக்கைகொண்டு விசித தாய்முச்சாமம் விளங்குவாய்பாரு, கானகக்கருப்போலா மப்பாகங் கண்டு கருணைபெறநாதகரு சீஷாவிலிட்டு, தானானதூபதீப மது கொடுத்து துதிபெறவேயதில்சே ரிரண்டுவாங்கே. (746)

வாங்கியேபாண்டமதிலிக் கருவைவிட்டு வளமாகக்கிளிசெயநீர் பனிரண்டுபலந்தான், ஆங்கியேயக்கருவி லின்னீரைவிட்டு அருள் பெறவேமத்தித்துக் கூட்டிநீவாங்கி, காங்கியேரவிமுக மிருநாழிவைத் தால் நவிலுவோமதன்கசிவு ரத்தம்போலிறங்கும், தாங்கியேபாண்ட மதிற் கசிவையிறுத்துத் தருவாகவுண்டையதாய்ச் செய்திடாமே. ()

ஆமப்பாபுலத்தியனே நாதசவர்க்காரம் அதனுடையமகிமைத னை யாரறிவார்பாரு, ஓமப்பா சொல்லிவிட்டோம் சிவயோகஞ்சென்று ஒருமித்துவாசியதைப் பிராணாயமொட்டி, வாமப்பாவங்கென்று கும்ப கம்நாட்டி வசனித்தோங்கும்பித்துத் தம்பித்தாயானல், ஓமப்பாவா மப்பால்வழிந்தருவிபாயுங் குருபூசையங்கென்றுதெரிசிப்பாய்தானே.

தானென்றகுருவினடி கண்டதேயாகில் சவர்க்காரசித்தியதற் கெய்துமதுபாரு, நானென்றகுருமொழிதான் யோகிகட்கையா நளின மதாய்ச்சௌமியமாய் நண்பாகச்சொன்னோம், ஏனென்றவிந்தமொழி யாக வெய்தும்பாரு என்போலமனமுடையோர்க் கெய்துமின்னால் தான், மானென்றமொழியுடையோ ரறிவாளியாகில் மவர்க்கெய்து மொன்றுண சேதியிதுபாரே. (749)

## வைசியகுலம் மீனராசி சுவாதி புருஷர் விந்துவாங்கயிடுமருந்து.

பாருமிதிற லுடையபெருமை தனைக்கண்டோம் பாடினோம்நா தசவர்க்கார மதைச்சொன்னோம், தூருமறியார்களிந்நூல் பொருடனை

யோகாணுர் அசடர்மெத்தவுலகமதி லினேகம்பேருண்டு, கூறுமவரோ டேயொரு நாளுஞ்சேராதே குரும்பர்சண்டாளருட பேச்சுங்கேளா தே, தேறுஞ்சிவயோகியுட மறு மமந்தயறியுந் தெளிவதற்கவருடைய திறத்தையறிவாயே. (750)

திறமானகாரமிது சாரமிதுபோலச் செகத்திலேமனிதரறி யார்க ளிதுபாரு, வறமானவைசியகுல மீனமதின் ராசி வசனித்தோஞ்சோதி சுக்கிர வியாழமாகும், பரமானபங்குனி சோமசூரியனும் பண்மை பெறுமிந்திரனுட பார்வையதுகேளு, சரமானவந்நாளில் வைசியகுல பாலன் சம்பிரமதாயுற்பவிக்குஞ் சைதன்னியங்கேளே. (751)

சைதன்னியமென்றபதி ஞானவயதானல் தருவாகயவரைநீ நல்ல குணமாக, சைதன்னியகுருபீடங் கொண்டுமேயேகித் தாயானமனோ ன்மணிபூசை யதனில்தான், கொன்னியமென்றவரைநீ கொண்டுசெ ன்று கூறினேமானதமாம் பூசைதனிலே, கன்னியமாம்பூரணுதி செந் தூரங் கருதவேபணவிடை கொண்டுநீகேளே. (752)

கொண்டுசெந்தூரமதை முன்சொன்னமெழுகு குருவானமெழு கதனில்பணவிடைவாங்கி, செண்டுசெந்தூரமதைமெழுகினில்வைத் துச் செயலானபுளியாரைத் துண்டையதற்குள், கண்டுகைபாகமா யவரைநீ யழைத்துக் கருதவேயுள்ளுக்கு மெள்ளக்கொடுப்பாய், வண்டுநீகொடுத்தவரை முன்சொன்னகியாழம் மைந்தனேகொடுத்து விடு வளமாகத்தானே. (753)

## சலவிந்து

கொடுத்துஅரைநாழியது சென்றதேயானல் கூறுவோமரையுட் காரவைத்துப்பீங்கான், அடுத்தபீங்கான்வைத்து அடுத்தடவாகக்கேள் அருவியதுமலசலம்போல் குபுகுபெனப்பாயும், வெடுத்தவொருவிந் ததுவும் வீறிட்டுப்பாயும் விளங்கினேம்விந்ததனில் சிவமுப்புச்சுண் ணம் தடுத்துஅரைபணவிடைதானிட்டரானல் சைதன்னியசுத்தசலம் விந்துவாமே. (754)

ஆமென்றவிந்ததனைச் சீஷாவிலிட்டு அடவானதேவியுடபூசை செய்தப்பா, மூமென்றமுன்சொன்னமாக்கருவையா மூர்க்கமதாய்ச் சேரெண்டு கல்லுறலிலிட்டு, பாமென்றபூநீறுபாகுசேரண்டு பண்மை பெறக்கூடநீசேர்த்துமேவையே, வேமென்றவிந்துசேர்விட்டதிலேநீ யும் விளங்கவேயிருப்புலக்கையதுவுமாமே. (755)

## கசிவிறக்க.

அதுவாம முச்சாமஞ்சாடியதைத்தோண்டி அன்பானபாண்டமதி லிட்டுக்கேளு, விதுவானகுருசெயநீர்தேசிசெயநீர் வீதம்பலமஞ்சு

வொவ்வொன்றாய்க்கொண்டு, பதுவானபாண்டத்தி லிட்டுநீயப்பா பண்மைபெறமத்தித்துக்கூட்டிப்பிசைந்து, நதுவாகரவியிலரைசாமம் வைத்ததனை நல்லகசிவிறங்கிவிடும் கவிலுவோங்காணே. (756)

சாணுநீகசிவதனை யிறுத்துவிட்டையா கருணைபெற வுண்டையது செய்திடீர்தானும், நாணுமிந்தப்படியாகவிந்துசவர்க்காரம் நண்பாகச்சொல்லிவிட்டோம்பாருமிதுமைந்தா, தோணுமதுசிவயோகஞ் செயுங்காலத்தில் துதிபெறவேவிந்துசவர்க்காரமதைவைத்து, பேணு நீபிராணுயவாசியதையொட்டிப் பெருமைபெறச்சிங்கொன்றுகும்பிப் பாய்தானே. (757)

தானென்றபோசகந்தம்பித்தாயானல் தாயானமனோன்மணி தவவினையைக்காண்பாய், நானென்றபெருமையதனு லிதைச்சொன்னேம் நாட்டிலேஞானிகளே கண்பாகச்செய்வீர், தேனென்றமொழியதனுற் சொல்லிநாம்விட்டோம் தேசமதிமவுனிகளே செயமாகப்பாரும், வானென்றவிந்துசவர்க்காரமதற்கையா வாலைமனோன்மணியினுடபூசையதுசெய்யே. (758)

## வாலைபூசை மிதுனராசி.

செய்துபார்சென்மராசிபலனிருந்தால் சித்திக்குமித்தொழில்கள் செயசித்தியாகும், நைந்துபார்விட்டகுறை தொட்டகுறையாகில் நவிலுவோமிந்தப்படியிருந்ததேயாகில், மைதுஞ்சைதன்னியப்பொருணிதவேயாகும் சாமீபசாரூபசாயுச்சியம்பெறுவாய், பெய்துமிதுசாலே, பமிதுனமிதின்ராசி யியம்பினேம்விந்துசவர்க்காரமிதுவாச்சே. (759)

ஆச்சென்றவிதன்பெருமையாரறிவார்மைந்தா யவனிதனில்சிவயோகியவரறிவார்பாரு, கோச்சென்றமிருசெயவினலுக்கிரகத்தினலே கூறினேம்சௌமியசாகரமிதாகும், வேச்சென்ற திந்நூலையார்க்குமீயாதே விவேகவானறிவாளியவர்க்கீயுமிந்நூல், வாச்சென்றகூழுதைமாந்தருக்கீந்தால் வருகுமண்டயிடியுந்தலை சிதறுமதுவென்றே.(760)

## சரக்குவைப்புமுறை சீனக்காரவைப்பு.

அன்றானயஞ்சுவித சவர்க்காரஞ்சொன்னேம் அருளுகிறோம் வைப்புமுறையதீதமிதுவாகும், சென்றானசீனக்காரமதின்வைப்பு செகத்திலேயாரறிவார் சிவயோகிகாண்பார், தென்றானயிவ்வைப்பு நாலுமிதைச் செய்தேன் தெளிவானபுலத்தியனேசெப்பும்வகைகேளும், பன்றானபாலறையுப்புபடிக்காரவுப்பு பருங்கம்பிபொட்டிலுப்பு விதுராலுஞ்சேரே. (761)

சேர்த்துயிலைதக்கல்லுரலிலிட்டுச் சிவகங்கைசெப்பும்வகைகேசொன்றுவார்த்துநீயப்பா, கார்த்துநீயிருசாமஞ்சாடினாலையா கருப்பற்றமதின் சீனக்கைபாகங்காண்பாய், நார்த்துசலமதனாலேசாமமிக மாட்டி நலமானகுருசெயநீர்சேர்கொண்டுலைவயா, வார்த்துநீகல்வமதில்மறுதரமுஞ்சாமம் மைந்தனேயாட்டிவழித்திடுவீரதுபாரே.(76 )

பாருமிதனொருபாண்டமதனிலிதைவைத்து பண்மைபெறுமேற்கவசச்சீலையேழுஞ்செய்து, ஆருமிதையறியாமற்குழிதோண்டியெருவை யதற்குள்ளேபாண்டமதை யருள்பெறவேவைத்து, மேருபதினொருவடிக்கி சமாதியக்குகையில் மேன்மைபெறவாலையுடதியானமதைச்செய்வாய், மாறுமதின்மண்டலம் பாண்டமதுவிருந்தால் மகத்தானசீனக்கார வைப்பதுதானாச்சே. (763)

வைப்பானசீனமது பூர்த்துவைப்பாகும் மப்பாகங்கண்டுநீ பாண்டமதையெடுத்து, கைப்பானகவசமது சீலையேழும்வாங்கிக் கருணைதருஞ்சீனமதைச் சிஷாவிலிட்டு, செப்பானசிறிஅறிமென்று வுருலட்சம் செபித்தனைச் சித்திபெறமுத்தியுண்டாக்கி, மப்பானபிராணாய வாசியதையொட்டி வங்கென்றுயிழுத்துநீ தெரிசிப்பாய்த்தானே. ()

## வெண்கார வைப்புவகை.

தானென்றவெண்கார வைப்பதனைக்கேளு நாரணியிலாரறிவார் தவசிகள்தான்காண்பார், வேனென்றயிறிதீவுதான் பூமியுடநாதம் விளங்குகின்றநாதமடா பூநீராகும், காணென்றகாரமது சாரமதுவாகும் கருவாகுங்குருவாகு முருவதுவுமாகும், தேனென்றதெளிவாகு மத்தெளிவினாலே தேறினதோர்கல்லுப்பு தேசியதுவாமே. (765)

## வெண்காரப்பலகை.

வதுவானகல்லுப்பு நிலவுப்புகேளு மகத்தானவழலையடாமதியுப்புமூன்று, ஒதுவானவொவ்வொன்று சேரதுதான்கொண்டு ஒருமித்துக்கல்லுரலி லிட்டுநீஐயா, சதுவானசிவகங்கை தேசிசெயநீருசார்வாகவொவ்வொன்று பலமாறுவாங்கி, கதுவானவுரல்தனிலிருநீரும்விட்டுக் கருணைபெறமுச்சாம மிடித்துநீசாடே. (766)

சாடயிலேகருப்போலமாக் கருவைத்தோண்டி சம்பிரமதாய்ப் பாண்டமதி லிட்டுநீதாக்கி, ஆடயிலேசிவசத்தி யிருசேருவிட்டு அப்பாண்டமதிலிட்டுக் கரைத்துநீயப்பா, மாடயிலேயடுப்பேற்றி யக்கினியைமூட்டி வளமாகயிருசாம மெரித்திடாய்பாரு, வேடயிலேயோர்கொதிகொதிக்குமது பாருவிளங்கினும்பாண்டமதையிறக்கிநீவையே

வைத்ததனையண்டச்சில் சாய்த்திரேயானால் மருவிப்பாய்ந்தது போலே யருவியதுபாயும், பைத்ததனையிருநாழி சென்றெடுத்தாக்கால் பண்மைபெறும்வெண்காரப் பலகையதுவாகும், வைத்ததனையிப் பலகை கொண்டுநீயையா நலமானசிவபூசை செய்திடீர்தாலும், கைத்துவதின்வெண்காரப் பலகைதனைக்கொண்டு கருதவேபதனமதாய் வைத்திடீர்காணே. (768)

## பூரவைப்பு.

காணப்பாவெண்கார வைப்பதனைச்சொன்னோங் கருதவேபூரமதின் வைப்பதனைக்கேளும், காணப்பாசொல்லுகிறேன் நாம்வெளியதாக நலமானசௌமிய சாகரமின்னூலில், சேணப்பாசீனகாரஞ்சேரொன்றுதானும் செயலானவெண்காரஞ் சேர்கொண்டுநீயும், வாணப்பாசிவவுப்புபல மாறுகொண்டு வசனித்தோமிதுமூன்றுங் கல்லுரலிற்றுங்கே. (769)

## மாவைபிரமகுலநாதம்.

தாக்கியேபிரமகுல நாதவிந்தையா சைதன்னியநீரதிலேசேர்கொண்டுவார்த்து, ஆக்கியேமாவதுபோல் தூளதாயிடித்து அம்மாவைக்கொண்டுவொரு பாண்டத்திலிட்டு, தாக்கியேகுருசெயநீர் சிவகெங்கையிரண்டும் கவிழ்வோமோவ்வொன்றுக் காறுபலந்தூக்கி, பாக்கியேபாண்டமதிலிந் நீரைவிட்டுப் பண்மைபெறமத்தித்துக் கூட்டியதைக்காணே. (770)

## கலசம் தானியம்.

காணவேயதைக்கொண்டு கலசமதிலிட்டுக் கருவானயண்டமெழு கவசமதுசெய்து, சேணவேசீலைபதுநீ யேழுஞ்செய்து செயலாக மறுபாண்டஞ் செயமாகக்கொண்டு, மாணவேமணக்கத்தை நெல்லதுதான்கேளு வளமாகயிருபத் தைந்துபடி நெல்லு, ஏணவேயிட்டதனில் சலமாறுபடிதான் இயல்பாகவார்த்ததனிற் கலசமதைவையே. (771)

## மாவிற்கு.

வைத்துமேவடுப்பின்மேற் பாண்டமதைவைத்து மாவிற்குகொண்டுநீ யிருசாமமாகில், எத்துபடயெரித்துதனை யிருசாமமூட்டி என்னசொல்வேன்பூரவைப் பதுவுமாகும், மத்துபெறவித்ததனைப் பாண்டமதையிறக்கி மடவானகலசமதின் சீலையதைவாங்கி, புத்துபெறப் பார்த்திரே யாமாகிலையா பூரவைப்பிதற்கீடோ புனிதமிதுவாமே. ( )

## பூரவைப்பின் பெருமை.

புனிதமென்றும்பூரமதை சீஷாவிலிட்டுப் பூரகந்தட்டடீ வாசிய தைக்கொண்டு, உனிதமெனும்உங்கென்று தம்பித்தாயானால் உறுதி பெறப்பூரமதா சித்தியதுவாகும், வனிதமெனும்வங்கென்று ரேசக மொட்டி வாலைமனோன்மணியினுட பூசையதுசெய்து, கனிதமெனுங் கருணைபெறப் பூரணமதற்கையா கைதொழுதருள்பெறவே கருதுவா ய்த்தானே. (773)

கருதுமதின்பூரகத்தின் வைப்பின்பெருமை காணார்களுலகமதி ற் கவசடரவர்களும், விருதுபெறும்பூரமிதை விட்டாலொன்று மா காவிசையானவேதைக்குப் பூரமிதுவேணும், வருதுமிதுவழலைக்குமிப் பூரம்வேணும் வளமானமுப்பூவுக்கிப் பூரம்வேணும், சருதுமிதின்சா ரத்துக்கிப்பூரம் சவர்க்காரமிதற்குமிப் பூரந்தானே. (774)

தானென்றமுப்பூவுக்கிப் பூரம்வேணும் சார்வானசெயநீருக்கிப் பூரம்வேணும், மூனென்றவாசியதற் கிப்பூரம்வேணும் மூலவரையா றுங்கு மிப்பூரம்வேணும், தேனென்றதிராவகத்துக்கிப் பூரம்வேணும் செயலானசண்ணமதற்கிப் பூரம்வேணும், சேனென்றகற்பமதற்கிப் பூரம்வேணும் செந்தூரமிதற்கெல்லா மிப்பூரந்தானே. (775)

தானனதொழிலெல்லாமிப்பூரத்தாலே தருவானசித்துகளுமிப் பூரந்தாலே, நானான ஞானமதுமிப்பூரத்தாலே நலமானமவுனமதுமிப் பூரத்தாலே, கோனனயோகமதுமிப்பூரத்தாலே குருவெல்லாமித னாலேகூறினோம்பாரு, கானனகாயசித்தியிதனாலேதானும், கனயோக மிதனாலேகருவுமிதனாலே. (776)

நாலானசதாகோடிவித்தையிதனாலே நவகோடிசித்துகளும்பூரமி தனாலே, வேலானவேதமறைபூரத்தினாலே விளங்கினோமந்திரசித்து மிதனாலே, கோலானபூரமிதைக்கைவிடலாகாது கூறினோங்கைவிட் டால் குருசித்தியில்லை, மாலானமப்பூவுமுப்பூமதனாலே வசனித்தோம் பூரகத்தின்வைப்பிதுவுமாச்சே. (777)

ஆச்சப்பாபூரமதின்வைப்பிதோசொன்னோம் ஆரறிவார்வைய கத்திலாருமறியார்கள், பேச்சப்பாவெறும்பேச்சு பேணியேதிரிவார் பேரின்பசாத்திரமிதின்மகிமையறியார், வேச்சப்பாவெறும்பேச்சாய் வேடங்கள்பூண்டு வேதாந்தியவர்போலவிளங்குவாரையா, வாச்சப்பா யனேகம்பேருலகமதிலுண்டுமயங்கியேதிரிவார்கள்வைப்பையறியாரே

## குருவின்மகிமை மவுனகேசரக்குளிகை.

அறிவானகுருவதனைச்சொல்லக்கேளையா ஆரணியிலெலியோர் போலதீதமாய்த்திரிவார், வறிவானவுலகமதில் பிச்சையுண்டெடுப்

பார்மாய்கையிலேயதீதமதாய் மாராட்டஞ்செய்வார், குறிவானகுருவ
வர்தா னவர்மகிமைமெத்த கூறினேன்காணரிதாகண்டதேயாகில், மறி
வானமையதனைத்திலர்தங்கொண்டையா மவுனகேசரக்குளிகைபாய்
வாரவர்தானே. (779)

## கருநாய் மை.

அவரானயவர்மகிமைகாணவொருமைதான் அருளுகிறேன்புல
த்தியனேயன்பாகக்கேளும், சவரானதலச்சனுடகபாலவோட்டையா
சைதன்னியமாகவே பெரும்நாடாய்க்கொண்டு, கவரானகருநாயின்
பிச்சதின்கண்ணும் கருதவேயதனுடைய கொழுப்பைமிகக்கொண்டு,
பவரானநாலுகனசட்டிதனிலிட்டுப் பனிநீருபலஞ்சட்டிதனில் மிக
வும்வாரே. (780)

வார்த்ததையடுப்பேற்றியே சட்டிதனைவைத்து வளமாகயோழி
ஞ்சிக்கம்பதனலையா, ஆர்த்துவதினக்கினியை மூட்டியொருசாமம்
அடவாகப்புலத்தியனே யதைநன்றாய்க்கருக்கி,நீர்த்து,அதைநீறாக்கிப்
பாகமதாய்க்கொண்டு நிமிஷத்திலெடுத்ததனைப்பீங்கானிலிட்டு, சேர்
த்துநீவிவசெந்தூரபூபதியே செணத்திலேவிராகனெடை பீங்கானில்
தாக்சே. (781)

தாக்கியேகுருசெயநீர் சேர்கொண்டுமிட்டுத் தருவாகமத்தித்துக்
கூட்டிக்கரமதுவால், ஆக்கியேயயச்செம்புவகல்தனிலேவார்த்து அட
வானசெந்தாமரை நூலைத்திரியாக்கி, மாக்கியேயக்கருவில்தோய்த்து
நன்றாக வசனித்தோஞ்செப்பகதில் திரியதனையிட்டு, நாக்கியேதீபம
தையேற்றிமிகநன்றாய் நவிலுவோங்கபாலவோடதனின்யேற்கவிழே.

கவிழ்த்துநீயிருசாமந் தீபமதையையா கருணைபெறவேற்றியே
யெரித்தாயேயானால், அவிழ்த்துமேயவ்வோடு அதன்மேலேவைதான்
அருளினேம்பற்றுமதுமையினுடபெருமை, தவிழ்த்துயதைதவழித்து
மாங் கொம்புபாண்டியில்தான் தருவாகப்பதனமதாய்வைத்துநீகேளு,
பெவிழ்த்துநீபிராணுபவாசியதையொட்டிப் பேறாக ஓங் சிங் அறியும்
ஐயுமென்னே. (783)

## மை

என்னவேயிவ்வெழுத்தோதவேநாலு மியம்பினேம்லட்சமுருவே
சகமுமொட்டி, நன்னவேகும்பித்துச்செபித்துமிகப்பாரு நலமான
கருநாயின்மைசித்தியாகும், புன்னவேபூவைப்போலங்கணேதோற்
றும்பூசித்துவாலையைத்தெரிசிப்பாய்நீயும்,நன்னமொழிமாதுவிரோன்
மணிவாலைதானும் கனவசியமாய்விடுவள்கண்டுநீபாரே. (784)

கண்டுநீதூபதீபமதுகொடுத்துங் கருணைபெறக்கருநாயின்மைய தனைக்கொண்டு, செண்டுநீசிவகெங்கைபணவிடைதான்வாங்கிச் செய லான மையதனையுளுந்தின்வீதமெடுத்து, துண்டுபோகாமலேமத்தித் துக்குழைத்து துதிபெறவே ஸ்ரீயுமென்று நூற்றெட்டோதி, வண்டு நீநெற்றிதனில் திலர்தங்கொண்டையா வளமானஈகரேகியேநீயேசெ ண்ணே. (785)

செண்டுநீபோவதற்கின்னமொன்றுகேளு சித்தருடமறைப்பெ ல்லாஞ்சணத்திலேகாண்பாய், மண்டுதற்கின்னமொரு மையெதிரு முண்டோ மாற்றமாமென்றதொருமைகளுக்கெல்லாம், அண்டுமேநீ மாற்றமையதனையிட்டு அனேகம்பேர்திரிவார்கள் சித்தரவரையா, தொண்டுசெய்யவேண்டாங்குருமையிதாகும் தொகுப்பாகக்கோடா கோடிகாண்பாரே. (786)

வாசி சித்தி.

காண்பார்கள்சித்தர்வுனைக் கண்டுகைதொழுவார் கருநாயின்மை யிவுடபொருள்தனையேகேட்பார், வீண்பாகச்சொல்லாதேதலைதெறி க்கும்ப்பா விருதானசித்தரவருனைக்கடுமையாவார், சாண்பார்களிம் மையாற்சகலமைசித்து தறிக்கலாய்வெள்ளரிக் காய்கள்போல, ஆண் பார்களவருடைய பொருளெல்லாங்கேளு அருளுவார்வாசி சித்தியது தானே. (787)

தானென்றவாதசித்தி யதைச்சொல்வார் தருவானஞானசித்தின் கருவதனைச்சொல்வார், பேனென்றபெருமையா யதனைச்சொல்ல போனமவுனகுரு நிலையதனைச்சொல்வார், வானென்றமுக்கருவுவக் கருவிலாச்சு, மகத்தானகோடிவித்தை யிதிலேதோன்றும், கானென்ற கருக்குருவும் கைபாகஞ்சொல்லிக் கனயோகஞ்செய்யும்விதங் காண் பிப்பாரே. (788)

பாரப்பாவாதத்தின் குருவதனைச்சொல்வார் பண்மைபெறுந் தெசதீட்சை பகருவார்மைந்தா, பேரப்பாயவர்பெருமை மகிமைத னைச்சொல்வார் போனமெவுனகேசர குளிகைசொல்வார், தேரப்பா ரசகுளிகை காயாதிகற்பந்தெளிவானயட்டமாஞ் சித்துமவரளிப்பார், பாரப்பாவறுபத்து நான்குகலைசொல்வார் பண்பாகயாதாரமே, லாதா ரஞ்சொல்வார். (789)

மறைப்புமை.

சொல்லுவார்சகலசித்து முனக்களிப்பார் சொல்லவொண்ணுக் கருவெல்லாஞ் சொல்லுவாரையா, அல்லுவார்யுகாயுகாந்தரங்கள் மிக

வாழ்வார் அருளுவார்சாயுச்சிய மென்றும்பதினராய், நல்லுவாரவருடைய கருவெல்லாஞ் சொல்லி நவிலுவார்கநாயின் மையதனைக்கேட்பார்,சொல்லொணுப்பொருய்நீ யின்னமொருசேதி சொல்லுகிறேன் புலத்தியனே நன்ருகத்தானே (790)

நன்ருகக்கருநாயின் மையிலெள்ளிடைதான் நலமானதேசிசெபநீரு முளுந்திடைதான், கன்ருனவுள்ளங் கரமதுவில்வைத்துக் கருதவேமத்தித்துக் குழைத்துநீமைக்தா, நென்ருனநெற்றிதனில்திலர்தங் கொண்டையா நீமனேகுளிகை டேறுவாய்கேசரம், வன்ருனவன் போக மாகவேபேகி வசனிப்போம்பொதிகைதனில்வந்துவிடுவாயே.

## பொதிகை கிரிச்சாரல் கருவேங்கைமரம் தியானம்

வந்துநீபொதிகைகிரிச் சாரலடிவாரம் வசனிப்போங்கருவேங்கை மாமாறுவுண்டு, அந்துநீபம்மர மடிவாரந்தன்னில் அடவானயாசனமாங் தோலின்மீதில், குந்தியுட்கார்ந்துநீயென் னுடையதியானங் கூறுவீர்ஓம்வசிய நமவென்றுதானும், அந்துநீ அறிம்ஐயும் கிலியும்திறிசவ்வும் அருளுவாய்கிலியும்அங்கு ஷாயாவென்றுருவே. (792)

## நவகோடிசித்து.

உருவானதியானமது நூற்றெட்டாக உச்சரிப்பாய்நீயும் புலத்தியனேகேளும், கருவானகரடிபுலி சிங்கம்வெகுயாளி கண்டபேரண்டமிருக மெல்லாந்தான், குருவானயென்னுடைய தியானஞ்செபித்தால் கூறினே நிருகங்க ளோடிவிடும்பாரு, சருவானயென்னுடைய பொதிகையகபீடஞ் சார்வாகவாரும் புலத்தியனேநீகேளே. (793)

கேளப்பாயென்னிடம் வந்தையாவென்ருக்கால் கிருபைபெறுஞ் சாயுச்சிய பதவியுனக்கீய்வேன், சாளப்பாசௌமிய சாகரத்தின்பொருளைச் சார்வாகவெளியரங்க மாகவுநாம்சொல்வோம், ஏளப்பாகுருவாணை யென்மீதிலாணை பேறும்பிராணபீட கருசொல்வேன்,நாளப்பாசெல்லாதுநவகோடிசித்து நவதீட்சைகுருதீட்சைநாமளிப்போமே.

அளிப்போமேயாதாரம் நிராதாரஞ்சொல்வோம் அதனுடையவுபதேசமருளுவோம்பார்த, நளிப்போநாம்ஞானகருமவுனக்கருசொல்வோம் நவகோடியுநாந்திரங்கள் நிலைகள்மிகச்சொல்வோம், அளிப்போமேசாகரத்தி லேனை நவிதப்பேறு கருவிதொண் ணூற்றாறு தத்துவமுஞ் சொல்வோம், அளிப்போமேமகத்தான பொருள்களெல்லாஞ்ஞானகத்தியனைப்போலேநாம் வாழ்விப்போங்காணே. (795)

காணப்பாகருநாயின் னைமபெருமைமெத்த கண்டாக்கரலவன்
யோகி சித்தனவனாகும், நாணப்பாநாம்சொன்னேனும் கருநாயின்னமை
யை நாடதிலேமனிதர்செய்வா ரறிதாகுமையா, வீணப்பாமற்றொரு
மை யெல்லாமைந்தா விருதாகுமிம்மைபோ லொருமைமிகயுண்டோ,
ஆணப்பாயிம்மையைச் செய்வரேயாகில் அவர்காண்பார்சித்தருட மா
ய்கையறிவாரே. (796)

## வெண்காரவைப்பு சந்திரன்வாளம்.

அறிவதற்கின்னமொரு கருவதனைக்கேளு அருளுவோம்வெண்
காரஞ் சந்திரன்போல்வர்ணம், அறிவதற்கருளுவோம் வெண்காரவை
ப்பு அறைகிறேன்புலத்தியனே வண்மையிதுபாரீர், தரிவதோராரு
மறி யார்கனிதுபாருஞ் சைதன்னியமாகவே சொல்லக்கேளையா,நறிவ
திதுவெடியுப்புமாக்கருவையா நலமாகமுன்சொன்னபாகுவதுவாமே.

ஆமேதானெவ்வொன்று சேர்கொண்டுநீயும் அருளானகல்லுரலி
லிட்டுமிகதாக்கி, நாமேதான்முன்சொன்ன வெண்காரஞ்சேரு நவிலு
வோமதுகூடயிட்டுநீதாக்கி, சேமேகான்சிவகெங்கையிரண்டுசேர்விட்
டுச் செயமாகவிருப்புலக்கை கொண்டுமையா, வாமேதாளிடித்ததனை
மாத்தூள்போலவசனித்தோம்தோண்டியொருபாண்டமதிற்போடே.

போடப்பாபுலத்தியனே சிவசத்திகெங்கை புகழானபூசிசெய
நீர் குருசெயநீரு, சேடப்பாவொவ்வொன்று பலம்நாலுவாங்கிச் செய
மானபாண்டமதி லிட்டுநீகேளு, நாடப்பாமத்தித்துக் கூட்டிகரமத
னால் நவிலுவோங்கரைத்துநீ கண்பாகக்கேளும், ஆடப்பாயடுப்பின்
மேல் பாண்டம்வைத்து அருளுவோங்குறிசல் விறகுநீயெரியே. ()

எரித்துநீமுச்சாமமிவ்விதமானால் யென்சொல்வேனப்பாகொதி
கொதிக்கும்பாரு, அரித்துநீயப்பாண்டமிறக்கிநீவைத்து அண்டயச்
சிலிதைச்சாய்த்திடாய்மைந்தா, சரித்துநீயப்பாண்டஞ்சாய்த்ததேயா
கில் சலநீருவற்றியொருபாறைபோலாகும், மரித்துநீயப்பாறையாரிண
தோர்பிறகு மகத்தானவெண்காரவைப்பையெடுத்திடாயே (800)

## வாலைபூசை காயசித்தி.

திடமானயிப்பாறைவெண்காரவைப்புச் செகத்திலேயார்வைப்
பார்செப்பிடுனைமைந்தா, மடமாதுதேவிமனோன்மணிவாலையையா மவ
ள்பதம்வைத்துநீபூசிப்பாய்பாரு, நடமாடுஞ்செகமாயியவளுடையகி
ருபை நாள்தோறுமவள்பதந் தெரிசிப்பாய்மைந்தா, செடமானதிரே
கமதுசெணப்போதிலேயா செயலானகாயசித்தியதுவாமே. (801)

## மெய்ஞ்ஞானபரகெதி.

சித்திக்கயின்னமொருவயணமொன்றுசேளு செப்பியதோர்வெண்காரப்பலகைதனைகொண்டு, முத்திதருமெய்ஞ்ஞானப் பிராணுயபீடம் மூலமுதலாறுவரை சிமயவவென்று, சித்திதரும்ரேசகம்பிராணுயத்தோட்டி சரமாகத்தம்பித்துக்கும்பித்தாயானால், வெத்திகருசகலசித்தியுனக்கெய்தும் மெய்ஞ்ஞானபரகதியுமிகவெய்தும்பாரே.

## கார வைப்பு.

பாருமிதுவெண்காரப்பலகைதனைக்கொண்டு பதனமதாய்வைத்துநீபணிந்துபூசித்து, தேறுநீகாரவைப்பதனைக்கேளு செகத்திலேயார்செய்வார் செப்புகிறேன்பாரு, சேருநீசிவவுப்பு சிவசத்தியுப்புச்செயலானயிரண்டுப்பு மொவ்வொன்றுசேர்தான், பாருநீசவர்க்காரவுண்டைபநிற்சேர்தான் பரிவாகயிவ்வகைகள்கல்லுரலிற்றுக்கே.

தாக்கியேசுத்தசலம்படியொன்றிட்டுத் தருவானவிருப்புலக்கைகொண்டையா, சாக்கியேமுச்சாமஞ்சாடினுலதுவுஞ் சார்வாகப்பிசினதுபோலதுவுமாகும், வாக்கியேயதைக்கொண்டிப்பாண்டத்திலிட்டுவளமானரோமசெயநீர்சேரொன்று, ஆக்கியேகிளிசெயநீர்சேரொன்றுவார்த்து அதைக்கூட்டிமத்தித்துக்கரமதனுல்வாரே. (804)

கரைத்துநீகரைத்தவொருபாண்டமதைக்கொண்டு கருதவேயடுப்பின்மேலேற்றியேயப்பா, ஊைத்துநீயக்கினியைமூட்டிநீநன்றாய்நிலைபெறவேதணல்மூட்டி யெரித்திடாய்பாரு, வரைத்துஅந்நீர்வற்றிமாக்குழம்புபோலா மடவாகச்செய்வோர்கொதிக்குமதுபாரு, இரைத்துநீயப்பாண்டமெடுத்துநீயையாஇயலானயண்டச்சில்சாய்த்திடீரே

சாய்த்திடீர்சாய்த்திடுமப்போதுமையா சார்வாகக்காரமது பலகைபோல்பாயும், ஆய்த்திடீராறினதோர்பிறகெடுத்ததனை யருளானசிவயோகக்குகைக்குட்சென்றையா, பார்த்திடீர்பிராணுபபீடமேசென்றுபருவாசியரைரேசகம்வங்கென்றுநாட்டி,ஏர்த்திடீரெழுத்துங்கும்பித்தால்தானும் யேகவுபதெரிசனமாமிதுதான்பாரே. (806)

பாரப்பாபுலத்தியனேயங்கென்றேகிப் பரபூசைகுருபூசைபணிந்திட்டுநீயும்,காரப்பாபதனமதாய்க்காரவைப்பதனைக்கருணைதயப்பூசித்துக்கனிந்துபாரையா, நாரப்பாகாரவைப்பதனைச்சொன்றேம் நாடதிலேஞானிகளேசெய்துபாரிதனை, வேரப்பாவேதைக்குவேகமிதுபாரு வெட்டவெளியாகவும்காம் விளம்பினேன்காணே. (807)

## சாரவைப்பு.

காணடாசாரவைப்பதனைச்சொல்வோம் காரஞ்சேர்கல்லுப்புச் சேரொன்றுவாங்கி, வேணடாவெடியுப்புச்சேர்கொண்டுநீயும் விளம்பு வோங்கம்பியுப்புசேரொன்றுகொண்டு, காணடாயிவ்வகைகள்கல்லுர லிலிட்டுகாதநீர்சேரொன்றுகண்பாகவார்த்து, கோணடாவார்த்துமே யிருப்புலக்கைகொண்டு குழுறவேமுச்சாம மிடித்துத்தூளாக்கே. ()

ஆக்கியேயத்தூளைத்தோண்டிபொருபாண்டம் அடவாகத்தூள தனைப்பாண்டத்திலிட்டு, தேக்கியேதேசிசெயநீருசேரண்டு தெனி வாகப்பாண்டமதில்தென்பாகவிட்டு,வாக்கியேகரைத்ததனைக்குழம்பு போலாக்கி வடுப்புமேலிப்பாண்டம்வளமாகயேற்றி, காக்கியேயக்கி னியைமூட்டிநீநன்றாய் நலம்பெறவேமுச்சாமமெரித்திடாய்தானே. ()

எரித்திட்டுப்பாண்டமதையிறக்கியேநீதான் இயல்பெறவேயண் டச்சில்சாய்த்துநீபாரு, அரித்திட்டுவாறினபின்னெடுத்ததனைப்பார்த் தால் அதன்பெருமைமெத்தவுண்டு யாருமிதைச்சொல்லார், குறித் திட்டசாரமதின் வைப்பதனைக்கொண்டு குருபூசைபராபூசைசெய்து நீயப்பா, பறித்திடவேவைப்பதனைப்பதனமதாய்ச்செய்து பணிந்து நீவாலையைத் தெரிசிப்பாய்த்தானே. (810)

தெரிசித்துவாலையை யர்ச்சித்தவள்பாதம் தினமவள்கமலபதம் பணிந்துநீபோற்றி, வரிசித்துப்பிராணயாசிகொண்டையா வசனித் தோம்ரேசகம்வங்கென்றுநாட்டி, தரிசித்துக்கும்பித்துத்தம்பித்தாயா னுல் தலமாறுதெரிசனமுந்தான்காணும்பாரு, உரிசித்துவுள்மூல தெரி சனமேயாச்சு ஒகோகோகாரத்தின்வைப்பதுவுமாச்சே. (811)

## மூப்பூவின்மார்க்கம்.

ஆச்சென்றயின்னமொருகருவதனைக்கேளும் ஆச்சரியமாரறிவா ருப்பினுடனேர்மை, மூச்சென்றமுப்பூவின்மார்க்கமிதைபாரு முறை யாகக்காணுர்கள் காணக்கருச்சொல்வோம், வாச்சென்றவெள்ளைக் கல் கல்லினேர்மை வளமானபிரமகற்பமதுதான்பாரு, மூச்சென்ற மூலமது வருளையாகும் முறுதிபெறுங்கோசபீச மதுதான்பாரே. ()

பாரப்பாயப்பீசம்அகாரமதுவாகும் பண்மைபெறுங்கோசமது உகாரமதுவாகும், தேரப்பாகருவுருவோங்காரமதுவாகும் திருவான நகாரமது வுயிரதுதானகும், பேருமதுபிண்டமதுவகாரமதுவாகும் பேரொளிபோல்நின்றதொரு மகாரமதுவாகும், ஆருமறியார்களிது பிரமவொளிகாணுர் அகாரமதுஅண்டக்கல் லடிமுடிகடுவாமே. (813)

ஆமென்றவிந்ததுவும்அகாரபீசந்தான் ஆனைரசவிந்ததுவு மதற்
குட்பீசந்தான், நாமென்றநாதமதுவுகாரபீசந்தான் நாதவிந்துமூல
மதற்குட்பீசந்தான், ஓமென்றவோங்காரபிண்டபீசந்தான் உட்காரு
நகாரமெனுமுருள்பீசந்தான், பேமென்றசுரூபமதுயெங்குநிலைகாணார்
பேரானயண்டக்கல் பேசாவுயிராமே. (814)

உயிரானகல்லுக்குப் பேர்தானுமென்ன உடன்சேர்ந்தகருவுக்
குப்பேர்தானுமென்ன,உயிரானகல்லதுவும்அண்டக்கல்லாகும்உடன்
சேர்ந்தகருவதுவும் நாதவிந்தாகும், உயிரானவடிவென்னவுப்புக்கரு
வென்ன வுறுதிபெறுமுடியென்ன மூலநடுமென்ன, உயிரானமுடி
விந்துவென்னநிறமாகும் ஓகோகோநாதமது மஞ்சளதுவாமே. (815)

## கோழிமுட்டை மனிதர்கருபூமி பூநீறு.

அதுவானஅண்டமென்றுஞ்செனனமெத்தஅதுவாறுயென்குரு
வேயருளுவீர்தானும், பதுவானபுலத்தியனேபாகமாய்க்கேளு பாடு
கிறேன்சௌமியசாகரமிந்நூலில், நதுவானவெண்கருக் கோழிமுட்
டைப்பார் நாதவிந்ததுவுமனிதருடகருபார், சதுவானபிறிதிவுதான்
பூமியதுவாகும் சார்வானபூநீறிது தான்படருமென்றே. (816)

## மேலகவி முறையாவன.

என்றானயிதுமூன்றால்முப்பூவுமாச்சு யேமென்றபரியேமமதுவு
மாச்சு, கொன்றானகோழிமுட்டையென்பார்சிலபேர் குருடர்களே
வயித்தியத்துக்குருவதுவுமாச்சு, உன்றானவுன்னாணையென்னாணையது
தான் ஓகோகோபாரதினாலேவயித்தியஞ்சித்தி, கன்றானபனிநீருசுத்த
சலங்கேளு கருவிதொண்ணூற்றாறில் பனிநீருமாச்சே. (817)

ஆச்சப்பாமனிதருடசடலமதிலுண்டு அருளினோம்பனிக்குடம்
பெண்ணுடலிலாகும், பேச்சப்பாகுருவாணை யிதைவிடப்பனிநீர்,
பேரானவுலகதனிலில்லைபாரு, போச்சப்பாபூநீறுபூமிதனிலுண்டு பிறி
திவியின்சாரமது பூமிநாதந்தான், வாச்சப்பாயிதுமூன்றால்சகலசித்து
மாச்சு மாராட்டமாய்ச்சொன்னார் முன்னோர்களாமே. (818)

முன்னோர்கள்பாடியதோர்நூலெல்லாந்தான் முறையதனைச்சொ
ன்னார்கள் கருவதனைமறைத்தார், வன்னோர்கள்பாடியதோர் நூன்
முறைக்கெல்லாம் வசனித்தோம்சௌமியசாகரமிதாகும், பின்னோர்
கள்கருவதனைக்கண்டுநாணமையா நீடுலகுசித்தருக்கு நிலைபெறவே
சொன்னோம், அன்னோர்களிம்முறை மூன்றதாலினாலே அருளுமே யாங்
கோடாகோடி யுப்புமுறையாமே. (819)

## உப்புப்பீங்கானெட்டு.

முறையானதிங்களெட்டினிலையாகேளு முன்சொன்னபனிநீரு மூன்றுபடிகொண்டு, அறையானவிந்துசேரதுதான்கொண்டு அடவானபெண்விந்து நாதஞ்சேர்கொண்டு, பறையானயிந்நீருவிதமெல்லாந்தான் பண்மைபெரும்பாண்டத்திலிட்டுநீதாக்கி, வெறையான வெண்கோழியஸ்தியாகும் விளங்குவோமதினண்டம்பதினறுவாங்கே வாங்கியிருபீங்கானில்விந்துநாதத்தை வளமாகவெவ்வேறுவாங்கி தாக்கி, ஆங்கியேயண்டோட்டின்சவ்வதனைப்போக்கி அடவானகல்லுரலிலிட்டுநீதாக்கி, மூங்கியேமுன்சொன்னபூநீர்சேரண்டு மூர்க்கமதாயண்டோட்டில்கூடநீசேர்த்து, நாங்கியேமூன்றுதிங்கள் பனிநீரிருசேரு நலமாகவதன்கூட வார்த்துநீதாக்கே. (821)

தாக்கியேமுச்சாமமிருப்புலக்கைகொண்டு தருவாகயிடித்துமாத்தூள்போற்சாடி, ஆக்கியேமுன்சொன்னபாண்டப்பனிநீரில் அடவானயித்தூளைத்தோண்டியதிலிட்டு, சாக்கியேகரமதனுற்கரைத்ததனை மைந்தா சார்வாகவந்நாள்முழுதும் வைத்துமறுநாளில், தேக்கியே பார்த்தாக்காலையாகேளு தெளிவாகுமத்தெளிவை மறுபாண்டத்தில் வாரே. (822)

வார்த்ததனைப்பாண்டமதையடுப்பிலேற்றி வளமானகிச்சிலிவிறகதனலே, ஏர்த்ததனையிருசாமமெரித்துநீயப்பா மியம்பினேங்கொதிகொதித்தானபிறகையா, பார்த்ததனைப்பாண்டமதை யிறக்கிவைத்தந்தப் பரிவாகவாறியதுசமயமிதுகண்டு, வேர்த்ததனைப்பத்துபீங்கானதனிலிட்டு விசிதமதாய்ரவிமுக மெட்டுநாள்வையே. (823)

வைத்திடவேநாளொன்றுக் கிருசாமம்வைத்து வசனித்தோமதைக்கொண்டுபார்த்தாயாகில், முத்துப்போலெண்ணெய் கசிவதுதானிறங்கும் முறையாகயிவ்விதம் பத்துமுறையையா சத்துமதை யிறுத்துப்போ டொத்தவுப்பாகுஞ் சார்வாகவாரமது யிவ்விதமாய்ச் செய்தால், உத்துப்பீங்கானைப் பார்த்துநிறையப்பா மோகோகோ பீங்கானெட்டுமெடுத்திடே (824)

## சதுர்முகசித்து.

எடுத்திட்டுப்பீங்கானதையெட்டுங்கொண்டையா மியம்புவோம் மசிவயந-கிலியுங்-கிலிரிம்ஓமென்று, தடுத்திடாய்பிராணயம்வாசியதை நாட்டி தனையேறிகும்பகம்பூரகம்பாய்ந்து, நடுத்துநீயித்தியானம் நூற்றெட்டோதி நவப்பிரமசதுர்முகனைப் பணிந்துபூசிப்பாய், அடுத்து

அவர்பிரசன்ன மாவார்சதுர்முகனும் அதிதசித்தியுனக்களிப்பா ரவர் தான்பாரே. (825)

## வெடியுப்பு வைப்பு.

பாரும்புலத்தியனேநீயின்னங்கேளையா பரிசுடையவுப்புமுறை வைப்பதனைக்கேளும், ஆருமிதையறிவார்கள் வெடியுப்பினேர்மை அடவாகமுன்சொன்னயெட்டுப்பீங்கானில், ஊருமொருபீங்கானது யெடுத்தையாகேளு ஒகோபார்கல்லுரமிலுப்பதனையிட்டு, வாருபெற முன்சொன்ன மாக்கருவுசேர்தான் வாங்கியேயுப்பதனிற்கூடவதைச் சேரே. (826)

சேர்த்துநீசிவகங்கை குருசெயநீரையா செயலாகவொவ்வொன் றுவைந்துபலம்வாங்கி, ஊர்த்துநீயுரலிலிட்டு அங்நீரைவார்த்து ஒகோ பாரிருப்புலக்கை யதனிலிருசாமம், வார்த்துநீசாடுவாய் சாடையிற் கேளு மகத்தானதூளாமாவதுபோல்மைந்தா, கார்த்துநீயோர்மாவைத் தோண்டியொருபாண்டங் கைபாகந்தவறுமலதிலிட்டுநீபாரே. (827)

இட்டுநீசிவகங்கைநாதநீரொவ்வொன்று இன்பமுடன்சேருவீத மாகவதிலிட்டு, செட்டுநீசெயசித்தியதுபலிதமதுவாகச் செயலானகர மதனால்கரைத்ததனைமைந்தா, வட்டுமதுபாண்டமதையடுப்புமேலே ற்றி வசனித்தோமிருசாமதணல்மூட்டிட்டு,எட்டுநீயெரித்திடுவாயோர் கொதிகொதிக்கும் இயல்பாகவப்பாகங்கண்டுமிதைபிறக்கே. (828)

## ஐங்கோலநீர்.

இறக்கியேயாறவைத்ததனையேகேளு இயலானபீங்கானிலிட்டுநீ தாக்கி,வறக்கியேவார்த்ததனைரவிபத்துநாளும்வளமாகயிருசாமம்வைத் தீரானல், புறக்கியேவைங்கோலரவிநீரிறங்கும் புனிதமதாய்ப்பாண்ட மதிலருவியகையிருப்பாய், நறக்கியேபிவ்விதம்பத்துநாளுந்தான் நல மாகவைங்கோலநீரிறக்கிடீர்பாரே. (829)

இறக்கிட்டுப்பார்த்திடவேபத்துநாளானல் இயல்பானவெடியுப்பு மல்லிகைப்பூப்போலே, பிறக்கிடவேபூபூர்க்கும்பூவைத்தானும் புனித மதாய்ச்சிஷாவில்பதனமதாய்ச்செய்வீர், அறக்கிட்டுமூலாதாரமேபுக்கி யருளானவெடியுப்பை யருகுநீவைத்து, வறக்கிட்டுஒங்கென்று வாசி யதைக்கொண்டு வருஷிப்பாய்ரேசகம் தம்பிப்பாய்தானே. (830)

தானென தமர்வாசல்மூலமேபுக்கித் தம்பித்துவொருநிலையாய்க்கும் பித்தாயானல், ஆனைகுண்டலிதாய்பிரசன்னமாவாள் அவள்பதமே

பூசித்தாலெல்லாஞ்சித்தி, ஒனுமென்றசித்திதனையுனக்கீவாள்பாரு ஒ
கோடாகோடிவெடியுப்பின் மர்மங்கள்செய்வாள், வேணுமென்றபொருடங்
தாட்சிப்பாளப்பா விளம்பினேம்வெடியுப்பின் வைப்பிதுவுமாச்சே.

## பொட்டிலுப்பு வைப்பு

ஆச்சப்பாவெடியுப்பின்வைப்புமுறைசொன்னேம்யருளுவோம்
பொட்டிலுப்பு வைப்பிதைக்கேளும், பேச்சப்பாபின்னுமொரு பீங்கா
னிலுப்பைப் போரகிக்கொண்டுநீ கல்லூரலிலிட்டு, மூச்சப்பாமுன்
சொன்ன மாக்கருசேர்தான் மூதண்டமாகவேயுப்பதனிலிட்டு, பாச்
சப்பாசிவசத்தி கங்கைபதிற்சேரு பண்பாகவூசிசெய நீருசேர்வாரே.

வார்த்துநீயிருப்புலக்கை கொண்டாலேயா வளமாகயிருசாமஞ்
சாடினலப்பா, மார்த்ததுவுமாப்போலா மம்மாவைத்தோண்டி வசனித்
தோம்பாண்டமதி லிட்டுநீதாக்கி, சேர்த்துநீயெட்டுதிங்கள் பனிநீரு
சேரு செயலானகாதவிர்த்து வொவ்வொன்றுசேர்தான், கார்த்துநீமாட்
டாடபாண்டமதிலிட்டுக்கருணைபெறக்கரமதனைற்கலைக்கியடுப்பேற்றே

ஏற்றியேயிருசாமம்விறகிட்டையா யெரித்தீரேயாமாகிலோர்கொ
திகொதிக்கும், வாற்றியேயப்பாகங் கண்டுநீமைந்தா வளமாகப்பாண்
டமதை யிறக்கியாறவைத்து, காற்றிசையும்புகழ்பெறவே பீங்கானில்
வார்ந்து நல்லரவிபத்துநாள்வைத்துயிருசாமம், பூர்த்துமலருப்பாகு
மைங்கோலநீரு புகழ்பெறவேயிருக்குமது யிறுத்திடீர்தானே. (834)

தானென்றமுன்பாண்ட நீரதிலேயையா சைதன்னியமாகவே
பத்துவிசையிருப்பாய், பானென்றபத்துவிசை யிருத்தீராகில் படரு
மதுபொட்டிலுப்பு பீங்கானிறையத்தான், வானென்றயப்பூவை யெடுத்
துமேஷா வம்மாகவதிலிட்டுபிரடையதுபோடு, நானென்றபிராணுய
கொண்டையா நல்லசுவாதிட்டானம் நங்கென்றுயேகே. (835)

ஏகியேஓம்நமசி வாயமென்றிருநூறு இயம்பினேம் ரேசகம்
கொண்டுசெபித்தால், பாகியேபரப்பிரமம் பிரசன்னமாவார் பணியு
மவர்கமலபதங் தெரிசிப்பாய்நீயும், தேகியேதெரிசித்து யர்ச்சித்தா
யானல் தெளிவாகஉவுனசித்தி யதுதருவார், நாகியேகெவுனகுளிகை
யதுமீவார் நலமானவாதசித்தி தான்தருவாயே. (836)

## படிகாரவைப்பு.

தருகவேயின்னமொரு வைப்பைக்கேளு சைதன்னியமாகவே
படிகாரவைப்பு, நருகவேநாம்சொல்வோம் புலத்தியனேயையா நாட
திலேயிவ்வைப்பு யெவர்செய்வார்பாரு, புருகவேபின்னுமொரு பீங்

கானிலுப்பை புனிதமதாய்க்கொண்டுநீகல்லுரலிலிட்டு, சருகவேமுன்
சொன்ன மாக்கருலைமந்தா சார்வாகச்சேர்கொண்டுகல்லுரலிற்றூக்கே

தாக்கடாரோமசெய நீருசேரொன்று தருமானநாதவிந்து பலமு
மஞ்சு, சேக்கடாசிவகங்கை சேரொன்றிட்டு செயலானயிருப்புலக்கை
யதனிலே, நாக்கடாயிருசாபந் தாக்கிலையா நல்லமாத்துளதுபோ
லாகுமிதுபாரு, வாக்கிலைமுர்தமதாய்நாம் சொன்னோம்பாரு மம்
மாலைவத்தோண்டியொரு பாண்டமதிற்போடே. (839)

போட்டுநீமாசமெட்டில் பனிநீரையா புனிதமதாய்ச்சேரண்டு
பாண்டமதில்வார்த்து, நாட்டிநீசிவசத்திகெங்கைபலமாறு நலமாக
விருநீரும் விட்டுக்கரைத்திட்டு, தீட்டமதாய்ப்பாண்டமதை யடுப்பின்
மேலேற்றிதீ யெரிப்பாயிருசாமம் நீயுமதுவாக, நாட்டுநீயத்தணலெரித்
ததேயாகில் நல்லகொதிகொதிக்கும்பார் பாண்டமதையிறக்கே ()

இறக்கியேயாறவைத்ததனையையா இயலானபீங்கானிலதையெடு
த்துவார்த்து, நறக்கியேரவிமுகம்நாள்பத்துவீதம் நல்லவொருநாளு
மிருசாமமதுவைத்தால், அறக்கியேபீங்கானிலெங்கோலநீ ரநுவிபோ
லிறங்குமது முன்பாண்டந்தனிலே, நிறக்கியேநீரோடேநீரதனைவார்
த்து நிலையாகபத்துமுறையிப்படியேயிறுத்திடே. (841)

இறுத்திட்டுநாள்பத்துஞ்சென்றதேயாகில் என்னசொல்வேனதி
ற்பீங்கான்றனிலே, பறுத்திட்டபடிகாரவுப்பதுவும்பூர்க்கும் பளிச்செ
ன்றுசந்திரன்போல்வர்ணமாகும்,அறுத்திட்டுவப்பாகங்கண்டிரானால்
அருளானபடிகாரவுப்பதனைக்கொண்டு, செறுத்திட்டச்சீசாவிலுப்பத
னையிட்டுச் செயலானமேல்பிரடைசெப்புவீராமே. (842)

செப்புவோம்புலத்தியனே மணிபூரஞ்சென்று சிவநயவலும்மெ
ன்று வாசியதைமொட்டி, நப்புவோம்பிராணய பீடமேசென்று நல
மாகமங்கென்று ரேசகம்பாய்ந்து, அப்புவோமங்குநின்று தம்பித்தா
யானால் அருளானவிஷ்ணுவும் பிரசன்னமாவார்,கப்புவோமவருடைய
கமலபதமேவிக் கைதொழுதர்ச்சித்துப் பூசிப்பாய்த்தானே. (843)

பூசித்தால்விஷ்ணுவும் வேணதுமளிப்பார் புகழானபடிகாரசித்
தியுமளிப்பார், ஆசித்தாலாதார முத்தியுங்கொடுப்பார் அடவானவாத
மே சத்தியுங்கொடுப்பார், காசித்தால்காயாதி கற்பமுமளிப்பார் காய
சித்திகைகூடும் பொருளதுவுஞ்சொல்வார், வாசித்தால்வாதசித் தியு
மளிப்பார் வாசிசித்திகெவுனகுளிகை யதைக்கொடுப்பாரே. (844)

## இந்துப்புவைப்பு.

பாரப்பாபுலத்தியனே படிகாரவைப்பு பண்மைபெறச்சொல்லி விட்டோ மின்னமொன்று, வாரப்பாயிந்துப்பு வைப்பதனைக்கேளும் வசனிப்போமின்னமொரு பீங்கானிலுப்பை, தேரப்பாயவ்வுப்பைக் கொண்டுநீமைந்தா தெளிவானகல்லுரலி லிட்டுநீதாக்கி, சேரப்பா வெட்டுதிங்கள் மாக்கருத்தான் செயலாகச்சேர்கொண்டு வுப்பதனிற் சேரே. (845)

சேர்த்துநீவிளிசெயநீர் சேர்கொண்டுவார்த்து செயலானநாத விந்து சேர்வார்த்து, பார்த்துநீயிருப்புலக்கைகொண் டிருசாமஞ்சாடு பரிவானமாத்தூளு போலதுவாகும்,கார்த்துநீயம்மாவைப்பாண்டத்தி லிட்டுக் கருவானவைந்துதிங்கள் பனிநீருமேதான்,வார்த்துநீரதிசெய நீர் கொண்டுதாக்கி வளமானகரமதனாற் கரைத்திடீர்பாரே. (846)

கரைத்ததம்மாவிருந்த பாண்டமேகொண்டு கருணைபெறவடுப் பேற்றித் தீபமிடுமையா, தெரைத்ததீமூட்டியே யெரிப்பாயிருசாமந் தெளிவாகவோர் கொதிகொதிக்குமதுபாரு, அரைத்ததீகொதித்ததே யாமாகிலேயா அப்பாண்டமிறக்கியே யாறவைத்ததனை, பொரைத்த பீங்கானிலேவார்த் ததனையையா போராகநாள்பத்து * ரவி முகமே வையே. (847)

வைத்துநீநாளொன்றுக் கிருசாமம்வைத்தால் வளமாகவைங் கோலநீ ரவிபாயும், பைத்தநீமுன் பாண்ட நீரிலிந்நீரைப் பரிவாகயிறு த்துவிடு பண்மையதுவாக, வைத்துநீநாள்பத்துமிவ் விதமாயிருத்தால் நலமானயிந்துப்பு பூர்க்குமிதுபாரு, கைத்துநீயிவ்வுப்பு பீங்கானிறை யத்தான் கருணைபெறப்பூர்க்குமது கைபாகமறியே. (848)

அறியவேயப்பீங்கானெடுத்துமேவையா அருளானயிந்துப்பைச் சிஷாவிலிட்டு, மறியவேயச்சிஷா யருகுநீவைத்து மகத்தானவாசியை யனுகதமொட்டி, நெறியவேசிவயநம வென்றுவுருநூறு நேரானரேசகங்கொண்டுநீயொட்டி,வறியவேயங்குமேசின்றுகும்பித்து வளமாகச் செபிப்பாய் ருத்திரனைத்தானே. (849)

செபிக்கக்கேருத்திரனும் பிரசன்னமாவார் தெரிசிப்பாயவரைநீ பூஜிப்பாய்மைந்தா, செபிக்கவேயவரொரளிவு நன்றாகக்காணுந் தேக சித்திகாயசித்தி யளிப்பாமிகபாரு, நபிக்கவேயிந்துப்பு மகாசித்தி

* ரவியென்பது - சூரியன்.

யாகும் நவகோடிசித்தியுமுனக் களிப்பார்பாரு, கபிக்கவேயவனைநீ
கைதொழுதுமைந்தா கருணைபெறயிந்துப்பைக் கைதொழுவாயே ()

## வளைகிலுப்புவைப்பு.

கைதொழுவாயிந்துப்பின் வைப்பதனைச்சொன்னோம் கருது
வோம்வளைகிலுப் பினதுவைப்பு, கைதொழுவாய்புலத்தியனே யின்
னமொருபீங்கான் கருவானபீங்கானிலுப் பதனைக்கொண்டு, கை
தொழுவாய்கல்லுரலி லுப்பதனையிட்டுக் கருணைபெறுஞ்சாரஞ்சேர்
கூடச்சேர்த்து, கைதொழுவாய்காதவிந்து பலமாறுவிட்டுக் கைபாக
மாகவே சுத்தசலஞ்சேரே. (851)

சேரானரவிசெயநீர்சேர் கொண்டுவார்த்து செயமானமாக்கரு
சேர் கொண்டுவிட்டு, ஏரானயிருப்புலக்கை யதனாலேதான் யிருசாம
மாவதுபோல் சாடுவாய்மைந்தா, சாரானசாடியிலே மாத்துள்போ
லாஞ் சமர்த்தானவம்மாவைக் தோண்டிநீயையா, வாரனபாண்டமதி
லிட்டுநீதாக்கி வளமானசிவகங்கை வார்த்துச்சேர்கரையே. (852)

கரைத்திட்டுவடிப்பின்மேற் பாண்டமேற்றிக் கனலானதீமூட்டி
யிரு சாமமெரித்தால், அரைத்திட்டகுழம்பாகுமோர் கொதிகொதிக்
கும் அப்பாகங்கண்டுநீ பாண்டமதையிறக்கி, கரைத்திட்டவாறின
பின் பிறகதனைக்கேளு வளமானபீங்கானில் வார்த்துநீமைந்தா, கரைத்
திட்டரவிபத்துநாள் மூன்றுமுறைதான் கண்பாகவைத்ததனை யைங்
கோல்நீயே. (853)

நீரானநாளொன்றுக்கிரு சாமம்வைத்தால் நேர்மைபெறுமைங்
கோல்நீ றிறங்கும்பாரு, ஆரானபங்கீரைமுன் பாண்டநீரில் அருளி
னேம்நாள்பத்துமுறை யிவ்விதமாயிறுத்தால், சேரானவுப்பதுவுமிதுக்
குள்ளேயாச்சு செப்புவோம்வளையலுப்பு விதிற்படரும், வேரான
யவ்வுப்புப் பூர்த்துப்பீங்கானில் மேல்கிறையநின்றுவிடும் வளையிலுப்
பாமே. (854)

உப்பானவுப்பதனை யெடுத்துசீஷாவில் ஓகோகோயிட்டுநீ சொ
ல்லக்கேளையா, அப்பானயிவ்வுப்பை யருகினில்வைத்து அருளுவோ
ம்மயவசி ஓம்சவ்வும்ஜயும், செப்புநீயிருநூறு விசுத்தியதுயேகிச்
செயலானபிராணைப பீடமதிற்சென்று, வப்பானவாசியதை விசுத்தி
யதிலொட்டி வங்கென்றுரேசகமேகிச் செபிப்பாயே. (855)

செபித்துநீகும்பித்நா லங்குநின்றையா செயலானமகேசனாலும்
பிரசன்னமாவார், கபித்தவரைக்கைதொழுது தெரிசிப்பாய்மைந்தா

கருணையவர்கூர்ந்துனக்கருள் செய்வார்பாரு, குபித்தவரைபூசித்துத் தெரிசித்தாயானால் கூறுவாரதீதசித்தி யதுபாரு, பபித்துநீவளேகிலுப் பதனையப்பா பணிந்துநீபதனமதாய் வைத்துநீபோற்றே. (856)

## ஐங்கோலத் தயிலம்.

போற்றியேவளேகிலுப்பி னிடவைப்பு புனிதமதாய்ச்சொல்லி விட் டோகாம்பாரு, ஏற்றியேயின்னமொரு கருவதனைக்கேளு மியல் பானவைங்கோலத் தயிலமதையையா, நீகாத்துமுன்சொன்ன பாண்ட மதினீரைக் கருவானபீங்கானி லெடுத்துநீவிட்டு, ஆத்தியேமாக்கரு சேர் கொண்டுயிட்டு அருளானபிண்டக்கரு சோதிற்றுக்கே. (857)

தாக்கியேபத்தித்துக் கூட்டிப்பிசைந்து தருவானகல்லூரலி விட் டுநீயப்பா, மூக்கியேமுன்சொன்ன பொட்டுலுப்புசேரு முறையான படிகார வுப்புசேரையா, நாக்கியேவெடியுப்பு யதிலொருசேரு நல மானவிந்துப்பு வதிலொருசேர், வாக்கியேவளேகிலுப் பதியொருசேர் வளமானமுப்பூவு மாறுபலமாமே. (858)

பலமானசிலவுப்பு வதிற்பலமைந்து பண்மைபெறுஞ்சிவசத்தி யுப்புபலமஞ்சு, சலமானசிவகங்கை யாறுபலமாகுஞ் சார்வானசிவ சத்தி கங்கைபலமாறு, புலமானபூநீறுபாகு பலஞ்சேர்தான் புனித மென்றநாதவிந்து பலமிகுமேவைத்து, அவமானவாணவிந்து பலம் பத்துமாகும் அருளினேமுப்புசுண்ணம் பலமொன்றுசேரே. (859)

ஒன்றானமுப்புசெந்தூரம் பலந்தானாறு உறுதிபடுஞ்சிவசெந் தூரம் பலந்தான், நன்றானரவிசெயநீர் மூன்றுபலமாகும் நலமான மதிசெயநீர் மூன்றுபலமாகும், வன்றானநஞ்சுக்கொடி சுன்னம்பலந் தான் வசனித்தோமாகவகை யிருபத்தொன்றையா, குன்றாமற்கல்லுர லிலிட்டுநீதாக்கி கூறுவோமிருப்புலக்கை யதுதானே. (860)

## ஐங்கோலமெழுகு.

தானானவுலக்கைகொண் டிருசாமஞ்சாடச் சாதுரியமாகவேமாத் தூளுபோலாம், தேனானவம்மாவைத் தோண்டியொருபீங்கான் செய லாகவிட்டதனில்குரு செயநீரையா, மானானமுச்சேருவார்த் ததிலே தான் வளமாகமத்தித்துக் கூட்டிப்பிசைந்து, ஆனானரவிதனிலேமுச் சாமம்வைத்தால் அருளுவோம்வீறிட்டுப் பர்யுமதுதானே. (861)

## ஐங்கோலமெழுகு.

பாயுமதுவருவிபோலத் தயிலமதுயிறங்கும் பரிவாகயெடுத் தத னையேஜயா, சேயுமதின்சிஷாவிற் றயிலமதையிட்டுச் செயமாகவடி.

யில்நின்றகுழம் பதனைக்கொண்டு, தேயுமதின்தேசிசெயநீ ரதனிற் சேர்தான் செயலானமதியமுர்த மாறுபலமாகும்,பேயுமதின்பீங்கானி லிவ் வகைகளிட்டுப் பெலமாகமத்தித்து ரவியில்வைத்திடடே. (862)

வைத்ததனையிருநாழி சென்றதேயாகில் வளமானவைங்காய மெழுகதுவாகும், செத்ததனைச்செப்புப் பரண்டில்வைத்துச் செய லானவைங்கோலத் தயிலமிதிரண்டும், எத்ததனையுமிருக்கு மில்லத் திம் என்மகனேசென்றுநீ யருகிதைவைத்து, மைத்தனையறுபத்து நான்குசித்துமாட மகயவசிசிறிஜயும்கிலியும் சவ்வென்னே (863)

என்னப்பாபுலத்தியனே பிராணயபீடம் யேகியேவாசிகொண் டிழுத் ததனையையா, கன்னப்பாரேசகங்கொண் டறிவதனைக் கருது வாயித்தியான மவுனங்கொண்டையா, தன்னப்பாதம்பித்துச் சுட ரொளியில்நின்று தருவாகநூறுச் செபித்தாயானல், பொன்னப்பா யாக்கிணையில் சதாசிவஞ்சத்தி புரிவாரவர்பிரசன்னம் பூசிப்பாய் தானே. (864)

பூசித்தாலென்மகனே புலத்தியனேகேளும் புரியட்டம்நீக்கியே யுப தேசஞ்சொல்வார், ஆசித்துவுபதேசமருள் தருவார்பாரு அறு பத்துநான்குசித்த மாடத்தான், வாசித்துவுபதேசம் வாங்கிநீமைந்தா வளமாகயவர்பதமே பணிந்துநீபோற்று, தெரிசித்துவவருடைய கமல பதந்தன்னில் தினந்தோறுமவர்பதமே பூசிப்பாய்தானே. (865)

பதமானவைங்கோலத்தயிலமிதைச்சொன்னேம் பரிவானவைங் காயமெழு கதனைச்சொன்னேம், அதமானவைங்காயமெழு கதனாலே ஆடலாமட்டமாசித்து முதற்கொண்டு, மதமானமாரணமித னலேயா கும் மவுனகேசரம்பாய் வாருமிதனலேதான், சதமானவைங்கோலத் தயிலமதனலே சதாகோடிசித்துவினை யாடலாம்பாரே (866)

## நந்தீசர் கலைக்ஞானம் பார்க்கவும் தன்வந்திரி காவியம்பார்க்கவும்.

ஆடினர்சிவன்சொல்ல வுமையவள்கேட்டு அருளினள் நந்தீசர்க் குபதேசஞ்சொன்னள்,சாடினர்நந்தீசர்சகல கலைக்கியானம் சரமாகத் தொந்தங்கொண் டேரினர்பாரு,வாடினரக் னூலுக்கின் னூலும்பாரு மகத்தானவன் னூலின்பூட் டெல்லாந்தோற்றும், நாடினர்நந்தீசரருளி னர்பாரு நலமானதன்வந்திரிக் கருளினர்பாரே. (867)

பாரப்பாபுலத்தியனே சொல்லக்கேளையா பாடினர்தன்வந்திரி காவியநன் னூலு,ஆரப்பாயன்னூலுக் கென்னூல்காவியம் ஆயிரத்தறு

நூற்றுச் சொச்சமுநீரறிவீர், ஏரப்பாமகா நூலுதொந்தங்கள்கோடி யென்னுடையவாத காவியமறிவீரே, தேரப்பாமகாகருதல்வெளிச் சொல்லுமல்ல தேறுவேசமவுனச்சொல் தெளியலாம்பாரே. (868)

தெளியவேமவுனச்சொல் லறியவேண்டுந் தியானமந்திரசித்தி மவுனமாலாச்சு, களியவேபொருளெல்லாமவுனமதாலாச்சு கருவுகுரு வுருவுமுதல் மவுனமதாலாச்சு, சளியவேசிவயோக ஞானசித்திமுதல் சைதன்னியப்பொருள்களெல்லா மவுனமதாலாச்சு, பொருளியவே பொதிகைதெட்ச ணையனென்பேர் புனிதமென்றதமிழ்க்குடையவனு னே. (869)

## எந்நூலாகிய வாதகாவியம் ஞானகாவியம் பார்க்கவும்.

நானென்றபேர்தினு லுலகமாச்சு நல்லபதினெண்பேரு மென் பேராலாச்சு,வானென்றமறைநாலு வேதமதாச்சு வளமானபதினெட் டுப் பாஷையதுவாச்சு, ஏனென்றஅறிமென்றுமென் குருவாலாச்சு யெடுத்தவுரையருத்தமுத லென்குருவாலாச்சு, கோனென்றகுருவின் மொழி யறிவின்மொழியாலே குலமொன்றுயின்னமொன்று சாதி யொன்றுச்சே. (870)

ஆச்சென்றகாரணகுருவென்றும்பேரு அசுவனிதேவருடவனுக் கிரகமதனலே, வாச்சென்றதன்வந்தி யசுவனிக்கருள வசனித்தோ ரசுவனிபதி னெட்டுலட்சம், காச்சென்றவவருடைய காவியம்பார்த் துக் கரையில்லாத்தொந்தங்கள் கோடாகோடியாக, பாச்சென்றபொ திகைகிரி யகத்தியனென்பேர் பாடினேம்சௌமிய சாகரமிதாமே. ()

ஆமென்றயென்பே ரகத்தியனுகும் அருளினேமென்னுடைய சீஷர்பதினெண்பேர், தேமென்றதென்பொதிகைதென் கயிலைசீஷர் தேறினரிவர்பெருமை தேசமதிற்செல்லார், வாமென்றவர்சித்தர் நவ சித்தராகு மருளினேமைதில்மூன்று யென்னுடையசீஷர், பாமென்ற பதினெட்டுபே ருக்குமவர்தான் பண்மைகுருமூன்றுபேர் பதினெண் பேர்க்கென்றே. (872)

## கைலாச சட்டைமுனியார் சுந்திரமூர்த்தி பிரரிஷி

பேரானபதினெண்பேர் பிரபலியங்கேளு பேசுகிறேங்கைலாச சட்டைமுனியாகும்,காரானகைலாசபரு வதந்தன்னில் காயாசமுதற் கொண்டுவேடமுதலெல்லாம்,மூரானமுபதேசகாம்சொன்னேம்பாரு முமிடதம்பதிபாசமுறுதியவர்பெற்றூர், பாரானபதினேழுசித்த ருக் குந்தான் பரிபாலஷமுதலானகுரு வவர்த னன்றே. (873)

குருவானசட்டைமுனி சீஷரவர்கேளுங் கூர்மைபெருஞ்சுந்தர மூர்த்தியவராகும்,கருவானபரிவெல்லாமவர் சொன்னார்பாரு கைவல்லியமென்னூறு நூல் பெருமைமெத்த, மருவானகமலமலர்வாசமது போல வசனித்தார்காவியமாயிரமதாகும், அருவானயன்னூலிலனேகம்பேர்சித்தர் அருளினார்வெகுநூலு தேறினார்பாரே. (874)

பாரப்பாசுந்திர மூர்த்தியுடசீஷர் பரிவானபிரமரிஷி யவர்பெருமைமெத்த, தேரப்பாயாயிரத்தைந்நூறுசொன்னார்திரட்டியோராயிரமிரண்டாயிரந்தான், மூரப்பாயின்னாலுமூன்றுங்கருவிளங்கமூதண்டமாகவே யவருடையநூலில், ஆரப்பாவறிவார்கள் சித்தர்வெகுபேரு அறிவாகத்தேறினாரவர் பெருமைதானே. (875)

## சொரூபானந்தரிஷி.

தானென்றபிரமரிஷியவருடையசீஷர் தாசியடாசொரூபானந்தருடபெருமை, ஆமென்றசகலகலைக்ஞான மாயிரந்தான் அருளினார் காவியமெண்ணூறுமாகும், ஏனென்றயிருநூலுக்கரு விடையமாகும் யேறினானந்தம்பேர் தேறினார்வெகுபேர், வானென்றமொழிபெருமையதிதமதுவாகும் வசனித்தநூல்களில்மறை வில்லைதானே. (876)

## சோதிரிஷி

மறைவில்லாமொருசொன்னார் நூல்பெருமைகேளு மகத்தான சொரூபானந்த சீஷர்கள்தான், கறைவில்லாச்சோதிரிஷி யாயிரந்தான் கருவானசோசிய மாயிரமதாகும், திறவில்லாயன்னூறு கற்பமுறை சொன்னார் திரட்டாகக்குறுக்கியொரு முன்னூறுசொன்னார், பறவிலாப்பொருளாகு மின்னாலுதானும் பாடினார்கருவிடையந் தேறினார் கோடி. (877)

## வேதரிஷி

தேறினார்சோதிரிஷி சீஷாவிர்கேளுந் தெளிவானவேதரிஷியவர் பெருமைமெத்த, வாறினாஞ்சாறு கருவதனாலே வசனித்தாரெண்ணூறு மகாபூட்டெல்லாம், ஏறினாராயிரத் தெண்ணூறுபீடம் இயல்பானகாவிய மதிதமன்னூறு, சாறினார்நானூறுமுன் னூறிலையா சாடினார்கருக்குருவுஞ் சமர்த்தாககாணே. (878)

காணப்பாயவர்தந்தை வேதவியாசர் கருதினாரவருடைய பிள்ளையெங்கிட்ட, வேணப்பாவித்தையது நான்குங்கற்பித்தேன் வேதமுனியென்றும்பேர் விளங்கினேம்பாரு, ஆணப்பாயவருடைய நூல

தனிற்கேளு அதிதமெய்ஞ்ஞானிகடர்ன் றேறினர்பாரு, நாணப்பா வுபதேசமவர்க்குச் சொன்னேம்பார் நலமானவேதரிஷி சிஷரவர் கேளே. (879)

கேளப்பாயின்னமொரு சித்தருடமகிமை கெணிதமென்றபராச ரவர் மகிமைதானும், ஆளப்பாவசனித்தா ரையாயிரந்தான் அதைக் குறுக்கிமூவார மதுவுஞ்சொன்னர், ஏளப்பாயிரண்டாயிரத் தைந்நூ று இயம்பினாகருவிடையமின் னூல்போலுண்டோ, நாளப்பாசெல் லாது வவருடையநூலில் நவகோடிசித்தரவர் தேறினர்பாரே. (880)

## திருமூலர்

பாருமிதுபராசருட சிஷரவர்கேளும் பரிவானதிருமூல ரவரு டையநேர்மை, ஆருமவர்பெருமைதனை யறிவாரோமைந்தா அவரு டையவர்க்கமதில் தேறுமறிவுள்ளோர், வாருமிதுதிருமூலர் பாடிய தோர்நூல்கேள் வசனித்தார்திருமந்தி மெண்ணுயிரந்தான், காருமிது காலாயிரம் வாதக்கரடு நளினமதாய்க்கருவிடையம் நன்னூலது வாமே. (881)

## போகரிஷி

அதுவானநூலதனில் தேறும்நவகோடி யார்சொன்னரவருடை ய பெருமைதனைமைந்தர், மதுவானபூமலரின் வாசமதுபோல வச னித்தோமவருடைய நேர்மையதுபாரீர், பதுவானவவருடையசிஷ ரவர்கேளும் பண்மைபெறும்போகரிஷிமார்க்கமதுமெந்த, எதுவான யவர்பெருமைபாடியதோர்நூல்கே ளிருபத்தோராயிர மியம்பினர் பாரே. (882)

## கொங்கணர்.

இயம்பினர்கருவிடையமேழாயிரந்தான்இயலானதிரட்டொன்று யெழுநூரதுசொன்னர், இயம்பினாம்மூன்றுநூலின்பெருமை மூன்று கோடிசித்தரவர் தேறினர்கள்பாரு, அயம்பினரன்னூலதித கருவாகும் அறிவார்களதினறிவதனைக்காணுர், செயம்பினர்கணப்போதில் சதா கோடிஸ்திரீகள் செப்பினேமனுபோகஞ் செப்துவருவாமே. (883)

வருவானதிருமூலரவர் கிருபையதனலே வைப்பெல்லாஞ்சினு வில வைத்தாரவரையா, துருவானவவர்துல்றயாருமறியார்கள்சொல் லினருபதேசங்கொங்கணர்க்கையா,புருவானபோகருடசிஷரவராகும் புகட்டினர்கொங்கணவர் முப்பத்தோராயிரம், அருவானவதைக்குறு க்கி யருளினர்நூலும் அடவானபதினெண் ணுயிரந்தானே. (884)

அடவானபதினுயிரந் தானுமைந்தா அருளினாதுவெல்லாம் வைப்புமுறையாகும், படவானபலமாய்வைப் பெல்லாஞ்சொன்னார் பாடினுரொவ்வொன்றாய் மூவாயிரந்தான், முடவானமூன்றைந்நூறி ட்ட மதாய்ச்சொன்னார் மூலமதிலோரைந்நூற்நடைக் காண்டப் பொருள்தான், நடவான ஞானத்துத் ததீதபீடம் நால்மறையுமதற் குள்ளே யொடுக்கமதுவாமே. (885)

ஆமென்றகொங்கணர்சொல்ல தீதமுறைவாக்கியம் அவருடைய நூல்தனிலே யனேகம்பேர்சித்தர், தேமென்றதிசைகோடி தேறினு ரையா திருவுருவாய்க்கருக்குருவுந் தெளிவாகச்சொன்னோம், நாமெ ன்றநேர்மையதால் நால்வருடபெருமை நளினமதாய்ச்சொல்லிவிட் டோம் புலத்தியனேகேளு, வாமென்றகொங்கணரவர் சீஷருடநேர் மை வசனிப்போம்புலத்தியனே வண்மையதுபாரே. (886)

## பிண்ணாக்கீசர்

பாரப்பாயிருன்னமொரு சித்தருடபெருமை பாடினுர்பிண்ணாக் கீசருடநேர்மை, ஆரப்பாவறிவார்களவருடையநூலு அதீதமையா யென்னுலே சொல்லப்போமேதான், வேரப்பாவெகுவித பன்னீரா யிரந்தான் விசிதமையாவேதைக்கு விஷமதுதானுகும், காரப்பாகரு துமாரா யிரஞ்சொன்னுர் காணீரோயிருநூறுங் கருவிடையமாமே. ()

## மச்சமுனியார்

ஆமேதானன்னூலி லனேகம்பேர்சித்தர் அதீதகோடாகோடி தேறினுர்பாரு, தேமேதான்கோடியண்டம் வரையாறுமேறி திசை யுகாயுகாந்திரங்கள் சிவயோகஞ்செய்தார், மாமேதானவருடையதவ பலத்தைக்கண்டார் மச்சமுனியெட்டெண்ணூற் பாடினுரையா, ஏமே தான்சமுத்திரத்தில் கடலலையப்போல யெண்ணுயிரம்வைப்புமுறை யியம்பினுர்காணே. (888)

காணுமிருநூறுதெச திட்சையதுசொன்னுர் கருவிடையமின் னில லனந்தம்பேர்சித்தர், ஓணுமிரூயுகா யுகந்திரங்காணு முறுதி பெறுஞ்சித்தரவர் வெகுகோடிதேறினுர், பேணும்பிண்ணாக்கீசரவ ருடையநேர்மை பிரபல்லியமச்சமுனியவ ருடையநூல்தான், தாணுந் தவறில்லாநூல் குருபீடமாகும் தலமாறுமச்சமுனிதான் கண்டார் பாரே. (889)

## கருவூரார்

கண்டபொருளேதென்றால் மச்சமுனிசீஷர் கருவூரார்பெருமை யதைக் காணுமொருவர், விண்டபொருளேதென்று லாயிரத்தைக்

தூறு விளங்கினார்கால்மறையும் வெளியாகச்சொன்னார், கொண்டாரவ ர்க்கீடுயெவ ராருமில்லை சொன்னார்கள்திரட்டைக்நூர் கொண்டிமுக் நூறு, சண்டமாருதம்போலா மக்நூற்கருவாகும் சதாகோடிசித்த ரவர் தேறினார்பாரே. (890)

## இடைக்காடர்

தேறியதோரென்னவென்றால் சொல்லக்கேளு தெளிவானகரு வூரார் சீஷரவர்கேளும், ஏறினார்வரைபன்னிரண்டு தொண்ணூற்றார் இடைக்காடர்பெருமைமையை நாமெளிதல்லசொல்ல, மாறினார்கருக்குரு கருதலதுவாக மாட்டினார்காலாயிரத்து யெண்ணூறு, தூறினாரிரண் டாயி ரத்திருநூறு சொன்னார்களாயிரமதிற் பாதிதிரட்டே. (891)

திரட்டானயிவ்வளவுஞ் சொல்லவெளியாகத் தேசமதில்தேறும் பேர்களுக்கையா, பொட்டாகப்போட்டார்க ளர்நூலதீதம் புவனசாக ரங்களுட மகிமையெல்லாந்தான், சொட்டானவன்னூலில் தேறினு ரனேகஞ் செயலானயிடைக்காடர் செப்புநூல்மார்க்கம், கரட்டாகப் போகாது கடந்தபண்போர்கள் கருவாகச்சொல்லியதோர் நூல்பெ ருமைதானே. (892)

## அழுகண்ணர்

தானானவவர்பெருமைகோடா கோடியுகங்கள் சதாகோடியுகாந் திரம் வாழ்ந்தார்களையா, நானானேர்மையதால் சொல்லிவிட்டோம் பார் நல்லயிடைக்காடர் சீஷரவர்கேளும், மானானயழுகண்ணரவ ருடையபெருமை மானிலத்திலாரறியப் போறார்களையா, தேனானகனி ப்பாய்கள் செட்டைமட்டிகள் நேர்மையுறும்வெகுசிந்து நூலதுவு மாமே. (893)

சிந்தானபன்னீராயிரத் திருநூறு செப்பினார்வாதவயித்திய முத லாக, அந்தானயெண்ணாயிரந் தானுஞ்சொன்னார் அதீதநூலாயிரத் திருநூறு, பந்துபோல்செந்துவைப் பாடினாரையா பண்மைபெரும் வைப்புமுறை மூவாயிரந்தான், கந்தானசந்தானங்கள் வெவ்வேறுபா டிச் சாடினாராயிரத்தைந் நூற்றிரட்டே. (894)

திரட்டானயெண்ணூறு மகாசாலபீடஞ் செப்பினார்சோதிய முந்நூறுமைந்தா, சரட்டானவூசிமுனை நூல் கோர்த்ததுபோல் சாடி னார்பஞ்சபட்சி யிருநூர்தான், வரட்டானமெஞ்ஞானம் நூறுங்கூட் சொன்னார் மகத்தான நூற்பெருமை கருவிடையமாகும், அரட்டான யழுகண்ணா பாடியதோர்நூலில் அனந்தங்கோடாகோடி தேறினார் பாரே. (895)

## தொழுகண்ணர்

தேறினாரழுகண்ணர் சீஷரவர்கேளுஞ் செப்பினார்தொழுகண்ண ரதீதநூல்மைந்தா, பாடினார்பதினெண் ணாயிரந்தானும் பரிபாஷை முதலாகப் பண்மைபெறச்சொன்னார், ஏறினார்பேரண்டங் கெவுன கேசரந்தான் பெண்ணவொண்ணாகுளிகைகொண் டேறினார்பாரு, கூறினாரவருடையநூல் பெருமையதுதான் கூதண்டக்கருவிடைய முண்மையதுபாரே. (896)

## எமநாட்டுச்சித்தர்

பாரேநீபுலத்தியனேயின்னஞ் சித்தர்பெருமை பரிவாகச்சொல் லுகிறேன் பண்மையதுவாக, தேரேநீதொழுகண்ணர் சீஷரோகேளுந் தொந்தங்களாகவே சிந்துகளாய்ச்சொன்னார், ஏரேநீயெமனாட்டுச் சித் தருடபெருமை யெவரறிவாருலகமதி லெவருங்காணார்கள், நேரேநீ யெழுநூறு வாதவயித்தியமும் நேரானமந்திர ஞானமதுவாமே. ()

மதுவானநூலதுதான் கருவிடையமாகு மானிலந்தன்னில்வெகு கோடிசித்தர், செதுவானசித்தர்கோடா கோடிதேறினார்கள் செப்பி னோரவருடைய செய்கையதுமெத்த, அதுவானவறிவதனாற் சொல்லி விட்டோம்பார் அவருடையபெருமைதனை யாருங்காணார்கள், வது பாருசித்தர்களே யந்நூலுசித்தம் வசனித்தோமெமனாட்டுச் சித்தரவர் பாரே. (898)

## கோரக்கர் சகல சித்தர்களுக்கு முதன்மையான்வர்

பாரேதுபூமிதனில்வெகு சித்தன்பாரு பண்மைபெறுமெமனாட்டுச் சித்தர்சீஷர்கேளு, வேரோதுமூலிகைக் கோரக்கராலே வெகுயுகாயுகந் திரம் வாழ்ந்தார்களையா, ஆரேதுமவர்சொல்லும் நூலதனைக்கேளு ஆயிரந்தாமொருகரு விடையமதுவாகும், நேரதுதானைந்நூறுநால் மறைகளதீதம் நெறியுள்ளநூல்தனிலே தேறும்வெகுபேரே. (899)

## குருகும்பமுனி

பேரானயிவ்வளவுஞ்சட்டை முனிபின்தான் பேர்பெரியபதி னெண்பேர் சித்தருடமகிமை, ஆரானயாரறிவார்தென் கயிலைசித்தர் அருணிலைமாகதுகை யிவ்வளவுமாகும், காரணகலைகாணார்கோடா கோடிசித்தர் கருநிலைமதன்பிறகு தேறினார்பாரு, கோரானகும்ப முனிசகலருக்குந்தான் குருவானோந்தெட்ச ணவத்தியனுமே. (900)

ஆமேதான்கைலாச பருப்பதந்தன்னில் அனந்தமாயுகாகோடி தவ மிருந்தோம்பாரு, நாமேதானவசித்தர்வட மேருகிரியில் சுவகோ டிகாலங்களுந் தேறினேம்பாரு, கோமேதானென்னுடைய குருவின ருளாலே குருமுனியென்றும்பேர் இவன்றந்தார்பாரு, மூமென்றமூன் றுபேர் புலத்தியனேதேறன் முதன்மைபெறும்யூகிமுனி யென்சீஷ னுமே. (901)

ஆமென்றயூகிமுனி நாதசித்தனென்பார் அருளினேமவுனதேவ னென்றும்பேர்பாரு, மூமென்றமூன்றுபேரு யுகாயுகாந்திரம் மூத ண்டவரைகடந் தேகினரையா, நாமென்றநேர்மையதால் சொல்லி விட்டோம்பார் நாதாக்களிவர்மகிமை யார்காண்பாரையா, ஏமென்ற வித்தநூல்சௌமிய சாகரந்தான் எவர்சொன்னாரிந்நூல்போ லியம்பி னார்பாரே. (902)

## வசுதேவர்.

பாரப்பாவாசிநுகை யிருபத்தொன்றுச்சு பண்பெறுமிவர்களுக் கத்தகுருகேளு, வாரப்பாவாசுதேவ ருட்பெருமை வசனிப்போமா னும் நீதநுசொன்னார், மாரப்பாவாசிபதனாலே யவர்கேளு மளவி லாச்சதகோடி யுகாயுகந்திரங்கள், ஆரப்பாசிவயோகஞ் செய்தாரு மையா அருளினாராறுலட்சமுந் தான்காணே. (903)

காணப்பாபதினாயிரந் தானுமையா கருவிடையமன்னூல்போ லொருநூலுண்டோ, தோணப்பாவன்னூலிற் றொந்தங்கள்கோடி சொல்லினார்வாசுதேவ ருடமகிமை, ஏணப்பாயென்னுடைய சீஷன் றன்பாரு இருபத்திரண்டுபேர் முதன்மையதாகும், சாணப்பாசௌ மியசாகரந்தன்னில் சாயுச்சியபதவியவர்பேர் பெற்றார்காணே. (904)

காணப்பாயிவ்வளவுஞ் சொல்லிவிட்டோங் கனமாகவாயிரத்திரு நூற்பீடமாகும், தோணப்பாயிந்நூல்போ லொருநூலுமுண்டோ தொல்லுலகில்சித்தரவர் தேடுமிந்நூல்தான், காணப்பாயிவ்வளவுநூல் பார்த்தையா கைலாசமுத்தியவர்க்கெய்துமிகப்பாரு,வீணப்பாவெறும் பேச்சால் நூல்பாராதலைந்து விருதாவாய்ப்பொய்யென்பார் வீண ரவர்தானே. (905)

## வேறு-வீணருக்கருவு அறிய.

வீணருக்கென்னசொன் னலுந்தானறிவு விதியில்லாவிட்டகுறை யதனாலே, வாணருக்கொருநாளும்யாகும் வாயாதுவையாவர யாதினு

லைவர்பேய் போலுமலைவார், காணுதகனைப்போலுந் தோணுமவர்க்கெ ன்ன காரணக்கருவினுடையமைப் பதுவிருந்தால், ஒனுமவுனிக்கெய் தமது சகலசித்தி ஒகோகோவுலுத்தனைரீ யடுத்திடாதேபாரே. ()

## சட்டமுனிநாதர்சொன்ன துருசுவைப்பு

பாரப்பாகைலாச சட்டமுனிநாதர் பண்மைபெறவவர்வைத்த வைப்பதனைக்கேளும், தூரப்பாலவப்பதனைச் சொல்வோம்நாமுந் துதிபெறவேயகத்தியனும் சொல்லும்விபரந்தான், ஆரப்பாவறிவார்க ளவ ருடையனேர்மை அருளுகிறேன்முனிக்குகந்த வன்பானசீஷன், வாரப்பாவையகத்தில் தேறினர்பாரு வசனித்ததுருசினிட மார்க்க மதைக்கேளே. (907)

கேளப்பாபுலத்தியனே மகாராசயோகி கெணிதமென்றதுருசி னுட வைப்பதனைக்கேளு, காளப்பாகம்பியுப்புச் சேரதுதாறென்று கருவானகல்லுப்புசே ரதுதாறென்று, சேளப்பாசினக்காரஞ் சேரு தாறென்று செயலானகுருசெயநீர் சேர்தாறென்று வாளப்பாபழச் சாறு சோதிற்பாதி மகத்தானநாதவிந்து நான்குபலமாமே. (908)

ஆமேதான்முரிசேர் மாக்கருசேரொன்று அருளானகலசமதுசெ ம்பதினுற்செய்து, ஏமேதானிவையெல்லாங் கலசத்திலிட்டு என்மக னேயண்டமெழு கவசமுஞ்செய்து, சேமேதான்சீலைபேழுஞ் செயமா கச்செய்து செப்புரவிதனில்வைத்து வுலரவதையெடுத்து, கோமே தான்செழுமைமிலப் பூமியதிலேதான் குழிமுழங்காலாழமதில் குதிரை யெருகொட்டே. (909)

கொட்டியேயெருவதன்மேல் கலசமதைவைத்துக் குமுறவே யதன்மேலே யெருவதனைக்கொட்டி, மட்டியேகுழிமூடிப் பதனமதா ய்ச்செய்து மயேஸ்வரனைத்தியானமதால் மண்டலஞ்சேவி, அட்டி யொன்றும்வாராது மண்டலஞ்சென்றால் அக்குழியைத்தோண்டியரு ள் கலசமதையெடுத்து, ஒட்டியேயோர்நாளுமதை யாறவைத்து வுறு திபெறமறுநாளிற் கலசமதைவாங்கே. (910)

வாங்கியேகலசமதைத் திறந்துபாரையா மகத்தானதுரிசினிட மகத்துவந்தான்மெத்த, தேங்கியேதிரியாதேபுளி யுப்புஞ்சேர்ந்து செம்புகளிம்பதனேடே சேர்ந்துவிதுபோச்சு, ஊங்கியேயுப்புகளிம் பதுவுமொன்றாக யொருமையென்னசாதிகுல மூன்றுமொன்றும், தூங்கியேதிரியாதேயிது மகத்தானவைப்பு துரிசினிடமார்க்கமிது சொல்லிவிட்டோமே. (911)

## துருசியின்பெயர்

விட்டோநாம்துருசினிட வேகமேற்பாடு வேதைக்குமிது ஆதி
அய்த்துக்காதி, சுட்டோமேசுண்ண மதுவாகும் துருசானரசகுளி
கைக்கிது வாதியாகும், செட்டோமேசெந்தூரத்துக்கிது கட்டுக்கு
மாதி செப்புந்துடியானைக்கு மிதுவாதியாகும், முட்டோமேதுரிசை
விட்டால் வேதையிதுபோச்சு மூலமுதலாறுவரைக் கிதுவாதிதானே.
ஆதியிதுதுருசி னிட மகிமையெவர்காண்பார் அறுபத்துநான்கு
சித்து மாடலாமென்பார், வாதியிதுரசவாதிமெய் கண்டேனென்பார்
வழலைகருக்குருவென்பார் நாகவிஷமென்பார், சேதியிதுமதயானை
வெல்லுக்குருவென்பார் சிவாசிவாயாதியந்த மென்பார்கள், வேதிபர
சிவசத்தியென்பார் சிலபேர்கள் வேகமென்றசத்தமேக மென்பாரே.
என்பாரேமன்மதக்காம னென்பார்சிலர் யெமனுக்குச்சத்துரு
நவ னென்பார்சிலபேர், முன்பாரேமுப்புரத்தை யெரித்தகண்ண
னென்பார் மூலசுழிமுனையென்பார் நாதரசமென்பார், அன்பாரே
யடிமுடிநடு முதலெலன்பார்சிலர் அண்டமெல்லாமிதில்முகிந்து தென்
பார்சிலர், உண்பாரேயமுர்தசஞ்சீவி யென்பார்சிலர் ஒடுக்கமுதல்துரு
சினுட வுறுதியறியாரே. (914)
அறியாததுரிசினிட வைப்புமுதல்காணார் அருளினார்கைலாச
சட்டைமுனிநாதர், புரியாததுரிசினிடவைப் பிதைச்சொன்னார் புகட்
டினேமவர்வைத்த வைப்பைக்நூலில், எறியாதேயிவ்விதமாய்ச் சொல்
லிவிட்டார்பா ரியம்பினேம்சௌமிய சாகரமிந்நூலில், பிறியாரேயின்
னமொருவைப் பதனைச்சொல்வோம் பேரானசுந்தரமூர்த்தி யவர்
தானே. (915)

## சுந்திரானந்தர்வைப்பு வெள்ளைப்பாஷாணம்

தானென்றசுந்திரமூர்த்தி யவர்வைத்த தருவானவெள்ளைப்பா
ஷாணவைப்பை, ஆனென்றவகத்தியனுன் சொல்லுவோமையா அரு
ளினேம்வெள்ளைப் பாஷாணங்கேளு, நானென்றநாதவிந்து சேர்தா
னென்று நலமானவெடியுப்பு நவிலுவோம்சேரு, சேனென்றசீனக்
காரஞ் சேர்தானென்று செப்புவோம்பாறையுப்பு சேர்தானென்றே.
ஒன்றானவைந்ததுவு முன்சொன்னகலசம் ஓகோகோசெப்புக்
கலசத்திலிட்டு, நன்றானகினிசெயநீர் சேரொன்றுவார்த்து நல்லகுதி
ரைநெய்சே ரொன்றுவார்த்து, ஆன்றானகலச்செப்பு யதன்மேலூறறு

அண்டமெழுகவசமது யடவாய்ச்செய்து, குன்றானசீலைதான் யேழுஞ்
செய்து கூறினோம்பாண்டமதிற் குதிரையெருபோடே. (917)

போடப்பாயவ்வெருமேல் கலசமதைவைத்துப் பூநீறுவதன்மே
லே புகழாகக்கொட்டி, ஆடப்பாவதன்மேலே யண்டோடுபோட்டு
அப்பாண்டம்சீலையேழு மடவாய்ச்செய்து, வாடப்பாவடுப்பேற்றி
யனலைமூட்டி வதன்மேலேபாண்டமதை வளமாய்வைத்து, சேடப்பா
யிருசாம மெரித்தாயானால் செயலாகவஞ்சமது வுருகிப்போமே. ()

போமென்றசுண்ணநிற மதுவின்போலாம் புனிதமென்றமெழு
குபோ லதுவுருகும், ஆமென்றவஞ்ச முருகியதுவொன்றும் அப்பா
கங்கண்டுநீ பாண்டமதையிறக்கி, ஓமென்றமேற்கவசஞ் சீலையேழும்
வாங்கி மேலானகவசமதை மேன்மைபெறவெடுத்து, நாமென்றவதன்
கவச மெடுத்துநீயப்பா நலமானவெள்ளை பாஷாணமென்றேனே. ()

என்றானபாஷாணமெவரறிவார்பாரு யென்னசொல்வேனதினிறம்
வெளுமையாகும், பன்றானவெள்ளை பாஷாணந்தன்னைப் பரிபூசை
சிவபூசை பணிந்துபோற்றி, உன்றானவுலகமதில் பாஷாணங்காணார்
உலகத்தோர்சொல்லுவாரு வருப்புவென்பார் நின்றானநிலவுப்புமருப்
பென்பார் நீலகண்டனென்பார்மதி மெனபாரே. (920)

நிலமானநாகசர்ப்ப மென்பார்சிலர் நிலைசாதசரக்குமித் துருவெ
ன்பார், குலமானவுலகத்தோர் பாஷாணத்தாலே கொல்லுவோமிது
வறுபத்து நான்குசரக்கென்பார், மலையாதேபேய்பிடித் தாடினாற்போ
லே மதிகெட்டுத்திரிவார்க ளுலுத்தரவர்கோடி, சலமானபன்னீரு
மறி யாதமாண்பர் சவம்போலகண்கெட்டு நிலையார்கள்பாரே. (921)

## பிரமரிஷிவைத்த கெந்திபாஷாணவைப்பு

நிலமான்வெள்ளை பாஷாணந்தன்னை நேர்சொன்னார்சுந்தரமூர்
த்தி யப்பாகேளு, அலையாநீகேளுவவர் வைத்தவைப்பு அருளினோ
மகத்தியன் சௌமியமிந்நூலில், விலையில்லையிவ்வைப்பு வுலகத்தோர்
செய்யார் வேதாந்தகுருதீட்சை பெற்றவர்செய்வார், மலையாதேநீகே
ளு புலத்தியனேயையா மகத்தானபாஷாண வைப்பதுவுமாச்சே. ()

ஆச்சப்பாவெள்ளை பாஷாணவைப்பை அருளினோமின்னமொ
ரு வைப்பதனைக்கேளு,. எச்சப்பாபிரமரிஷி வைப்பைக்கேளு யேறா
னகெந்திபா ஷாணமகிமை, வாச்சப்பாயாரறிவார்பண் போர்கள்மா
ய்கை வசனிப்போம்மைப்பினிட மகிமைதனைக்கேளு, கோச்சப்பா
கெந்திரசஞ்சேர் கொண்டுவாங்கி குருசெயநீர்சேரதுதான் கூறினோம்
பாரே. (923)

கூறுவோம்பூநீறு பாகுசேரண்டு குணமானபூமியுட நாரஞ்சேர ண்டு, ஆறுவோம்நாதவிந்து சேர்தானரண்டு அவ்விந்துதிசைநாத மருளுஞ்சேரண்டு, பாறுவோமப்பன்னீரு சேரொன்றுவாரு பண் மைபெறுஞ்சிவமுப்பு சேரொன்றுவாங்கி, தேறுமைங்கோலமதுசேர் கொண்டுவிட்டு செயலானவிவையெல்லாம் பாண்டமதிற்சேரே. ()

சேர்த்துநீயடுப்பேற்றிக் கடுந்தணல்மூட்டிச் செயலானபாண்ட மதை யடுப்பின்மேலேற்றி, ஏர்த்திருசாமமது யெரித்திடுவாயப்பா யென்னசொல்வேன்நிலவேக மதுதான்பட்டு, பார்த்ததுவும்பாகுபோ லாகுமதுபாரு பரிவாகவெழுக்கம்பாற் கிண்டிவிடுமைந்தா, நாற் றிசையும்புகழ்பெறவே பாண்டமதின்வாயை நல்லமண்சீலையதுநல மாகச்செய்யே (925)

செய்துவதைக்கடுந்தணலில் பாதியதைமூட்ட செப்பினேங் கட்டியதுநற் போலதுவாகும், அத்திநற்கோர்காலாக்கினி மூட்டி னுக்கால் அடவானகருவெல்லா முருகுமதுபாரு, எய்துமதுவுலையது வுருகினதோர்பிறகு யென்னசொல்வோமதிற்பாதியனல் மூட்டி யானால், ஓய்துமதுவொன்றாக வுருகியதுமைந்தா வோகோகோகற் போலே கட்டுமதுபாரே. (926)

கட்டும பாகமதைக் கண்டதேயானால் கருணைபெறயனலாறு யாரவைத்ததனை. பட்டுபோல்பாண்டமதின் மதையுடைத்தீராகில் பாஷாணகெந்தியிதற் கெதுவுமிதற்கேடோ, தட்டுபெறவிதனையேபதன மதாய்வைத்துத் தாயானமகேஸ்பரியைக் கமலவிதழ்தனிலே, புட்டு மதுபூசித்துப் பணிந்திடீராகில் பூவைபெறச்சுண்ணமதாய் வசிய முனக்காமே (927)

ஆமப்பாகெந்திபா ஷாணமதுபோலே யார்சொன்னார்பிரமரிஷி யவருடையமகிமை, பாமப்பாசுந்தரானந்த ரவரிடத்தில் பனிரண்டு வருஷமவர் பாதமேபணிந்து, வேமப்பாவவர்க்குமனங்கனி கூர்ந் தையா வசனித்தார்கெந்திபாஷாண வைப்புமுறையை, வேமப்பா வம்முறையில் கோடாகோடி வேதைவிளங்கினார்பிரமரிஷி விதமிது வாமே. (928)

## சுரூபானந்தர் வைத்தகெந்திபாஷாண வைப்புமுறை

மதுவானகெந்திபாஷாண வைப்புமுறையை வசனித்தோ மின்னமொரு வைப்புமுறைகேளு, தொதுவானசுரூபானந்தர் வைத் தவைப்பு சொல்லுகிறேன் புலத்தியனே சொல்லக்கேளையா, கெது

வானகெந்திபாஷாண வைப்பதினைகேளும் கெடியானவைப்பிசாநா ருஞ்சொல்லார்கள், நதுவாகநாம்சொல்வோ மகத்தியன் வாக்கியம நாதாக்கள்முன்சொல்லும் நூலதுகருவுரையே. (929

உரையானசிவமுப்பு சேரதிலேபாதி ஓகோகோபடிகார வுப்பு சேர்பாதி, சரையானசவர்க்காரம் சேரதிலேபாதி சார்வான சாரமது சேரதிலேபாதி, கரையானகாரமது சேரதிலேபாதி கருவானபூரமது சேரதிலேபாதி, நரையானலவணமொடு சேரதிலேபாதி நல்லருரு வண்டதுவுஞ் சேர்பாதியாமே. (930)

பதிவானயிவ்வகைகள் முன்சொன்னகலசம் பண்மையாசெப்பி னிட கலசமதிலிட்டு, நதியானவிந்துசேர்தா னிட்டுமேதான் நல்ல ரோமசெயநீருஞ் சேர்தான்விட்டு, மதியானததுமூடி யண்டமெழு கவச மகத்தானசிலைபது வேழுஞ்செய்து சதியானபாண்டமதில் தேசி யெருகொட்டி சார்வாகவதன்மேலே புண்டோடுதாக்கே (931)

தாக்குவாயதன்மேலே செப்புவதுகலசம் சப்பிரமமாய்வைத்து நீயதன்மேலண்டோடு, வாக்குவாயிட்டுமே வடுப்பின்மேலேற்றி வள லானதணல்மூடடி யகோரபதியாக, காக்குமாயக்கினிபோ லெரிப்பாய் பாரு கனலான பண்டமதி லனதுதான்பட்டு ஏக்குவாய்செம்பிடக்கல சமதிலிருக்கு மியவானவகையிலையு மிளகுமதுபாரே. (932)

பாரேநீயுலையது வுருகியதுவப்பா பண்மைபெறும்பாகதுபோல குமதுபாரு, காரேநீசெம்புகளிம் பெல்லாமிதுமப்பர் கருவான யிவ் வகையோ டொக்கமிககலந்து, ஆரேநீயருவியதுபோல மிதுபாய்ந்து அரகராகற்போலக் கட்டுமதுபாரு, மாரேநீயப்பாகங் கண்டுரேயாகில் மகத்தான்பண்டமதை யிறக்கிடுவாய்தானே. (933)

இறக்கியேசெப்புகலச மதையெடுத்து இயலானகலசமதைக் கழ ட்டியேயப்பா, செறக்கியதுபோகாமல் சிலையதுவாங்கி செப்புவோம் கலசமதைப் பார்த்தீரேயாகில், கெறக்கியேகெளரி பாஷாணமது மைந்தா கெணிதமென்றநிறமது யென்னமிகசொல்வேன், உறக்கியது போகாமல் சீஷாவிலிட்டு வுபரிடதம்பதிபாச மதைப்போற்றே. (934)

போற்றியேபூரணமு மிகற்கிடல்ல புனிதமென்றநாதசத்திமிதற் கீடுண்டோ, தேற்றியேகெம்பீர பூபதியுமீடோ தெவுனாசாங்கமிது ருளிகையதுயீடோ, மூர்த்தியேமுதண்டம் பிரசண்டமீடோ துமூல மிதற்கீடுண்டோ, வார்த்திமேலச்சிடபாலிதற்கீடுண்டோ வசனித்துகெளரியது மஞ்சநிறமாமே. (935)

திறமானதிகரில்லா கௌரிபாஷாணம் திகைத்தவொருகோடி வேதை யிதனிலாடும், வறமானகருபானந்தரைகேளும் வசனத்தவை ப்புறுமறை யிதுபோலுண்டோ, திறமாகவிவர்வைத்த வைப்பையிதிற் சொன்னேம் செப்பினேஞ்சௌமியசாகரமின்னூலில், புறமானமுப் புறமெரித்த சிவன்சொன்னார் பூதலமெங்குமிதுபடர்ந்தவிதிவாரே.

## சோதிரிஷிவைத்த சவ்வீரவைப்பு.

வாரானகருபானந்தர்வைத்தவைப்புவசனித்தோம் புலத்தியனே யின்னமொருவைப்பு, கூறானசோதிரிஷிவைத்த வைப்பைக்கேள்கூறு கிறேன் சவ்வீர வைப்பினேர்மை. ஆறானவவர்வைத்தவைப் பிதனைச் சொல்வோம் அறிவுள்ளோன்சோதிரிஷி யவர்க்கிடுண்டோ, சாரான சவ்வீரம் வைக்கும்வகைகேளு சௌமியசாகரமிது சாஸ்திரிய மாமே. (937)

ஆமேதான்சவ்வீரம்வைக்கும் வகையைக்கேளு அருளானசீனக் காரஞ் சேரொன்று, வேமேதான்கல்லுப்பு மதுசேரொன்றுவெடியுப்பு சேரொன்று நவச்சாரமொன்று, வாமேதானகாரஞ்சேர் சாரஞ்சே ரொன்று வசனித்தோஞ்சவர்க்காரஞ் சேரொன்றும், நாமேதான் வெள்ளைபாஷாண மொருசேரு நலமானகெந்திசேர் தாரிசசேரொ ன்றே. (938)

ஒன்றானசாஸ்திரபேதிசே ரொன்றுமேதான் வொருமையென்ற பொரிக்காரஞ் சேருமொன்று, மூன்றானசிவன்முப்பு பலமூன்றுமா கும் மூதண்டநாதவிந்து சேரொன்றுமாகும், அன்றானவைங்கோலத் தயிலஞ்சேரொன்று அருளாகவிவையெல்லாங் கல்லுவலிலிட்டு, சென் றானசெயாச மிரண்டுசேர்விட்டு செயம்பெறவேயிருப்புலக்கை யத னாற்சாடே. (939)

சாடியேநீமகனேபார்த் தீரயாகில் சலமெல்லாங்கழன்றுவொரு மாப்போலேயாகும், ஆடியேயம்மாவைத் தோண்டியேயப்பா அடவான குருசெயநீரதனாலேபா, தேடியேபிசுந்ததனை யெடுத்துமிகவப்பாதெளி வானகுப்பியிலே யிம்மாவைத்தாக்கி, வாடியேதிரியாதே சீலைமண்ணே ழும் வசனித்தோம்செய்துரவி முகத்திலவையே. (940)

வைத்துநீயொருநாழி சென்றபிறகையா வசனித்தோங்குப்பித னைப் பாண்டமதற்குக்கி, அத்துயேண்டடோட்டின் னுளதனைச்செய்து அதன்மேலேயிரண்டுவிரற் கடைதுளைபிட்டு, கைத்துநீகருணைபெற

வதற்கடிதூளிட்டு கருகவேயப்பாண்டமேல் மூடிசெய்து, சத்திமன்
சீலையேழுஞ்செய்து சைதன்னியமாகவேசாமிபதம்போற்றே. (941)

பதமானபாண்டமதையடிப்பின்மேலேற்றிபண்கைபெறத்தணல்
மூட்டி யிருசாமமெரித்தால்,மதமானகுப்பிதனிலிருக்குமருந்தெல்லாம்
வளவாகவிளங்கியது வுருகுமதுபாரு, சதமாயநீமகனேயருகுபதம்பார்
த்து தணலாறவைத்துநீ பாண்டமதையிறக்கி, வளமானவெண்சீலைதவ
சமதைவாங்கி வஸ்துவைமெதாழுதுநீ குப்பிபதைவாங்கே. (942)

வாங்கியேகுப்பிதனைச் சில்லதுவைப்போக்கி வளமாகப்பார்த்
தாயே யாமாகினீப்பா,தாங்கியேசவ்வீரக் கட்டியதுகிற்கும் சமர்த்தான
சவ்வீர மிதுபோலுமுண்டோ, ஏங்கியே திரியாதே யிதன்பெருமை
மெத்த வெடுத்துநீசவ்வீரக் கட்டியதைவாங்கி, பாங்கிபேகல்வமதிலிட்
டுநீமைந்தா பண்மைபெறசாத்தூள்போல் செய்திடீர்தானே. (943)

செய்துநீகிளிசெயநீர் நாதவிந்தையா செப்புஞ்சேர்மாத்தூளில்
சேரதுபடிசேர்த்து, மூய்துநீமுனிபோலே குப்பிதனிற்றாக்கி மூதண்ட
மாகவே கவசமதுசெய்து, நைதுநீபாண்டமதி லண்டத்தூளிட்டுகல்ல
தூளதன்மேலே வைப்பிதைவைதது, ஐதுநீயதன்மேலே மாவுதூளி
ட்டு அடலானபாண்டமது மண்சீலை செய்யே. (944)

செய்துநீபாண்டமதை யடுப்பின்மேலேற்றிச் செப்புவோமகோ
ரகா லாக்கினைகொண்டு, வைதுநீதணலமூட்டி யிருசாமமையாவம்மாக
யெரித்திடவே வாகாகயுருகும், எய்துமேபாயின்பமுட உருகும்போது
ன்னசொல்வேன்தணலை யாறவைப்பாய்நீ, பைதுநீபாண்டமதைகாங்
கிநீயப்பா பரிவானமண்சீலை பண்மைபெறவாங்கே. (945)

பண்மைபெறவாங்கியே குப்பியதைக்கொண்டுபரிவானகவசமது
பாகமதாய்வாங்கி, தன்மைபெறப்பார்த் திரேயாமாகிலையா தருவான
சவ்வீரக் கட்டியதுநிற்கும், வண்மையிதுசவ்வீரக்கட்டிதனைக்கொண்டு
வசனித்தோம் வாலைசாயகியைப் பூசைசெய்து, துன்மையதுவாராமல்
சீசாவிலிட்டுத் துதிசெய்துபூரணமே பதிபெறத்தானே. (946)

## இந்த்தசவ்வீரத்தின்பேர் அறிய.

பதியானசவ்வீரப்பதி யறியவேணு பசுபதினூறுகலையறியவே
ணும், சுகியானபுருஷதத்துவ மறியவேணும்சத்திசிவமித்துருவுமிதை
யறியவேணும், சதியானவப்பதியிலறி தறியவேணும் சராசரங்கள்புவ
னகிலை யறியவேணும், சதியானசவ்வீரவைப்பை யறியாவிட்டால் சல
மாகும்வேதையது சறுகிப்போம்பாரே. (947)

பாரானவஸ்துவென்று மிதுவின்பேரும் பகர்ந்தோமேமதிவென்றும் ரவியென்றும்பேரு, நாரானவஸீதமென்று மிதன்பேரு நயகோடிசிவிகளையென்றுமிதன்பேரு, பாரானவயிரவனென்று மிகபேருபரிவாரானவீரனென்று மிகபேருகூரான காலனென்றுமிதற்குப்பேரு குருவென்றுங்கருவென்றும் வுருவொன்றும்பேரே. (948)

பேரென்றும்பேர்வந்த பெருமைதனைக்கேளும் பேசினார்சோதிரிசி பெருமையிதுவாகும், சாரென்றுஞ்சவ்வீரவைப்பை யவர்வைத்துசாமண்மாரியேசகாரம்பாய்ந்தார் ஆரென்றுபேரேதுசோதியொளிகண்டார்அச்சோதிசுழிமுனையிலவர் சோதியானார் நேரென்றுவவர்வைத்தவைப்பிதுவாகும் நிலைபெறவேயிந்நூலினிகழ்த்தினோமே. (949)

நானென்றபேரதனைவிந் நூலைப்பாடி நாடதிலேசிவயோகிநலமாகத்தேற, போமென்றபொருளாகப் போட்டோமாம்பாரு புகழ்பெறவேவிட்டகுறை தொட்டகுறையிருந்தால்,ஏமென்றவிந்நூலுலபிக்கும்பார் மைந்தா யெடுத்ததெல்லாஞ்சித்தியா யெய்துமிகபாரு, மேவமென்றசோதிரிஷி சவ்வீரவைப்பு வசனிததோஞ்சௌமிய சாகரமிந்நூலே. (950)

## வேதரிஷிவைத்த மிருதார்சிங்கு வைப்புமுறை.

நூலென்றவேதரிஷி வைத்தவைப்பு நுணுக்கங்கள்மெத்தவுண்டுநேர்மைநேர்மை, சேலென்றவவர்வைத்த வைப்பைக்கேளு செப்புகிறேன் மிருதார்சிங்குவைப்பை,காலென்றநவாச்சாரஞ்சோதுதானப்பாநாம்சொல்வோம்துரிசுசேர் வெடியுப்புசேர்தான். காலென்றகெந்திமேர்சீனக்காரம் கருதவேநாகமது வீரஞ்சேரே. (951)

சேரானவிவைவயெல்லாங்கரி யுப்புக்குகைதான் சிவசிவாயுருக்கியதைக்குகையாகச்செய்து, கூரானகுகைதனிலேயிவையெல்லாமிட்டுக்குகைநேராய்துருத்திகொண்டு ஊதுவாய்நீ சாரானசாமமது ஆறினக்கால் சத்தெல்லாமுருகியது மருவிபோற்பாவும், ஆரானவப்பாகங்கண்டுநீயப்பா அண்டயச்சில்குகையெடுத்துச் சாய்த்துப்பாரே. (952)

பாரப்பாபுலத்தியனே சொல்லைக்கேளையா பண்மையிதுபாய்ந்திரு நாழியதுவானால், காரப்பா ஆரிருக்குப் பதமதனைக்கண்டு கருணைபெறுமிருதார் சிங்கியதையெடுத்து, சேரப்பாசிங்கியதைச் சிசாவிலிட்டுச் செயல்தருகும்பூரணத்தை மனதிலதையெண்ணி, பேரப்பாபூசித்துப் பதனமதாய்வைத்துபுகழுமகேஸ்பரியங்கேபூசிப்பாய்தானே(953

## மிருதார்சிங்கிக்கு கொல்லுஞ் சத்துருசாரக்கு.

தானென்றமிருதார் சிங்கியதின்வைப்பிச்சதாவோடிவேதமுறை சணத்திலாடும், வாமென்றசங்கியிதை யெவர்தான்காண்பார்வாமான வறுபத்து நான்குசாரக்கதற்கும், தேனென்றசிங்கமிது யாரறிவார்மை ந்தாசெணத்திலேரசவாதஞ் செயசித்தியாகும். நானென்றசிங்கமிடை யார் வெல்லப்போறார்நலமானசிங்கமிதைவெல்லுங்வேதரிஷியே. (954)

வெல்லுதற்கீடுவொரு சாக்கெதுவுமுண்டோவெள்ளிபொன்செம் பிது மூன்றுமதைச்கொல்லும், சொல்லுமிதற்கெடுதுவுஞ்சுண்ணமிது வாகும் செப்பியசுண்ணமது போலேசெந்தூரம், மல்லுமண்பொனூ க்குமிதன்சூட்சங்கண்டால் கருணைபெறவாகும் துக்கைலாசமுத்தி யல் லுபகலனுதினமு மர்ச்சிப்பாய்மைந்தா அருளினேமிருதார் சிங்கிவை ப்பாச்சே. (955)

ஆச்சென்றவேதரிஷிவைத்த வைப்பிதுபார் அருளினேஞ்சௌ மியசாகரமிந்நூலில், வாச்சென்றவவர்வைத்தவைப்புமுறையிதுதான் வசனித்தோமகனித்தியனிட வாக்கியமிதுவாரும், பூச்செலறபூதலங் தன்னில்சிவயோகி பூசிப்பாரிந்நூலே புனிதமதாவாக, வாச்சென்றகமல மலர் வாசமதுபோலேவசனித்தோமாயிரத்திருநூறிதாவாமே. (956)

## பராசரிஷிவைத்த தொட்டிபாஷாண வைப்புமுறை.

இதுவானபராசரிசிவைத்த வைப்பக்கேளுஇயம்புவோம்கொட்டி பாஷாணவைப்புதனை, அதுவானவவர்சொன்ன வைப்பையிந்நூலில் அருளுவோமகத்தியனும் புலத்தியரேகேளும், நதுவானநாகஞ்சேர் ஆகஞ்சேரொன்று நலமானகாரஞ்சேர் சாரஞ்சேரொன்று,வெதுதான வெடியுப்பு பாறையுப்பையா விதமதுசேர்கொண்டு விந்துசேரண்டே,

ஒன்றுனநாதவிந்து சேரொன்றுதானும் ஒகோகோமாக்கருசே ரொன்றுமையா,சின்றுனசிரகாரஞ்சேரொன்றுமேதான்செப்புவோம் காந்தஞ்சேர்பாகுசேரொன்று, என்றுனவிவையெல்லாங்கல்வத்திலிட்டு இயம்புவோமண்டவிந்தா விருசாமந்தானும் அன்றுகயாட்டிவிழித்து மதையப்பா அருளானதாம்பரத் தகட்டில் மிகவைவயே. (958)

வையப்பாமேலுமந்த கலசந்தன்னில்வளமாகமேல்மூடிகலசமது செய்து, மெய்யப்பாவகலெடுத்துச் சட்டியிலிட்டு மேன்மைபெறக்கரியுப்

பைதன் மேலேகொட்டி, செய்பப்பாகிழ்மேலு முப்பதனையிட்டு சிறு யையென்றசட்டிமேல் சட்டிமூடி. மையப்பாமண்சீலை கவசமதுசெய்து மகத்தானசட்டியதை யடுப்பின்மேலேற்றே. (959)

ஏற்றவே வாக்கினியால் தணலைமூட்டியிருசாமமெரித்திடவேயென் னசொல்வேன், ஆற்றியேயவ்வனலை யவித்துநீநன்றாய் அடுப்பின்மேற் சட்டியதை யிறக்கிக்கீழ்வைத்து சாற்றியேயாட்டியதைத்தட்டிநீயுடை த்து சம்பரமதாய்தாம்பரத்தின் கவசந்தனையெடுத்து, போற்றியேயவ் வகலின் கவசமதைவாங்கிப் புகழாகப்பார்த்தாக்கால் புனிதமதாவாமே

ஆமென்றதொட்டி பாஷாணந்தானும் அதனுடையபெருமையை நாமருளப்போமே, போமென்றதீஷாவிவிட்டுப் பாஷாணந்தன்னை பூர ணத்தையவுனதில் நியானஞ்செய்து, சாமென்றநாமியமி சாமிர்தா யே கருணைபெறப்பூசித்துக் கனிந்தாயானால், வாமென்றவடநதிப்பாள் மதியமுர்தந்தானும் மவ்வடுர்தயவுனமதில் மகிழ்ந்துகொள்ளே!(961)

கொள்ளவேதொட்டி பாஷாணந்தன்னைக் குவலயத்திலார்செய் வாராருஞ்செய்யார், வெள்ளிவேருருவாருமதீத வைப்புமுறைதான் மக த்தானவேதைக்குச் சத்துருவாகும், நள்ளவேநவ[illegible]கமெல்லாங் களங் கமாகும் நவரசங்கள்டாலேயெல்லா மெழுகுமாகு, விள்ளவேவேண்டா மப்பா பராசரவர்வைப்புவிலைமையென்றால் அண்டயிடிவிழுகுந்தானே

விழுகுந்தனைதெரிந்துப்போ முன்னோர்கள்சாபம் விஷநஞ்சுபாஷா ணமெவர்தானுஞ்செய்யார், மூக்கும்பராசரவர்வைத்தவைப்பிதுதான் பண்மைபெற லகத்தியனுமிந்நாலிற்சொன்னோம், வழுக்குமவ்வைப் தனைத்தெளிவாகப்பாடி வையகமீதிலவர் சென்றுபோவர்க்கு,புழக்கத மாய்ச்சொல்லிவிட்டோம் புலத்தியனேமைந்தா புவனமதிலிந்நாலிலரி திதுதான்பாரே. (963)

அரிதானநூலிதுபா ரறிவார்கள்மைந்தா அறிந்தவரேயறிவுள் ளோர் சிவயோகியாகும், விருதானவாயிரத்திரு நூறுபீடம் விளங்கி னேஞ்சௌமி சாகரமிதாம்;குருவானகுருவின்மொழிபதினெட்டுபேர க்கும் கூறுவர்தொழிலெல்லா மிந்நாலிற்சொல்வோம், எருதாகவிந் நாலின்முறை யதுபோல்செய்தார்யெடுத்தோமேகோடாவோடிதொழி ல்முறைக்காலமே. (964)

தொழிலாவதொழிலெல்லா மிந் நூலிற்சொல்வோம் தொந்தங்களில்லாமல் வெவ்வேறதாக, தொழிலானதிருமூலர்மகா சித்தன்பாரு தேறினர்கோடாகோடி யுகமும்வாழ்ந்தார், வழியான மரைவாணி யண்டுங்கடந்தார் வாசியதனுலேயமுர்த மதுவுண்டார், மொழிலானபூரணஞ்ஞிகற்பமதையுண்டார் புகழானவழிசுதனைற் பேறுபெற்றாரே. (965)

## திருமூலர்வைத்த சாதிலிங்கவைப்பு.

பேருபெற்ற திருமூலரவர்தான்வைத்த பேரான சாதிலிங்கவைப்பையக்கேளு,வாறுபெறச்சொல்லிகிறேன்புலத்தியனே கேளுமகத்தான சாதிலிங்க மதன்பெருமை தேறுவோர்க்கிவ்வைப்பிலாதேறலாம்பாரு திருமூலர்தன்னுடைய செய்கையதனுலே, தாறுமாறாகநான் சொல்லவில்லைபாரு தன்மைபெறும்புலத்தியனே புண்மையதாபாரே. (966)

உண்மைபெறுஞ்சாதிலிங்க முறைகைக்கேளும் உரைக்கிறேன் குருவண்டு சேரறுதாஞென்று வண்லமரிறும்வங்கடந்து சேர்தாஞென்று வாலைசஞ்சேரொன்று நாகஞ்சேரண்டுதன்மைபெறுங்காரமொன்று சேர்தானுகும் தருவானசாரஞ்சேர்க் காரஞ்சேர்தான், மூண்மைபெறும்பூவில் சோதிபோதி மூலமென்றமாக்கருசேரொன்றுதானே

ஒன்றானவகையெல்லாங் கல்வமதிலிட்டு ஓகொக்காகிளிசெயநீர்சேர்கொண்டுவார்த்து, வன்றான காதவிந்து சேரொன்றிட்டுகவிலுவோமாத்தாளு போலதைச்சாடி, அன்றானவதனுலே பெடுந்ததனே ஐயா அருளான குப்பிதனிலதற் குள்ளிட்டு, பன்றான பாண்டமதிலண்டத்தூள் பரிவாகயிட்டதிலே குப்பிதனைவைய. (968)

வைத்துநீயதன்மேலே யண்டத்தூளிட்டு வடுப்புமேற்பாண்டமதை யேற்றிநீயப்பா, தைத்துநீயண்டமேல் சாணக்கமூடி தருவாகமேற்கவச மண்சீலைசெய்து, சைத்துமேயக்கினியை மூட்டிச்சாமம் சார்பாக யெரியிட்டுத் தணலாறயையா, ஐந்துநீபாண்டமதை யிறக்கிநீயப்பா ஆறினதோர்பிரகதனே புடைத்திர்தானே. (969)

உடைத்திடர்பாண்டமதை யுடைத்ததனையையா உள்ளிருக்குமக்குப்பியதைக்கொண்டு, எடுத்ததனைப்பார்த்திடேயாபகிற்கேளும் இளகியநவுருகிவிடுஞ் சாதிலிங்கந்தான், கடுத்திடவிலிங்கமது கம்பிபோலாகும் கருவாகவுருகிவிடுகைபாகங்கொண்டு, அடுத்ததிலண்டயச்சியதனிற்கேளு அடவானசாதிலிங்க மதைவாமே. (970)

வார்த்திடும்போதல்லோ வருவியதுபாயும் மகத்தானலிங்கமது
கம்பிபோல்நிற்கும்,ஏர்த்திடீர்சாதிலிங்க மதைக்கொண்டுஇயலானசிஷா
விற் றதனைமேதாட் வைத்து, கார்த்திடீர்கருணைபெறமயேஸ்வரியின்பூசை
கருதியேசெய்துநீ கமலந்தனிலே, சார்த்துபிரசைதன்னிய வாசபலர்
போலே தாபாலைவாலையைநீ தெரிசிப்பாய்த்தானே. (971)

தாறுமசாதிலிங்க மதைச்செய்வோர் தாரணியிலரிதாகுமிதைப்
பார்நீதான், காலனைகலியுகம் வந்ததனுக்காதையா கருதிநேர் லிங்கவை
ப்பதுவினாலே, வானவறுமை வந்ததனுக்காதுபாரே வசனித்தோம்
லிங்கவைப்பதனைக் கண்டால், கோணகுறையேதுமொருநாளுமில்லை
குருவானநாதனீர் விந்தாலாச்சே. (972)

ஆச்சென்றதுரணமு மிதற்கீடுண்டோ அடவானபரம்பொருளித
ற்கீடுண்டோ, வேச்சைபிதுவிந்து மிதற்கீடுண்டோ விளங்கும்பரப்பிர
மமுக மிதற்கீடுண்டோ. காச்சென்றகருவிகாணுகி யிதற்கீடுண்டோ
காரசாரமுதல் வொர்க்காடமீடோ, போக்சென்றபூநீறு பூமிநாதமீடோ
புகழானலிங்கமிதற் கீடல்லதானே. (973)

ஈடானயிந்நூல்சௌமிய சாகரந்தான் எல்லவர்க்குமிந்நூல்தான்
இடையாதுபாரு, ஆடப்பாவாயிரத் திறநூறாகும்அனைவர்க்குந்தோணு
ப்பொருளெல்லாந்தேற்றும், வேடானயிந்நூலு வெளியாகச்சொன்
னேம் விட்டகுறையுள்ளவர்க் கெய்துபாரு, நாடானநாடதிலேயரிதை
யாயிந்நூல் நாசேன்மபிசருக் கியாயேபாரே, (974)

பாரப்பாதினந்தோறும் பூரணமேமனதில் பற்றியேமவுனமதில்
பசார்ந்திராமல், கோரப்பாகுருநன்றாய் பிரசன்னமாவார் குப்பகநேசக
மூர்க்குடி கொள்ளுமதியாவல், மாரப்பாகுடிகொண்டால் மதியமூர்தஞ்
சொரியும் மனதால்மதியறிவாலுண்டால்,காரப்பாகாயசித்தியதுவாகும்
கடந்தோலாந் தேகசித்தியதுவாமே. (975)

வாமென்றதிருமூலர் சொன்னதொருமார்க்கம் வசனித்தோஞ்சா
திலிங்கவைப்பைத்தானும். நாமென்றவவர்வைத்த வைப்பையிதிற்
சொன்னேன் நாடதிலேதேறும்பேர் நன்றாகச்செய்வீர்,பாமென்றயிவ்
வைப்பு பலிதப்துவாகும்பண்புடையோர்சொல்லும்பழமையிதுபாரீர்
சேமென்றசெய்வினையைத் தீவினையையகற்றிச் செல்காலம்நிகழ்காலம்
வருங்காலமறியே. (976)

## போகரிஷிவைத்த நாகவைப்புமுறை.

ஆறிவானபோகரிஷிவைத்த வைப்பைக்கேளும் அருளுவோம் நாகவைப் பறவின்முறையை, தெறியானபோகரவர் நேர்மைபெறு மாகில் நீடுலகில்மெத்தபேர் பெற்றசித்தன, குறியானதவர்பெற்றதவப் பெருமைபாலே கோடாகோடியுக மவர்தான்வாழ்ந்தார், வறிவா னவர்பெருமையென்னுற் சொல்லப்போமோ வசினிப்போம்நாகமதி ன் வைப்பதனைக்காணே (977)

காணரிதுநாகமுறை கருதவேகேளுங் கருநாகஞ்செந்நாகம்வெ ன் ணாகமதனுல், மாணரிதுமஞ்சநாக மதில்நாலு வசனித்தோநாலி னுட வன்மைதனைக்கேளும், ஆணவேகருநாகங் கருவதாகுகும் அருளினேஞ்செந்தக முருவதுவேயாகும், வேணவேவெண்ணுகம் விந்துதானுதும் விந்துநாத சத்திபச மஞ்சளாமே. (978)

ஆமென்றவெண்ணுகந் தேகவுயிராச்சு அடுத்தகருநாகமது வாசி தானுச்சு, சேமென்றசெந்நாகம் பிண்டமதுவாச்சு செப்பினேம்பச மஞ்சள் சடலக்கூறுகும், நாமெனறநால்வகையு மொன்றுலதுவாச்சு நல்லசத்திவுந்து நாதமதனிலாச்சு, போமென்றபிறிதிவிபு மப்புமதனு லே பெண்ணுச்சு ஆணுச்சு பிரபஞ்சமாச்சே. (979)

ஆச்சென்றநாகவைப்பினுடன் முறையைக்கேளும் அருளுகி றேன்புலத்தியனே யடவாகக்கேளும், காச்சென்றகல்லுப்பு வெடி யுப்புதானும் கம்பியுப்புபாறைகுரு வண்டதனுல், வாச்சென்றலுதம் பொட்டிலுப்பு யிந்துப்புவளைகிலுப்பு கெவுரிசாரமதுகாரம், வேச்செ ன்றவெண்குன்றி வீரமதைசேரு விளங்கவேகல்லமெல்லாம் விரும் பிப்போடே. (980)

போடப்பாநாகவிந்துசேர்தான் பாதி புகழானசிவகெங்கையதில் சேர்பாதி, நாடப்பாகுருசெயநீர் சோதிற்பாதி கல்லசிவமுப்புச் சேர திற்பாதி, வேடப்பாயிதுதன்றுப் கல்வத்திலாட்டி விளங்கவேவழி த்ததனைக்குகைதனிலிட்டு, தூடப்பாருத்திகொண்டே கரியுங்கொட்டி துருவமுடன்கரிநடுவே குகையைவைப்பாயே. (981)

வைத்துநீதுருத்தின்கொண்டு சாடுமை்தா வசனித்தோஞ்சா டையிலே யிளகிபதாவிருகும், கைத்துநீயுருக்கிவிடு மப்பாசங்கண்டு கைதன்னிபப்பொருளைவே துருசியைப்பலந்தான், வைத்துநீ யதுவுருகும் போதுவையா வைத்துருக்கியிட்டுநீ துருத்திகொண்டு

சாடு, வைத்துநீபேருவிபோலது தெளியும்பாரு கருணைபெறப்பதங்க ண்டு கருதுவாய்தானே. (982)

கருதவேவயிரமது போலேகண்ணும் கண்டுநீகுகையதனைக் குறட்டதனாலெடுத்து, அருதவேயண்டச்சத்து தன்னிற்சாய்த்தால் அருவிபோல்பாய்ந்ததுவுமது நீராய்ப்போகும்,வருதவேபாறினதோர் பிறகெடுத்தையா வசனித்தோம்பார்த்திரே யாமாகிற்றனும், கருதவே நாகமிது மகத்தானவைப்பு நாட்டிலேநல்லோர்கள் நவிலுவார்பாரே.

லாரானநாகமதையார் செய்தார்பாரு மகத்தானபோகரிஷியவர் செய்தாரையா, ஆரானநாகமதைச் சீஷாவிலிட்டு அம்பிகைவாள்மயி லைப் பூசித்தாயானால், மாரானமவுனமதில் நின்றுவருள்புரிவாள் மகத் தானகேசரியாள் வார்த்தையதுபுரிவாள், தாரானபொருளெல்லா நின் றுமுனக்கீவாள் சங்கரனுந்தேவியுமா யெங்கும்மதன்புரிவாள். (984)

புரிவாளேபிராணயவாசி பதந்தருள்வாள் புரியஷ்டபோதமயப் பொருளதனைத்தருதாள், திருவாளேமவுனமதில் நிரோகசித்திதருவா ள் தெளியவேகாயசித்தி யதுவுமேதருவாள்,நரிவாளேநவகோடி சித்து முனக்கீவாள நாலாம்பதமாகியதோர் சயுச்சியம்தருவாள், எரிவாளே வறுமைதனை யகற்றியேமைந்தா யீவாளேபசுபதி பாசமதுதானே. ()

## கொங்கணர்வைத்த வாலைரசவைப்புமுறை.

மதுவானநாகவைப்பதனைச் சொன்னோம் மகத்தானசூதமதின் வாலைரசவைப்பு, பதுவாகச்சொல்லுகிறேன் புலத்தியனேகேளும் பண்புடையகொங்கணவர்வைத்த வைப்பைக்கேளு, வதுவானவாலை யடாபதினாறுகளைதான் வாதசித்தியதுகை கூடுமிதனாலே, நதுவான வவர்வைத்த வைப்பதனைக்கேளு நலமாகச்சொல்லுகிறேன் வாலைரச ந்தானே. (986)

தானான துருசுசேர் கெந்திசேரையா தருவானகம்பியுப்புசேரொ ன்றுதானும், வானானவளைகிலுப்பு சேரொன்றுவாகும் வகையான யிந்துப்பு சேரொன்றேயாகும், ஏனானசீனமது சேரொன்றேயாகும் மென்னசொல்வோமைந்தா முப்புசேரொன்று, ஆனானவிவையெல் லாங் கல்வமதிலிட்டு அருளானநாதவிந்து சேரொன்றுதானே. (987)

ஒன்றானநாதவிந்து வதினாலே ஓகோகோசாடிருமாம் சாடின தோர்பிறகு,குன்றானருநெயசநீர் சேரொன்றுவிட்டுக் கூறாமுச்சாம ஞ் சாடுவாயப்பா, அன்றானவதன்பிறகு கிளிசெயநீர்சேரு அதைவிட்

டுவிருசாமஞ் சாடுவாய்மைமந்தா, வன்றுமற்சாடினதோர் பிறகததனை
யையா வழித்ததனைப்பிங்கானில் வசனித்தோர்தாக்கே. (988)

தாக்கியேகஞ்சுகொடி சுண்ணமரைப்பலந்தான் தருவாகவதிலி
ட்டு ரவிபிலிருநாழி, வாக்கியேவைத்திரே யாமாகிற்கேளும் வாலைபதி
னுறுகளை சூதமதுயிறங்கும், ஆக்கியேயருவிபோல் பாயுமதுவையா
அப்பாகங்கண்டுநீ வாலைரசந்தன்னை, சாக்கியேபார்த்திரே யண்டரசந்
தன்னை சிவசிவாயதனுளிவி பளிங்கதுதான்வாரே. (989)

வாரானவாலைரசமிது பாதைபாரு வசனித்தோம்கெருணமது பா
யலாம்பாரு, ஆரானயண்டகேர மேறலாகும் அதிதசாகரங்கள்முதல
வரையேறலாகும்,மாரானயாதிபந்த மிதுவாகும் மகதத்தானயகார வுகா
ரமிதுவாகும், வேரானவிந்தான விதற்குசிகருண்டோ வேதாந்தப்
பாதையிது வெகுவிசிதமாமே. (990)

ஆமேதானிதுவாதி வாலைரசங்கொண்டு அருளினேம்சிஷாவிற்ப
தின மதாய்வைத்து, போமேதான்பூரணமே மவுனமதிற்கண்டு பூமலர்
வாசமது போலேபூசித்து, தாமேதான்வாலைரச மதனுற்கோடி கவ
கோடிசித்துவிளை யாடலாம்பாரு, சேமேதான்செகந்தனிலே மனி
தர்காண்பாகில் செய்வினைதீவினை செணத்திலதுபோமே. (991)

போமென்றபோகரிஷி யவரிடந்தனிலே புகழானகொங்கணவர்
கோடியுகமிருந்தார், வாமென்றவைத்தவைப் பிதுதானப்பா வசனித்
தோம்வாலைரச மகிமைதனையப்பா, பாமென்றுதெரிசித்துப் பணிந்த
தனைப்போற்றி பணமைமபெறமதியமூர்தம் பலநாளுங்கொண்டால்,
தூமென்றதுண்மையது வருகாதையா துதிபெறலாம்வாச்சிரம்போல்
தேகசித்தியாமே. (995)

## பிடிநாககிசர்வைத்த லிங்கரசவைப்பு.

ஆமென்றலிங்கரசம் குளக்கேளையா அருளினூர்பிடிநாக கிசருட
மகிமை, கோமென்றகொங்கணவர் கேர்மைதனைக்கண்டார் கோடி
யுகப்ஜலத்தம்பம் செய்தாரவரையா, காமென்றுமவருடைய கேர்மை
யதைச் சொல்வோம் காவராசபூபதியே கண்பாகக்கேளு, வாமென்
றவாலையடா லிங்கரசவைப்பை வசனிப்போம்புலத்தியனே வளமாக
க்கேளே. (993)

வளமானலிங்கமதில் சேரதிலேபாதி வசனிப்போம்துருசதிலே
சேரிற்பாதி, கலமானசீனமதில் சேருதாம்பாதி காரச்சாரம்சேர்பாதி
காரஞ்சேர்பாதி, பெலமானபிண்டசவர்க் காரம்சேர்பாதி பேரான

சாரமதில் சேருபாதி, அலமானசெந்தியிலே சேரதிற்பாதி அருளு வோம்வாலைரசஞ் சேரொன்றுமே. (994)

ஒன்றானசிவமுப்பு சேருதான்பாதி ஓகோகோகம்பியுப்பு சேர் தான்பாதி, நன்றானயிதுவகைக்கு ஓரரையாமற்கொண்டு நலமானகல சமதி லிட்டுநீதாக்கி,சென்றானசிவவிந்து ரோமசெயநீரு செப்புவோம் விதமரைசே ரதுதான்வாங்கி, குன்றாமற்கல்வமதி லிட்டுநீதாக்கிக் கூறுவோமுச்சாம மரைத்துநீசாடே. (995)

சாடுவாய்பிறகதனை நாதவிந்துசேரு சமர்த்தாகவிட்டதிலே யிரு சாமஞ்சாடு, ஆடுவாயதன்பிறகு மதிசெயநீர்விட்டு அருளுவோமொரு சாம மடவாகச்சாடி, தேடுவாய்வழித்ததனைப் பீங்கானிலிட்டுத் தெளிவாகரவியிலிருநாழி வைத்தாயானால், மாடுவாயருணிபோல் பாயுமது பாரு மகத்தானசாதி லிங்கரசமுமாமே. (996)

## லிங்கக்கட்டு.

ரசமானரசமிதனை யார்தான்காண்பார் நல்லமதியமுர்தமது வுண்டோர்காண்பார், நிசமானசாதிலிங்கரச மதனைக்கண்டால் நீடுலகிலரிதுமெய்ஞ் ஞானிக்கும், வசமானரசமிதுவில்துருசு மெழுகிட்டால் வாலைபதினாறுகளை லிங்கக்கட்டாகும், அசமானஅக்கட்டை யானைரசம்விட்டு ஆட்டிகுருசெயநீரில் தோய்ந்திட்டார்பாரே. (997)

## லிங்கசாரணை.

தோய்த்திட்டுவதனையே பழுரிதனிலிட்டால் தோய்ந்தந்தசாதி லிங்கஞ் சாரணையதாகும், மாய்த்திட்டுச்சாரணையை மேருவதுக்கிய் ந்தால் வரகளவுகெவுனமென்ற குளிகையாகும், காய்த்திட்டகுளிகை தனை வாயிலிட்டயால் நலமானவாசிதம் பணமேசெய்தால்,போய்த்திட்டபுவனபுவ னாதிலோகம் புதனிதமதாய்க்கைகொடியில் சுத்திவரலாமே. (998)

ஆமென்றலிங்கரசம் சீஷாவிலிட்டு அருள்பெறவேமயேஸ்பரியின் பூசைதனைச்செய்து, பாமென்றுபணிந்துநீ வைரவனைப்போற்றி பதனமதாய்ச்செய்துநீ தெரிசித்துநீயும், நாமென்றலிங்கரச மகிமைதனைப்பூசி நண்பாகரவியமுர்தம் நாடோறுங்கொண்டால், வேமென்றவினையேது தீவினைதானேது வெகுகோடியுகர்ந்திரங்கள் வாழலாமே.

## மச்சமுனிவைத்த துருசினிடரசவைப்பு.

வாழ்கலாமின்னவொரு ரசமதனைக்கேளு மகத்தானமச்சமுனி வைத்தரசமார்க்கம், ஆழ்கலாமார்செய்வா ராருஞ்செய்யார்கள் அவர்

செய்தமுறையதனை யருளக்கேள்மைந்தா, தாழ்கலாம்நாம்சொல்வோ மகத்தியனுமப்பா நலமாகவேகேளும் புலத்தியனையையா, தாழ் கலாந்துருசினுட ரசமதனைக்கேளுஞ் சொல்லுகிறேன்மச்சமுனி நேர்மைதானுமே. (1000)

நாமென்றதுருசதிலே நாலுபலகமாகும் நலமானகெந்தியிலே நாலுபலமாகும்,ஏமென்றசீனமதில்நாலுபலமாகும் என்னசொல்வோ ஞ்சிவமுப்பு பலம்நாலு, ஆமென்றசிவசத்தி யுப்புபலம்நாலு அறை கிறேன்முப்பூவு பலமூன்றாகும், வாமென்றவளையிலுப்பு பலந்தானாலு வசனித்தோமிதுவெல்லாங் கல்வமதிற்றூக்கே. (1001)

தாக்கியேதேசிசெயநீரு சேருவிட்டு சடுவாயிருசாமஞ் சாடினு லையா, ஆக்கியேபாகுபோ லாகுமிதுபாரு அதன்பிறகுசிவகங்கைசேர் கொண்டுமையா, நாக்கியேசாடினால்மெழு கதுபோலாகும் நாதவிந்து சேர்நல மாகவிட்டு, தூக்கியேயிருசாமஞ் சாடுவாய்மைந்தா துதிபெற வே வழித்ததனைப் பீங்கானிலிட்டே. (1002)

துருசுகட்டு,

வழிக்கையிலேநின்றுமகமாயிதேவி மாதுசிரோன்மணியென் று பணிந்திடாய்நீயும்,தழிபிதுபார்பூரணத்தின் செந்தூரமாகும் தரு வாகப்பலமரைதான் பீங்கானிலிட்டு, கழியதுவாய்ப்போகாமல் ரவி யிலிருசாமம் கருதவேவைத்தீரே யாமாகிக்கேளு, நழிபிதுபாரவியது பாயுமப்பாகேள் கல்லருவிபாயுமதினோர் மதனைக்காணே. (1003)

காணுமதுவீறிட் டிறங்குமதுபாரு காளையிடிமேகமது சத்தமது பொழியும், ஆணுமதுதுருசினிட ரசப்பெருமைமெத்த யாருஞ்செய் யார்களிதி னறிவ்தனைக்கண்டு, காணுமிதின்பொருளதனைக் கண்டு களிகூர்ந்து நவசாரபூபதியைநண் பாகச்சொன்னோம், ஊனுமதுவெ ன்றுநீ பாடுபடும்போது வுறுதிபெறுந்துருசுரச நேர்மையிதுபாரே.

இதுவானதுருசுரசம் சீஷாவிலிட்டு யென்னசொல்வேன்மனோ ன் மணியின்பூசை, அதுவானதுருசினிட வாண்மையதுமெத்த அறு பத்துநான்குசரக்கு முறையாய்க்கட்டும், வதுவானதுருசுரசம் பலம் நாலுகொண்டு பண்மைபெறும் லிங்கரசம்பணவிடை தான்விட்டால், மதுவானவரைகொடியில் துருசுரசக்கட்டாம் மகத்தானகட்டதனைக் குருநீற்றூக்கே. (1005)

தாக்கியேபெடுத்ததனைச் சொல்லக்கேள்... மதிலிட்டுத்துளாக்கி, தாக்கியேநாதவிந்துசே ரொன்றமேதான் ...

ருகஞ்சட்டதிலே முச்சாமஞ்சாட, நோக்கியேமெழுகதுபோ லாகுமிது பாரு நண்மையாய்ச்சிவகெங்கை யதனிலிடைதாக்க, சாக்கியேமே ருவதற் கேற்றினலேயா சாரணைக்குளிகையது வாகுமிதுபாரே. ()

ஆகுமிதுயக்குளிகை பிராணபமேகி யங்கென்றுதம்பித்து வாயி லிடையிட்டு, நாருமிதுரேசகங்கும் பகமேகினல் நவசராசங்களிலுஞ் சுத்திவரலாகும், பாகுமிதுபனிரண்டுவறை யேறலாகும் பவனதிபுவ னமுதல் சுற்றிவரலாகும், போகுமிதுஅண்டசரா சரங்கள்புவனம் போகலாமரைநொடிக்குள் புதுமையிதுபாரே. (1007)

புதுமையெனுந்துருசினிட சாரணையினலே போடலாமிந்திர ஞான புரவியதுவையா, இதுபுதுமைதுருசினிட மகிமையெவரறிவார் இயம்பினர்மச்சமுனி யவருடையநேர்மை, அதுமகிமைதுருசினிட போக்கை யெவர்கள்காண்பார் ஆடலாமதில்வேதை யன்றுதங்கோடி, புதுமையதுபோலேயவர் பாடினர்நானூறு பண்மைபெறுமுதலன் னூறும் வேதைவிஷமதுவே. (1008)

## கருவூரார்வைத்தகெந்திரசவைப்பு.

வேதையிலேவெகுவிதங் கருவூரார்நேர்மை வெட்டவெளிபோ லேயவர் திட்டமதாய்ச்சொன்னர், வேதையிலேயவர்போலே யெவர் சென்னர்பாரு விளம்புகிறேன்புலத்தியனே விவரமதுவாக, வேதை யிலேசொன்ன பாதையிதுபாரு விஷநாகஞ்சதுவே றென்றுமீடோ, வேதையிலேயவர்வைத்த கெந்திரசவைப்பை விசிதமதுவாகவே விள ம்புகிறேன்கேளே, (1009)

கேளப்பாகெந்திசேர் துருசுவகைசேரு கெணிதமென்றலிங்க மதி லரையின்சேரு,காளப்பாகெவுரியதில்சே ரதிலேயரைத்தான் நல் லசினக்காரஞ்சே ரதிலேபரைதான், வாளப்பாவளையலுப்பு சேரதி லரைதான் வசனித்தோமிந்துப்பில் சேரரைதான், வேளப்பாவெடி யுப்பு சேரதிலரைதான் விலைவெல்லாங் கல்வமதிலிட்டுநீதாக்கே. ()

இட்டுநீநாதவிந்து இருசேருவார்த்து இன்பமதாய்விட்டுநீ மரத் தூள்போல, அட்டுநீயரைத்ததனைப் பாகமானல் அவ்விந்திலரைசே ருதுரு செயநீர்சேரு, மட்டில்லாவிரண்டையுந்தா னென்றாய்க்கலந்து மரத்தூளில்விட்டுநீ முச்சாமஞ்சாட, கட்டுண்டுபோகுமடா பாகது போலாகும் கருணைபெறவழித்ததனைப் பீங்கானிற்போடே. (1011)

போட்டுநீநவகெந்தி பூபதிதான்பாரு புனிதமாய்வாரகனெடை பீங்கானிலிட்டு, நட்டுரவிமுகந்தனிலே யிருநாழிவைத்தால் நவநீத

மருவிபது பாயுமதுபாரு, எட்டுவகையட்டமா தொழிலுமதிலாடு மென்சொல்வோங்கெந்திரசமதுதானிறங்கும், செட்டுயிதிற்பவிதமடா சிவபூசைசெய்து சீஷாவில்கெந்திரச மெடித்ததனைவாரே. (1012)

## கெந்திரசக்கட்டு.

வார்த்திதிற்கெந்திரசஞ் சேரொன்றுவாங்கி வம்மசன துருசுரசம் பணவிடைட்தான்தாக்க, ஆர்த்திதுமெழுகதுபோர் கட்டுமிதுபாரு அம்மெழுகையெடுத்துக்கடுகு செயநீரிற்றக்க, சார்த்திசையும்வெல் லுமடா கெந்திரசக்கட்டு காதசிவசத்திகெந்தி யதிலிட்டால், மூர்த்தி பதமிதற்கிடு மூவுலகிலுண்டோடா மூதண்டகெந்திரசக் கட்டுக்கல்லாமே.

கல்லானகல்லதுவு மிதற்கிடுண்டோடா காலக்கோட்டிவிஷமுமிதற் கிடுண்டோபார், மல்லானைக்கல்லதனை யெடுத்துநீயப்பா மகத்தான கல்வமதி லிட்டுநீதாக்கி, சொல்லானரோமசெய நீர்சிவகங்கை சொற் பெரியநாதவிந்து மூன்றுமிகபாரு, கல்லானவீரமிந பலந்தான்கொ ண்டு நன்மையதாய்க்கல்வமதி லிட்டுநீதாக்கே. (1014)

இட்டுநீதாக்கையிலே காரதுபோற்றிரளும் யென்னசொல்வேனி றமிதற் கீடுமுண்டோ, கட்டுமடாவறுபத்துநான்கு சரக்கதனைக் கரு வதற்கிதுகுருநகாணி போயிதலை, கெட்டெல்லா மாக்கிவிடும்வட்டது போலே கோரானகுளிகைக்குச் சாரணையுமாகும், கெட்டுவிட்டு மடை யருக்கிதுபாதியர்தம் கெணிதமென்றபிசி ஞாதுபோலாமே. (1015)

காரானகாரதுவில் சிவகங்கைவிட்டு சுளினமென்றகரமதுவால் மத்திமெழுகாகும், வாரானமெழுகதனைத் திரட்டியுண்டாக்கி வாங்கி விடுகாதவிந்தி லிதைமைந்தா, ஏரானபிவ்வுண்டையிரு நாழியிருந்தால் யென்னசொல்வேனதின் பெருமைதனைமைந்தா, மாரானமகத்தான குளிகையிதுவாகு மாரமிவார்சாரணைக்கு கெவுனமிதுவாமே. (1015)

மிதுவானயாதிதுறை யாறுமேலாகும் மேலானமேருவுக்கு யந்த மிதுவாகும், அதுவானயந்தமெல்ல ாமிதுவொன்றலாகும் ஆதாரமா றுதுறை யேறுமிதுவாகும், சதுவானகெந்திரசக்குளிகை சாரணையி தாகு மதன்மொழிபோல்சோதியொளி தங்காரசக்காடாம், விதுவான சாரணையை யமுரிதனில்விட்டு விறங்குமிருநாழிகை வீரம்வைத்தி டீடரே. (1017)

வைத்திடீர்புலத்தியனே மகராசயோகி மகத்தானசாரணையை யெடுத்துநீயையா, வைத்துநீபிராணய பீடமேசென்று கரு[illegible]பெறு மம்மென்று கும்பித்துநீயும், ஐத்திடீராக்கினையில் சுழினைபெறவோ

ட்டி யங்கென்றுசாரணையை வாயிலிட்டையா, சைத்திடீர்மவுனமதில் தப்பித்தாயானால் சராசரஞ்சாரணைகொண் டோடுமிதுபாரே. (1018)

ஓடுமதினோட்டமதையார் காண்பாரையா வோகோகோமச்ச முனியவர் கண்டார்பாரு, நாடுமதுபண்டசரா சரங்களெல்லாம் நவி லுவோமிதுசுத்தி யரைநொடியில்வருகும், பாடுமேகலைவிசிதமென் றால் சொல்லப்போமோ பவனுதிமண்டலமுஞ் சுற்றிவரலாகும், கூடு மிதுமகாதெளிவு குளிகைசாரணையை கூரானமச்சமுனி கூறுமிம்மு றையே. (1019)

முறையானமச்சமுனி சொன்னமுறையிதுதான் மோசமில்லை கெந்திரச வைப்பைச்சொன்னோம், கறையானவைப்பதனை பின்னால் தன்னிற் கருணைபெறவசனித்தோம் கருவிதுதான்மக்காள், துறை யானபோக்கெல்லாஞ் சொல்லுமிதுநூல்தான் துடியானநூலினிட பெருமைதனைக்கேளு, வரையானசித்தருட நேர்மையிதற்கெல்லா மச் சமுனிநூலதுதான் மவுனமதுவாமே. (1020)

## இடைக்காடர்வைத்த வெள்ளைபாஷாணவைப்புமுறை.

மவுனமென்றவிடைக்காடரவ ருடையபெருமை ஆரறிவார்புல த்தியனேயறி வாகச்சொல்வோம், சவுனமாய்ப்போகாது வவர்வைத்த வைப்பு சாற்றுகிறேநவராஜ பூபதியைக்கேளு, எவுனமென்றவிடைக் காடரவ ருடையவைப்பு யென்னசொல்வேன்ரசபாஷாண முறை யைத்தானும், யவுனமென்றவெள்ளை பாஷாணரசத்தை யருளுவோ ம்புலத்தியனே யவர்பெருமைதானே. (1021)

தானானவெள்ளைபாஷாண ரசவைப்பைச் சாற்றுகிறேன்சைத ன்னிய மாகவேகேளு, பானனவெள்ளை பாஷாணஞ்சேரொன்று பரி வானவெடியுப்பதிலே சேருபாதி, வானனபாரையுப்பு சேர்தான்பா தி வஸ்துவென்றசீனமதிர் சேருபாதி, கோனானசிவவுப்பு சேரதிர் பாதி கூறுவோம்வெண்காரஞ் சேரொன்றாமே. (1022)

வாரானவாலைரசம் சேரொன்றுவாங்கி மகத்தானசரக்கெல்லாங் கல்வமதிலிட்டு, சேரானரசம்விட்டுக் குருசெயநீர்சேரு செயலான நீர்விட்டு யிருசாமஞ்சாட, பாரானபாகதுபோ லாகுமிதுபாரு யண் பான சிவகங்கைசேர் கொண்டுதாக்கி, மூரானமுச்சாமஞ் சாடினாலே யா மூதண்டமாகுமிதுபாரு அழித்திடீரே. (1023)

வழியானபீங்கானில் பாகதனையிட்டு வசனித்தோம் பூரணதி செந்தூரம் பணவிடைதான், கழிவானநஞ்சுக்கொடிசுண்ணம் பண

விடைதான் நவிலுவோமிதுரண்டு மொன்றாகச்சேர்ந்து, பழிவான பாகுதனிலிக் குருவையிட்டால் பாயிமதினருவியது பண்மையிது வாகும், தெளிவானமதுசல மிரங்குமிதுபாரு தேசமதிலிதுவரிது செயரசமுமாமே. (1024)

ஆமென்றவெள்ளை பாஷாணரசமிதுதான் ஆர்செய்யப்போறார்க ளகஸ்தியனுஞ்செய்தேன், காமென்றயின்னூலு சௌமியசாகரந்தா னூடதிலேமெய்ஞ்ஞானி நண்பாகச்செய்வார், தேமெனறவிடைக் காடர் வைத்தவைப்பிதுதான் தெளிவானவெள்ளைபாஷாண ரசமிது தான், நாமென்றரசமிதனைச் சீஷாவிலிட்டு நல்லபிராணும்பக் கியான மேயோதே. (1025)

ஓதுவாய்நீயிருக்கு மில்லமேசென்று வுறுதிபெறரேசக மவுன மேகொண்டு, வாதுவாய்வாசியதை வங்கென்றிழுத்து வசனிப்பாய் நூறுருசெபிப் பாயேயாகில், வேதுவாய்வெள்ளை பாஷாணரசஞ்சி த்தி வெகுவிதமாகவல்லோ சொன்னேம்நாம்பாரு, நாதுவாயிதுரசம் வெகுபதனமாக நவிலுவோம்வைத்துநீ தெரிசிப்பாய்தானே. (1026)

தானென்றரசமதனில் சேர்கொண்டுவாங்கி தருவானபீங்கானி லிட்டுநீயையா, கானென்றமுன்சொன்ன கெந்திரசமாகில் நலமான ரசமதிலிங்கமிடைதாக்கி, கோனென்றபாஷாணம்ரசத்திலிட்டாக்கால் கூறினேம்வெள்ளைபாஷாண ரசக்கட்டாகும்,ஆனென்றயந்தரசக் கட் டைநீகொண்டு அருளினேங்குகைக்குச் சாரணைதான்கேளே.(1027)

## மவுகேசரக் குளிகை.

கேளப்பாகல்வமதிற் சாரணையையிட்டுக் கெடியானநாதவிந்து சேர்கொண்டுநீயும், நாளப்பாகல்வதில்நவிலவிந்திட்டு நாள்முழுதுநாற் சாமஞ் சாடினாலையா, தேளப்பாகோட்டுதல்போல் நாராய்த்திறளும் செய்பாகமதுகண்டு செயலாகநீயும், கேளப்பாவாராது குருசெயநீ ரரைதான் கொண்டுசாமமது வாட்டுவாயே. (1028)

ஆட்டிநீயதைவழித்து வுண்டைபோற்செய்து அமுரிதனிலறு சாம மடவாய்தோக்க, நாட்டினிலிக்குளிகை கேர்மையிதுபாரீர் நாதா க்கள்தேறுமிது சாரணை தானுதும், வாட்டியேநீயதையெடுத்துப் பார் த்தாயேபானல் மவுனகேசரக்குளிகை யிதுபோலுண்டோ,தேட்டியே யிக்குளிகை தேடயேவேண்டுந் தேடாட்டால்மடையனொன்று செப்ப லாமே. (1029)

செப்பினேமிக்குளிகை யிடைக்காடர்செய்த செய்கையதினாலே யல்லோ செப்பினேம்பார், தப்பொன்றும்வாராது சாரணையைக்கொண்டு சைதன்னியமாகவே பிராணயமேவி,ஒப்பினேம்மூலசுழி யருகே யேகி யுச்சரித்துரேசகத்தி லங்கென்றிழுத்து, குப்பினேங்குளிகை தனை வாயினிலிட்டுக் கும்பித்துபுல்த்தியனே தம்பித்துப்பாரே. ()

பாரேநீதம்பித்து வாசிபதனாலே பண்மைபெறப்பூரகத்தில் நின்றுயேயானால், கோரேநீகுருவினிட பீடமுந்தோற்றும் குருவிருப்பார் பலகோடி ரவிமதிதான்சூழ, ஆரேநீயங்குநின்று தெரிசித்தாலையா அரகராச்சாரணைகொண் டிழுத்தாயேயானால், பேரேநீயண்டாண்டமொண்டோடும்பாரு பிரபல்லியமதன்பெருமை பேசொண்ணாதே.()

பேசாதேகருவதினை யாருங்காணார்கள் பேரொளியேதெய்வமென்னப் போற்றுவரேகாண்பார், ஏசாதவிடைக்காடரவ ருடையபெருமை யெளிதல்லோவென்றாலே சொல்லப்போமோ, வேகாதவெள்ளை பாஷாணரசமாகில் விளங்கினோமவர்வைத்த முறையைத்தாலும், வாரிமலர்க்கமலவிதழ் பரிமளிக்கவப்பா வசனிப்போமழுகண்ணீர் நேர்மைமெத்தகாணே. (1032)

## அழுகண்ணர்வைத்த கெவுரிபாஷாண சரவைப்பு

காணப்பாகெவுரிபாஷாண ரசவைப்பு கருணைபெருமழுகண்ணரவர் வைத்தமுறையை, நாணப்பாசௌமியத்தில் நன்றாகச்சொல்வோம் கனிமென்றகெவுரியதில் சேர்தாண்கொண்டு, வேணப்பா வெள்ளைபாஷாணஞ்சேர்கொண்டு வெகுவாககல்லுகம்பியுப்பாகும், தேணப்பாயிம்மூன்று விதமொன்றுசேர்தான் சீனக்காரஞ்சேர்கொண்டு கல்வமதிற்றாக்கே. (1033)

தாக்குவாய்சிவகெங்கை ரோமசெயநீர்தான் தருவாகவொவ்வொன்றாய்ச் சேரதுதான்வாங்கி, தாக்குவாய்கல்வமதிலிட் டிருசாமஞ் சாடினால்நாரபோல் திரளுமிகபாரு, ஆக்கினைலப்பாகங் கண்டுநீயப்பா ரடவானநாதவிந்துசேர் கொண்டுதாக்கி, வாக்கினாற்சொன்னதன்று மலையாதேயப்பா வசனிப்போமுச்சாமம் வளமாய்நீசாடே. ()

சாடினாற்பாகுபொல் வருதல்மிககண்டு சைதனனியமாகவுநீயதை வழித்துநீயும், போடியாய்த்திரியாதே.பீங்கானிலிட்டுப் போளனிவசெந்தூரம் பணவிடைதான், நாடினால்நஞ்சுகொடிசுண்ணம் பணவிடைதான் நவிலுவோமிதுரண்டு மொன்றாகச்சேர்தது, பாடினால்நவராச பூபதியேகேளு பாரினிலிக்குருவைப் பரிவாய்நீதாக்கே. (1035)

பரிவானபாகதனை ரவியிலிருசாமம் பண்மைபெறவைத்தீரென்
று லவிபோலிறங்கும், நரிவானநவநீதம் போலேவைநீ நவிலுவோம்வீ
சட்டுப் பாயுமதுபாரு, அறிவானதேவிரச மிதுபோலுமுண்டோ
அறிவுள்ளோர்செய்தமுறை யறிந்துநீபாரு, வறிவானவதன்ரசத்தைச்
சீஷாவிலிட்டு வசனித்தோமயேஸ்பரியின் பூசையதுசெய்யே. (1036)

செய்யப்பாகெவுரி ரசக்குளிகையைக்கேளு செப்பினாமுகண்
ணரவர்க் கிடுமுண்டோ, மெய்யப்பாஜெயரசத்தில் சேரொன்றுவாங்கி
விளங்கியதோர்பீங்கானி லிட்டுமேநீயும், பொய்யப்பாபோகாமல் முன்
சொன்னரசந்தான் புகழானவெள்ளையென்ற பாஷாணரசமாகில், வை
யப்பாபணவிடைதான் கெவுரியதிலிட்டால் வலுத்தமடாயிழுத்து
ரசங் கட்டுமதுபாரே, (1037)

பாரப்பாகெவுரிரசக் கட்டதாகும் பாரினிலேயாரறிவார் மகத்
தானகட்டு, வூரப்பாவுலுத்தரென்ற மனிதர்காணு ருறுதிபெறுமெய்
ஞ்ஞானி யவர்தான்காண்பர், ஆரப்பாவறிவார்க ளாருமில்லை அரிதரி
துவாதியடா செனமிக்கும்பேர், காரப்பாவவர்நேர்மை சொல்லொண்
ணாது கண்டவரைத்தொண்டுபண்ணிக் கைவிடாதே. (1038)

கைவிடகெவுரிரசக் கட்டைகொண்டு கல்வமதிற்கட்டதனைக்
கருதாயிட்டு, மைவிடாமாதருட நாதவிந்திட்டு மைந்தனேசிருசாமணு
ஞ்சாடிக்காய், கைவிட்டநாரதுபோல் திரளும்பாரு நலமானசிவவிந்து
சேர்தானிட்டு ஐவிடாமுச்சாம மூறிற்றனால் அரகராகுளிகையது
யருளொண்ணாதே. (1039)

ஒண்ணாதகுளிகைதனை சாரணையைத்தீர்ந்தால் ஓகோகோபுவ
னதி லோகமெல்லாம், எண்ணாதபலவகைகள் தோற்றுந்தோற்று மெ
ன்னசொல்வேன்தின்பெருமை யெவருங்காணார்,பெண்ணாசைதீர்ந்து
விடுங் குளிகையினாலே பேரானகுளிகையிட்டு பெருகதனைக்கேளும்,
வெண்ணாதபொருளிதுபார் விந்தைகட்டும் வேறொன்றவேரிதுதான்
விளம்பக்கேளே. (1040)

விளம்புவோமிக்குளிகை யரையிற்கட்டி வெகுவிதமாய்மனமக்
கலையதுசெய்தால், அளம்புவோமரைகொடியில தீதம்பேர்ஸ்திரீக ளவ
ருடனேபுணர்ச்சிசெய்தா லருள்வோநாம, உளம்புமுகாயுகாந்தரமட்
டும் விந்துவிழாது உத்தமனேதிரேகமது வாடாதுபாரு, புளம்பக்கே
ள்குளிகையை வாயிலிட்டு புணர்ந்திடவேவிந்துவது பூர்க்குந்தானே.

பூக்குகின்றகுளிகை சாரணையைக்கொண்டு புனிதமுடன்பிர
ணயபீடஞ்சென்று, காக்குகின்றபூனைகுழியில் வாசியொட்டு கருணை

பெறரேசகங்கொண் டோட்டிப்பார்த்து, வாக்குகின்றவங்கென்று வாயிலிட்டு வருஷிப்பாமொருநிலையாய்த் தம்பித்தாயானல், கூக்குகின் றகுளிகையது யண்டரண்டங்கொண் டோடியரைநொடிக்குள் வருகுந்தானே. (1042)

வருகின்றவழுகண்ணர் வைத்தரசவைப்பு வகையாகச்சொல்லி விட்டோம் கெவுரிரசமாகில், அருகின்றவவர்வைத்த கெவரிரசமாகில் ஆரறிவாரவருடைய நேர்மைதனைக்காணூர், புருகின்றபுலையருக்குத் தெரியாதிதுபாரீர் பூரணத்திலமுர்தமூண்ணும் பெரியோர்க்குத்தெரியும், நருகின்றவழுகண்ணர்வைத்த வைப்புசொன்னேம் நவிலுவோம் தொழுகண்ணர் தண்மையிதைப்பாரீர். (1043)

## தொழுகண்ணர்வைத்த தொட்டிபாஷாணரசவைப்பு.

பாரப்பாபுலத்தியனே யின்னங்கேளாய பாடுகிறேன்தொழுகண்ணர் பண்மைதனைப்பாரீர், ஆரப்பாவவர்வைத்த வைப்பதனைப் பாரீர் அடவானதொட்டி பாஷாணங்கேளு, தோப்பாகெளரியதில் சேருகொண்டுவாங்கி தெளிவானதொட்டிபாஷாணஞ் சேரையா, நேரப்பாபூரமதில் சேருதான்பாதி நேர்மைபெறவீரமதில் சேர்தானுமாமே. (1044)

ஆமேதான்சீனமது சேரதிலேபாதி யருளானதாலையடா வாலைரசஞ்சேரு, நாமேதான்வாச்சாரஞ் சேரதிலேபாதி நல்லவெடியுப்பதனிற் சேரதிலேபாதி, போமேதான்பொட்டிலுப்பு சேர்அதிலேபாதி புகழானகல்லுப்பு சேர்தானுமொன்று, வாமேதானிவையெல்லாங் கல்வத்திலிட்டு வசனித்தோமாதிவிந்து நாதஞ்சேரண்டே. (1045)

ரெண்டானநாதவிந்தை விட்டுமதைக்கேளு நேர்மையிருசாமம் விடாதே யதைச்சாடு, உண்டானசாடியதோர் பிறகதனைக்கேளு உண்மைபெறவிரண்டுசேர் குருசெயநீர்விட்டு, கண்டாயோபுலத்தியனே முச்சாமஞ்சாடக் கருவதுபோலாகுமிது காணீரோமைந்தா, அண்டாயோகருவில்சிவ கெங்கைசேரண்டு அருளினேநாற்சாம மாட்டுவாயே.

ஆட்டையிலேயாகுபோ லாகுமிதுபாரு அப்புறத்தேவழித்துமொரு பீங்கானிலிட்டு,சேட்டைபெறப்பூரணுதி செந்தூரமையா சிவமுப்புசுண்ணமது நஞ்சுக்கொடிசுன்னம், வாட்டுவாயொவ்வொன்று வீதம் பணவிடைதான் வசனித்தோம்பாகதிலே விட்டுமிதைநஜபா, நாட்டுவாய்ரவிமுகத்தில் பீங்காளைவைத்து நாற்சாமஞ்சென்றபின்னதின் பெருமைகாணே. (1047)

காணுவாய்வீறிட்டு மிறக்குமதுபாரு காளசத்தமேகம்போ லருவி துபாயும், வாணுவாய்வருஷிக்குமது கலசந்தானு மகத்தானசலாநதி யின கெங்கையதுபோலே, ஆணுவாய்தொட்டி பாஷாணரசந்தானு மதன்பெருமை யென்னாலேயதீசஞ் சொல்லப்போமோ, ஏனுவாயிந் தரசச்சிகாமணியிலிட்டு யேகியேநாதசத்தி பூசைபதுசெய்யே. ()

செய்திந்தரசந்தன்னிற் சேரிரண்டுவாங்கி செய்பாகமாகவுந் தான் பீங்கானிட்டு, மைதுமலர்வாசமது போலேயதுகவபா மைந் தனேபீங்கானை வளமாகக்கொண்டு, செயதந்தகௌரிரசமதிற் பணவி டைதான செனிதமதாய்த் தொட்டிரசமதனையிட்டால், கைதுமேகா ரதுபோல் கட்டுமதுபாரு கருவுடையோரறியு மின்மைபாகனறே.()

நன்றானதொட்டிரசக் கட்டதனைக்கொண்டு நாதவிந்திலதைநன் றாக்கிவிட்டு, நன்றானவிருநாழி நாதமதிலிருந்தால் கனயோகக்கட்டா குந் தொட்டிரசமாகில், அன்றானபுலத்தியனை நயாாசயோகி அடவா னகுளிகையடா யிதுபோலுமுண்டோ, வன்றானதொட்டிரச மார்தா னறிவார் மகத்ஞானசிவயோகி மதியாலிதையறியே. (1050)

அறிவானசித்தர்களே யின்னமொன்றுசொல்வே னருளானகுளி கையிது வன்பாகக்கொண்டு, மறிவானதமுரிதனில் கட்டையிதுயிட் டு மைந்தனேயிருநாழி வளாயிதைவைத்தால், வறிவானவச்சிரம்போ ல் கண்டுமிதுபாரு மாணுக்காள்தோட்டிரச மாறிவார்நேர்மை விரி தானகுளிகையிது தொழுகண்ணர்வைப்பு விளங்கினேனஞ் சௌமியத் தில் விசிதமிதுதானே. (1051)

தானனகுளிகை சாரணையின்பெருமை சைதன்னியமாகவுநான் சிவகெங்கைசேர்கொண்டு, மானனமதியமுர்தங் கொண்டுமேதான் மகத்தானகல்வத்தி லன்னீரைவிட்டு, தேனனசெயம்பெறவே சாம மையா தெவிட்டாமலிருசாமஞ் சாடினுக்கால், சேனனமைபோலே யாகும்பாரு சித்திக்குங்குளிகையதை செயம்பெறவேதாக்கே. ()

தாக்கியேகுருசெயநீர் சேரொன்றுவாங்கி தனதாகவிட்டதிலே யிருசாமஞ்சாடு, தூக்கியேசாடையிலே மெழுகதுபோலாகுந் துதிபெ றவேயம்மெழுகை வழுத்துநீஐயா, வாக்கிலேநின்றுடு மமுர்தசுந்தரி யே மகமாயி ஆயிநீ செகமாயிவுவு, நோக்கியேயவள்பதமே தெரிசித்து நீயும் நுண்ணமைதருமெழுகதனை யுருட்டியுண்டாக்கே. (1053)

ஆக்கியேயமுரிதனி லிருசாமமிட்டா லதன்பெருமை நேர்மை தனையாருகாணார்கள், துக்கியேயிருசாமஞ் சென்றதனைஐயா தொட்டி

ரசக்குளிகையிதைக் கொண்டுநீமைந்தா, ஈாக்கியேரோம செயநீரி லேபோட்டால் நலவானசாரணையு மாகுமிதுபாரீர், சாக்கியேயிதுவதி கஞ் சித்தர்களேகேள் சாரணையாங்கெவுன்மிது சார்ந்துமிகுபாரே. ()

பாரப்பாபுலத்தியனே நவராஜயோகி பரிவானசாரணையைக் கொண்டுநீமைந்தா, பேரப்பாபிராணுப பூசைதனைச்செய்து பெரு மூலச்சுழிமுனையி லங்கியதைபூட்டி, ஆரப்பாமனக்கண்ணாலங் கென் றுகாட்டி யருபெறவேயாக்கினையி லறுகோணமேவி, ஏரப்பாவரை யாறுபனிரண்டுமேகி யியம்புகிறேன்ரேசகங்கொண் டிழுத்துநீபாரே.

கொண்டுநீவாசியதைக் கும்பகத்திலிறுத்திக் கும்மென்றபூர கஞ் சென்றதேயாகில், அண்டுநீயப்பூரகக் தெரிசனமாஞ்சித்தி படுத்த சாரணைக்குளிகை யதீதஞ்சித்தியாகும்,கண்டுசாரணையைநீ வாயிலிதை யிட்டுக் கருணைபெறத்தம்பித்துக் கனயோகஞ்செய்தால், கொண்டு விடுமண்டரண்ட புவனமுதலையா கூறினேனாற்றிசையுங் கொண்டுவ ரும்பாரே. (1056)

வருகுமென்றதொட்டி பாஷாணரசக்குளிகை வருவித்தோம் தொழுகண்ணர் வைத்தவைப்பிதுதான், அருகின்றவக்குளிகை யார் செய்வாரையா அருளினேன்தொழுகண்ண ரவர்க்கிடுண்டோ, நரு கின்றசௌமியசாகர மிந்நூலில் நாம்சொன்னேமகத்தியனும் நன்று கக்கேளு, தொருகின்றதொட்டி பாஷாணரசவைப்பு சொன்னே ம்நாம்புலத்தியனே தொழுகண்ணர்வைப்பு. (1057)

வைப்பானவைப்பதனி லின்னமொருசெய்தி வசனிம்போம் சுந்தரமே வளமாய்க்கேளு,கொப்பானயெமநாட்டு சித்தரின்பெருமை கூறவுந்தானவதனற் கூறம்போமோ, செப்பானவவர்வைத்த வைப்ப தனைக்கேளு செகத்தினிலே யாரறிவார்சித்தருடமாய்கை, ஐயப்பா கேள்புலத்தியனே நவராசபூபதி அருளுகிறோமகத்தியனு மடவத னைக்காணே, (1058)

## எமநாட்டுச் சித்தர்வைத்த காந்தரசவைப்புமுறை.

அடவானயெமநாட்டுச் சித்தருடனேர்மை அரிதரிதுயாரறிவார கத்தியங்கண்டேன், நடவானபூமலரின் வாசமதுபோலே நாம்சொல் வோங்கருக்களுட னன்மைதனைக்காண்பீர், கடவானகாந்தரச வைப் தனைப்பகேளும் காசினியில்மனிதரவர் காணுமரிதாகில், செடமான ஞானபர தேசிகனேகேளுஞ் சிவயோகசித்தர்களே செம்புவோம் நாமே. (1059)

செப்புவோம்காந்தமது சேரொன்றுவாங்கி சிவசிவாகெந்தியது சினஞ்சேரொன்று, கப்புவோம்கவாச்சாரம் படிகாரமாகில் கல்லதொருபொட்லுப்பு விந்துப்புச்சேர்தான், அப்புவோமுப்பு சேரொன்று அடவானபாஷாணம் சேரதிலேபாதி, ஒப்புவோங்கெவுரிசேர் வீரமது சேரு வொன்றுனகல்வமதி லிவ்வகையெல்லாம்போடே. (1060)

போடப்பாபுலத்தியனே சுந்தராகேளும் புனிதமென்றசிவகெங்கைகாதவிந்துசேரு, சாடப்பாயிருசாமஞ் சாடினுலேயா சாற்றுவது போலேயல்லோ சைதன்னியமாகும், காடப்பாகுருசெயநீ ரோமசெயநீரு நன்றுகவிதமொன்று சேரொன்றுவாங்கி, ஆடப்பாயதைவிட்டு முச்சாமஞ்சாடு அடவாகச்சாடயிலே காரதுபோலாமே. (1061)

ஆமேதான்கிளிசெயநீர் சேரொனறுவாங்கி யந்நீரிலதைவிட்டு யிருசாமஞ்சாட, கேமேதான்கிளியது பாகதுபோகும் நீமகனேரதை வழித்துப் பீங்கானிலிட்டு, காமேதான்பூரணுதி செந்தூரம்பணவிடை தான் நஞ்சுகொடிசுண்ணமதில் விராகனிடைகொண்டு, வாமேதான திலிட்டு ரவிமுகத்தில்வைத்தால் வழியுமதுவிருசாம மருவியதுதாபே.

காந்தரசக்குளிகை.

தானென்றகாந்தரச மதிலிறக்கும்பாரு தருவானநீரதனைச்சீஷாவிலிட்டு, மானென்றமனோன்மணியின் வாலைபூசைசெய்து மதனதம்பமாய்பூசையது சிவயோகஞ்செய்து, பானென்றபதனமதாய்க் காந்தரசம்வைத்துப் பணிந்திடாய்பூரணமே பண்மைபெறத்தானும், கோனென்றகுருபூசை பாபூசைசெய்து குளிகைசாரணைசெய்யக் கூறுவோமே. (1063)

கூறுவோம்காந்தரசக் குளிகைதனைக்கேளு கூரானரசமதனி லிரண்டுசேர்வாங்கி, தேறுவோம்ரசமதனைப் பீங்கானிலிட்டு செயம்பெறவேதொட்டி பாஷாணரசமாகில், வாறுவோம்பணவிடைதான் ரசத்திலிட்டு மகத்தானரவியிலிருநாழி விதம்வைத்தால், ஆறுவோங்காந்தரசங் குளிகைகட்டாகும் அருளானகட்டெடுத்துக் கல்பேதிலிட்டே.

இட்டிடவேகாந்தமதின் கட்டதனையையா இட்டுநீகாதவிந்துங் குருசெயநீர்கேளு, வட்டிடவேயிரண்டுமொவ் வொருசேரையா மகத்தானநீரைவிட்டுச் சாடுமிருசாமம், கட்டிடவேசாடிமறுபே ரதனைக் கேளு கருணைபெரரோமசெய நீருசிவகங்கை, வெட்டிடவேயிட்டுமுச் சாமஞ்சாட விதமானகாரதுபோ லாகுமிதுகாணே (1065)

காணப்பாபுலத்தியனே காரதனைக்கொண்டு கருதவேயுருட்டியுண்டை யாக்கியேநீதான், வாணப்பாபொட்டுலுப்பு செயநீரிற்சாமம்

சவனிக்கோமெடுத்ததனைக் கருவதனையெடுத்து, ஆணப்பாயமுரிதனி
லிக்குளிகையிட்டா லடவானகெவுனரசக் குளிகையிதுவாகும், நாண
ப்பாயமுரிதனி லிருநாழியிருந்தால் நலமானசாரணைக்கிது குளிகை
நன்றே. (1066)

நன்றான குளிகையிதை மேருவதற்கீய்ந்தால் நவிலுவோஞ்சாரணை
யாஞ் சாரணையைக்கொண்டு, சொன்னோநாம்காந்தரசக் குளிகையிது
வாகும் சுகம்பெறலாம்வாசிபது சொன்னபடிகேட்கும், நன்றானகுளி
கையதி னாலெயுங்கடத்தைக் கூண்டோடேயாறுவகை குவிந்தே
தூக்கி, அன்றானயண்டரண்டங் கொண்டேயோடி யஷரகொடியிற்
கெவுனகுளிகை வருகும்பாரே. (1067)

வருகுமிதுயிக்குளிகை யெமநாட்டுச்சித்தர் வசனித்தவைப்பு
முறை காந்தாசமாகில், அழுகுமிதுயார்செய்தா ரகஸ்தியனுன்செய்தே
னருளானசாரணையை யடக்கமதுசெய்து, தெருகுமிருவாளமனேன்
ணிமியின்பூசை தெளிவாகமவுனமதின் பூசைசெய்து,மருகுமிதுயெம
நாட்டுச்சித்தர் வைப்பை மகிழ்ந்தடிபணிந்துருமல ரடியைப்போற்றே.

போற்றுவாயெமநாட்டுச் சித்தருடபெருமை புலத்தியனே சொல்
லிவிட்டோஞ் சௌமியத்திற்றானும், ஆற்றுவாரவர்பெருமை யாரு
மறியார்க ளறிந்தவனேநானறிய மற்றபேருண்டோ, பூத்தமலர்வாச
மதுபோலே யருள்செய்தோம் பூதலந்தன்னிலே தேறுவாரிவர்கள்,
நாற்றிசைபுகழ்பெறவே மிக்குளிகையாலே நாற்றிசையுஞ்சுற்றிவர
லாகுமிதுபாரே. (1069)

## கோரக்கர்வைத்த பூரரசவைப்பு.

வரலாகுமின்னமொரு கருவதனைக்கேளு மகத்தானகோரக்கர்
மகிமைதனைக்கேளு, அரலாகுமவருடைய கேர்மையாரறிவா ரறிந்த
வனேயகத்தியனு மாருமில்லையாரும், வெரலாகுமவர்வைத்த வைப்பு
முறைகேளு விளங்கினேம்விசிதமுடன் விபரமதாயானும், திரலாகுஞ்
சவ்வீரரச வைப்பைக்கேளுந் தெளிவதனைச்சொல்லுகிறேந் தேரும்
ரசமிதுவே. (1070)

மிதுவானகோரக்கர் வைத்தரசமாகில மேன்மைபெறச்சொல்லு
கிறேன் மேலாகியபண்போர், சதுவானசவ்வீரஞ் சேரததானுகில்
சம்பிரமதாய்க்கெந்திமேசர் கெவுரிசேராகில், ' செதுவானசீனமதுசே
ரொன்றுவாகில் செப்புவோய்பூரமது சேரொன்றுவாகில், அதுவான
பாஷாணஞ் சேரொன்றுவாகில் அருளினேந்துருசுசே ரடவாகப்
பாரே. (1071)

பாரப்பாபுலத்தியனே சொல்லக்கேளும் பரிவானபடிக்காரம்
பொட்டுப்புதானும், ஆரப்பாசிவமுப்பு வைந்துபலமாகும் அருணி
ஞெஞ்சத்தியுப்பு வைந்துபலமாகும், கோரப்பாயிலைவயெல்லாங் கல்வ
மதிலிட்டுக் கூரானசிவகெங்கைகுரு செயநீர்தானும், வேரப்பாவீத
மொரு சேர்தானும்வாங்கி விட்டதிலிருசாமம் விடாமலரைதச்சாடே.

சடையிலேபாககுபோ லாகுமிதுபாரு சார்பாகபாகங்கண் டீரே
யாகில், வாடயிலேவேண்டாமையா நவராசபூபதியே வாகானகினி
செயநீர் நாதவிந்துதானும், ஓடயிலேவீதமொருசே ரொன்று வாங்கி
யுறுதிபடும்பாகதனி லின்னீரைவிட்டு, ஆடையிலேமெழுகதுபோ
லாகுமிதுபாரீ ரருணிஞெம்வழித்ததனை யுண்டையதைச்செய்யே. ()

செய்யப்பாவுண்டைதனைப் பீங்கானிலிட்டு செயம்பெறவேயது
நடுவில் குழியாகச்செய்து, பொய்யப்பாபோகாது பூரணிசெந்தூரம்
புகழானசிவசெந்தூரம் பூபதியின்சுண்ணம், வெய்யப்பாவீதமொரு
விராகனெடைகொண்டு விளங்கவேயக்குழியில் விதமாகவிட்டு
நய்யப்பாயம்மெழுகால் மேல்மூடிசெய்து நலமானரவிதனிலேயிரு
சாமம்வையே. (1074)

வைத்தப்பாசிவயோகிபுலத்தியனேயையா வைத்ததினால்வீறிட்டு
வருவியதுபாயும், புத்தப்பாவந்த ரசமதுபிறங்கும் பூரமென்றரச
மதனைப் பார்த்தீரேயாகில், சித்தமறவைத்ததினால் செயசித்தியாகும்
செணத்திலேவீரரசம் சிஷாவில்வாங்கி, கைத்துகைப்பாகமதாய்
விட்டதிலேபிரடை கருதவேகருணைறமலவைத் ததனைப்போற்றே. ()

போற்றியேவாலைமனோன்மணி பூசைசெய்து புகழாகவவளுடை
ய கமலபதந்தனிலே, வாற்றியேயடிபணிந்து நின்றீரேயாகில் வருஷி
ப்பான்மதி யமுர்தந்தானும், ஆற்றியேயண்ணவு தட்டாமலையா வரு
ளுகிறேன்முன்னுக்கி லமுர்தங்கொள்ள, சாற்றியேசவ்வீரம் தீதசத்தி
யாகும் சைதன்னியப்பொருளெனவே சாமீபதம்போற்றே. (1076)

பதமானசவ்வீரக் குளிகைதனைக்கேளு பரிவானரசமதிலே சே
ரிரண்டுவாங்கி, கதமானரசமதனைப் பீங்கானிலிட்டுக் கருணைபெறக்
கூர்ந்தரசம் விராகனெடையிட்டால், சதமானசவ்வீரமதி கட்டாகுஞ்
சார்வானகட்டதனைச் சம்பிரமதாயக்கொண்டு, நதமானகட்டதனைக்
கல்லவமதிலிட்டு நாதவிந்துசேர்விட்டு கனிமமதாயாட்டே. (1077)

ஆட்டுவாய்முச்சாம நாதத்தாலாட்ட அடவானசாரதுபோலாகு
மிதுபாரீர், நாட்டுவாய்மதிசெயநீர் சேர்கொண்டையா நன்பாகசாற்

சாமம் களினமதாயாட்டு, சாட்டுவாய்சாடையிலே மெழுகுசாரணையா
ஞ் சம்பிரமதாய்ப்பாகங் கண்டுகூர்ந்து, தேட்டுவாய்வழித்ததனை யுண்
டையதாய்ச்செய்து செயலானவுண்டைதனை யமுரிதனிற்போடே. ()

போடப்பாபுலத்தியனே யின்னங்கேளப்பா புகழாகவதிலிட்ட
குளிகையதைவாங்கி, பாடப்பாபார்த்தீரே யாமானுற்கேளு பரிசுடை
யசவ்வீர குளிகையதுநன்றும், வாடப்பாகுளிகைதனை மேவுருக்கியந்
தால் வசனிப்போங்குளிகை சாரணையுமாகும், தேடப்பாகுளிகை
சாரணையைக்கொண்டு சிவயோகத்திலிருந்து தியானமதுசெய்யே. ()

செய்துசிவபூசைதனைச் செய்தீரேயாகில் செயசித்தியாகுமிதுச
வ்வீரக்குளிகை, கைதுநீபிராணுய பீடமேசென்று நங்கென்றுவாசி
கொண்டு சிங்கென்றிழுத்தால், வைதுநீகுருவினடி பிரசன்னமாகு ம
க்குருவை தெரிசிப்பாய் மதியறிவாலேயா, ஐதுநீயவருடைய கமலபத
ந்தனிலே அர்ச்சித்துவவர்பதமே பூசித்துப்பாரே. (1080)

பாரப்பாபுலத்தியனே நவராசயோகி மரிவானசாரணையை வாயி
னிலிட்டு, சாரப்பாதம்பித்துக் கும்பித்தாயானால் சைதன்னியபொரு
டோற்றுஞ் சற்றுமில்லாதே, ஆரப்பாவுனக்கீடு ரேசகந்தானெட்டி
யங்கென்றுகும்பித்து தம்பித்துநின்றால், சூரப்பாவாயிலிட்டுக் குளி
கைசாரணைதான் தூக்குமப்பாயண்டரண்ட மயங்காதேகாணே. ()

காணப்பாபுவனமெல்லாஞ் சுற்றியரைநொடியில் கண்மூடி விழி
க்குமுன்னே குளிகைசாரணையையும், ஆணப்பாகுளிகை கொண்டு
வருகுமதுபாரு அதீதமிந்தக்குளிகையது யருமையெவர்காண்பார்,
பாணப்பாபரிட்சையிதைப் பாகமதாற்காணு பண்மைபெறக்குளிகை
தனைப் பதனமதாய்ச்செய்து, கோணப்பாவாராதுயதீத சித்தன்பாரு
கோரக்கரவருடைய மகிமைமெத்ததானே. (1082)

தானனவவருடை பெருமைதனைக்கேளு தராதரங்களாதாரஞ்
செணத்தில்மிகக்கண்டார், கோனனவரை யாறுங்கண்டார் கூறினே
ந்தொண்ணூற்றூ் கருவிமுதற்கண்டார், வானனரவியமிர்த மவர்தா
னேகொண்டார் வளமானயண்டகாயா கற்பங்கொண்டார், தேனன
தேகசித்திகாய சித்திபெற்றார் திருவாசகருக்குருவு மறிவுமுதலாமே.

இந்நூலிற்பாடியபொருள்களெல்லாங்கண்டுதுகையறிய

ஆமென்றகோரக்க ரவருடையநேர்மை யாரறிவார்வையகத்தி
லாருமறியார்கள், தேமென்றமொழியுடையோ ரவர்மகிமைகாண்பார்
சித்தரவர்தானறிவார் சிவயோகியவர்காண்பார், மாமெனறவவர்பெரு

மை மகாஇரமோமெத்த மானிலத்தில்மனிதரறி யார்களிதுபாரீர், வேமென்றவவர்பெருமை நேர்மைமெத்தசொன்னோம் வேதாந்தயான வர்க்கே வெளியாகும்பாரே. (1084)

வெளியானமறைப்பெல்லா மிந்நூலிற்சொன்னோம் வெட்டவெ ளியாகவுந்தான விசிதமதாய்க்காண்பீர், வெளியானவெளிக்குள்ளே வேதமயமறிவீர் வேதாந்தஞானமய மவுனமயங்காண்பீர், வெளியான வெளிக்குள்ளே மனோன்மணியாம்பாரு விசுத்தியறுகோணத்திலே கண்டவிபரமதைக்காண்பீர், வெளியானவெளுயெல்லாஞ் சௌமி யத்திற்கண்டோம்விளங்கினோங்கருக்கிடையுங்குருக்கிடையும்நன்றே

நன்றானமறைப்பெல்லா நளினமதாய்ச்சொன்னோம் ஞானத்தி ன்குறிப்பெல்லா நண்பாகவிண்டோம், குன்றாமல்நீகேளும் புலத்தி யனேயோகி கூறினோம்வழலையுப்புசெந்தூரஞ்சொன்னோம்,அன்றான பூமிநாதச் சுண்ணமுஞ்சொன்னோ மதிற்கோடாகோடிசெந் தூரஞ் சொன்னோம், சன்றானசரக்குகளில் கட்டுபற்பஞ்சொன்னோஞ் சதா கோடிமுறையெல்லாஞ் சாற்றினோமே. (1087)

சாற்றினோஞ்சௌமிய சாகரந்தானாகும் சார்வானபொருளெல் லாஞ் சைதன்னியமாக, போற்றினோமுறைசெய்தோம் புலத்தியனே கேளும் பூட்டினதோர்பூட்டெல்லாம் மிந்நூலிற்சொன்னோம், ஆற்றி னோமேதென்று லதீதமான அளவில்லாக்கருக்களெல்லா மிதிலேசொ ன்னோம், வேற்றுமைகளில்லையப்பா யிந்நூல்பீடம் வேதாந்தசாரமிது விலக்கமாமே. (1088)

விலக்கமென்றவைப்புமுறை நீகமதுசொன்னோம் விஸ்தாரமா னதொருகருக் குருவுஞ்சொன்னோங், வழக்கமென்றசரக்குவைப்பில் ரசந்தானுஞ்சொன்னோம் வாலைரசமுதலானசெய நீருஞ்சொன்னோம், தெளக்கமென்றதிராவகங்க ளமுர்தமதுசொன்னோந் தெளிவானகற் பங்கள் குளிகையதுசொன்னோல், நளிப்பமென்றநவநீதத் தயிலமுஞ் சொன்னோம் நளினமென்றவெங்காய நலமுஞ்சொன்னோமே. (1089)

நலமானதிரேகமாங் காயாதிகற்பம் நாதவிந்துசிவவிந்து நன்று கச்சொன்னோம், வலமானவைங்கோலத் தயிலமதுசொன்னோம் மகத் தானபதினெண்பேர்வைப் பெல்லாஞ்சொன்னோம், சலமானவப்பி னிட பன்னீருஞ்சொன்னோம் சயர்த்தானதேகமதின் கிரிகள்சொன் னோம், குலமானபூநீறு பூர்க்குந்தேசங்கள் கூரானவண்மையெல்லாங் கூறினோமே. (1090)

கூறினேஞ்சித்தருட பெருமைசொன்னோங் கூராணகருணாயின் மைமலயச்சொன்னோம், தேறினேமதீதப்பொருள் மறைப்பெல்லாந் தான் திரட்டில்லாப்பூட்டையெல்லாந்தெளி வாகச்சொன்னோம், சாறினேஞ்சௌமியசாகர மென்றிந்நூல்சொன்னேஞ் சமர்த்தானரத் தினம்போல் சாடினேம்பார், வாறினேமாயிரத்திர நூறுதானும் வசனித்தோம்புலத்தியனே வசனித்தோமே. (1091)

## பெரியோர்களிடஞ்சென்றால் அவர்களால் காணப்படுகிறபொருளறிய.

வசனித்சோமிந்நூலைப் பதனஞ்செய்து மகத்தானசதாகாலம் பூசித்தாக்கால், ஓசனித்தோமொருதுறையு மனுகாதையா யுகாயுகாந்திரங்கோடி வாழலாகும், அசனித்தோமாயிரத் திருநூறுக்கு ளடக்கிவிட்டோஞ்சதாகோடி நூல்பூடடெல்லாம், துசனித்தோம்புலத்தியனே சொல்லக்கேளுந் தூர்ச்சனரோடுறவாகா தூரமில்லே. (1092)

தூரமின்றபெரியோர்க ளிடத்திற்சென்று துலங்குகின்ற மறைப்பெல்லாங் கேள்விகேட்டு, தேரேநீயவரிடத்தில் பன்னிரண்டாண்டு சேவித்து வவர்பதமே பணிந்துநீயும், பேருபெறவவர்க்கடிமை யாகி நின்று பெலமானவிந்நூல் சாஸ்திரத்தையும், கூருநீயவரெதிரேமின்றுநீயும் கூசாமல்மனஞ்சலி யாமற்போற்றே. (1092)

போற்றியேயிந்நூலைப் பகருணுக்கால் பூரணம்போல்வருமனங்களி கூர்ந்துதானும், முத்தியேகொடுப்பதற்குச் செவியும்கேட்பார் முடிமூலக்கருவையெல்லாம் விள்ளுவாரப்பா, சத்திசிவமொடுங்குநிலை தவமுஞ்சொல்வார் தண்மைபெறுமத்துவத்தின் கருவைச்சொல்வார், எத்திசைக்குஞ் சித்தனென்றுபேருமீவா ரெட்டுபத்துமைந்திரண்டு மிகழ்வார்பாரே. (1094)

பாரப்பாபத்துதிங்கள் கருவைச்சொல்வார் பண்மைபெறுமெட்டுதிங்கள் பழமைசொல்வார், ஆரப்பாவாருமறி யாதவொன்றை யருளுவார்மூன்றுடனே ரண்டஞ்சொல்வார், நேரப்பாபூரணத்தி னிலையுஞ்சொல்வார் நிகரில்லாநாற்சாதி பனிநீர்சொல்வார், தேரப்பாதெளிந்தசித்த சலமுஞ்சொல்வார் தெகட்டாதகருவையெல்லாந் தெளிவிப்பாரே. (1095)

தெளிவிப்பாருபநிடதம் பசுபதியுஞ்சொல்வார் தேறுவோர்கறிவுபத்தி நிலையுஞ்சொல்வார், களிவிப்பார்சுருக்கிடையும் குரிக்கிடையுங் காட்டி கண்ணோட்டம்வாசிநிலை மவுனஞ்சொல்வார், ஈளிவிப்பார் ஞானத்தின் கருவுஞ்சொல்வார், நாதாந்தசிரோன்மணித்தாய் வசியஞ்

செகல்வார், வழிவிப்பார்வழலையென்ற குருலைவச்சொல்வார் வாமப் பாலமுர்தநிலை வசனிப்பாரே. (1096)

வசனிப்பாரட்டம ாசித்துஞ்சொல்வார் வரையாறுயேந்திரவ ரை ஞாலஞ்சொல்வார், அசனிப்பாரிந்திரமயேந்திர மயேந்திரஜாலம் அருளுவார்கெசகரணங் கோகரஞ்சொல்வார், வசனிப்பார்பலகலை யுந் தெளியச்சொல்வார் பாகங்கள்செய்பாகம் பரிவாய்ச்சொல்வார், வச னிப்பார்சித்தறு பத்துநான்கும் கவிலுவாரிந்நூலினுட் பொருள்சொ ல்வாரே. (1097)

சொல்லுவாரவருடனே தொண்டுசெய்தால் துறையெல்லாம்வ ழிதுரையாய் நன்றுய்ச்சொல்லி, சல்லுவார்சாயுச்சிய பதவிதந்து தன் னிடத்திற்றஉசியதாய் வைத்துக்கொள்வார், எல்லுவாரித்தனையும் வழி யாச்சொல்வா ரென்மகனேயறிவதனு லெல்லாங்கண்டு, கல்லுவாருன் னதிற் கபடுண்டாகில் காலகாலமிருக்கச் சிவயோகஞ்செய்யே.(1098)

செய்யப்பாநாள்மூன்று காலம்வாசி சிதறுமல்நூலத்தி லொருமி த்தொன்றுய், எய்யப்பாயிருநூற்றி யிருபத்தோராயிரத் தறுநூறுசு வாசம்மோங் காரவீட்டில், பையப்பவாசபத்தும் கற்பத்தாலடைத்துப் பண்மைபெறவாசியந்தான் சிதறுட்டாமல், கையப்பாகன்னியர்தன் மோகந்தள்ளிக் கனவிலும்பெண்மாய்கை நினைக்கப்போகா (1099)

போக்கானததுகளைப் பேசலாகாது பூரணம்போல்மனதுகந்து நித்திடீர்தான், வாக்கானவொருமனதாய் நிலைக்கவேணு மாயர்சத்தி கிரியாசத்தி மயக்கமாகா, தேக்கானயிலைதனிலே யொருபேர்தன்னம் வசயகாலடுமத்தி யானஞ்செய்வாள், பாக்கானகனிப்பாக்கை யக லத்தள்ளு பரிவானகொட்டைப் பாக்குந்தானே. (1100)

## காலைசிவயோகம் தேக்கிலையிலன்னமுண்பது.

காணுகின்றபாக்கிடித் தூளாய்ச்செய்து அறுப்பேறுமலைமிளாகு யிலையைக்கொண்டு, ஆணுகின்றவாண்பனிநீர் விராகனெடைகொண் டு அருளானகற்பூர சுண்ணஞ்செய்து, ஒனுமென்னசுண்ணமதை வி ராகனெடையெடுத்து வோகோகோபனிநீரிற் குழைத்துநீயும், வாணு கின்றயிலையாரில சுண்ணம்பூசி வளமானயடியிலையு மொன்றுய்வையே.

வைத்துமறைப்பலந் தூளாயதினிலிட்டு வளமாகச்சுருட்டியதை நாள்மூன்றுகாலம், கொத்திதனையோருண்டு யிவ்விதமாய்க்கொண்டு கூ ரானபொற்சாலிபத் சரிசியன்னம், தைத்துநீகொண்டுவிட்டுச் சிவ

யோகம்பாரு நலமானகால்மூன்று நாழிரண்டு, கைத்துநீவாசியொட்டி வலக்கரமேமூட்டி கனமாசரவிதனிலே வைத்துப்பூனே. (1102)

## கொட்டைப்பாக்கு வெற்றிலையுண்ணும்

பூணப்பாபூரணமே மவுனங்கொண்டு புனிதமதாய்மூன்றுநாழி தம்பித்துப்பாரு, நாணப்பாமூன்றுநாழி கால்மேலிட்டு நன்பாகவுட் கார்ந்து மூன்றுநாழிதம்பி, மாணப்பாமவுனமா யிருந்தாயானல் மன தறிவால்வழிகண்டு நடந்துபாரு, ஏணப்பாயிவ்விதமாயிரவு பகல்பன்னிரண்டு என்மகனே நாழிகையோர் வருஷந்தானே. (1103)

## வாசிபார்க்கும் வகையறிய

தானென்றநாழிகைதானுலாயிரத்து முன்னூற்றறுபதாச்சு சாதித்திதாலோராண்டு குவ்விதமாய்த்தானும், ஊனென்றமாய்கைபோலாமூரண்டுபோச்சு வுகாரத்திறுசையெல்லா முழலாய்ப்போச்சு, வேனென்றவிந்துபலன் மதயானையாச்சு விசுற்பமெல்லா மற்றுதடா காயமாய்கை, கானென்றகருவிதொண்ணூற்றுமைய்யா கல்மலைபோலிறுகிவிந்து கட்டிப்போச்சே. (1104)

## சுவாசதம்பனநாழிகை தொகுப்பு.

போச்சென்றமனிதருக்கு முன்னோர்சொன்னர் புகழானசுவாசமதைப் புகலக்கேளும், எச்சென்றவிருநூற்றயிருபத்தோ ராயிரத்தறுநூறுசுவாசம் யெழுப்பினத்துக்கிதுவனைதான் மேலதிகமாகும், ஆச்சென்றயிரு பத்தையாயிரத்துத் தொளாயிரத்திருபதுக்குள் அருளினேச்சுவாசமதின் கணக்குசேர்மை, வாச்சென்றவித்தனையும் அகாரத்துளொட்டி வர்ங்கியேயாக்கினையி லங்கென்றுகாட்டே. (1105)

## வாசி யெழுத்து

காட்டியேநாளொன்றுக் கையாகேளு நவிலுவோநாழிகைதானுலாக்கும்பி, வாட்டியிழுத்தங்கனே கூட்டித்தம்பித்தால் வசனித்தோஞ் சதாசிவத்தின் கோணங்காணும், தேட்டியேவைங்கோணந் தியங்கினற தெரிபுங்கான்சதாசிவத்தின் சத்தபீடம், பூட்டியேபீடமங்கென்று வாசியிழுத்து பூரணமேவசியநமவென்று தீட்சையோதே. ()

ஓதயேவங்சிங்யமநம மதிலென்றும் ஓகோகோசதாசிவமுஞ சத்திராராவென்று, ஆதவேயடைத்துநீ ஓம்இறிம்மென்று அருளுவாய் தீட்சைரண்டு மாண்பெண்ணச்சு, வாதவேபிரண்டெழுத்து ஏகமா

பிழுத்து வளமாகச்சொல்லினதோ ரட்சரங்கள், மாதவேமனோன்ம
ணியைத் தியானஞ்செய்து மகத்தானவாக்கினையில் தப்பித்துப்பாரே.

## வாசிக்கு மூலமந்திர தீட்சை சத்திசிவ வெட்டெழுத்து.

பாரப்பாபுலத்தியனே நால்நாழிகும்பி பார்க்கையிலேச்சதாசிவ
முஞ் சத்திதோன்றும்,ஆரப்பாவங்குநின்றுயிரண்டு தீட்சைதியானம்
அடவாகப்பிரசன்னஞ் செய்யுமார்க்கம், தேரப்பாயிருநூறு செபித்தீ
ராகில் தெளிவானசதாசிவமுஞ் சத்திபிரசன்னம், வேரப்பாவிளங்கு
வா ராக்கினையினின்று வேணசித்திதந்துபா லூட்டுவாரே. (1108)

ஊட்டுவாரமுர்தமென்று முலைப்பாலைத்தான் ஓகோகோவாங்கி
நீவாசியில்தாக்கு, நாட்டுவாய்நாவதனா லுண்டிடுமண்டலந்தா னல
மாகவுண்டிடவே நாலாயிரமாண்டு, ஆட்டுவாய்ஜெயகண்டி செங்கோ
ல்நிலைபதியும் அதட்டியாய்நானூறு முழுச்சித்தனாவாய், எட்டிலேயிந்
தபடிசொன்னேனென்று யெண்ணாதேமாணாக்கா ளியம்பிடீரே. ()

இயம்பிடீரிதற்குத் தத்துவம்வம்பிரிக்க யென்னாலேமுடியாது
யிவரைவெல்ல, சயமாடீர்சதாசித்தி தீட்சையிரண்டாலே சாவேது
யொருநாளுந் தானென்றுநீயாவாய், உபம்பிடீருகாயகங்கள் கண்ணி
ற்காண்பா யுகவரைக்குமிப்படியே சாதித்தாயானால், பயம்பிடீர்பல
நாளும் சிவசத்துவனாவாம் படர்ந்துவருங்கோரையது விழுதுமாமே.

விழுதானசடலமெல்லாந் தேகவிஷமே விறக்குரோமத்துவார
மேனியெல்லாம், விழுதாகபிறக்கியே பிறிகிவிற்சேரும் விளங்குமப்பா
பரசுருவேபிரமமாகும், விழுதானபிறதிவியில் விழுந்துதானால் விந்து
கற்பம்லீடும் விகர்ப்பம்போச்சு, புழுதாகவெந்நாளு மிருக்கலாம்பார்
மெய்ஞ்ஞான பரகெதியைக்காணலாமே. (1111)

காணலாந்தீட்சைரண்டு மிதனாலையா கருதலாம்பலகலையு மாகி
யாவாய், சாணலாஞ்சதாசிவன் போலிருக்கலாகுஞ் சாயுச்சியபதவி
பெறும் சத்திகொலுவிருப்பான், வாணலமாக்கினையைத் தெரிசித்
தாயானால் மணப்பூரணமாவாய் பகிழ்ந்துபாரு, பூணலாம்பதியொளி
யில்சுழியைநாட்டி போற்றிடுவாய்பூரணத்தை வசியமாக்கே. (1112)

## தெய்வலோகத்தயிலம்.

ஆக்குகின்றவாக்கினையின் தீட்சைசொன்னேன் வர்மானவா
சியுட நிலையுஞ்சொன்னேன், போக்குகின்றபொருள்களெல்லா மிதி
லேசொன்னேன் பூரணமாய்நின்றதொரு நிலையைச்சொன்னேன்,
தேக்குகின்றபரகெதியு நன்றாய்ச்சொன்னேன் தெய்வலோகத்தயில

மதைச் செப்புவோம்பார், ஆக்குகின்றதயிலமதை யார்தான்காண் பார் அறுபத்துநான்கு மாடக்கேளே. (1113)

ஆடலாந்தெய்வலோகத் தயிலங்கேளு அண்டரண்டமேறலாந் தயிலத்தாலே, சாடலாமகோரசுருபந் தானுகில் சார்வானதயிலத்தால் கோடாகோடிசித்து, ஒடலாந்தயிலமுறை சித்தியாக வுரைக்கிறோம் புலத்தியனேயுற்றுபாரு, ஊரோடுங்குண்டுனியாய்த் திரியுமாண்பா ருனுத்தருடன்சேராதே யுற்றுக்கேளே. (1114)

## வைசியகுலபத்மினி பனிக்குடம் சத்தி

உற்றுக்கேளுகாரமடா மவுனவேத முத்தியடாசுழிமுனையில் மவு னநாதம், சுற்றேகேளுதுபடருமது சிங்குநாவு சைதன்னியஅகாரம டா விந்துவிந்து, எற்றிசையிலுள்ளதுகாண் மனிதர்வாழ்க்கை யியம் பினேன்வைசியகுலஞ் சத்திமாறில்,சாற்றக்கேள்சாதிவாத தேகமாகில் சார்வாகப்பிறவிடையாம் பத்துவயதாமே. (1115)

## சுத்தசலம தியானம்.

பத்துவாய்சித்தனைநாள் பருவந்தன்னில் பிறவிடையாம்வியாழ ங்குரு வெள்ளிபார்வை, அத்துப்பார்கன்னிப்பெண் ணுச்சம்பாரு ய வளொளிப்பீடமதில் விந்துதித்தால், நெத்திப்பாருத்திரமாம் ரவியின் காலம் நேர்மைபடுந்தலைவனப் பாயதிகமாகும், வித்தானபிண்டமது வுற்பவித்தால் வேதாந்தசிசுபாலன் பிண்டம்வாங்கே. (1116)

வாங்கியேயெடுக்குமுன்னே பனிக்குடந்தான்வீழ்கு மக்குடந் தானுடையாமற்செம்புப்பாண்டம், தாங்கியேபாண்டமதில் பனிநீரி ட்டுத் தருவானவெண்கோழி யண்டோடுசுண்ணம், பாங்கியேபதினு று படிநீரிற்றுளும் பலமிரண்டுசுண்ணமதை யதனிலிட்டு, தூங்கியே திரியாதேதாழவிரல்கலக்கி துருவமென்றரவிமுகத்திலிருநாழிவையே.

வைத்துநீயப்பாக மானுலப்பா வசனித்தோம்வெளுமைநீர் பன் னீராகும், அனுநீதெளிவர்குஞ் சுத்தசலமாகு மச்சலத்தைதசீஷாவில்நீ யெடுத்துவிட்டு, கத்துநீசாமமது வெள்ளிவாரங் கருதினேம்ரோகணி யில் திகாலமாகில், செத்துநீவயசிவயசமாகும்றீம்ஆம் யங்குஷாயாவெ ன்று செபியுருறாறுதான் தியானம்பணமே. (1118)

## செய நீருக்குசெபவெழுத் து.

பண்ணப்பாமகேஸ்பரியின் பூசைசெய்து பனிர்தசுத்தசலமத னைப் பதனம்பண்ணி, அண்ணப்பாமுன்சொன்ன கன்னிதலைப்பின்

டம் மதையெடுத்துக்கத்திகொண்டு அதனைக்கிறி, மண்ணப்பாபனிக் குடல்க ளெருப்பையுஞ்சலப்பையு மகத்தானபெருங்குடல்க ளிது வெல்லாமெடுத்து, கண்ணப்பாபிறிதிவியின் ஜலத்தைவிட்டு களின மதாயுள்மூலஞ் சுத்திபண்ணே. (1118)

## கன்னிப்பிண்டமாக்கரு அகோரமாரண சொக்குபொடி.

பண்ணியேயுள்மூலமீரல் பிச்சும்வாங்கி பாவகமாயுலர்த்தித்தூ ளிடித்துவடிகட்டி, முண்ணியேமுன்சொன்ன மாக்கருசேர்கொண்டு மூலமென்றவித்தூளில் சேர்தான்கொண்டு, அண்ணியேயிரண்டுமொ ன்றாய்ச் சேர்த்துக்கொண்டா லகோரமாணசொக்குபொடி யிதுதான் பாரு, தண்ணிமையாயிராதேயிந்தத் தூளைக்கொண்டு தனதாகவதிற் கலக்கும் வகையைக்கேளே. (1119)

வகையானஸ்திரீகெர்ப்பங் குழியானையும் வளமானசுழல்வண்டு மீப் புலிகருவண்டு, துகையானகுப்பைபுழு கருங்குளவிதானும் தரு வமென்றசெங்குளவி பச்சைசிறுவண்டு, நகையானமினிப்பிச்சி செவ் வாலரணை நவிலுவோம்பல்லியெட்டுக் காலிப்பூச்சி, அகையானசிற் றெறும்புபேரெறும்புமாகு மருளினோர்திசைப்பூச்சி மரப்புழுதானே.

தானென்றசெந்தேளு கருந்தேளுமாகுந் தருவானசெய்யான் பனை யேறிப்பாம்பு,மானென்றசலபச்சை தவளையாகும் மகத்தானதே றைவெள்ளைபச்சோந்தியிவையெல்லாம், ஆனென்றமண்ணில்வாழும் பூச்சி யிருபலந்தான் அருளினோம்பெரும்பூச்சி சமூலமாகும், கோ னென்றபக்கவகை துகையைக்கேளு கூறினோமிருபத்து மூன்றுவகை யாமே. (1121)

வகையானயிவையெல்லாம் ரவியுலரவைத்து வாரஞ்சென்றெடு த்திடுவாய் சித்திரைகாலத்தில், எகையானயிதுவெல்லாங் கல்லுரலி லிட்டு யெழுவுலக்கைகொண்டுநீ சாமஞ்சாடு,அகையாகச்சாடையிலே மாத்தூளாகும் அப்பனேயதைத்தோண்டி வடித்தெடுத்துக்கொண்டு, முகையாமல்முன்தூளில் கலந்துகொண்டு முண்மைபெறப்பதன மதாய் வைத்திடுரே. (1122)

வைத்துத்தானின்னமொருதூள் பொடியைக்கேளு வசனிப் போம்பூச்சிவகை வளப்பமாக, நைத்துகின்றவழிமறிச்சான் கண்ணீர ல்பித்தும் கலமானதேவாங்கு கண்ணீரல்பித்தம், பைத்துகின்றவாந் தைக் கண்ணீரல்பித்தும் பண்பானகருங்குருவி கண்ணீரல்பித்தும், செத்துகின்றசெம்பருந்து கண்ணீரல்பித்தும் செயலானகோட்டான் கண்ணீரல்பிச்சே. (1123)

பிச்சானவிச்சுனியின் கண்ணீரல்பித்தும் பிலமானகுழிகறியிற் கண்ணீரல்பித்தும், செத்துகின்றபெருங்காடைக் கண்ணீரல்பித்தும் செயமானபுலிப்பல்லின் கண்ணீரல்பித்தும், அத்தானநாகப்பாம் பிரல்காண்பித்தும் அருளினேம்செம்போத்துக் கண்ணீரல்பித்தும், கச்சானக்ருங்காக்கை யிரல்கண்பித்தும் கழுதைக்கண்காலொடு பித்துமாமே. (1124)

ஆமென்றகருங்கோழிக் கண்ணீரல்பித்தும் அடவானகருநாயின் கண்ணீரல்பித்தும், நாமென்றகரும்பூனைக் கண்ணீரல்பித்தும் நலமானமலைபுடும்புக் கண்ணீரல்பித்தும், வாமென்றசெவ்வாலரணைக் கண்ணீரல்பித்தும் மகத்தானகருமந்திக் கண்ணீரல்பித்தும், கோமென்றராசாளிக் கணணீரல்பித்துங் கூறினேந்துக்கணங்குருவி கண்ணீரல்பிச்சே. (1125)

கண்ணானபுலிக்குறத்தி கண்ணீரல்பித்தும் கணக்காகஆகவகை யிருபத்துமூன்று, நன்றாகக்கொண்டுவந்து சித்திரைக்காலத்தில் ரவிமுகத்தில்வாரமட்டு முலரச்செய்து, வண்ணதவகையெல்லா மெடுத்துநீபு மகத்தானகல்லூரலி லெல்லாமிட்டு, எண்ணனயெழுவுலக்கை பரிசாகக்கொண்டு யிருசாமம்விடாமலதைச் சாடுவாயே. (1126)

சாடயிலேமாத்தூளா மயதூளைத்தான் சார்வாகத்தோண்டிவடித்தெடுத்துநீயும், சூடதிலேமுன்சொன்ன தூளதிலேசேர்த்து துடியாகப்பதனமதாய் வைத்துநீயும், நாடயிலேயின்னமொரு தூளைக்கேளு நவிலுவோங்கடைச்சரக்கில் நலமாய்த்தாலும், ஆடயிலேசாதிக்காய் சாதிபத்திரி அடவானகோஷ்டமேலம் லவங்கப்பூவே. (1127)

பூவானகஸ்தூரிமஞ்சள் * புழுகுபூரம் புனிதமெனுஞ்சாம்பிராணி சக்கரிதாரம், ஆவானவெடியுப்பு யிந்தூரு அன்பானகல்லுப்பு கோரைக்கிழங்கு, நாவானநாகமல்லிக் கிழங்குதானும் நன்னாரிநத்தைச்சூரி வேரதாகும், மாவானசிறியாநங்கை பிரியாநங்கை மகத்தான வெண்குன்றி கருங்குன்றிவேரே. (1128)

வேரானவெட்டிகொட்டை புங்கங்கொட்டை விளம்புவோஞ்சிவனார் வேம்புசரிமிரட்டி, ஆரானவழுகண்ணி தொழுகண்ணியாகும் அடவானயேறழிஞ்சிக் கோட்டையாகும், சேரானசெங்காயுருவி வேரதகுஞ் செம்பருத்திசித்திரமூல முத்தாமணிவேர், வாரானகருநெல்லிவேர்தானுகும் வளமானவெட்பாலைமேல் புல்லுருவியாமே. (1129)

---

புழுகென்பது - புனுகுசட்டம்.

ஆமென்றகருவூமத்தை வேர்தானாகும் ஆடாதோடைவேர்செம்முள்ளி நெரிஞ்சியரணைவேராம், நாமென்றபூனைக்காலி துரட்டிவேரும் நல்லசிவகரந்தைவிஷ்ணு மூலியாகும், வாமென்றயெலிச்செவிவேர் பொன்னூமத்தை வசனித்தோம்திலைகப்பூடு நாபிவேர்தான், நாமென்றகருங்காக்கணம் பூவும்வேரும் நல்லவனிமூலிதொட்டால் வாடியென்றெண்ணே. (1130)

என்றானநிப்பாலை வேருதானாகும் இயல்பானகுதியடி வேருமாகும், நன்றானவிலாமிச்சம்வேர் வில்வவேரும் நளினமென்றவவுரிவேர் கஞ்சாமூலி, வன்றானபேய்மிரட்டி வேருமாகும் வழக்கானசீந்திற்கொடி மூலமாகும், மன்றானமுல்லைவேரிருவாட்சிவேரும் மாதளம்வேர்சிறுகட்டுக் கொடியுமாமே. (1131)

ஆமேதானுகவகைவேர் மூலசரக்கும் அருளுகிறேனமதினுடைய முறைத்தானப்பா, நாமேதான்சொல்லுகிறே முறையைக்கேளு நவிலுவோம்நாற்பத்து மூன்றதாகும், ஏமேதானிதுவகைக்குள் பலமூன்றாகும் என்மகனேகொண்டுரவி முகத்தில்வாரம், சேமேதான்சித்திரைநாள் காலாக்கினியிலுலர்த்தி சிதறாமலெடுத்துக்கல்லு ரவியிற்றுக்கே.

தாக்கியேயிருப்புலக்கை பெருதாய்க்கொண்டு சாடுவாய்முச்சாமஞ் சாடினலையா, மாக்கியேமாத்தூளு போலேயாகு மத்தூளைத்தோண்டிவடித் தெடுத்துக்கொண்டு, மூக்கியேமுன்தானி லொன்றாய்ச்சேர்த்து முத்தூளுஞ்சிதறமற் பீங்கானிலிட்டு, வாக்குசித்திமுத்திபெறச்சிவ பூபதிசுண்ணம் மனுசரித்தோம்சித்திபூ பதிதானென்றெண்ணே. (1133)

எண்ணுதற்குவகையென்ன புலத்தியனேகேளு எண்கோணத்தின்மூல மடைத்துநீயும், அண்ணவேவிசுத்தியிலே யகோரத்தைநாட்டி அடங்காதவாசிதனை விசுத்திதனிலிழுத்து, சுண்ணவேகதிர்சோதிதீபசுடர்தன்னில் கடும் ரவிக்குளைத்தாங்கிச் சுழியிலேற்றி, முண்ணவேயிடதுகலைத் தமர்தான்மூடி மூதண்டவாசிதனை ரேசகத்தில்நாட்டே. (1134)

## சத்திசிவம் சித்திக்க.

நாட்டியேமயேஸ்பரத்தின் தீட்சையாருணர்வார் நலமானபித்தியான தீட்சைதனைக்கொண்டு, வாட்டியேவடதுகலை மேரதனில்நிறுத்தி மகத்தானதெய்வலோக சேர்க்கையேகண்டு, தேட்டியேதீட்சைதனை மவுனத்தூட்டி தியானமண்டலஞ்சுற்றிதம்பி பொருநாறு, பூட்டி

வரும்காளொன்று நாலுசாமம்காணூறு புகழாகவுச்சாடித்தால்மகேஸ்வரமுஞ்சித்தியாச்சே. (1135)

ஆச்சப்பாமகேஸ்பரியும் பிரசன்னமாவார் ஆத்தாளுமப்பனுமே வரந்தாளீவார், ஆச்சப்பாயவர்வரத்தா லறுபத்துநாலு அஷ்டமாகவச்சாரஞ் சித்தியாச்சு, நாச்சப்பாதொழில்களெல்லாஞ் சித்தியாச்சு நவசராசரங்களெல்லாஞ் சித்தியாச்சு, காச்சப்பாஞானசித்தி கவுனசித்திகனயோகபஷ்டமா தொழிலுஞ்சித்தே. (1136)

சித்தானயெனக்குமுன்னோர் சொன்னவடமொழிகள் சூட்சமையாயித்தீட்சை யிப்படியார்சொன்னார், எத்தானயிக்குருவே எனக்குப்பின்னோர் எவரறிவார்பதினெண்பேர் மறைத்தசூட்சம், வித்தானபிறிதிவியிலுள்ள சித்தரெல்லாம் விளம்பவில்லையிக்குருவை வெளிவிட்டேன்பார், கத்தாலுமிப்பொருளைக் கற்கவேணடுங் கற்காட்டாலாண்மடையர்பெண் ணெண்ணலாமே. (1137)

எண்ணவேகுருசாட்சி யெவருஞ்சொல்லார் யானவெளியாய்ச்சொல்லிவிட்டேன்மறைத்திடாமல், உண்ணவேசிவன்சொன்னருமைமறைத்தாள் ஓகோகோயென்னந்திக் குளைக்கும்போது, தண்ணவேவெளியடக்கம் நந்திசெய்தார் தன்வந்திரிவெளிவிட்டார் பாகமில்லை, அண்ணவேயீஸ்பரிதான் மவுனவெளிவிட்டார் அகத்தியனுமகாதெளிவா யறைந்திட்டேனே. (1138)

அரைந்திட்டசௌமிய சாகரமின்னூலில் அதீதபண்போர்மறைத்தபொரு ளெல்லாம்விண்டோர், மறைத்திட்டாரின்னூல்சௌமியத்தைக்கண்டோர் மயங்கார்கள்செய்பாகம் கைபாகமெல்லாம், திறந்திட்டேன்குருபாகஞ் சுத்திமுறைதீட்சை கூறினேமொளிக்கவில்லைகூர்ந்துபாரு, வரைந்திட்டோம்சொக்குபொடி சித்தியாச்சு மகத்தானபொடிகட்கெலலாம் குருவிதாச்சே. (1139)

## தெய்வலோக சொக்குபொடி.

ஆச்சென றபொடியெடுத்து தூபதீபம் அனனமறுசுவையுடனே நைவேத்தியம்பூசை, வாச்சென்றதெய்வலோகச் சொக்குபொடிதான் வளமானயிப்படியில் சகலசித்துமாகும், மாச்செனறயின்னூலில் சாலமிதிலாடு மதற்கெல்லாங்குருவிதுதான் மயேந்திரசித்தாகில், ஏச்சென்றவதீதசித்துக் கெல்லார்தாலும் எள்ளளவுபொடிபட்டா லெல்லாமாமே. (1140)

ஆமப்பாபுலத்தியனே ஐயாகேளு அறுபத்துநாலுக்குங் குருவாம்பாரு, மாமப்பாமதீதகெஜ காணத்துக்கு மகத்தானகோகரண சித்

துக்கெல்லாம், கோமப்பாகோடாகோடி சித்துக்கெல்லாம் குருவிது தான்சகலத்திற்கு மூலமூலம், நாமப்பாசொல்லிவிட்டோம் நவலோக ப்பொடியில் நவிலுவோமெள்ளிடைதா னெடுத்துக்கொள்ளே.(1141)

## பொடிக்குத் தியானவெழுத்து.

கொள்ளவேபொடியெடுத்துக் கரத்திலேந்திக் குருவானசுத்த சல முள்ளிடைதானிட்டு, அள்ளவேகுருசெயநீர்துவரம் பருப்பிடை தான் அதில்வார்த்துநாத விந்துபாதி, வள்ளலேதியானித்து ஓம்-அ றிம்மென்று வளமாகக்கஸ்தூரியெள் ளிட்டுக்குழைத்து, மொள்ளவே மந்திரத்தா லுச்சாடித்து முனைவெள்ளிக்கண்புருவதிற் றிலர்தந் திட்டே. (1142)

திட்டியேயொருமாது செபிப்பாயாகில் திசைநாலுதிக்கெட்டுக் கொன்றுபதினாறு, ஆட்டிடவேயாதியந்த மண்டமெல்லாம் அதிலுள் ளவதிசயங்க ளெல்லாங்காணும், மேட்டியாய்த்திரியாதே மேதினியி லுள்ள வேடிக்கைகளதிதமெல்லாங் காணலாகும், மூட்டியேநாகத்தில் வாசிதனைக்கொண்டு மூர்க்கமதாய்சிங்கெனவே கும்பிப்பாயே. ( )

கும்பித்துரசக்குளிகை வாயிலிட்டுக் கும்பமென்றபொதிகைக் குப் போகவென்று, நம்பித்துதெட்சணமே போகவென்று நலமாக நினைத்துமே வாசிதனையோட்டி, அம்பித்துதெட்சணமே யெழும்பி னுக்கால் அம்மலையிற்கொண்டுவிடுங் குளிகைமைந்தா, எம்பித்துப்பா ர்க்கையிலே யானுங்காண்பேன் யான்கண்டால்சித்திமுத்தி தருவேன் பாரே. (1144)

பாரப்பாயான்கண்ட போதேயையா பனிரண்டுகலையுஞ்சித்தி முத்தியாகும், ஆரப்பாவறிவார்கள் மோட்சமீவோரை யறுபத்துசித் திமுறை தீட்சைசொல்வேன், மாரப்பாயதன்பிறகு மகாகோடிசித்தர் வருவிப்பார்கேட்டபொரு ளெல்லாஞ்சொல்வார், தேரப்பாசித்தரெ ல்லா மெச்சிக்கொண்டு சேனைதிபதிபட்டமுனைக் களிப்பார்பாரே. ()

பாரப்பாபுலத்தியனே வையாகேளு பதினென்குலட்சநூ லதீதத் துக்கு, வேரப்பாதெய்வலோகசொக்கு பொடியெனபார்கள் வேதை யெல்லாமிப்பொடி தொட்டாட்டினுக்கால், தூரப்பாவெகுதூர மொ ருவர்காணார் சொன்னாலுங்கருக்காணா ரூதென்பார்கள், ஆரப்பா சித்தரெல்லாங் கூடிக்கொண்டு அதீதமெல்லாமறைத்தாரென்று கூறு வாரே. (1146)

கூறுவார்சாஸ்திர பாஷைகாணார் கூரிருக்கும்போதகத்தின் பொருளைக்காணார், தேறுவார்சாஸ்திரத்தின் பயனைகாணார் செப்பி

ருக்குழலத்தின் றெளிவைக்காணார், மாறுவார்வாயதனாலனேகங் கேள்விசொல்லார் மகத்தானவுயிருக்கு மகிமைகாணார், ஊர்தோறும்பேயதுபோல் பினத்துமாட்டை யுலகப்பேயாபேயைக் குருவென்பாரே.

குருவானபேயதனைக் குருவென்றெண்ணிக் கொள்ளடங்காத் தீவினையைக் கோறுமட்டி, அருளானசுரூபமதை மனதாற்காண்பீர் ஆதாரநிலையேகி யன்பாய்நீயும், மருவானபிரமத்தைக் காணவென்று மவுனமதில்வேதனால் விசிக்கஞ்செய்தால், சருவானசதாசிவத்தைக் காணலாகுஞ் சச்சிதானந்தவெளி தான்காண்பீரே. (1148)

காணவேஞானசத்தி யப்போதெய்துங் காணிடுங்காண்ஞானிக்குக் கருவாகாது, பேணவேபிண்டகரு வாகாதையா பெருமூலசுழிக் கருதான் பேசும்பேசும், மாணவேமவுனிக்குக் கருவைக்கேளு மவுனத்தால்வாசிதனை யித்தாலே, கோணவேரசகுளிகை தம்பனத்தினாலே தருதிபடுமவுனசித்தர்க் குருவிதாமே. (1149)

ஆமென்றசிவயோகவாய்வு பத்தும்நிலைத்தால் அங்கங்கேதமர் வாசல் பத்துமூடும், மூமென்றவாய்வதுவு மூடினாக்கால் முறுதிபடுஞ் சிவயோகங் குருவிதாச்சு, நாமென்றசித்தருக்குச் சுவாசமெல்லாம் நரம்பெல்லாம்பிகிந்துசாணி பாவனைபோலாகில், சாமென்றதேகசடங் கெட்டியாச்சு சட்டைபோனால்சித்தனெறு பேருண்டாச்சே. (1150)

உண்டானகடைசரக்கா லொன்றுமாகாது ஓகோகோமூலிகையா லொன்றுமாகாது, வண்டானதாசியினா லொன்றுமகாது வாய்வு வென்றததனாலே யொன்றுமகாது, நன்றானபுத்தியறி வொன்றாய்வேணும் நாவுபலபலநினைவு யெண்ணலாகாது, தொண்டாதுவாதியடா வாதக்காறன் தொடுகுருவாமுப்புகுரு வழலையாமே. (1151)

ஆமென்றவாதிகுரு வழலைவிட்டால் அடவானவெரையொன்று குருவொன்றில்லை, நாமென்றவதன்தொழில்கள் வழலையாபல நலமானவவர்க்குரு சவர்க்காரந்தான், தாமென்றசவர்க்கார மதியாகுஞ் சமர்த்தானசவர்க்காரம் பிரமபிண்டம், போமென்றபிறவிபிண்டம் வழலையாதி பெண்ணடிதான் பன்னிருகுருவுமாச்சே. (1152)

## பிண்டம் சுத்திவகை பெண்ணாடியாதி.

ஆச்சென்றதெய்வலோகச் சொக்குப்பொடிதான் அரகராபதனமதா யடக்கஞ்செய்து, வாச்சென்றமுன்சுத்தி பிண்டம்வாங்கி வாய்மூழித்துபிண்டந்தனில் சலத்தைவார்த்து, காச்சென்றுகழுவிடுவாயே கிலிசையப்பா கண்ணாடியொளிவதுபோற் காணுங்காணும், வாச்செ

ன்றபிண்டத்தின் றலையைவாங்கி மத்தலையில்மயிர்ச்சவ்வுங் கொளை போக்கே. (1153)

போக்கியேயண்டைமூலை சிதறுமற்றன புனிதமதயண்டபொடி சொக்குச்சுண்ணம், ஆக்கியேயாவதற்குக் கல்லுரலிலிட்டு ஆறுசாமசுத்தசலம் விட்டுச்சாடி, தூககியேயாடையிலே மெழுகுபோலாந் துருவமென்றமெழுகதனைத் தோண்டியப்பா, ஏக்கியேதோண்டியதைப் பிங்கானிலிட்டு என்மகனேகுருசெயநீ ரிரண்டுசேர்வாரே. (1154)

## காய்கண்ட தலைமூளைசுண்ணம்.

வார்த்துமேகரமதுவால் கலக்கிநீயுந்தான் வளமாகஞ்சுகொடி சுண்ணமலரப்பலந்தான், ஆர்த்துமேரவிதனிலே வைத்திடுசாமம் ஆயிடுங்காண்மெழுகுகட்டி பொரிபோலரியுமப்பா, நாற்றிசையுமயக்கலாமிப் பொடியினாலே நவிலுவோம்சந்திரன்போல் வெளுமைகாணும், போற்றிடுவாய்பொடியதனை யெடுத்துகொண்டு பூரணமேமீசைசெய்து பதனம்பண்ணே. (1155)

பண்ணுமந்தப்பொடிதனிலே சேரொன்றுவாங்கி பண்மைபெற வடிகட்டி பொடியைக்கொண்டு, அண்ணுமந்தப்பொடிதனைப் பிங்கானிலிட்டு அடவானதிருகள்ளிப்பால் சேருமிட்டு, உண்ணுமந்தப் பொடியதனைக் கூட்டிமத்தித்து ஓரிடையாய்க்கையகலஞ் சதுரம் பண்ணி பெண்ணுமந்தவில்லைதட்டி சித்திரைநாள்ரவியில் பெலமாக வுலருமட்டும் ரவியில்வையே. (1176)

வைத்ததனைபுலர்த்திபின்பு யெடுத்துக்கொண்டு வளமானஅண்டோடு மெழுக்கவசஞ்செய்து, நைத்ததனைநாதவிந்தாற் சீலையேழுசெய்து ரவியிலரைநாழிவைத்து யெடுத்துநீயப்பா, ஐத்துநீகாடையொரு புடத்தைப்போட்டால் அப்பனேதலைமூளைச் சுண்ணமாகு, முத்துபோல்நீறியதுநீருய்ப்போகு மூலதுரைகாய்கண்ட சுண்ணமாச்சே.()

## முன்சுண்ணத்துக்குத்தியானம்.

போற்றியேபிண்டமதைக் கழுத்துகொண்டையா புகழுவோங் கால்மட்டாய் சிதறிட்டாமல், ஆற்றியேயெடுத்துமதைச் சொல்லக் கேளப்பா அரகராவெடியுப்பு சவர்க்காரவுண்டை, நாற்றிசையும்புகழ்பெறவே கல்லுப்புச்சூட னலமானபூரமுடன் கஸ்தூரிமஞ்சள், பாற்றியேவெண்காரங் கஸ்தூரிபுனுகு பண்பைபெறுமல்லிகைப்பூ முல்லைப்பூவே. (1158)

பூவானமிருவாட்சி செங்கழுனிப்பூவும் புனிதமென்றதேவதாருஞ் சந்தனம், ஆவானமல்லிப்பூ தாமரைப்பூவும் அடவானசாதிக்காய்லவ

ங்கப்பூவும், மாவான அழிஞ்சிப்பூ மாதளம்பூவு மருவுமருக்கொழுந்து வெட்டிவேரும், தாவானகொட்டியும் பங்கிருவுமாகும் சாதிமல்லிப் பூவுடனேவிதம் வகைப்பலமும்ரண்டே. (1159)

ரெண்டானவிதுவகைகள் சமூலம்வாங்கி நிலைபெறவேகல்லுர விட்டுநீய்ம், எண்டானயெழுவுலக்கை வாகக்கொண்டு யிடித்தெழுசாம மதைத்தூளதாக்கி, நன்றாகத்தோண்டியதை வழித்துக்கொண்டு நவி லுவோம்வடித்தூளிற் சேர்தான்வாங்கி, குன்றுமற்பீங்கானி லிட்டு நீயுங் குருசெயநீர்த்தூளதனி லிரண்டுசேர்வாரே. (1160)

வார்த்துமதைக்கூட்டையிலே குழம்புபோலாகு மக்குழம்பை வாரிபிண்ட வுருமேற்பூசி, ஆர்த்துநீயதன்வயிற்றி லூற்றுசேர்குழம்பு அரகராவூற்றியதின் வயிலைத்தானும், கார்த்துநீகரும்பூனை நரம்பெடு த்துக் கருபாவம்சிசுவயிறை மூடித்தானும், நார்த்துநீசித்திரைநாள் முதற்கொண்டையா நாற்பதுநாள்வைகாசி நாள்பத்துமாமே. (1161)

பத்தானமனிதருலவா திடந்தான்பார்த்து பரும்வேலிமுள்போட்டு வுருகிறவரைக்கும், நத்தானநாற்பதுநாள் கடுரவியிலேயா நவிலு வோஞ்சருகதுபோல் நன்றாயுலர்த்தி, எத்தானபிரமபூசை ஓம்யவ சிமவென்று இறிம்அறிம்ஐயுஞ்சவ்வுங் கிலியுமென்று, சித்தானரோக ணிநாள் சித்திரைசுக்கிரவாரம் செயமாகவொருநூறுபிண்டம் வைத்துச்செய்யே. (1162)

## பிரமாதியானம் முன்னுலர்த்தின் பிண்டத்தூள்பொடி.

செல்லப்பாயித்தியானந் தீட்சையோத செணப்பொழுதில்பிண்டமது சித்தியாச்சு, மெய்யப்பாவெளியாகச் சொல்லிவிட்டோம் வேதாந்தசிசுபாலன் றயிலங்கேளு, உய்யப்பாவுலமதி லாருஞ்சொல்லார் வுருகிபெறச்சொல்லுகிறோ முருவைக்கொண்டு, கையப்பாகல்லுரலி லுருவைவைத்து கருணைபெறவிருப்புலக்கை கொண்டுசாடே. ()

சாடவேமாவதுபோ லாகும்பாரு சார்வாகமுச்சாமஞ் சாடிக் கொண்டு, ஆடவேதோண்டியதை வடித்தெடுத்து அத்து சீஷாவிற் பதனஞ்செய்து, பூடவேபூமாதை மனதிலெண்ணிப் பூரணமே மவுனமதா பூணிக்கொண்டு, நாடவேநங்சிங்மவ் வவ்வுமென்று நாட்டி டுவாய்ஓம்ஸ்ரீயும் சிறியும்வூம்மென்னே. (1164)

எண்ணவேயொருநூறு தூளை வைத்து யென்மகனேபிலக்கவே சித்தியேறும், முண்ணவேமூலதீட்சை யுருவுகாச்சு மூவுலகுமிப்பொ டியால் வசியமாகும், நண்ணவேமுன்னோர்க ளாருஞ்சொல்லா நாம்

சொன்னேம்பலமுறை தானட்டொண்ணாது, வண்ணவேவடியில்மின் றபொடியைக்கொண்டு மகாசித்துமாடுதற்குச் சுன்னமாமே. (1167)

## வாலைசுண்ணம்.

சுன்னமென்ற வாலைபதினறுமாற்று சூட்சமென்ற வாத்தாளைக் கல்வமதிலிட்டு, அன்னமென்றவத்துளில் சொல்லக்கேளு யானைப்பால் சேர்விட்டுமுன்சொக்குப் பொடித்துளில், வன்னமென்றபலமஞ்சு கல்வமதிலிட்டு மகத்தானசுத்தசலம் பேர்கொண்டுவிட்டு, கன்னயமா காதவிந்து மூன்றுபலமிட்டு நஞ்சுகொடிசுண்ணமரைப் பலந்தான் போடே. (1168)

போட்டுயிருசாமமதை யாடினுக்கால் புகழான வெண்மைநிற மெழுகுபோலாம், ஆட்டியதைவழித்து வில்லைபுள்ளங்கையகலம் அடவாகவஞ்சங்குலகனமாக, சாட்டிடுவாய்ச் சதுரமதாய் வில்லையதாய்ச் செய்து தாக்கானசித்திரை காளுத்திரட்டாதிகுருவாரம், காட்டுவாய் வில்லையதை வாரம்பதினைந்தில் நன்றாக வுலர்த்திட வெங்கலம்போலாமே. (1169)

## சுண்ணத்தால் தாம்பர ஏமம்.

ஆமப்பாவிப்லையதை யெடுத்துக்கொண்டு அதன்மேலேயண்டமெழுகவசஞ்செய்து, காமப்பாகாதவிந்தாற் சீலையெழுசெய்து ரவிமுகத்தில்சாமமது வுலரவைத்து, கோமப்பாகோழியென்ற புடத்திற் போட குருவானவரலைசுண்ணம் வெளுத்துநீரும், வாமப்பாநீறுகும் பலந்தான்கண்டு மைந்தனேபுடமாறி வில்லைவாங்கே, (1170)

வாங்கியேசவசமது சீலைவாங்கி மாதுசிரோன்மணி வாலைபூசை செய்து, தூங்கியேதிரியாதே சுரைப்பாண்டிலையா சுண்ணமதையிட்டுநீ சொல்லக்கேளு, ஏங்கியேதிரியாதே யஷ்டமாசித்தும் மிச்சுண்ணங்குருவாலையாடலாகும், காங்கியேயிருபத்துகான்கு சித்துமாடும் கலோகமெல்லாநீறும் கனிமமதாயாமே. (1171)

## முன்வாலைசுண்ணம் செந்தூரமாக.

ஆமென்றநஞ்சுகொடி சுண்ணமதற்கையா அருளினேமதற்கதிகம் வாலைசுண்ணம், காமென்றதாம்பரத்தை யுருக்கிசாய்த்து நல்ல செம்புசேரண்டுசுண்ண முளுக்கிடைதான், காமென்றகைபாக மறிந்துபோட்டால் கனகமாம்பதினறு மாற்றுகாணும், எமென்றசாக்கறுபத்துகாலு யென்மகனேமெழுகாகுஞ் சுண்ணமாமே. (1172)

ஆமப்பாசரக்கெல்லாங் களங்கமாகும் அக்களங்கில்கோடாகோடி வேதையாடும், நாமப்பாசிச்சுண்ணத்தா லனந்தசித்திபெற்றோம் களினமென்ற சுண்ணமிதுபதனஞ்செய்து, கோமப்பாகுரு தத்தில் தியானபூசை குருவானபூரணமே பணிந்துபோற்று, வாமப்பால் சொரியுமடா மவுனஞ்செய்தால் மாய்கைபெல்லா மற்றுதடா மதியாற்றனே. (1173)

தானுகச்சுண்ணமதைச் செந்தூரஞ்செய்ய சாற்றுகிறேன் புலத்தியனேசாவாய்க்கேளு, வானுனவாலைசெந்தூரஞ் சொல்வேன் மகத்தானகனம்கோயதற் கெல்லாந்தான், கோனுனகுரு செயல் தன்னருளினுலேகூறுவோம்வாலைசுண்ணஞ்சேர்கொண்டையா, பேனுனபீங்கானில்சுண்ணமிட்டுப் பிலமானவெங்காய மெழுகுபணவிடையே. ()

இடையான குருசெயநீர்காதவிந்து யென்னசொல்வேன் சுத்த சலமூன்றுமதைக்கேளு, இடையானவொவ்வொரு நீர்விதம்பலமூன்றுதெளிவானநீர்தன்னைப் பீங்கானிலிட்டு, கடையானசவர்க்கார வுண்டைபலமிட்டு களிணமதாயதைக் கூட்டிமத்திக்கேளு, தடையறவே யுண்டைசெய்து ரவிமிசிருசாமந் தாக்கியதையுலர்ந்ததொரு வுண்டைவாங்கே. (1175)

வாங்கியேயுண்டைதனைச் சுத்தசலஞ்சேரெட்டில் வளமாகவுண்டைதனைச் சலத்திலிட்டுக்கேளு, தூங்கியேதிரியாதேரண்டரை நாழிகைதான் திதிபெறவேயூரினபின் னெடுத்துப்பார்த்தால், காங்கியது வெண்கலப்போலுருளுமாகில் நவிலுவோம்வெண்கல வுண்டைசுத்தமெத்த, பாங்குபெறவுண்டையதை யுள்ளங்கையிலிட்டு பண்மைபெறவுன்விழியா லுற்றுபாரே. (1176)

உற்றுதான்பார்க்கையிலே சோதியொளிகாணு முன்னைப்போல்சொரூபமெல்லாஞ் சிவமயமாய்த்தோற்றும், பற்றுகிலேசடமதுவில்நின்றுயானுல் பாணமெல்லாம்பளிச்சென்றுநிறமதிகங்காணும், எற்றதினுலறிவாளிநீயேயானுல்பிருக்குநிலே கண்கண்டபோதே யெடுத்துக்கொள்ளு, சற்றுமதுசௌமியந்தான் சத்தியவாக்கு தவறுதுஅறிவுடையோன்றண்மையாமே. (1177)

தவறுது யெப்படிதா னென்பிரையா தண்மைபெருமைக்குணமிலட்சண மிதுவஞ்சாகில், நன்மைபெரும் வாதசட்டங்கூறதாகும் நல்குவோம் வாதிதுராசியுள்ளோன், அண்மையென்ற வவர்க்கெய்து

மோட்சஞ்சித்தி யடவெல்லாம்பிடித்த குறியறிவாரையா, தண்மை யவர்க்கொருநாளும் வாராதப்பா சொன்னோநாகஸ்தியனென்று துதி செய்வாயே. (1178)

துதிசெய்வோம் வாலைபூபதிசெந்தூரஞ் சொன்னதெல்லா மாடு மடாயதன் பெருமைகாணார், அதிகமதாயிதன்பெருமை யாருங்காணா ரதுகண்டோரரிதப்பா யெளியோருக்கும், சதியவரைசெய்தாலுஞ் சித்திரவதைசெய்தாலும் தவறார்களவர்மனது தாமறிந்திருப்பார், சதி யொருநாள்செய்வார்களவர் நன்மைபொருமை சத்துருவைக்காக்கு மவர் தண்மைமதிதானே. (1179)

மதியறிவால்ரவியு மதுவுஞ்சேர்ந்தால் மகத்தானபலபுத்தியதித மாகும், மதியானரவிதனிலே மதியுஞ்சேர்ந்தால் அறிவொன்றிலடக்க மதா மெல்லாமையா, ததியானபுருவமையங் க ணுவோர்கள் தாக் கானபூரணமேயறிவாரையா, விதியானயென்னறிவு யிலைத்துதானல் விட்டகுறை தொட்டகுறை யிடங்காண்பாயே. (1180)

காண்பதற்கு முன்சொன்ன வுண்டைதனைவாங்கிக் கதிர்முனை யதுபோலே துவாரம்பண்ணி, காண்பதற்கு சுத்தசலமெள்ளிடைதா னதிலிட்டு நன்மைபெறப்பின்காணி லுண்டைதனைவைத்து, பூணவே குருபதத்தைத் தியானஞ்செய்து பூப்பணிந்துரவிமுகத்தி லரைநாழி மட்டும், வாணவேவைத்திடவே வைத்திராகில் வளமானசெந்தூர மாய் வருகும்பாரே. (1181)

பாரப்பாமுருக்கம்பூ யிதற்கீடுண்டோ பாரேழுசாகரமு மிதற் கீடுண்டோ, வேரப்பாகஸ்தூரி யிதற்கீடுண்டோ வேணதுண்டுபலசிற முமிதற்கீடுண்டோ, ஆரப்பாவாலைபூபதிசெந்தூரம் அதுமலர்ந்தபூவத னைச் சுரைப்பரண்டிலிட்டு, கோரப்பாசிராமயமாய் சோதியொளிதன் னில் சினைவையொட்டி மவுனமதில் தியானஞ்செய்யே. (1182)

செய்யப்பா-சிவாயமம-ஓம் மென்றுவாறுஞ் செபிக்கையிலே ஸ்ரீ-றீம்-இறீமென்றுஞ்செபியிருநூறு, மெய்யப்பாவெளிதிறந்தே னென் மேலாணையரண்டு வெளிவிடாசெந்தூரம் பூசைசெய்து, கையப்பாவெ குபதனம் வைத்துப்போற்றி கருணைபெறச்சித்திக்குங் கருவேயெய் தும், பொய்யப்பா வுலுத்தர்சொல்வார் சாஸ்திரம்பொய்யென்பார் பூரணமேமனதறியாப் புலையர்தானே. (1183)

தானென்றசெந்தூரம் பெருமைமெத்த தனதாகச்சொன்னது மறிவேவேணும், வேனென்றசெகத்தோர்கள் கர்மநோய்க்கு விளம்பு வோம்வரலையிட வாசம்பட்டால், நாமென்றசமன்வந்தாப் போலே யல்லோ நடுநடுங்கியோடுமடா விதிநோயெல்லாம், வானென்றவாதத் தால் வருநோய்க்கெல்லாம் வசனித்தோங்கடுகுப் பிரமாணந்தானே.

தானென்றசெந்தூர மிவ்விதமாய்கொண்டு தருவான சுத்தசலம் பணவிடைதானிட்டு, கோனென்றகுழைத்து நோயாளிநாவல் கூறிட வேமூன்றுவேளை செந்தூரமுண்டால், தேனென்றவாதமுதல் பித்தம் யாவும்தீராதசேத்துமமு மொதுங்கியோடும், ஆனென்றவதித நோ யெல்லாமோடும் அப்பனேகன்மவினை துலைந்துபோமே. (1185)

போமென்றபித்தத்தா லெழுந்தநோய்க்குப் போடுவாய்பொட்டி ஞப்பு செயநீர்தன்னில், ஆமென்றுமுன்சொன்ன பாகவிதங்கொடு த்தா லாறிவிடும்பித்தத்தா லெழுந்த நோயெல்லாம், வானென்றவாறு போலமுு துண்டாயானல் வச்சிரம்போல்தேகமெல்லாம் வளப்பமா கும், தாமென்ற சிலேர்பனநோய் சகலத்துக்குஞ் சொல்லிடவேகுரு நீரில் கொடுத்துப்பாரே. (1186)

கொடுத்திடவே யெட்டுநா ளுண்டாயானல் குறிகெட்டசிலேற் பனநோயெப்படிபோகும், முடித்திடுவாய்வாதபித்த சிலேற்பனமூன் றுக்குமுதண்டமிது வாதிசெந்தூரந்தான், வடுத்திடவேவயித்தியர்க்கு க்குருவிதப்பா வாதமென்ற வழலைக்கு மதீதம்பாரு, நடுத்திடவேஞா னகற்பமிது வான்றாற்றன் நன்றானவட்டசித்து மாடுமென்றே. ()

என்றானவாலைபூதி செந்தூரந்தான் மார்செய்வார்சிவயோகிய வரேசெய்வார், நன்றாகநாம்சொன்னேஞ் சௌமியத்தில் நவசித்தரின் னூல்போற்சொல்லவில்லை, வன்றானயின்னூலிற் சொன்னதெலலாங் குருவு வழிபாதைசுருதி முடிவுயின்னூலாதி, கன்றானயேமகாவியந் தான் பஞ்சகாவியங் கருணைபெறுமின்னூலும் நிகண்டோடேமே. ()

ஏழானவிதன்சோர்வை சுருக்கமெல்லாந்தான் யென்மகனேபா ர்த்துவுரை தெளிந்தாரானல், கூராகநிலைத்திடுங்காண் வாதமெல்லாந் தோயுங் குருவாணையென்குருவால் நன்றுப்ச்சொன்னேன், வாரான பெருவாழ்வு சிவயோகவாழ்வு மற்றதெல்லாம்சடலப்பா மலைத்திட மக்கள், சாரானசௌமியத்தி விண்டதெல்லாம்வெளிதான் சர்க்குவி ன்கமலபதஞ் சாட்சிதானே. (1189)

தானென்றநாங்கள்சொன்ன பொருளெல்லாந்தான்சாக்கினாலே
டாகச்சாற்றினோம்பார், போனென்றபொருளெல்லாம் பொடியாய்ச்
சொன்னோம் பொருளறிவான்சென்மராசியிருந்துதானால், பானென்ற
பாகமடாயின்னூல் போலொருநூலுமில்லை பகராதுபகர்ந்தாலுமறை
ப்பாய்க்காணும், கோனென்ற நிகண்டெண்ணூறதீதபீடம் கூறினோம்
பதினாறு லட்சத்துக்கே. (1190)

லெட்சமென்ற லெட்சயத்தை யெவருங்காணார் நிகண்டெண்
ணூறிருந்து தானால்பாஷையெல்லாந்தோன்றும், அட்சயந்தான்பெ
றுவதற்கு நிகண்டுவேணும் அப்போவல்லோவாதத்தின் மறைப்பெல்
லாம்விள்ளும், பட்சமென்றநிகண்டதனை வைத்துக்கொண்டு பாஷை
யறிந்திட்டாக்கால்பண்மையாகும், கட்சிபெறுமெண்ணூர்தானார்கொ
டுக்கப்போறார் கனகமென்றதிரவியத்தைக்கொடுத்துவாங்கே. (1191)

கொத்தாலும் பணங்கோடி யீயா ரீயார் கூறினதோர் சேதியெல்
லாம் நிகண்டில்விள்ளும், அடுத்தாலு மாசானை நிகண்டைப் பாரு மவ
ரீயார் சேதிபெல்லாமறியலாம்பார், கடுத்திடனால்கொடுத்ததோர் மன
துநொந்தாக்கால்கனகம்கோய் சித்திக்குமுண்மைபாரு, தொடுத்தொ
ருவர்வாய்பேசார் நிகண்டிருந்தால் தலைவனையுந் தலைவியையுங் காண
லாமே. (1192)

## அஷ்டகர்மச்சீலை.

காணலாமுன்சொன்னதலைப்பிண்டந்தான்
கருணைபெறச்சொல்லுகிறோம்புலத்தியாகேள்
ஆணலாமறுபத்துநாலுமாட
யஷ்டகர்பச்சிலையதனையருளக்கேளும்
பேணலாம்பிண்டமதைக்கல்லுரலிலிட்டுப்
பேறுகமுன்சொன்னபிண்டமாவிட்டு
தோணலாஞ்சுத்தசலமிரண்டுசேரிட்டு
துதிபெறவேயகாரவிந்துவுகாரவிந்தே. (1193)

விந்தானயிரண்டதுமே யொவ்வொன்றுசேரு விட்டதிலேயித
லோகப்பொடிசேரண்டு, செந்தானசெயநீர் மெழுகெல்லாமையா சிற
ப்பாகவொவ்வொன்று சேர்தானிட்டு, அத்தானசெயநீர்வகை யெல்
லாமைந்தா அருளினோமொவ்வொன்று சேர்தானிட்டு, மைந்தான

திருக்கள்ளிப் பால்சேரண்டு மைந்தனே மாக்கருசேர் வளமாய்ப்
போடே (1194)

போட்டுமிரும்புலக்கைகொண்டுபதினறுசாமம்புகழாகச்சிறுகெ
ங்கை படியாற்றன்னில், ஆட்டுவாய்சாமமதுக் கொருதரம்விட்டு அட
வானயிருப்புலக்கை யதனுற்சாடு, வாட்டுவாய்கருநாகப்பழ மதுபோ
லாகுமப்பாகங்கண்டுநீயஷ்டமாமாமெழுகை, வாட்டுபெற வெல்லாநீ
தோண்டியப்பா வரிசைபெறமெழுகெடுத்துப் பிங்கானில்வையே. ()

## அஷ்டமாத்தயிலம்.

வையப்பாயம்மெழுகில்யாதியதையெடுத்து
வளமாகப்பிங்கானில்வைத்துநீயும்
எய்யப்பாவாலைபூபதிசெந்தூரமதனில்
விராகனெடைமெழுகுநடுவதனில்வைத்து
கையப்பாரவிமுகத்திலொருநாழிவைத்தால்
கலமானவஷ்டமாதயிலம்பாயும்
பொய்யப்பாசொல்லவில்லைதயிலமதைக்கொண்டு
பூசைசெய்துசீஷாவிற்பதனமதாய்ப்பண்ணே. (1196)

பண்ணப்பா மதிமெழுகெடுத்துநீயும் பாலகனைப்போல் ரெட்டு
சிலையுருவாய்ச்செய்து, கண்ணப்பாமுகங்கால்கள்கையுண்டாக்கி கன
த்தமெய் வாயுகடு கருவுண்டாக்கி, எண்ணப்பா வண்ண மெல்லாஞ்
செய்து முடிப்பித்து என்மகனே நாவியத்தின் பாகங்கண்டு, அண்ண
ப்பா முடித்துசிலை திரியுண்டாக்கி அஷ்டயோக சித்திபெற பதனஞ்
செய்யே.

## இந்நூல்சுருக்கமுந்நூறும்பாரு.

பதனமென்றசிலையினுடஆட்டமெல்லாம்
பண்மைபெறுமிந்நூல்சொச்சமுன்னூர்தன்னில்
அதனமென்றயிருபத்துநான்குசித்தி
யடவாகஆடுதற்குகருவைச்சொன்னேம்
மதனமதாய்திரியாதேயிந்நூலாதி
மைந்தனே ஆயிரத்திருநூறுதன்னில்
குதனமென்றகுருக்களெல்லாமுடித்தோம்பாரு
குருநூலுசௌமியசாகரந்தான்பாரே. (1198)

பாரப்பாபுலத்தியனே முன்னூறும்பாரு பரிவாகவாயிரத்தைந் நூறும்பாரு, ஆரப்பாவறிவாளி சமுத்திரம்தன்னில் ஆடலாங்கடை போட்டுமுன்னூர்தன்னில், வேரப்பாசித்துவிளையதீதமெல்லாம் விளம்பினேம் சொச்சமும்நீ விரித்துப்பாரு, தேரப்பாதேகசித்தி காயசித்திசொன்னோம் சிவயோகசித்திமெய்ஞ் ஞானசித்தே. (1199)

சித்தான மவுனசித்தி கெவுனசித்திசொனனேம் தெளிவானகுளிகைசித்தி வாதசித்திசொன்னோம், அத்தானவறுபத்துநான்கு சித்திசொன்னோம் யதீதம்பெற்றுவாழ்உலா மின்னூல்தன்னில், முத்தானசொச்சமில்லா வயிரத்தைந்நூறு முடிவதற்குச் சௌமியத்தின் சூஸ்திரம்பாரு, வித்தானவித்தெல்லாம்நன்றாய்த்தோன்று மெய்ஞ்ஞானபரகெதியில் விளங்குந்தானே. (1200)

தானனமூலமெல்லாஞ் சொல்லிவிட்டோஞ் சைதன்னியப்பொருளெல்லாம் வெளியாய்ச்சொன்னேம், கோனனகுருவாசான் முறையுஞ்சொன்னேம் கூறினேங்கைபாகன் குணமுஞ்சொன்னேம், வானனவாதமொடு வைப்புச்சொன்னேம் வளமான குருகோடி சுண்ணஞ் சொன்னேம், ஆனன திராவகங்கள் செயநீருஞ் சொன்னேம் அதீத கோடாகோடி மெழுகருளினேமே. (1201)

அருளினேஞ்சரக்குவைப்புவுபசரங்கள்
அருளானகுளிகைசாரணைகள்சொன்னேம்
மருளினேமாதியென்றபனிநீர்சொன்னேம்
மகத்தானகோடாகோடிதொழில்கள்சொன்னேம்
வெருளினேம்வேதையிலேயனந்தஞ்சொன்னேம்
வேதாந்ததீட்சைகுருபூசைசொன்னேம்
வருளினேமாயிரத்திருநூருபீடம்
வசனித்தோம்சௌமியசாகரமுற்றே. (1202)

## அகஸ்தியரருளிச்செய்த

## சௌமியசாகரம் - 1200

முற்றுப்பெற்றது.

சோதிமய மானமாலை ஜாதிவேல் போற்றுமலை
சுவாமி வடிவேலர் மலையே
சொயமெனக் கருளுமலை சுகம்பெறப் போற்றுமலை
சுவாமி கதிர்காம மலையே

2 மாணிக்க மானமலை மானிடர்கள் போற்றுமலை
மகிமைகள் விளங்கு மலையே
மயிலாடி நிற்குமலை மருள் கொண்டு போற்றுமலை
மதி கதிர்போல் விளங்கு மலையே
காணிக்கை ஏற்குமலை கந்தனைப் போற்றுமலை
கதிர்கா ம சேது மலையே
கருமருந்துள்ளமலை கவிஞர்கள் போற்றுமலை
கந்தவேல் சொந்த மலையே
நானிலத்தோர் புகழும் நாரதர் போற்றுமலை
நவரத்தின மான மலையே
நான்மறைகள் ஓதுமலை நாதாக்கள் போற்றுமலை
நாரணன் மருகன் மலையே
வேணியனமர்ந்தமலை விண்ணவர்கள் போற்றுமலை
வினை தீர்க்கவந்த மலையே
வேல் ஊன்றி நின்றமலை வேண்டி தினம் போற்றுமலை
இவ்வேளை எனை கார்க்கு மலையே

3 ஓர் மலையில் ஏழுமலை உலகோர்கள் போற்றுமலை
வொளியாய் விளங்கு மலையே
ஓராறு முகவன் மலை உத்தமர்கள் போற்றுமலை
ஊழ்வினையை நீக்கு மலையே
கூர்போல் வளர்ந்தமலை கும்பமுனி போற்றுமலை
குழந்தை வடிவேலன் மலையே
கூற்றுவனை மாற்றுமலை குணவான்கள் போற்றுமலை
குமாரன் வடிவேலன் மலையே
பாற்கவே உயர்ந்தமலை பக்தர்கள் போற்றுமலை
பரிமளம் மணக்கு மலையே
பச்சை மயிலாடுமலை பணிந்து நான் போற்றுமலை
பக்தர் துயரமதை தீர்க்கு மலையே
தேர்போல் வளர்ந்தமலை தினமும் நான்போற்றுமலை
திருக்கதிரை வாசன் மலையே
தீவினை யொழிக்குமலை தெரிந்தவர்கள் போற்றுமலை
தினமும் எனை கார்க்கு மலையே

காற்கவே நிற்குமலை காக்ஷிபெற போற்றுமலை
கான மயிலாடு மலையே

காலன் இடர் நீக்குமலை கந்தனை போற்றுமலை
சர்மவினை நீக்கு மலையே
சீர்பெற்று நிற்குமலை சிவபக்தர் போற்றுமலை
சித்தர்கள் கொண்டாடு மலையே
சின்மயமானமலை செயம்பெறப் போற்றுமலை
சித்தாந்தமான மலையே
பேர் பெற்ற கதிரை மலை பெரியோர்கள் போற்றுமலை
பேரின்ப மான மலயே
பெரிதாய் உயர்ந்தமலை பெருமானை போற்றுமலை
பிணி தீர்க்கும் கதிரை மலையே
சோர்வையில்லாதமலை ஜோதியாய் தோற்றுமலை
சுவாமி கதிர் பொதிகை மலயே
சோகமதை நீக்குமலை போகரிஷி போற்றுமலை
சுகம் தந்து காரு ஏனையே

---

## கதிர்மலைகாக்ஷி.

செந்தில் வடிவேலன்மேல் சிந்துதமிழ்பாட என்ற மெட்டு

வள்ளி வடிவேலர் வினு விடை

| | | |
|---|---|---|
| தீராத நோய்பிணியை தீர்க்கும்க திர்வேலன் | | மலை |
| தெரிகுதே முன் | பாராய் | சென்று |
| தெரிசிக்கலாம் | வாராய் | நாம் |
| தேடிப்போனல் கோடிவரம் தென்கதிர்வேல் | | தருவார் |
| ஏழுமலை என்பதெது எனக்குரைப்பீர் சாமி | | வேல் |
| இருக்குமிடம் | காமி | வடி |
| வேலனிட | பூமி | இங்கே |
| என் குறையை அவர்க்குரைத்து ஆற்றிடுவேன் | | சாமி |
| மலையொன்று சிகரமேழு மந்திரகிரிபோல | | மலை |
| மேலமர்ந்த | வேலே | திரு |
| மால்மருக | னலே | புவி |
| மானிடர்கள் போற்றி பணிந்தர்ச்சனை | | செய்வாரே |
| உக்கிரசத்தி வேலிதுபார் உயர்ந்த மலைமேலே | | ஸ்ரீ |
| இராமபாணம் | போலே | சத் |
| துருவை வென்ற | வேலே | என் |
| ஊழ்வினையை நீக்கிடு மெஞ்ஞானவடி | | வேலே |
| திருக்கதிரை வாழுமுரு | கோனே | தெய் |
| வானை வள்ளியை | யானே | எப் |
| போது | மறவேனே | என் |

தீவினை யகற்றிடு மெஞ்ஞான முரு கோனே
ஸார்ச்சனர்கள் போற்றிடு மெஞ்ஞான வடிவேலா தெய்
வானை வள்ளி லோலா மன
சஞ்சலத்தை தீர்க்கு மனுகூலா நீர்
சந்ததி தந்தேயெனையாள் சங்கரனின் பாலா
தென் கைலாயமென்று தேவர்கள் துதிக்க போகர்
தெரிந்து வேல் ஸ்தாபிக்க அதை
அறிந்து மானிடர் நோக்க இப்போ
ஆறுமாமுக வேலனைத் தினம் பணிந்துமே கரம்குவிக்க
ஏவல் பில்லி சூனியத்தை எதிர்படாமல் நையும் என்
எதிரி தலையை கொய்யும் வேல்
எனக்குதவி நீர் செய்யும் உன்
பேற் சொல்லவே பார்வை திஷ்டி பறக்ககிருபைவையும்
ஓம் சரவணபவனென்றுன் சடாக்ஷரம் செபிக்க உமை
பாலனே தினம் துதிக்க எம
வாதனையே நீர் விலக்க பஞ்ச
பாதகமகற்றி ஜோதிவேல்கருள் கொடுக்க
ஈசனுக்குபதேசித்த குமரேசன் இவர்
எங்கினும் பிரகாசன் திருக்
கதிரை நகரின் வாசன் குரு
தாஸன் ரத்தினம் ஜோதிவல்தினம் போற்றிடு முருகேசன்
ரத்தினவாடி மாநகரின் வாசன் கதிர்
நாட்டின் மேல் விசுவாசன் தமிழ்
ஜோதிவேல் கவி ராசன் ரனு
தினமு முன்மேல் சிந்து கவி பூட்டிடு முல்லாசன்

---



செல்வக்கதிர்காம காக்ஷி
செந்தில்வடி வேலவன்மேல் சிந்துதமிழ் பாட
என்ற மெட்டு
வள்ளிவடி வேலர் வினா விடை

செல்வக் கதிர்காமஞ் செல்லும்பாதை எதுசாமி அதை
கோதையர்க்கு காமி வினா
யகரின் பூமி நாம்
சென்றிடுவோம் யானைமுகன்மீது துதிபாடி
வல்லபை விநாயகரை வேண்டி தொண்டர்
வருகும்வழி தாண்டி சங்கு

# வயித்திய புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அகஸ்தியர் சௌமியசாகரம் 1200-பாடல் | 1 | 0 | 0 |
| ௸ ஆயுள்வேதம் 1200 | 1 | 0 | 0 |
| ௸ வயித்திய காவியம் 1500 | 1 | 0 | 0 |
| ௸ கன்மகாண்டம் 300 | 0 | 4 | 0 |
| ௸ வல்லாதி 600-பாடல் | 0 | 10 | 0 |
| ௸ நீச்சாவதி 200 | 0 | 6 | 0 |
| ௸ குணவாகடம் | 0 | 4 | 0 |
| ௸ வயித்திய ரத்தினச்சுருக்கம் | 0 | 4 | 0 |
| ௸ செந்தூரம் 300 | 0 | 4 | 0 |
| ௸ பரிபாஷை திரட்டு 300 | 0 | 4 | 0 |
| தேரையர் 1500-பாடல் | 1 | 0 | 0 |
| ௸ கரிசல் | 0 | 4 | 0 |
| ௸ தைலவர்க சுருக்கம் | 1 | 12 | 0 |
| ௸ 1001-பாடல் | 0 | 12 | 0 |
| ௸ 500-பாடல் | 0 | 12 | 0 |
| மச்சமுனி 800-பாடல் | 0 | 10 | 0 |
| கொங்கணர் கடைகாண்டம் | 0 | 4 | 0 |
| தன்வந்திரி வயித்திய காவியம் 1000-பாடல் | 1 | 0 | 0 |
| ௸ நிகண்டு 300 | 0 | 8 | 0 |
| ௸ தையிலம் 500 | 0 | 6 | 0 |
| சிரோரத்தின நடனகாண்டம் | 1 | 0 | 0 |
| பாண்டு வைப்பு 600-பாடல் | 0 | 10 | 0 |
| போகர் 7000-பாடல் | 3 | 0 | 0 |
| ௸ நிகண்டு 1200 | 1 | 4 | 0 |
| ௸ ஜெனன சாகரம் | 0 | 12 | 0 |
| ௸ 700-பாடல் | 0 | 12 | 0 |

**T. சாரதா புத்தகசாலை,**

நெ. 1-34, நயினியப்ப நாய்க்கன் வீதி,

பார்க்டவுன் போஸ்டு, சென்னை.